பொங்கல் மலர் 1986
மலர் 1 மலர் 2

# தமிழரசு

JL
V2 11 m N86
1986
35374


தமிழரசு பொங்கல் மலர்-1986



Efficient DIPR




### மாண்புமிகு தமிழக முதல்வர்
## டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின்
# வாழ்த்துரை

நான் வணங்கும் அன்புத்
தெய்வங்களாகிய தாய்மார்களே!

என் வணக்கத்திற்குரிய
பெரியோர்களே!

என் ரத்தத்தின் ரத்தமான
உடன்பிறப்புக்களே!

திராவிடர் திருநாளாகிய பொங்கல் திருநாளையொட்டி உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களையும் வணக்கங்களையும் பெருமகிழ்ச்சியுடன்


தமிழரசு பொங்கல் மலர்
திருவள்ளுவர் ஆண்டு 2017
குரோதன - தை 3
மலர் : 16 இதழ் : 13 & 14
16-1-1986



தெரிவித்துக் கொள்கிறேன். சாதி, மத, இன பேதங்களையெல்லாம் கடந்து நின்று தமிழக மக்கள் கொண்டாடும் தனிச் சிறப்புடைய திருநாள் பொங்கல் திருநாள். உழவரும் பிற துறைகளில் உழைப்போரும் ஒன்றுகூடி உழைப்பால் விளைந்த செல்வங்களைப் பகிர்ந்து உண்டு மகிழும் திருநாள் இது. நமது சீரிய கலாச்சார, நாகரீக, பண்பாட்டு மரபுகளுக்கும், இயற்கையைப் போற்றி வாழும் நமது சிறப்புத் தன்மைக்கும் பொங்கல் திருநாள் ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. இந்நாளில் காணப்படுகின்ற சமுதாய உணர்வும் பகிர்ந்துண்ணும் பண்பும், உழைப்பின் பெருமையும் என்றென்றும் நின்று நிலவிட தேவையான முயற்சிகளை மேற்கொள்ள இந்நாள் பொருத்தமானதோர் நன்னாளாகும். இந்தப் பொது நோக்கமே பொங்கல் விழாவின் நோக்கம் என்பதை புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் ‘பொதுவின் உள்ள விழைவே விழா’ என்று கோடிட்டுக் காட்டினார்.

இன்று நம் அனைவரின் முன்னாலும் உள்ள பொதுவான பிரச்னை என்ன?

எதிர்காலத்தை சந்திப்பதற்கேற்ற வகையில் மனித வளத்தை மேம்படுத்துவது.

கீழ்த்தட்டில் உள்ள நலிந்த மக்களை கை தூக்கி விட்டு – சமூகத்தில் உள்ள இதர பகுதி மக்களுக்கு இணையாக அவர்களை முன்னேற்றுவது.

இந்த இரண்டும்தான் முக்கியமான பிரச்னைகளாகும்.

மனித வளத்தை மேம்படுத்துவது என்கிற முயற்சி முழுமையடைய வேண்டுமானால் - வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள மக்களுக்கும் கல்வி அறிவு புகட்டி அந்தப் பெரும் பகுதியினரின் ஆற்றலையும் வெளிக் கொண்டு வந்தால்தான் மனித வள மேம்பாடு என்னும் முயற்சி முழுப் பயனையும் நல்கும்.

மனித வள மேம்பாடு என்பது குழந்தைப்பருவத்திலிருந்து தொடங்கப்பட வேண்டும் என்பதால் குழந்தைகள் மதிய சத்துணவுத் திட்டம் தொடங்கப்பட்டது. உலகிலேயே முன்மாதிரியான இந்த பிரமாண்டமான முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்துள்ள உணவு வழங்குவதுடன், நோய்த் தடுப்புச் சக்தியை வளர்த்து குழந்தைகளிடையே கல்வி பயிலும் ஆர்வத்தை வளர்த்து வருகிறது. இத்திட்டத்தினால் 86.88 லட்சம் குழந்தைகள் பயனடைகின்றனர். மேலும் தற்போது 58.10 லட்சம் கல்வி பயிலும் சிறுவர்களுக்கு இலவசமாக சீருடையும், பாடப் புத்தகங்களும் வழங்கப்படுகின்றன. வாழ்க்கைத் தொழில் கல்வி பாடமுறையைத் தொடங்கி விரைந்து விரிவுபடுத்தி வருகிறோம். இவற்றால் புதிய ஆரோக்கியமான தலைமுறையை நாம் உருவாக்கி வருகிறோம்.

தன்னிறைவுத் திட்டம், கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் போன்ற திட்டங்களால் கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு வசதியைப் பெருக்கியுள்ளோம். எனினும் சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரும், ஆதி திராவிடரும், பழங்குடியினரும் குடியிருக்க பாதுகாப்பான வீடின்றி வாழ்ந்து வருவதை மறுக்க முடியாது.

**சத்துணவுத்திட்டம் எப்படி எனது நீண்டநாள் எண்ணமாக இருந்து வந்ததோ, அதுபோலவே நலிவடைந்த பிரிவினருக்கு வீட்டு வசதி செய்து தரவேண்டும் என்பதும் எனது நீண்டநாள் எண்ணமாகும். எனவே வருகின்ற மூன்று ஆண்டுகளில் சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்காக முப்பது லட்சம் வீடுகளைக் கட்டிக் கொடுப்பதுஎன்கிறஅரசின்புரட்சித் திட்டத்தைச் சட்டமன்றத்தில் அறிவித்துள்ளோம்.**

## பொங்கல் மகிழ்ச்சி



*அன்றுதொட்டு இன்றளவும் நம்மை அகமகிழச் செய்துவரும் பொன்னான விழாவாகப் பொங்கல் அமைந்துள்ளது.*

*வாழ்க்கைப் பெரும் பொறுப்பு தூய கடமை என்று கொண்டு, அதில் சுவையைத் துய்ப்பதுடன் பயன் பெறும் முறையும் கண்டு பெற்ற பயனும் பிறருக்கும் பகிர்ந்தளிக்கும் வகைகண்டு. அதற்கேற்ப நாம் நடந்து செல்ல வேண்டிய நன்னெறியாகும்.*

*எனவேதான் இந்த விழாவினிலே ஏற்புடைய கருத்துகட்டு நெஞ்சம் இடமளித்திடும் பாங்கு காண்கிறோம்.*

*வாழ்த்துகிறோம்; வாழ்த்துப் பெற்று மகிழ்கிறோம்!*

—பேரறிஞர் அண்ணா.

**நமது தலைமுறையில் இத்தகைய மகத்தான முயற்சி இதுவரை எங்கும் யாராலும் மேற்கொள்ளப்படவில்லை. அடித்தளத்தில் உள்ள ஆதிதிராவிடர்,பழங்குடி**



மக்கள், நரிக்குறவர் மற்றும் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள நலிந்த பிரிவினர் ஆகியோருடைய வாழ்வில் மிகப்பெரிய மாற்றத்தை இத்திட்டம் உருவாக்கும். இது எளிதான செயலல்ல. மக்கள் ஆதரவுடனும் ஒத்துழைப்போடும் இதை வெற்றிகரமாகச் செயல்படுத்துவோம் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இதன் வெற்றி நமது சமுதாய அமைப்பில் பெரும் மாறுதல்களை ஏற்படுத்தும் என்றும் நலிந்த மக்கள் நிம்மதியோடு வாழவும் இதரப் பகுதி மக்களுக்கு இணையாக முன்னேறவும் இப்புரட்சித் திட்டம் வழி வகுக்கும் என்பதில் எனக்கு ஐயமில்லை.

அரசின் இத்தகைய சீரிய திட்டங்களையெல்லாம் செயல்படுத்துவதற்கு மக்கள் அத்தனை பேருடைய ஒத்துழைப்பை நாடுகிறேன்.

நமது பணிகளில் தாமதம் கூடாது.

நமது பயணத்தில் தயக்கம் இருத்தலாகாது.

நமது உழைப்பில் குறைபாடு இருத்தல் தகாது.

சின்னஞ்சிறு பிரச்னைகளைப் பெரிதுபடுத்தி மக்களுக்கான வளர்ச்சித் திட்டங்களுக்கு இடையூறு விளைவிக்க எவர் முயன்றாலும் அவர்களை மக்கள் மன்னிக்க மாட்டார்கள்.

வாழ்வின் சுவை எதையும் அறியாதிருக்கிற லட்சக்கணக்கான நலிந்தோருக்காக வருங்காலத் தலைமுறைக்காக இப்போதே இன்றே ஏதாவது செய்தாக வேண்டும் என்கிற துடிப்பு எல்லோரிடமும் இடம் பெற வேண்டும் என்பதே எனது வேண்டுகோள். இதனையே பேரறிஞர் அண்ணா அவர்கள் மிகவும் தெளிவாகவும் ஏற்றமுறையிலும் அறிவுறுத்தியுள்ளார்.

"விதை செத்துத்தான் பயிர் முளைக்கும். விதை சாகாமல் பயிர் முளைப்பதில்லை. விதையை அப்படியே நாம் உண்டுவிட்டோமானால் பயிர் கிடையாது. அதைப் போல உற்பத்தியாகிற செல்வம் அவ்வளவையும் இந்தத் தலைமுறையில் தின்று தீர்த்த விடுவதென்றால் அடுத்த தலைமுறைக்கு மிச்சம் எதுவும் இராது. ஆகையால்தான் நாம் உழைக்கிற உழைப்பு நம்முடைய நல்வாழ்வுக்கு மட்டுமல்ல வருங்கால தலைமுறைக்காகவும் உழைக்கிறோம் என்பதை - நாம் இந்தத் தலைமுறையில் சில சங்கடங்களை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதை தேசியக் கடமையாக, ஒவ்வொருவரும் கருத வேண்டும்"

என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் வலியுறுத்தியிருப்பதை நான் மீண்டும் மீண்டும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நம்மில் நலிந்தோருக்காகவும், வருங்காலத் தலைமுறையினருக்காகவும் நமது அறிவு, ஆற்றல், உழைப்பு அனைத்தையும் செலவிடுவது என்ற உறுதியோடும் 'முன்னேறியே தீருவோம்', 'வெற்றி பெற்றே தீருவோம்' என்ற உற்சாகத்தோடும் ஆக்கப் பணிகளுக்குத் துணை நின்று தோள் கொடுக்க அனைவரையும் அழைக்கிறேன்.

'உழைப்போம் உயர்வோம்', 'உழைப்பின் பயனைப் பகிர்ந்து உண்போம்' என்று பொங்கல் திருநாள் போதிக்கும் பொதுக் குறிக்கோளை நினைவுறுத்தி அனைவருக்கும் என் இனிய பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

வாழ்க அண்ணா நாமம்!



# பொருளடக்கம்





| | | |
|---|---|---|
| மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் வாழ்த்துரை | | 3 |
| அண்ணா வாழ்த்துகிறார் | ... | 9 |
| உலக அமைதிக்குத் தமிழர் ஆதரவு | ... | 11 |
| சட்டமன்றமும் சமுதாய நீதியும் | ... | 13 |
| வறியோர் நாடும் வள்ளாண்மை | ... | 17 |
| உழைப்போரே உயர்ந்தவர் | ... | 21 |
| பொங்குக பால் | ... | 23 |
| இந்திய அரசியலில் தமிழகத்தின் தனிச்சிறப்பு | ... | 25 |
| இயற்கையின் எழில் | ... | 29 |
| தினமும் தமிழர் திருநாள் | ... | 33 |
| வாழ்க்கைக் கல்விக்கான முதல் அமைச்சரின் திட்டம் | ... | 37 |
| குறள் என்னும் குன்றாவிளக்கு | ... | 41 |
| பொங்கல் சிந்தனைகள் | ... | 43 |
| எழுத்தும் பேச்சும் | ... | 45 |
| தவம் | ... | 47 |
| கருணையினால் அல்ல! | ... | 51 |
| போக்குவரத்தில் புதிய பரிமாணம் | ... | 55 |
| உழைப்பால் தமிழகம் உயர | ... | 57 |
| புதிய ஜவுளிக்கொள்கை வகுப்போம் | ... | 59 |
| தமிழினக் காவலன் | ... | 61 |
| தமிழர் திருநாளில் ஒரு வேண்டுகோள் | | 63 |
| எல்லோருக்கும் இல்லம் | ... | 65 |
| புதுயுகம் பிறக்கும் புத்தாண்டு | ... | 69 |
| இளைய தலைமுறையே வருக! | ... | 72 |
| தமிழ்ப் பொங்கல் | ... | 73 |
| தமிழர் திருநாள் சலுகைகள் | ... | 75 |
| பிற்படுத்தப்பட்டோர் காவலன் | ... | 77 |
| பெண்கள் விழா | ... | 81 |
| தமிழர் திருநாள் | ... | 83 |
| அயராது உழைப்போம் | ... | 85 |
| உரிமையும் கடமையும் | ... | 87 |
| மனிதாபிமான வளர்ச்சிக்கு நாடகக்கலை | ... | 89 |
| வளமோங்கி வாழ்க! | ... | 91 |
| புதுயுகம் காண்போம்! | ... | 93 |
| அண்ணாவின் அன்புத் தத்துவம் —மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் | ... | 95 |


மலர் 1-2 பக்கம் 200 விலை ரூ.10/-






# அண்ணா வாழ்த்துகிறார்!

தம்பி !

எத்தனை பணிகள் இருப்பினும் தனித்தன்மை வாய்ந்த இந்தப் பொங்கல் திருநாளன்று உனக்கு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ள நான் தவற மாட்டேன். தமிழர்களின் தேசீயத் திருநாளான இப் பொங்கல் நாளைக் கொண்டாடுவதில் தமிழ் நாடு மட்டுமே முன்னணியில் நிற்கிறது. இப் பொங்கல் திருநாள் தமிழர்களால் மட்டுமே கொண்டாடப்படுகிற விழா ஆதலால் இந்நாள் தனிச் சிறப்பு வாய்ந்ததாகிறது. தமிழநாட்டு மக்கள் எத்தனையோ பல பண்டிகைகளைக் கொண்டாடலாம்; ஆனால் பொங்கல் மட்டுமே குடும்பத்தில் உள்ள அனைவராலும் கொண்டாடப்படுகிற பண்டிகை. முதியோராயினும், இளைஞராயினும் ஏழை உழவராயினும் வசதி படைத்தோராயினும் அனைவரும் கொண்டாடும் திருநாள் இது. இத்திருநாள் உழைப்புக்கு மதிப்புத் தரும் நாள், ஒருவருக்கொருவர் அளித்துக் கொள்ளும் ஒத்துழைப்பை வலியுறுத்தும் விழா பொங்கல் விழா!

நாம் எல்லோரும் உரிமையோடு பங்கேற்கும் ஒரு பெரும் திருநாளாகப் பொங்கல் நாள் திகழ்கிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே பழுதற்ற முழுமையான ஒரு கலாச்சாரமும் நாகரிகமும் தமிழகத்தில் வளர்ந்தோங்கி இருந்தது.

கலை, இலக்கியம், சிற்பம் என அறிவின் துறைகள் அனைத்திலும் தமிழகம் எவராலும் எட்டிப் பிடிக்க முடியாத உயரத்தில் இருந்தது. இதனால்தான் தமிழகத்தை நாடி வந்த அயல் நாட்டார் அனைவரும் நம்மைப்பலபடப் புகழ்ந்து கூறியுள்ளனர்.

அத்தகைய செழிப்பான பாரம்பரியத்துக்குச் சொந்தக்காரர்கள் நாம் என்கிற உணர்வு நமக்கு மேலும் வலிவினைச் சேர்க்கும்.

இன்றைய சிக்கல்கள் அனைத்தையும் வென்றிடவும், நம்மிடம நம்பிக்கையும் உறுதியும் நிலை பெற்றிடவும் அந்த உணர்வு துணை நிற்கும்.

புதிய ஒளியோடு நாம் எல்லாம் ஒருங்கிணைந்திடும் ஒரு வாய்ப்பினைப் பொங்கல் விழா நல்கிடுகிறது.

எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான ஒரு நிறைவான வாழ்வை நோக்கி நடைபோடுவதே நமது குறிக்கோள் ஆகும்!

நமக்குள்ள பொறுப்புகளை உணராமல், கடமைகளை நிறைவேற்றாமல் உரிமைகளைப் பற்றி மட்டும் உரத்த குரலில் வலியுறுத்திக் கொண்டிருந்தால் அந்த நிலை நம்மைப் பிணக்கிலும் ஏமாற்றத்திலும்தான் கொண்டுபோய் விடும்.

இந்தக் குறிக்கோளை நம்முன் உறுதியாக நிலைநிறுத்திக் கொண்டு நாம் முன்னேறுவோம்.

உற்பத்தியைப் பெருக்கி விநியோக முறையைச் செம்மைப்படுத்தி அதன் மூலம் பொருளாதார நீதியெனும் குறிக்கோள் முழுமை பெறச் செய்ய வேண்டும். சுரண்டலும் அடிமைத் தனமும் நீங்கி,வஞ்சகமும் ஏற்றத் தாழ்வுகளும் அகன்று,எல்லோரும் இன்புற்றிருக்கும் வண்ணம் புதியதோர் ஒளி எங்கணும் பரவட்டும்!

தம்பீ ! உன் வாழ்விலும் சமுதாயத்தின் வாழ்விலும் புதிய பிரகாசம் தோன்றட்டும் என்று இந்தப் பொங்கல் நன்னாளில்என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

—1969 ஜனவரி 14.



*நல்லவர் செய்த செயல்களிலே—பயிர்*
*நடனமாடுது வயல்களிலே!*

—பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

# TNPL
## MEETING CHALLENGES... EFFECTIVELY

TNPL *Tamil Nadu Newsprint and Papers Limited*

(A Govt. of Tamilnadu Enterprise)
Kagithapuram, Velayuthampalayam P.O.
Trichy Dist 639 117 India
Phone: 4666, 3690, 3673. Grams: NEWSPRINT






# உலக அமைதிக்கு தமிழர் ஆதரவு

மாண்புமிகு மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர்

## டாக்டர் ம.பொ.சி.

ஐக்கிய நாடுகள் மன்றம் 1986ஆம் ஆண்டை ''உலக அமைதி ஆண்டா''கத் தேர்ந்தெடுத்திருக்கிறது. ''உலக அமைதி'' என்னும்போது, அணுகுண்டு அபாயம்தான் நினைவுக்கு வருகிறது. இதுவரை அணுகுண்டு மண்வெளியில்தான் ஆட்டம் போட்டது; இனி, விண்வெளியிலும் ஆட்டம் போட அது சக்தி பெற்றுவிட்டது. மண்ணும் விண்ணும் அமைதி பெற வேண்டுமானால், அணுகுண்டு அபாயம் அடியோடு ஒழியத்தான் வேண்டும்.

வல்லரசு நாடுகள் சில அணுகுண்டைத் தம்மிடம் வைத்துக் கொண்டு, மற்ற நாடுகளை அதைச் செய்யக் கூடாது என்று ஆணையிடுகின்றன. அணுகுண்டு செய்யவில்லையென்று உறுதிமொழிப் பத்திரத்தில் கையொப்பமிட்டுத் தருமாறும் கேட்கின்றன.

அமெரிக்காவிடம் அணுகுண்டு இருப்பதால், தமது தற்காப்புக்காகவும், அணுகுண்டு வைத்திராத நாடுகளைக் காப்பதற்காகவும் சோவியத் நாடும் அந்த ஆயுதத்தை வைத்திருக்கிறது. இன்னும் பல நாடுகளும் அணுகுண்டை வைத்திருக்கின்றன. கண்டம்விட்டுக் கண்டம்பாயும் ஆயுதங்களும் வல்லரசுகளிடம் குவிந்திருக்கின்றன.

இரண்டாவது உலகப் பெரும்போர் முடிந்து 40 ஆண்டுகளாகியும், இதுவரை மூன்றாவது உலகப் பெரும்போர் தோன்றாததற்குக் காரணம், வல்லரசுகளுக்கு நல்ல புத்தி வந்துவிட்டதல்ல; தாங்களே தயாரித்து வைத்துக்கொண்டுள்ள அணுகுண்டு காரணமாகத்தான் அவை உலகப் போரைத் தொடங்குவதற்கு அஞ்சுகின்றன. இதனால் கடந்த 40 ஆண்டுகளிலே உலகில் குட்டிப் போர்கள் பல நடந்திருந்தும், அவை உலகப் பெரும் போராக மாறவில்லை, ஆனால், கெடுபிடிப் போர் காரணமாக, தாங்கள் விரும்பாத நிலையிலேயே உலகப் போரை வல்லரசு நாடுகள் தோற்றுவிக்கவும் கூடும். தோற்றுவித்தால் அகில உலகமும் அழிந்து விடும்.

இந்தியப் பெருநாடு, தான் அணுகுண்டு தயாரிக்கப் போவதில்லையென்று அறிவித்திருக்கிறது. அது, தனக்குத் தானே எடுத்து விட்ட முடிவு இது.

இந்தியா, காந்திய வழியில் சுதந்திரம் பெற்ற நாடு. தனது விடுதலைக்காகக் கூட இந்தியா ஆயுத பலத்தைப் பயன்படுத்தியதில்லை. அறவழியிலேயே போராடி, கதிரவன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யத்தை காந்தியம் அஸ்தமிக்க வைத்தது. அதனால், அணுகுண்டு அபாயத்தை எதிர்ப்பதிலே இந்தியா தீவிரம் காட்டி வருகிறது.

''உலக அமைதி'' என்னும்போது, ஒவ்வொரு நாடும் தனக்குள்ளேயே அமைதியைக் குலைக்கும் தீய சக்திகள் இருக்கின்றன என்பதனை உணர வேண்டும்.

தென்னாப்பிரிக்க நாட்டிலே மிக மிகச் சிறுபான்மையினரான வெள்ளை நிறத்தவர் பெரும்பான்மையினரும் சுதேசிகளுமான கறுப்பர்கள் மீது ஆதிக்கம் செலுத்துகின்றனர். இந்த ஆதிக்கத்திலிருந்து விடுதலைபெற ஆப்பிரிக்கச் சுதேசிகள் போராடி வருகின்றனர். இதனால், அந்த நாட்டிலே இப்போது அமைதி நிலவவில்லை.

இலங்கையிலே மொழிவழி சிறுபான்மையினரான தமிழ் இனத்தாரை-அந்த நாட்டின் பூர்வகுடிகளை-மொழிவழிப் பெரும்பான்மையினரான சிங்களர்கள் அடக்கி வருகின்றனர். இனவழி பார்த்தாலும், இலங்கையின் அரசியலிலே அங்குள்ள தமிழருக்கு சிங்களவரோடு சம பங்கு கேட்க உரிமை உண்டு. பிரதேச வழி: பார்த்தாலும், தாங்கள் வாழும் பிரதேசத்தைத் தங்களுக்கே உரிமையாக்கிக் கொள்ளவும் ஈழத் தமிழருக்கு உரிமையுண்டு. இருந்தும், குறைந்தபட்ச கோரிக்கையாக தாங்கள் வாழும் பிரதேசத்தை இலங்கையின் ஒருமைப்பாட்டிற்குட்பட்ட தனி மாநிலமாக்கக் கோருகின்றனர். இலங்கை அரசு அதை ஏற்க மறுத்து, தன்னிலே ஒரு பகுதியான ஈழத்தைப் போர்க்களமாக்கியிருக்கிறது. இதனால், இலங்கையிலே இன்று அமைதியில்லை.

சில நாடுகளிலே ஜனநாயகம் புதைகுழிக்குப் போய்விட்டது. அங்கெல்லாம் ராணுவ சர்வாதிகாரம் நடைபெறுகிறது. 'இம்' என்றால் சிறைவாசம்; 'ஏன்?' என்றால் வனவாசம்! இவ்வாறு ஆங்கே செம்மையெலாம் பாழாகிக் கொடுமையே அறமாகித் தீர்ந்து விட்டது. இதனால் அந்த நாடுகளிலே இன்று அமைதியில்லை.

பொதுவாக, எல்லா நாடுகளிலும் வெளியுலகத்திற்குத் தெரியாத வகையிலே, உட்பூசல் இருந்து வருகிறது. ஒரு வகையில் அல்ல; பல வகையிலே! பல்வேறு முனைகளிலே!

இயற்கையாகவே பெண் இனம் பலவீனமானது. இந்த பலவீனத்தைப் பயன்படுத்திக்கொண்டு, அந்த இனத்தின் மீது ஆதிக்கம் செலுத்தி வருகிறது ஆண் இனம். இதனால் தான், ''மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்'' என்று பாடினார் பாரதியார். ஏதேனும் ஒரு வகையிலே ஆணுக்குப் பெண் அடிமை என்ற நிலை ஒவ்வொரு

நாட்டிலும் இருந்து கொண்டுதானிருக்கிறது. ஆம்; இல்லந்தோறும்! அந்த இல்லங்களிலே அமைதி நிலவவில்லை.

ஒரு நாட்டிற்குள்ளேயே, மதவழிச் சிறுபான்மையினர் மீது பெரும்பான்மையினர் ஆதிக்கம் செலுத்துகின்றனர். அதனால் அங்கு அமைதியில்லை. ஆதிக்கம் செலுத்தும் மதத்தினரை எதிர்த்து, அடிமைப்பட்ட மதத்தினர் போராடுகின்றனர்.

விளை நிலங்களிலே ஏர் பிடித்து, உழுது பயிரிடுவோருக்கு அந்த நிலத்தின்மீது உரிமை இருக்கவில்லை. உழுபவனுக்கு உணவுப் பஞ்சம்! இதனால் உழுபவர்களுக்கும் உழுவிப்போர்களுக்குமிடையே வர்க்கப் போர்! இதுவும், உலக அமைதி கெடுவதற்குக் காரணமாகிறது. இதனாலும் நாடுதோறும் அமைதி குலைந்து வருகிறது.

தொழிலாளிக்கும் முதலாளிக்குமிடையேயும் வர்க்கப் போர்! ஆண்டான் இருக்கும் வரை அடிமையின் வாழ்விலே அமைதி எப்படி இருக்க முடியும்? உழுபவன் வேறு; உழுவிப்பவன் வேறு-என்ற நிலை இருக்கும் வரை பண்ணையிலே எப்படி அமைதி ஏற்படும்? பொதுவாக, உலகில் அமைதி நிலவ வேண்டுமானால், முதலில் ஒவ்வொரு நாட்டிற்குள்ளும் அமைதி ஏற்பட நாம் உழைத்தாக வேண்டும். உள்நாட்டில் அமைதியைக் குலைத்துவரும் தீய சக்திகளை மறந்து, உலக அமைதி பற்றிப் பேசுவது பயன் தராது.

மதம் எதுவானாலும், ஒவ்வொரு மதமும் அன்பு வழியைத்தான் போதிக்கின்றது. ஒவ்வொரு மதத்தவரும் தத்தம் மதத்தைச் சரியாகக் கடைப்பிடிப்பார்களேயானால், உலகெங்கும் அமைதிதோன்றிவிடும். உலகில் அமைதி அழியக் காரணம், நாம் உண்மையான மதவாதிகளாக இல்லாததுதான். புத்தர், இயேசு, முகம்மது நபி, குரு நானக், வள்ளலார் ஆகிய மதாச்சாரியார்களை நாம் கொண்டாடுகிறோம். ஆம்: அவர்கள் போதித்த அன்பு வழியை மறந்து!

தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, ''யாதும் ஊரே; யாவரும் கேளிர்!'' என்பது உலக அமைதிக்கான மந்திரச் சொல்லாகவே கொள்ளப்படுகிறது. ''உலகத்திற்காக நான்'' என்பது தமிழர் மதம். மாறாக, ''நமக்காகத்தான் உலகம்'' என்பதல்ல. தமிழிலக்கியங்களிலே ''உலகம்'' என்பது முதற்சொல். உலக அமைதிக்குத் தமிழிலக்கியங்கள் கைகொடுக்கின்றன.

1986ஆம் ஆண்டிலே நாம் கொண்டாடவிருக்கும் இலக்கியப் புலவர்கள் விழாவாகட்டும்; அரசியல் தலைவர்கள் விழாவாகட்டும்; எல்லா விழாக்களிலும் உலக அமைதி பற்றியே பேச வேண்டும்.

உலக அமைதி ஆண்டிலே இயேசு பெருமானின் தூதராக போப் ஆண்டவர் இந்தியாவுக்கு வருகை தரவிருக்கிறார். அப்போது, அவர் தமிழகத்திற்கும் வருகை தரப் போகிறார். ''எம்மதமும் சம்மதம்'' என்னும் சமரச சன்மார்க்க நெறியைப் போதித்தார் வள்ளலார். அந்த சமரச வழியில் நின்று, போப் ஆண்டவரை தமிழகத்தில் நிலவும் மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர். அரசு வரவேற்கத் தயாராகி வருகிறது. போப் ஆண்டவர் வருகை தரும் நாளை, விடுமுறை நாளாக்கியிருக்கிறது. இவையெல்லாம் உலக அமைதி ஆண்டின் தொடக்கத்திலே நாம் காணும் நல்ல சகுனங்கள்!



உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்—வீணில் உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்!

—மகாகவி பாரதியார்



# சட்டமன்றமும் சமுதாய நீதியும்

## மாண்புமிகு சட்டப்பேரவைத்தலைவர் திரு. பி. எச். பாண்டியன்

நம் இந்திய நாட்டில் உள்ள மக்கள் ஒவ்வொருவருக்கும் சமுதாய நீதி, பொருளாதார நீதி, அரசியல் நீதி இம்மூன்றும் கிடைக்க வேண்டும் என்று அரசியலமைப்புச் சட்டம் தன் முகப்புரையில் கூறுகின்றது.

நீதி வழங்குதல் என்பதைப் பண்டைத் தமிழில் ''முறை செய்தல்'' என்று கூறுவார்கள்.

'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறை என்று வைக்கப் படும்.' (388)

என்பது குறள்.

கோனாட்சி முறையில் முறை செய்தல் மன்னனின் கடமையாக இருந்தது. இன்றைய குடியாட்சி முறையில், இக்கடமை மக்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற அரசையே சேருகின்றது. ஆதலால்தான், நம் அரசை அமைக்கும் அடிப்படை ஆவணமான அரசியலமைப்புச் சட்டம், சமுதாயம், பொருளாதாரம், அரசியல் என்ற மூவகைத் துறைகளிலும் நீதி நிலவச் செய்வது அரசின் கடமை என்று பறை சாற்றுகின்றது.

சாதாரணமாக, நீதி வழங்குதல் அல்லது முறை செய்தல் என்பது இரு தரப்பினர்களுக்கிடையில் எழும் வழக்குகளைத் தீர்த்து வைப்பது என்று கருதப்படுகிறது. இன்றைய நீதிமன்றங்கள் இக்கடமையினை ஆற்றுகின்றன.

பழந்தமிழ் இலக்கியங்கள் நீதி வழங்கும் மன்றங்களை ''அறங்கூறும் அவையம்'' என்றே குறிப்பிடுகின்றன. நீதி வழங்குதல் என்பது அறத்தின் அடிப்படையில் இருத்தல் வேண்டும் என்பதால்தான், ''அறங்கூறும் மன்றங்கள்'' என நீதிமன்றங்கள் அழைக்கப்பட்டன.

எனவேதான், ''இறைமாட்சி'' கூறும் வள்ளுவர்,

'அறன் இழுக்காது அல்லவை நீக்கி மறன் இழுக்கா
மானம் உடையது அரசு' (குறள். 384)

என்று கூறுகின்றார்.

'அறம்' என்ற கோட்பாட்டைத்தான் இன்று '' Natural Justice '' என்று ஆங்கிலத்தில் கூறுகின்றோம்; ''இயற்கை நீதி'' என்று இதைத் தமிழாக்கியுள்ளோம்.

குற்றம் சாட்டப்பட்ட ஒருவரை விசாரணை எதுவும் இல்லாமலே தண்டிக்கலாம் என்று சட்டம் ஒன்று இயற்றப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். இச்சட்டம் செல்லுபடி ஆகாது என்று நீதிமன்றங்கள் தீர்ப்புக் கூறிவிடும்.

காரணம் என்ன?

குற்றம் சாட்டப்பட்ட எவரையும் நேர விசாரித்து, அவர் குற்றம் இழைத்தாரா என்பதை ஐயத்திற்கு இடமின்றி ஆய்ந்து கண்டு, அதன் பின்னரே அவர் தண்டிக்கப்பட வேண்டும் என்று நம் அறவுணர்வு உணர்த்துகின்றது. ஆதலால், விசாரணையின்றியே குற்றம் சாட்டப்பட்டவரைத் தண்டிக்கலாம் என்ற சட்டத்தை அறத்திற்கு முரணானது என்று நாம் கூறுகின்றோம். ''அறத்திற்கு மாறானது'' என்ற கருத்தை '' against natural law and justice '' என்றோ '' against natural justice '' என்றோ ஆங்கிலத்தில் கூறுவார்கள்.

நீதிமுறைக்கு அடிப்படைப் பண்பாக உள்ளது '' Equity and good Conscience '' என்று ஆங்கிலச் சட்டயியலில் கூறுவார்கள். ''நேர்மை, நன்மனச்சான்று'' என்ற பண்புகள் தாம் நியாயம் வழங்குவதற்கு அடிப்படை ஆகின்றன; நீதி என்பதன் உட்பொருள் ஆகின்றன.

எனவே, ''சமுதாய நீதி'' என்றால் ''சமுதாய அமைப்பில் அறம்'' என்பதே பொருளாகும். ''பொருளாதார நீதி'' என்றால் ''பொருளாதார முறையில் அறம்'' என்பதாகும். ''அரசியல் நீதி'' என்பது ''அரசியல் நெறியில் அறம்'' ஆகின்றது.

அறநெறியினை, சமுதாயம், பொருளாதாரம், அரசியல் என்ற மூன்று துறைகளிலும்

# தமிழ் மொழி வாழ்த்து

தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே
தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே
உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே
வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே
மாந்தருக் கிருகணா வயங்குதென் மொழியே
தானியல் சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே
தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே!

[இவ்வாழ்த்து பேராசிரியர் கா. நமச்சிவாயர் 1934 ஆம் ஆண்டு பொங்கல் திருநாளினைத் ''தமிழ்த் திருநாள்'' எனக் கொண்டாடிய போது வெளியிட்ட பாடல்.]

---

நிலவச் செய்வதே அரசின் தலையாய கடமை ஆகின்றது. இக்கடமையினைத்தான் நம் நாட்டு அரசியலமைப்புச் சட்டம் எடுத்து இயம்புகிறது.

அறநெறியின் அடிப்படையில் அரசியலமைப்புச் சட்டத்தால் மக்களுக்கு அளிக்கப் பட்டுள்ள ''அடிப்படை உரிமைகளைப்'' பாதுகாக்கும் அதிகாரம் உயர்நீதிமன்றங்களுக்கும், உச்சநீதிமன்றத்திற்கும் அளிக்கப்பட்டுள்ளது. சட்டத்திற்கு விரோதமாகவோ, அறநெறிக்கு முரணாகவோ அரசின் சட்டம் அல்லது ஆணை இருந்தால், அதனை எதிர்த்து இந்நீதிமன்றங்களில் வழக்கு இடலாம், அரசின் சட்டம் அல்லது ஆணையால் பாதிக்கப்பட்டவர்கள் தாம் வழக்கிடலாம் என்ற நிலைமாறி, பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமின்றி எவரும் வழக்கிடலாம் என்ற நிலை இன்று எழுந்துள்ளது. அது மட்டுமன்று, இயற்கை நீதிக்கு அதாவது அறநெறிக்கு மாறாக அல்லற்படுவோர் எவரும் அல்லது அவர்கள் சார்பில் எவரும் நீதிமன்றத்தை நாடலாம். அவர்கள் அல்லலை நீக்கும் வகையில் உச்சநீதி மன்றம் ஆணைகள் பிறப்பிக்கின்றது.

இத்தகைய நீதிநெறி முறை அண்மைக் காலத்தில் உருவானதாகும். இதை ''பொது நல வழக்கு'' (Public Interest Litigation) என்று குறிக்கின்றனர்.

நீண்ட நாட்களாக விசாரணை இல்லாமல் சிறையில் உள்ளவர்கள், கொத்தடிமைகளாக உள்ளவர்கள் ஆகியோரின் துன்பங்களைத் துடைக்கும் வகையில் உச்சநீதிமன்றம் அண்மையில் ஆணைகள் இட்டுள்ளது.

நம் நாட்டு நீதிநெறிமுறையில் இது போற்றுதற்குரிய வளர்ச்சியாகும்.

சிறையில் உள்ள கைதியின் கடிதத்தையே முறையான மனுவாக நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு நடவடிக்கை எடுத்துள்ளது.

சமுதாய நீதி பேணப்படவேண்டும் என்ற வகையில் நீதிமன்றங்கள் இவ்வாறு செயல்படும்பொழுது, இந்தப் பணியில் மக்கள் மன்றங்களின் பணி என்ன? என்ற வினா எழுகின்றது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டவை, மத்தியில் உள்ள நாடாளுமன்றமும் மாநிலங்களில் உள்ள சட்டமன்றங்களும்.

சமுதாய நீதியைப் பாதுகாப்பதில், சமுதாயத்தில் அறநெறியினை நிலவச் செய்வதில் மக்கள் மன்றங்கள் அதிகமான அக்கறை காட்ட வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இருப்பதற்கில்லை.

சட்டங்களை இயற்றுவதும், அரசாங்கத்திற்கு நிதி வழங்குவதும் மட்டுமே சட்டமன்றங்களின் கடமைகளாக எதிர்காலத்தில் இருந்தால், அது மக்கள் மன்றத்தின் மாண்பிற்கு ஏற்றதாக அமையாது என்றே நான் கருதுகிறேன்.

சனநாயக ஆட்சிமுறை என்பது காலத்தின் தேவைகளுக்கேற்ப, சமுதாயத்தின் எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்ப வளர வேண்டும். மக்கள் மன்றமாக விளங்கும் சட்டமன்றத்தின் மீது மக்களுக்கு ஈடுபாடு இருத்தல் வேண்டும். நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்களின் குறைபாடுகளைத் தீர்க்கும் வகையில் சட்டமன்றத்தின் பணிமுறைகள் அமைதல் அவசியமாகும்.

அதிகாரிகளின் அசிரத்தையாலோ, நிர்வாகத்தில் ஏற்படும் குறைபாடுகளாலோ பாதிக்கப்படும் மக்களின் குறைகளைப்போக்கும் முறையில் சட்டமன்றம் செயல்பட்டால் தான் மக்களுக்கும் மக்கள் மன்றத்திற்கும் உள்ள உறவு உயிர்த்துடிப்புடன் இருக்கும்.

இப்பொழுதுள்ள சட்டமன்றக் குழுக்கள் எல்லாம் (பொதுக் கணக்குக் குழு, மதிப்பீட்டுக் குழு போன்றவை) கட்சி வேறுபாடு இன்றி நல்ல முறையில் செயலாற்றுகின்றன. 'மனுக்கள் குழு' (Petitions Committee) என்று ஒரு சட்டமன்றக் குழு மக்களிடம் இருந்து வரும் மனுக்களைக் கவனிக்கின்றது. ஆயினும், உடனடியாக நடவடிக்கை எடுத்து மக்களின் குறைகளைப் போக்கும் வகையில் அதன் பணி அமையவில்லை.

குறைகளைக் கூறும் முறையீடுகள் கிடைத்தவுடன், அவை பற்றி விசாரித்து, தேவையானால், அந்தந்த இடங்களுக்குச் சென்று மக்களைக் கேட்டு, மக்களின் குறைகளைக் களையும் விதத்தில் ''மனுக்கள் குழுவின்'' பணிமுறை விதிகள் வகுக்கப்பெற வேண்டும். நிர்வாகத்தில் நேரடியாகப் பங்கேற்காமல், ஆனால், நிர்வாக இயந்திரத்தைத் தக்க முறையில் செலுத்தும் கருவியாக இக்குழு அமைதல் வேண்டும். அப்பொழுது தான், சமுதாய நீதியைக் காக்கும் அரணாகச் சட்டமன்றம் விளங்கும்.

உழவர் திருநாளாம் இன்று, நாட்டின் உயர்வுக்கு உகந்த இக்கருத்தினை மக்களின் சிந்தனைக்குப் படைக்கின்றேன்.

அனைவருக்கும் எனது பொங்கல் வாழ்த்துக்கள்.






தமிழகத்தில்
நிறுவப்பட்டிருக்கும் முதல் பருத்தி விவசாயிகள் ஆலை

அண்ணா கூட்டுறவு நூற்பாலை லிமிடெட்
(எம். எச். 161)
ஆண்டிப்பட்டி-626 512 * மதுரை மாவட்டம்

எங்களிடம் தரமான 40, 60 & 80 நம்பர்களில்
சிட்டம் மற்றும் கோன் நூல் விற்பனைக்குத் தயாராக உள்ளன.

பருத்தி விவசாயிகளே, ஆலையில் பங்கு மூலதனம் எடுத்துப்
பருத்தி விவசாய மேம்பாட்டிற்கும், விற்பனைக்கும்
புதுப்பாதை அமைத்திடுவீர்!

கைத்தறி நெசவாளப் பெருமக்களே, எங்களிடம்
தயாராகும் தரமான நூல்களைப் பெற்றுப் பயனடைவீர்!!

எஸ். இராமச்சந்திரன்,
துணை இயக்குநர், கை.ம. துணி நூல் /
நிர்வாக இயக்குநர்.

இரா. வரதராஜுலு, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர்/தலைவர்.

**Erotex**
**FABRICS**

இல்லங்களை அழகு செய்து
வாங்குவோர் உள்ளங்களை மகிழ்விப்பது
ஈரோடெக்ஸ் கைத்தறி ஆடைகள்.

**கை வண்ணங்களின் வடிவமைப்பு**
**வண்ணக் கலவையின் உருவெடுப்பு**
**அதுவே ஈரோடெக்ஸ் தயாரிப்புகள்.**

உள்ளங்கவரும் டிசைன்களில் • படுக்கை விரிப்புகள்
துண்டுரகங்கள் • தலையணை உறைகள்
இல்லங்களை அழகுபடுத்தும் அலங்காரத் துணிகள்
உடுக்கத்தூண்டும் லுங்கிகள் • நேப்கின்கள்
மற்றும் பாலியஸ்டர் ரகங்கள்.

தந்தி: ''ஈரோடெக்ஸ்'' போன்: 74170 & 75568

## ஈரோடு நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்.,

'ஜெகநாத நிலையம்' 216, நேதாஜி ரோடு, ஈரோடு-638 001.

**ஷோரூம்கள் :**

1. 23, வடக்குமாட வீதி, மைலாப்பூர், சென்னை-4.
2. 110, கச்சேரி வீதி, லஸ், மைலாப்பூர், சென்னை-4.
3. 231, நாய்க்கர் புது வீதி, மதுரை-1.
4. 14-A, சமஸ்பிரான் வீதி, (பெரியகடை வீதி) திருச்சி-8.
5. 77-A, கிழக்கு ரத வீதி, திருநெல்வேலி.
6. 10, பி. வி. கே. ஐயங்கார், ரோடு, பெங்களூர்-53. (கர்நாடகம்)
7. 34, நஞ்சுண்டேஸ்வரர் பில்டிங்ஸ், குண்டூர். (ஆந்திரம்)
8. 186. எம். ஜி. ஸிநாத் மார்கெட், சீராலா. (ஆந்திரம்)
9. காலேஸ்வரராவ் ரோடு, கவர்னர்பேட், விஜயவாடா (ஆந்திரம்)
10. 2-2-35, முதல்தளம், பான் பஜார், செகந்தராபாத். (ஆந்திரம்)
11. 340, மகாத்மா காந்திஜி ரோடு, விழுப்புரம்.
12. சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடி, திருச்சி.
13. எஸ். ஜி. ஆர். பில்டிங் ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ், என். எச். ரோடு, கோவை-1.
14. பாரதி ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ், 2662/1-A, சுவாமி சன்னதி தெரு, புதுக்கோட்டை.
15. 72, கட்ரா நீல், சாந்தினி சௌக், டெல்லி-6.
16. 23, பஞ்சவர்ணசுவாமி கோயில் தெரு, உறையூர்-திருச்சி 3.
17. 2-A, காமராசர் தெரு, சேலம் டவுன், சேலம்-2.
18. தத்தையங்கார் பேட்டை P.O. திருச்சி Dt.
19. காந்தி நகர், வேலூர்-4 (வ. ஆ. மாவட்டம்)

ஜெ. [illegible],
தலைவர்.


# வறியோர் நாடும் வள்ளண்மை



வாழ்க்கையில் இன்றியமையாத் தேவைகளாக விளங்குவன, உண்ண உணவு-உடுக்க உடை-இருக்க இடம்-வாழ வழி போன்றனவாகும். உயிர் வாழ்க்கையின் இந்த அடிப்படைத் தேவைகள், எல்லா மக்களுக்கும் ஒரு படியாகவே அமைந்துள்ளன. ஆனால், அவற்றை நிறைவேற்றிக்கொள்வதற்கான அறிவுத் திறன், ஆற்றல் திறன், செயலாற்றும் திறன், செய்து முடிக்கும் திறன் ஆகியவை மனிதனுக்கு மனிதன் வேறுபடுகின்றன.

திறமைகளை ஒருங்கே பெற்றவர்களால், மேற்கூறப்பட்ட தேவைகளைப் போதுமான அளவுக்கு நிறைவேற்றிக் கொள்ள முடிகின்றது. ஆனால் திறமைகளற்றவர்களால் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடிவதில்லை.

உலகில் நாகரிகம் பெற்ற மக்கள் அனைவரும் உய்யவேண்டுமானால், உடையவர்கள் அற்றவர்களுக்கு ஈய வேண்டும். உணவு உடையவர்கள் உணவற்றவர்க்கு, உடை உடையவர்கள் உடையற்றவர்க்கு, வீடுடையவர்கள் வீடற்றவர்க்கு, வளமுடையவர்கள் வளமற்றவர்க்கு, வசதியுடையவர்கள் வசதியற்றவர்க்கு, வாய்ப்புடையவர்கள் வாய்ப்பற்றவர்க்கு, பொருளுடையவர்கள் பொருளற்றவர்க்கு ஈந்தால்தான், மனநிறைவு பெற்ற அமைதியான வாழ்வு எல்லோர்க்கும் ஒரு படியாகக் கிட்டும்.

இது காரணம் பற்றித்தான் வள்ளுவப் பெருந்தகையார் ''வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை'' (வறிய மக்களுக்கு வளமுடையவர்கள் ஒரு பொருளைக் கொடுப்பதே ஈகை எனப்படும்) என்று குறிப்பிட்டுள்ளார்.

உயிர் வாழ்க்கையின் பயன் ஏதேனும் ஒன்று உண்டு என்றால், அது வறியவர்க்கு ஈதல் வேண்டும்; அதனால் புகழ் எய்தி வாழ வேண்டும் என்பதேயாகும் என்றும், அப்

**மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர்**

## திரு. இரா. நெடுஞ்செழியன்



புகழ் அலலாமல் உயிர் வாழ்க்கைக்குப் பயன் அளிப்பது வேறொன்றும் இல்லையென்றும் கூற வந்த வள்ளுவனார்,

''ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு''

என்று கூறியுள்ளார்.

பிறர்க்குக் கொடுத்து, அவர்கள் மகிழ்வது கண்டு இன்பம் பெறுவது, வசதிபடைத்தோரின் இன்றியமையாக் கடமையாகும் என்றும், தாம் சேர்த்து வைத்துள்ள பொருளை அப்படிப் பிறர்க்குக் கொடுக்காமல் பதுக்கி வைத்திருந்து பின் அதனை இழந்து விடுபவர்கள் வன்கணாளர்கள் என்றும், அப்படிப்பட்டவர்கள் கொடுத்து மகிழும் இன்பத்தை அறியாதவர்கள் ஆவார்கள் என்றும் வள்ளுவப் பெருந்தகையார் உணர்த்துகிறார்.

''ஈத்துவக்கும் இன்பம் அறியார் கொல்
தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்''

சங்க இலக்கியத் தமிழ்ச் சான்றோர்களும் பிற்காலத் தமிழ்ப் பெரும் புலவர்களும் வரையாது வழங்கும் வள்ளண்மையைப் பலபடப் பாராட்டிக் கூறியுள்ளனர்.

கொடை வழங்கும் வேந்தர்களும், வள்ளல்களும், பெருமக்களும் புலவர் பெருமக்களால் பெரிதும் பாராட்டப் பெற்றிருக்கின்றனர். கொடை அளிக்கும் பண்பாடும் அவர்களால் மிகச்சிறந்த - உயர்ந்த - பெருமை மிகுந்த - புகழார்ந்த பண்பாடாக, அவர்களால் போற்றப்பட்டு, வரவேற்கப்பட்டிருக்கின்றன.

கொடையளிக்கும் திறனைச் சிறந்த உவமைகளின் மூலம், சில புலவர்கள் போற்றிப் புகழ்ந்துள்ளனர். அந்த உவமை நயங்கள் படித்துப் படித்து இன்புறுவதற்குரியனவாக அமைந்திருக்கின்றன.

'கல்லாடம்' என்னும் நூலில், பெரும் வள்ளல்கள் இரந்து வரும் இரவலர்க்கு வரையறை கடந்து வழங்குவது போல, கருநிறங்கொண்டு திரண்டு காணப்படும் மேகம் அளவில்லாமல் மழைபொழிந்தது என்று கூறப்பட்டுள்ளது.

''வள்ளியோர் ஈதல் வரையாது போல,
எண்டிசைக் கருவிருந்து இனமழை கான்றது.
-கல்லாடம்—26.

இங்கு வரையாது வழங்குதல், வரையாது பெய்யும் மழைக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

கொடுமையான வெய்யில் சுட்டு எரிப்பதால், வெம்பிப் போய்க்கிடக்கும் காட்டில், வளமான மழை பொழிவது போல, பசியின் துன்பத்திற்கு ஆற்றாமல் அல்லற்படும் மக்களுக்கு மணிமேகலை அமுதசுரபியோடு தோன்றி உணவு வழங்கினாள் என்று 'மணிமேகலை' காப்பியம் உரைக்கின்றது.

''வெயில்சுட வெம்பிய வேய்கரி கானத்துக்
கருவி மாமழை தோன்றிய தென்னப்



பசிதின வருந்திய பைதல் மாக்கட்டு
அமுதசுரபியோடு ஆயிழைதோன்றி'
—மணிமேகலை

பேகன் என்பான் கடை ஏழுவள்ளல்களில் ஒருவன், அவனது கொடைப் பண்பைப்பற்றிப் பல புலவர்கள் பாடியுள்ளார்கள். புறநானூற்றுப் பாடல் ஒன்று அவனது கொடைத் திறனை வியந்து பாராட்டுகின்றது. நீரற்ற குளத்திலும், அகன்ற பெருவயல்களிலும், ஒன்றுக்கும் உதவாத உவர்நிலத்திலும் வரன்முறை ஏதும் இல்லாமல் பொழிகின்ற மழை போல, யானைப் படையையும், வீரக்கழலையும் உடைய பேகனும் யாருக்கு வழங்கவேண்டும்; யாருக்கு வழங்க வேண்டியதில்லை என்ற வரன்முறை பார்க்காது வாரி வழங்குகிறான். அவன் கொடை கொடுப்பதில் வேண்டுமானால் மடத்தனத்தைக் கொள்ளலாமேயல்லாமல், போர்க்களத்தில், எதிரிப் படைகளுக்கு முன்னால், மடத்தனத்தை ஒரு போதும் பெற மாட்டான் என்று கூறுகிறார் புறநானூற்று ஆசிரியர்.

அறுகுளத்து உகுத்தும் அகல்வயல் பொழிந்தும்
உறும் இடத்து உதவாது உவர்நிலம் ஊட்டியும்
வரையாமரபின் மாரி போலக்,
கடாஅ யானைக் கழற்கால் பேகன்
கொடைமடம் படுதல் அல்லது
படைமடம் படான்பிறர் படைமயக்குறினே''
—புறநானூறு 142.

அதியமான் நெடுமான் அஞ்சி என்னும் வள்ளல் பெருந்தகையின் சிறப்பினைப் பாட வந்த புறநானூற்றுப் புலவர், அவனிடம் பரிசில் பெற ஒரு நாள் சென்றாலும், அல்லது பல நாட்கள் தொடர்ந்து செல்வதாக இருந்தாலும், அல்லது பலரோடு சேர்ந்து செல்லுவதாக இருந்தாலும், முதல்நாள் சென்றபோது எப்படி விரும்பி ஏற்றுக்கொண்டானோ, அது போன்றே எந்நாளும் விரும்பி ஏற்றுக் கொள்ளும் இயல்பினன் ஆவான். அவன் அணிகளையும், பூண் அணிந்த கொம்புகளையும் உடைய யானைகளையும், விரைந்தோடுகின்ற தேர்களையும் கொண்டவன். அவன் வறியவர்க்குப் பரிசில் வழங்குவதில் காலத்தை, நீட்டினாலும் சரி, நீட்டாவிட்டாலும் சரி, யானையானது தனது கொம்புகளிடையே வைத்த உணவுப் பொருள் தவறாமல் அது



வாய்க்குள் சென்று விடுவது போல, அதிகமான் அஞ்சியின் கொடை தவறாமல் பரிசிலர்க்குக் கிடைத்தே தீரும் என்று குறிப்பிடுகிறார்.

ஒருநாள் செல்லலம்; இருநாள் செல்லலம்;
பல நாள் பயின்று பலரோடு செல்லினும்
தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ!
அணிபூண் அணிந்த யானை இயல்தேர்
அதியமான்

பரிசில் பெறூஉம் காலம்
நீட்டினும் நீட்டாதாயினும் யானைதன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் ததுவது பொய்யா காதே!
—புறநானூறு 101

காடுகளிடையே ஓடும் பேராற்றின் நீர்ச்சுழியில் அகப்பட்டுக்கொண்டு, அமிழ்ந்து, அல்லற்படும் மக்களைக் கண்டவுடன், காடு காத்து நிற்கும் கானவர் ஓடோடிச் சென்று அவர்களுக்கு உதவுவது போல, தம்மைத் தேடி வருவோரை எதிர்நோக்கியிருந்து, விரைந்து சென்று அவர்களுக்கு உதவிபுரிய வேண்டும் என்ற வள்ளண்மையை 'மலைபடுகடாம்' மிகச் சிறப்பாகச் செப்புகிறது.

காடுகாத்து உறையும் கானவர் உளரே,
நிலைத்துறை வழீஇய மதன்அழி மாக்கள்,
புனல்படு பூசலின் விரைந்து வல்எய்தி,
உண்டற்கு இனிய பழனும் கண்டோர்,
மலைதற்கு இனிய பூவும் காட்டி,
ஊறு நிரம்பிய ஆறு அவர் முந்துற
நும்மின் நெஞ்சத்து அவலம் வீட
இம்மென் கடும்போடு இனியீர் ஆகுவீர்!
—மலைபடுகடாம்

நிழலே காணப்படாத நெடுவழியில் தனித்து நிற்கும் தனிமரம், வெய்யிலில் வாடுவோர்க்கு எப்படி நிழல் தந்து பயன்விளைவிக்கிறதோ, அதுபோல, ஈயாத செல்வர்கள் பலர்க்கு இடையிலே தனி ஒருவனாக விளங்கும் ஈகையாளன், வறியவர்க்கு ஈந்து பயன் விளைவிக்கிறான். இதனைப் புறநானூற்றுப் பாடல் அழகுற விளக்குகிறது.



நிழல்இல் நீளிடைத் தனிமரம் போலப்
பணைகெழு வேந்தரை இரந்தும்
இரவலர்க்கு ஈயும் வள்ளியோன்
—புறநானூறு 118

கடுமையான உழைப்பின் மூலம் விளைந்த உணவு மணிகளை மக்களுக்கு வழங்கிவிட்டு வைக்கோலைத் தின்னும் காளைமாட்டைப் போல, முயன்று தேடிய பெரும்பொருளைப் பிறர்க்குக் கொடுத்துவிட்டு, எஞ்சியதை மட்டும் பண்புடைய வள்ளல் உண்ணுகிறான் என்ற கருத்தைப் புறநானூற்றுப் பாடல் ஒன்று தெரிவிக்கிறது.

உழுதநோன் பகடு அழிதின் றாங்கு
நல் அமிழ்தாக நீ நயந்துண்ணும் நறவே
—புறநானூறு 125

மிகவும் வருந்திப் பெரிதும் முயன்று பறிக்க வேண்டிய அவசியத்திற்கு இடம் வைக்காமல், தாமே வளைந்து நின்று, பூவையும், கனியையும் வழங்கும் மரத்தையும், கொடியையும் போல, கொடையுள்ளம் படைத்தவர்கள், வேண்டியவர்க்கு வேண்டியவற்றை அவர் இடத்திற்குத் தாமே தேடிச் சென்று உதவுவார்கள் என்பதைக் கலித்தொகைப் பாடல் ஒன்று குறிப்பிடுகிறது.

பாடல்சால் சிறப்பில் சினையவும் சுனையவும்
நாடினர் கொயல்வேண்டா நயந்துதாம்
கொடுப்பப்போல்
தோடுஅவிழ்கமழ் கண்ணிதையுபு
புனைவார்கண்
தோடுறத் தாழ்ந்து துறைதுறை கவின்பெற
-கலித்தொகை 28.

ஒலிக்கின்ற திரைகளையுடைய பெருங்கடலானது தெளிவுடைய நீரைக்கொண்டு பரந்ததாகக் காணப்பட்டாலும் நீர்வேட்கை உடையவர்கள் கடல் நீரை உண்ணமாட்டார்கள். மாடும், விலங்குகளும், பிறவும் சென்று நீர் பருகுவதால், சிறிய நீர்நிலை கலங்கிச் சேறாக இருந்தாலும், அதன் நீரைப் பருகுவர். அதுபோல, வழங்காத செல்வர்கள் எவ்வளவு பெரிய செல்வம் படைத்திருந்தாலும், அவர்களிடம் செல்லாமல், எளியவர்களாக இருந்தாலும் கொடையுள்ளம் படைத்தவர்களிடமே இரவலர்கள் செல்வார்கள் என்ற கருத்தைப் புறநானூற்றுப் பாடல் ஒன்று புலப்படுத்துகிறது.

தெள்நீர்ப் பரப்பின் இமிழ்திரைப்பெருங்கடல்
உண்ணார் ஆகுப, நீர்வேட்டோரே
ஆவும் மாவும் சென்றுணக் கலங்கிச்
சேறொடு பட்ட சிறுமைத்து ஆயினும்
உண்ணீர் மருங்கின் அதர்பல ஆகும்
—புறநானூறு 204

சுவைமிக்க புதிய பழங்கள் பழுத்துக் குலுங்கும் மரத்திடத்தில், பறவைக் கூட்டத்தின் ஆரவாரம் மிகும். அதுபோலக் கொடைத் திறம் படைத்த செல்வர் மாளிகையில், எப்போதும் மக்களின் ஆரவார இரைச்சல் கேட்டுக்கொண்டே இருக்கும் என்ற கருத்தை புறநானூற்றுப் பாடல் குறிப்பிடுகின்றது. பசிப்பிணி மருத்துவனான பெருகுடி பண்ணன் இழார் மாளிகைப் புலவர் குறிப்பிடுகிறார்.

யாணர்ப் பழுமரம் புள்ஊமிழ்ந் தன்ன
ஊன் ஒலி அரவம் தானும் கேட்கும்
.....................
பசிப்பிணி மருத்துவன் இல்லம்

—புறநானூறு 173

மலையில் விழும் மழைத்துளிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து அருவியாக, ஆகி ஆறாகப் பெருகிக் கடலை நோக்கிச் செல்லுவதைப் போல, இரவலர் கூட்டம் வறுமையைப் போக்கும் புரவலரை நோக்கிச் செல்லும் என்பதைப் புறநானூற்றுப் பாடல் ஒன்று கூறுகிறது.

மலையின் இழிந்து மாக்கடல் நோக்கி
நிலவரை இழிதரும் பல்யாறுபோலப்
புலவர் எல்லாம் நின்னோக்கினரே

—புறநானூறு 42

பாழூரில் தோன்றும் பசிய இளம் நெருஞ்சிச் செடியின் பூ, எழுந்து வரும் செங் கதிரவனை நோக்கி நிற்கும்..அதுபோல, வறுமையில் உழலும் புலவர் கூட்டம் கொடையாளர்களின் கைகளையே நோக்கி நிற்கும்.

பாழூர் நெருஞ்சிப்பசலை வான்பூ
ஏர்தரு சுடரின் எதிர்கொண் டாஅங்கு
இலம்படு புலவர் மண்டை விளங்குபுகழ்க்
கொண்பெருங் கானத்துக் கிழவன்
தண்டார் அகலம் நோக்கின மலர்ந்தே

—புறநானூறு 155

களிறு ஆகிய உணவு தனக்குக் கிடைக்காமல் போய்விட்டது என்பதற்காகப் புலி ஓர் எலியைக் கொன்று தின்னாது. அதுபோல் எதிர்பார்த்த ஒரு பொருளை அல்லாமல், பெருமைமிக்க இரவலர், எது கிடைத்தாலும், அதுவே போதும் என்று பெற்றுக்கொண்டு போய்விட மாட்டார்கள்.

புலிபார்த்து ஒற்றிய களிற்றிரை பிழைப்பின்
எலி பார்த்து ஒற்றாகும்:
எழுமதி நெஞ்சே துணிபுழுந் துறத்தே

—புறநானூறு 237

தொழில் வல்லமை வாய்ந்த தச்சச் சிறார், தங்கள் தொழிற் கருவிகளுடன் காட்டுக்குச் சென்றால், மரம் வெட்டாமல் திரும்ப மாட்டார்கள். அதுபோல புலவர்களும் தம் புலமையைக் காட்டிப் பொருட் பரிசுப் பெறக் கிளம்பினால், அதனைப் பெறாமல் திரும்ப மாட்டார்கள்.

மரங்கொல் தச்சன் கைவல்சிறாஅர்
மழுவுடைக்காட்டு அகத்து அற்றே
எத்திசைச் செல்லினும் அத்திசைச் சோறே

—புறநானூறு 206

இவ்வாறு வறியோர் நாடும் வள்ளண்மையைச் சிறப்பித்துப் புகழ்ந்து, பாடப்படும் பாடல்கள் தமிழிலக்கியங்களில் ஏராளமாக இருக்கின்றன. உவமை நயத்தோடு கூடிய ஒரு சில எடுத்துக்காட்டுக்களை மட்டும் நான் குறிப்பிட்டுள்ளேன்.

தமிழர் போற்றிவளர்த்த தலைசிறந்த பண்பாடுகளில் வள்ளண்மையும் ஒன்றாகும். அந்தப் பண்பாட்டைத் தமிழ்ப் பெருங்குடியினர் ஒவ்வொருவரும், தங்களால் இயன்ற அளவுக்குத் தம் வாழ்வில் கடைப்பிடிக்க முயல்வார்களாக!







# உழைப்பால் உயர்ந்தவர்

மாண்புமிகு மின்துறை அமைச்சர்

## திரு. எஸ். இராமச்சந்திரன்

தமிழகத்தில் விழாக்களுக்கும் வேடிக்கைகளுக்கும் பஞ்சமில்லை. ஒவ்வொரு விழாவிற்கும் ஒரு கட்டுக் கதையும் உண்டு. ஆனால் அறிவுக்கு ஒத்த ஒரே விழா அறுவடை விழா; உழைப்பின் விழா; பொங்கல் விழாதான்.

தொன்று தொட்டு தமிழர்கள் தொடர்ந்து போற்றி வருவது பொங்கல் விழா. அறிஞர் அண்ணா அவர்கள் மறைவதற்கு முன் தமிழக மக்களுக்கு எழுதிய கடிதம் பொங்கல் விழாவை ஒட்டியே.

''எல்லோரும் வாழ வழிவகை காண்பதே எமது குறிக்கோள். இன்றுள்ள நிலை ஒரு சிலர் வாழவும் பலர் வாடவுமாய் உள்ளது. ஒருசிலரிடத்திலே செல்வம் குவிந்து இருப்பது வெள்ளம் போன்றது. வெள்ளம், சமுதாயத்தில் நலிந்தோரை மட்டுமல்ல, அதைக் கொண்டோரையும் அழித்திடும்'' என்றார் அண்ணா. வெள்ளத்தை அணைபோட்டுத் தடுத்திடுவோம். ஓடும் வாய்க்கால்களாக மாற்றி, வயல் நிலத்தை விளை நிலமாக செழிக்கச் செய்வோம். இப்பணியே அறிஞர் அண்ணா அவர்கள் இத்தலைமுறைக்கு விட்டுச் சென்றது.

பொங்கல் விழா மாளிகையில் மகிழ்ச்சியையும், மண்குடிசைகளில் ஏக்கத்தையும் வரவழைக்கும் நிலை மாற்றி, எல்லோரும் மகிழ்ந்திருக்கப் பாடுபடுவோம். இதை உணர்ந்து தான்.

இலவச சத்துணவுத் திட்டம்,
குடிசைக்கு ஒரு விளக்குத் திட்டம்,
இல்லாதோர்க்கு வீட்டு மனைத் திட்டம்,
வறியவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும்
திட்டம்,

சிறு விவசாயிகளுக்கு இலவச மின் வசதி போன்ற எண்ணற்ற திட்டங்களை எண்ணி எண்ணி தமிழக அரசின் மூலம் நிறைவேற்றி வருகிறார் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள்.

''ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்'' என்றார் அறிஞர் அண்ணா. ''உழைப்போரே உயர்ந்தவர்'' என்பார் புரட்சித் தலைவர். உழைப்பின் திருநாளாம் பொங்கற் புது நாளில் ஏழைகள் இதயம் வாழ்த்த, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள உறுதி பூணுவோம்.

''புதியதோர் உலகம் செய்வோம்—கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்''



### ஒற்றுமை

ஒற்றுமையை வளரும் பசுஞ் செடிக்கு நிகராகக் கருதி ஒரு சீராகத் தண்ணீர் விட்டுப் பேணி வந்தால் மட்டுமே அது வளரும். அதைவிட்டுத் தண்ணீரும், வெந்நீரும் மாற்றி மாற்றி உற்றினால் செடியின் நிலை என்ன ஆகும்?

இந்தியா ஒன்றுபட்டிருக்க வேண்டும்; அதன் வலிவு வெல்லற்கரியதாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம். இந்த ஒற்றுமையை ஏற்படுத்துவதெப்படி? சட்டத்தின் மூலமோ, கட்டளையின் மூலமோ, குடியரசுத் தலைவரின் உத்தரவின் மூலமோ ஒற்றுமையை ஏற்படுத்திவிட முடியாது. ஒற்றுமை என்பது உள்ளம் சம்பந்தப்பட்ட ஒன்றாகும். நமது எண்ணங்கள் ஒன்றிணைந்திட, செயல்பட வேண்டும். வெறும் உதட்டளவுப் பேச்சினால் ஒற்றுமை வந்து விடாது.

—பேரறிஞர் அண்ணா




ARIES ADVERTISING PVT. LTD.
271 LLOYDS ROAD ROYAPETTAH MADRAS 600 014
BRANCHES AT BANGALORE • COCHIN • COIMBATORE • TRIVANDRUM




# பொங்குக பால்

மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர்

## திரு கே.ஏ.கிருஷ்ணசாமி

"காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான்- அவன்
காணத் தகுந்தது வறுமையா?"

—என்று கேட்டார் பாவேந்தர் பாரதிதாசனார்.

அந்த நிலை மாற்றிட தம் சொந்த நலம் கருதாது நாளொரு மேனி பொழுதொரு வண்ணம் பாடுபட்டு வருபவர், நாடே வியக்க நல்ல பல திட்டங்களைத் தீட்டிச் செயல் படுத்தி வருபவர் நமது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் அவர்கள்.

பாவேந்தர் பாரதிதாசனார் இன்றில்லையே, தொழிலாளர் நலம் பேணுவதில் துவளாது செயல்பட்டு வரும் நமது அரசின் புகழ் பாடிட! இது நமது இந்த நேரக் கவலை!

நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் முப்பிறவி கண்டு தமிழகம் திரும்பிய பின் வருகின்ற முதலாவது பொங்கல் இது!

தடை பல உண்டென்றாலும் தாங்கும் திருத்தோள்கள் எமக்குண்டு என்றுள்ள, பயன் கருதாது பாடுபடும் தொண்டர்படையால் மூன்றாவது முறையாக மாண்புமிகு முதல்வர் பதவி புரட்சித் தலைவர் தம் திருப்பாதங்களில் காணிக்கை செலுத்தப் பட்டபின் வருகின்ற இரண்டாவது பொங்கல் இது!

இதற்கு ஈடு எது - இணைதான் ஏது?

'மஞ்சளும் கரும்பும் நெல்லும்
மற்றுள பலவும் தந்து
பஞ்சமும் பசியும் போக்கப்
பாரிலே உழைத்த தோழன்
பஞ்சையாய் வாழு கின்றான்
பாரிலே மற்றோர் கூட்டம்
வஞ்சமாய் ஏய்த்து வாழும்
வகையினைத் தடுப்போம் வாரீர்!'

—என முழங்காமல் முழங்கிச் செயல்பட்டு வரும் புரட்சித் தலைவரின் இந்தப் பொன்னான அரசு புதியதோர் உலகு படைத்திருக்கிறது; இதில் ஏழை எளியவர்களுக்கெல்லாம் பூரிப்புக் கிடைத்திருக்கிறது என்றால் மறுப்பாருண்டா.....மறப்பார்தான் உண்டா!

பொங்கல் நாளில்—

''பால் பொங்கிற்றா?'' என்று நாம் ஒருவரையொருவர் கேட்டு மகிழ்வது மரபு; பால் பொங்கிற்றென்றால் அந்த ஆண்டு முழுவதும் பல்வேறு வளமும் பொங்கும் நம் இல்லமெலாம் என்பது தொன்றுதொட்டு வரும் கணிப்பு.

தொழிலாளர் நலம் பேணும் இந்தத் தூய அரசில் - பல்வளமும் பெருகி வருகிறது எங்கும் என்பதற்கு ஏற்றதோர் எடுத்துக்காட்டாகத்தான் பால்வளம் பொங்கி வருகிறது பைந்தமிழ் நாடெங்கும்!

'என்ன வளம் இல்லை எங்கள் நாட்டில்!'

-என்ற கேள்வி தமிழ்த்திரு நாட்டின் பட்டி தொட்டியெல்லாம் கேட்கப்படவிருக்கும் நாள், தொலைவில் இல்லை என்பதற்கு ஏற்றதோர் சான்றிது!

சுதந்திரம் பெற்ற முப்பதாண்டுகளில்— அதாவது 1976 வரை தமிழ்நாட்டில் 7 பால் பண்ணைகளே இருந்தன!

ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின் இந்த 8 ஆண்டில் 14 பால்பண்ணைகள்- அதாவது இரு மடங்கு அதிக அளவிலே உருவாக்கப்பட்டுள்ளன.

1976 ஆம் ஆண்டு வரை பால் குளிரூட்டும் நிலையங்கள் 17 தான் தமிழ்நாட்டிலிருந்தன; ஆனால் பொன்மனச் செம்மல் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த எட்டாண்டுக் காலத்திலோ அதன் எண்ணிக்கை 41 ஆக உயர்ந்திருக்கிறது.

நகரங்கள் நலமடைய வேண்டுமானால் கிராமங்கள் வளமடைய வேண்டுமென்றார் காந்தியடிகள். அந்த வகையிலே கிராமப்புற மக்களின் நிதி ஆதாரத்தைப் பெருக்கிடும் வகையில் மக்கள் திலகத்தின் மாண்புமிகு ஆட்சியில் 4123 பால் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

அதற்கு முன்னாலே 1976 வரை தமிழ்நாட்டிலிருந்த பால் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை என்ன தெரியுமா? 1724 தான்.

பால் கொள்முதல் அளவு மட்டுமென்ன?

1981ல், 3.2 இலட்சம் லிட்டராக இருந்த பால் கொள்முதல் அளவு, இப்போது இரண்டு பங்குக்குமேல்-அதாவது 6.42 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது.

பால் வளம் பெருகியிருப்பது இப்படிக் கிராமப்புறங்களிலே மட்டுமல்ல, தமிழ்நாட்டிலுள்ள பெருநகரங்களிலும் பால் நுகர்வோர்க்கு எவ்விதத் தங்கு தடையுமின்றி எல்லா நேரங்களிலும் பால் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

சென்னை நகரிலே பல்வேறு பகுதிகளிலும் இந்த 1985-86ல் 125 தானியங்கிப்பால் நிலையங்கள் திறக்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டு, புதிதாகத் திறக்கப்பட்ட பால் நிலையங்களின் எண்ணிக்கை 61 ஐத் தாண்டிவிட்டது.

ஒவ்வோர் தானியங்கிப்பால்நிலையத்தின் மூலம் நாள்தோறும் 2000 பால் நுகர்வோர் பயன்பெற்று வருகின்றனர்.

பால் விநியோகத்தை மேலும் செம்மைப்படுத்த சீர்படுத்த கம்பியில்லாத் தகவல் கட்டுப்பாடு நிலையங்கள் அம்பத்தூரிலும் நந்தனத்திலும் ஏறத்தாழ 10 இலட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டு சிறப்புற இயங்கி வருகின்றன.

இந்த ஆண்டுப் பொங்கல், இன்பத் தமிழ் நாடெங்கும், இன்தமிழர் வீடெங்கும் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களின் அருளினாலே குறைவின்றிப் பாலொடு பொங்கும்- எங்கும் மகிழ்வும் இன்பமும் தங்கும்!





# இந்திய அரசியலில் தமிழகத்தின் தனிச்சிறப்பு

மாண்புமிகு சுற்றுலா
அறநிலைய அமைச்சர்
## திரு. இராம. வீரப்பன்



தமிழகத்தின் வரலாறு பற்றி அறிய ஒரு சில ஆதாரங்களே இருக்கின்றன. சங்ககாலத்துக்கு முற்பட்ட காலம் பற்றித் தெளிவாக எழுதப்பட்ட வரலாறு எதுவும் கிடையாது.

சங்க காலம் பற்றின வரலாற்று ஆதாரங்கள் கூட நம்முடைய இன்பத்தமிழ் இலக்கியங்களில் இருந்துதான் கிடைத்துள்ளனவே தவிர, வேறு ஏதுமில்லை. இவ்வாறு வரலாற்று ஆதாரங்கள் இல்லாத நிலையையும் வரலாறு குறித்தும் நாம் கொண்டுள்ள அனுமான கணிப்புக்களையும் ஆழ்ந்து காணுகிற ஒருவரால்தான் தமிழ்நாடு பற்றிய வரலாற்றுக் குறிப்புகளின் முக்கியத்துவத்தை உணர முடியும்.

நம்முடைய வரலாறு நம் காலத்திலேயே எழுதப்படுவது நினைவுகூர்ந்து பெருமகிழ்ச்சி அடையவேண்டிய ஒன்றாகும். ஒவ்வொரு துறையிலும் தலைமையிடம் வகிக்கும் வல்லுநர்கள் கி.பி.1900ஆம் ஆண்டுக்குப்பின்னருள்ள தமிழ்நாட்டு வரலாறு எழுத உதவியுள்ளனர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

அண்மைக்காலத்தில் தேசிய இயக்கத்தின் வளர்ச்சியையும் திராவிட இயக்கத்தின் வெற்றியையும் தமிழகம் கண்டிருக்கிறது. இப்போது நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடிக்கொண்டிருக்கிற காங்கிரஸ் இயக்கம் அரசியல் ரீதியில் இந்திய விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்தபோது, 'நீதிக்கட்சி' என அழைக்கப்பட்ட தென்இந்திய திராவிட இயக்கம் சமுதாய விடுதலைப்போரின் முன்னோடியாக உருவெடுத்து ஓங்கி வளர்ந்தது. அரசியல் விடுதலைக்காகப் போராடிய காங்கிரசின் தொண்டும் நாட்டுக்குத் தேவைப்பட்டது. சமுதாய விழிப்புணர்வினை ஏற்படுத்திய திராவிட இயக்கத்தின் தொண்டும் நாட்டுக்கு இன்றியமையாத தேவையாக அமைந்தது.

இருபதாம் நூற்றாண்டில் தொடக்கத்தில் இந்தியாமுழுவதும் அண்ணல் காந்தியடிகளின் தலைமையின் கீழ் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தது. அவ்விடுதலைப் போராட்டத்தில் தமிழகமும் தன் பங்கினைத் திரமிக்க தியாக சீலர்களான செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார், மகாகவி பாரதியார், சுப்பிரமணிய சிவா, வ.வே.சு.அய்யர், ராஜாஜி, திரு. வி. கல்யாணசுந்தரனார், தந்தை பெரியார் ஆகிய பெருமக்களின் கூட்டு முயற்சியுடன் விடுதலைப் போராட்டத்தை நடத்திக்கொண்டிருந்தது. ஆனாலும், தமிழகம் தனிச் சிறப்புமிக்கதோர் பணியினை ஆற்றவேண்டியதிருந்தது. எனவே, இந்தியாவின் பொதுவான அரசியல் வரலாற்றிலிருந்து தமிழ்நாட்டின் வரலாறு தனித்து நின்றது.

தென்னகத்தில் - சமுதாயத்தின் பெரும் பகுதியினர் அறியாமையிலும், மூடநம்பிக்கையிலும் மூழ்கிக்கிடந்தனர். சாதிவெறிக்கும் தீண்டாமைக் கொடுமைக்கும் பலியாகி இழிநிலைக்குள்ளாயினர், சமுதாயத்தின் அடித்தளத்தில் அழுத்தப்பட்டுக் கிடந்தனர்.

இந்தச் சாதிக்கொடுமை பெரும்பான்மையினரை அடிமைப்படுத்திய சிறுபான்மையினரின் ஆதிக்க வெறி ஆகியவற்றை எதிர்த்து இயக்கமொன்று தமிழகத்தில் எழுந்தது. அந்த இயக்கம்தான் தீரர் வெள்ளுடைவேந்தர் சர்பிட்டி தியாகராயர் 1916ல் தொடங்கிய தென்னிந்திய நல உரிமைச் சங்கம் ஆகும்.

தென்னகத்தில் முதன்முதலாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசினை அமைத்தது நீதிக்கட்சிதான்; அது மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு 1920 முதல் 1936 வரை ஆட்சியினை நடத்தியது. இடையில் ஒருமுறை மட்டும்தான் பதவியில் இல்லாமல் இருந்தது. பதவிக்கு வந்தவுடனே மிகப்பெரும் சமுதாய சீர்திருத்தச் சட்டங்களை நீதிக்கட்சியின் அரசு இயற்றியது.

நீதிக்கட்சி நிறைவேற்றிய சமுதாய சீர்திருத்தச் சட்டங்களில் மிகவும் புரட்சிகரமானது சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் சம வாய்ப்பளித்து சமுதாய நீதிக்கு வழிவகுக்க 1921ல் நிறைவேற்றப்பட்ட 'கம்யூனல் ஜி. ஓ.'எனும் சீர்திருத்தச் சட்டமே ஆகும். இதனால் இந்திய வரலாற்றிலேயே முதன் முதலாகக்கல்வி பெறுவதிலும் அரசு நிர்வாகத்திலும் பிற்படுத்தப்பட்ட; தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் சமவாய்ப்புகளை முதன்முதலாக உருவாக்கிக் கொடுத்த இந்தச் சட்டமேயாகும். அதுவும் நீதிக்கட்சியின் ஆட்சிக்காலத்தில்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவிலேயே பல்வேறு புரட்சிகரமான சமுதாய சீர்திருத்தச் சட்டங்களை இயற்றுவதில் முன்னோடியாக இருந்தது நீதிக்கட்சி ஆட்சிதான். இந்தியாவில் முதன்முதலாகப் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கும் சட்டம் 1921ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது. கட்டாய ஆரம்பக்கல்விச் சட்டம், 1920ல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவித்தொகை வழங்கும் சட்டம், 1923ல் இந்து அறநிலையச் சட்டம், 1936ல் உழுபவனுக்கே நிலம் எனும் உரிமையை வழங்கும் இனாம் ஒழிப்புச் சட்டம் ஆகிய புரட்சிகரச் சட்டங்கள் அனைத்தும் நீதிக்கட்சியின் ஆட்சிக்காலத்தில் நிறைவேற்றப்பட்டன. அத்துடன்





# விழைகுவோம் தைப்பொங்கல்!

—ஔவை. நடராசன்

இன்னல் தீர்ந்துதமிழ் நாடாளும் எழிலரசர்
பன்னலமும் பெற்றுப் பாராளும் வேளையிலே
செந்நெல் மணிகுவித்துச் செவ்வாழை மஞ்சளொடு
கன்னல் கட்டெடுத்துக் கண்டிடுவோம் தைப்பொங்கல்!

ஏழைக் குழந்தையர்க்கு எந்நாளும் சோறூட்டி
வாழைக் குருத்தெனவே வாழ்விக்கும் வள்ளலருள்
சூழுங் காலத்தே சுழல்கின்ற தைப்பொங்கல்
ஆழி முழக்கெனவே ஆர்க்கட்டும் மகிழ்வெள்ளம்!

உள்ளமெலாம் தமிழாகி உணர்வதுவும் தமிழாகிக்
கொள்ளும்பே ரன்பாலே கொள்கையினில் துவளாது
கள்ளமிலா நெஞ்சத்தால் கவினாட்சி செய்கையிலே
வெள்ளமெனும் உணர்வோடு விழைகுவமே தைப்பொங்கல்!

எங்கும் எத்துறையும் எல்லாமும் தமிழாகக்
கங்குல் பகலாகக் கண்ணிமையா துழைக்கின்ற
தங்க நிறமேனித் தமிழ்வடிவின் புகழேபோல்
பொங்கல் பொங்கிவரப் படைப்போமே தைப்பொங்கல்!!

பள்ளிகளில் நண்பகல் உணவுத்திட்டத்தையும் நீதிக்கட்சிதான் அறிமுகப்படுத்தியது.

ஆந்திரப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்களும், பல்கலைக்கழக வேந்தர், துணை வேந்தர் பதவிகளும் நீதிக்கட்சியின் அரசினால் உருவாக்கப்பட்டன. முதன்முதலாக ஆலய நிதியினைச் சமூகப் பணிகளுக்குப் பயன்படுத்த முன்வந்ததும் நீதிக்கட்சியின் ஆட்சிக்காலத்தில்தான். அதன்படி திருப்பதி தேவஸ்தானத்திலிருந்து 40 லட்சம் ரூபாய் ஆந்திரப் பல்கலைக்கழகத்தை உருவாக்கப் பயன்படுத்தப்பட்டு அப்பல்கலைக்கழகத்தில் அறிவியல், பொறியியல் போன்ற பாடங்களையும் அப்பகுதி மக்களின் தாய் மொழியான தெலுங்கில் கற்பிக்க வகை செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியத் துணைக்கண்டத்தில் தோன்றிய சமுதாய சீர்திருத்தவாதிகளிலேயே மிகப் பெரிய தீவிரப் புரட்சியாளரான தந்தை பெரியார் சமூகத்தொண்டில் முழுமையாக ஈடுபடத்தக்க ஆர்வமும் துடிப்பும் கொண்ட ஆற்றலின் சிகரம் அறிஞர் அண்ணாவைக் கண்டெடுத்து தமிழ் மக்களுக்கும் அறிமுகப்படுத்தினார். அர்ப்பணித்தார். தந்தை பெரியாரின் பணிகளில் மிகப்பெரிய பணி அதுவேயாகும்.

காங்கிரசு இயக்கத்தின் புகழ்மிக்க தலைவராகவும், அண்ணல் காந்தியடிகளின் தீவிர தொண்டராகவும் இருந்த தந்தை பெரியார் ராமசாமி சமுதாய விழிப்புணர்வின் காரணமாக, சமுதாயத்தில் நிலவிய கேடுகளைக் களைய திராவிடர் கழகத்தைத் தோற்றுவித்தார். அதேபோன்று, அரசியல் விழிப்புணர்வின் காரணத்தால், அறிஞர் அண்ணா தந்தை பெரியாரின் அரசியல் வாரிசு என்றிருந்த நிலையிலும், திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கினார்.

'பெரியார் முதல் அண்ணா வரை' என்பது நெடியதோர் பயணம் என்றே கூறலாம். இப்பெருமக்கள் இருவரின் வளர்ச்சியும் வரலாறும் ஆராய்ச்சியாளர்களுக்கு அரியதோர் ஆய்வுச் சுரங்கமாகும். ஒரே சமுதாய இலட்சியத்திற்காகப் பாடுபட்ட இருவரும் சில வேளைகளில் முழுக்க முழுக்க முரண்பட்டும் நின்றிருக்கின்றனர். அண்ணல் காந்தி, பண்டித நேரு ஆகிய இருவருக்கும் பின்னர் அவர்களைப்போன்றே கருத்து வேறுபாடும்-அதே நேரத்தில் இலட்சியத்தில் மாறுபடாத ஈடுபாடும் கொண்ட இருபெரும் தலைவர்கள் தந்தை பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் தவிர வேறுயாரும் இல்லை.

கருத்துவேறுபாடு இருந்தபோதிலும், தந்தை பெரியார்மீது தான் கொண்டிருந்த மரியாதையை எள் முனையளவும் அண்ணா குறைத்துக் கொண்டதில்லை. அத்தெய்வத் திருப் பண்பை அரசியல் உலகில் தமிழகத்தின் தள நாயகராம் பொன்மனச்செம்மல் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். காலத்தில் தான் மீண்டும் காணமுடிகிறது.

நீதிக்கட்சி 1936ஆம் ஆண்டு பதவியை இழந்தது. பேரறிஞர் அண்ணா நீதிக்கட்சியின் இலட்சியங்களையும் திட்டங்களையும் நிறைவேற்றி ஒடுக்கப்பட்ட மக்களைக் காப்பாற்றவும், நீதிக்கட்சியின் பெருமையை நிலைநாட்டவும் 1976ல் தனது ஆட்சியை அமைத்தார், நீதிக்கட்சியின் புகழை மீட்டார்.

முதலமைச்சர் அண்ணா தமிழ் மண்ணுக்குத் 'தமிழ்நாடு' எனும் அதன் வரலாற்றுச் சிறப்புமிக்க பெயரை மீண்டும் சூட்டினார். இருமொழி திட்டத்தை நிறைவேற்றி தமிழ் நாட்டுக்குள் வேறு எந்த மொழியும் புகுந்து ஆதிக்கம் செலுத்தாமல் தடுத்துநிறுத்தினார். சுயமரியாதைத் திருமணங்களுக்குச் சட்ட அங்கீகாரம் கிடைக்கும் வகையில் சட்டம் இயற்றினார்.

இத்தனையையும் செய்துவந்த அண்ணா 1969ல் மரணத்தின் கொடிய கரங்களால் நம்மிடையே இருந்து தட்டிப்பறிக்கப்பட்டதால், அவருடைய ஆட்சி மிகவும் குறுகிய காலத்தில் முடிந்துவிட்டது.

அண்ணாவுக்குப் பிறகு தமிழகத்தின் எதிர்காலம் இருண்டுகிடந்தது. அண்ணாவின் அரசாட்சியினை மீண்டும் அமைக்கவே முடியாது என்ற நிலை நிலவியது. திராவிட இயக்கத்தின் வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்தி, அறிஞர் அண்ணா அவர்கள் வந்ததுபோலவே மக்களின் இதயங்களை ஆட்கொண்ட புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தை 1972ல் உருவாக்கி 1977ல் அண்ணாவின் ஆட்சியை மீண்டும் தமிழகத்திலே அமைத்தார்.

பெரியார் அண்ணா வழிநின்று அவர்களின் கொள்கைகளையும் திட்டங்களையும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். நிறைவேற்றி வருகிறார் என்பது ஊரறிந்த உண்மை.

நீதிக்கட்சி அரசின் திட்டங்களில் முக்கியமான ஒன்று பள்ளிகளில் நண்பகல் உணவுத் திட்டமாகும். அந்தத்திட்டத்தை முதன்முதலில் அறிமுகப்படுத்தி நிறைவேற்றியது நீதிக் கட்சி அரசுதான்.

காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் பெருமதிப்பிற்குரிய பெருந்தலைவர் காமராசரும் மதிய உணவுத் திட்டத்தைச் செயற்படுத்தினார். இப்போது முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத்திட்டத்தைஅறிமுகப்படுத்தி ஆண்டுக்கு ரூ 200 கோடி செலவிட்டு நாள்தோறும் இரண்டு வயது முதல் 15 வயதுவரை உள்ள 83 இலட்சம் குழந்தைகளுக்கு உணவளித்து காத்து வருவது போன்ற நிலை அன்றில்லை. மேலும் வறுமையில் வாடுகின்ற முதியோர் முன்னாள் இராணுவத்தினர் உட்பட 3 இலட்சம் பேருக்குச் சத்துணவு அளிக்கப்படுகிறது, இந்த அரசில்.

இந்தியாவில் மட்டும் அல்ல; உலகிலேயே இது ஒரு புதுமையான திட்டம், அறிவியல் ரீதியான ஓர் புரட்சிகரத்திட்டம். பசியினால் வாடும் இலட்சக்கணக்கான குழந்தைகளுக்கு உணவளித்து அவர்களின் நோய் நீக்கி நலம் காக்கும் இத்திட்டத்தைத் தலைவர்களும், விஞ்ஞானிகளும் மருத்துவர்களும் வரவேற்கிறார்கள்.

''அண்ணா எந்த இலட்சியங்களுக்காக நாளெல்லாம் பாடுபட்டு வந்தாரோ அந்த இலட்சியங்கள் எல்லாம், மறைந்துகொண்டிருக்கின்றன" என்று தெரிந்தோ தெரியாமலோ சிலரால் பேசப்பட்டு வருகிறது.



தமிழகத்திலிருக்கிற கற்றறிந்த அறிஞர் பெருமக்களுக்கு நான் ஓர் உறுதியளிக்க விரும்புகிறேன். அண்ணாவின் இலட்சியங்கள் மறைந்துவிடுமோ என்று ஐயப்படவேண்டாம். அதுமட்டுமல்ல, அத்துடன் இன்னொன்றையும் எல்லோருக்கும் பிரகடனப்படுத்த விரும்புகிறேன். எங்களை வழிநடத்திச் செல்வது அண்ணாவின் இலட்சியங்கள்தான். அண்ணா அவர்களாலே இதயக்கனி எனப் போற்றப்பட்ட-தன்னுடைய அரசியல் வாரிசு என அடையாளம் காட்டப்பட்ட மக்கள் திலகமாம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அண்ணாவின் இலட்சியங்களைத் தான் பரப்பிவருகிறார். அண்ணாவின் திட்டங்களைத்தான் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். அண்ணாவின் பெயரைத்தான் துறைதோறும் நிலைக்கச் செய்துவருகிறார்.

இன்று ஆட்சியில் இருக்கின்ற கட்சி அண்ணாவின் கட்சி, அது அண்ணாவின் பெயரைத் தான் தாங்கி இருக்கிறது. தமிழ்நாட்டின் அரசியல் இனி என்றும் அண்ணாவையும் அவரது இலட்சியங்களையும்கொண்டுதான் இயங்கும். மாநிலத்தின் உரிமைகளைக் காக்கவும், ஒடுக்கப்பட்ட மக்களை உயர்த்தவும்தான் அண்ணா போராடி வந்தார்.

எந்த ஒரு அரசியல்வாதியும் இந்த உண்மைகளை ஒதுக்கிவிட்டு உலாவர முடியாது. எனவே, என்றென்றும் தமிழக அரசியலை அண்ணாதான் இயக்கிக்கொண்டிருக்கிறார். இயக்கிக்கொண்டிருப்பார் என்பதை இந்தத் தமிழர் திருநாளில் அறுதியிட்டுக்கூறி எல்லோர்க்கும் என் பொங்கல் நல்வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



# இயற்கையின் எழில்

மாண்புமிகு தொழில் அமைச்சர்
திரு. க. இராசாராம்

இன்று பொங்கல் திருநாள்!

தமிழர் தம் இல்லந்தோறும் இன்பம் பொங்கிடும் நன்னாள்!

விவசாயப் பெருங்குடி மக்கள் பூரிப்படைந்திடும் பொன்னாள்!

வாலிபர்கள் வயோதிகர்களுக்கு வணக்கம் கூறுவதும், வயோதிகர்கள் வாலிபர்களுக்கு வாழ்த்துச்சொல்வதும் ஒருங்கே நடைபெறுகின்ற திருநாள்!

அத்தகைய நன்னாளில் நாம் நடந்துவந்த பாதையினை எண்ணிப் பார்ப்போமாக!

''யாமறிந்த மொழிகளிலேதமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்''
என்றார் மகாகவி பாரதியார்.

''தமிழுக்கு அமுதென்று பேர் - அந்தத்
தமிழெங்கள் உயிருக்கு நேர்''

என்றார் புரட்சிக்கவி பாவேந்தர் பாரதிதாசன்.

இத்தோடு நில்லாமல் ''தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவச் செய்ய வேண்டும்'' என்றார் பாரதியார்.

இப்படிக் கவிஞர் பெருமக்கள் பல கனவுகளைக் கண்டார்கள். ஆனால் தமிழகத்தில் தமிழிலே வெளிவந்துள்ள நூல்களைப் பார்க்கின்ற போது ஒரு பத்தாயிரம் நூல்களைக் கூட வாங்க முடியாத சூழ்நிலையைத்தான் நாம் இன்றைக்குப் பெற்றிருக்கிறோம்.

தமிழுக்காக உழைத்து, தமிழைவளர்த்து, தமிழில் புகழ் பெற்று, உயிரைத் தமிழிற்கும் உடலை மண்ணுக்கும் ஈந்த புலவர் பலர் நம் நாட்டில் தொன்று தொட்டு வாழ்ந்துள்ளார்கள். அவர்களாலே தமிழ் எவ்வளவோ பெருமை பெற்றுள்ளது. அவர்கள் ஏராளமான பாடல்களைப் பாடிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அந்தப் பாடல்கள் எல்லாம் பல காணாமல் போய்விட்டன.

சில ஆடிப்பெருக்கில் எடுத்து வீசப்பட்டு ஆற்றோடு சென்று கடலிலே கலந்து விட்டன.

தமிழ்நாட்டிலேதான் எல்லாவற்றையும் இசையின் மூலமாகப்பார்க்கும்ஒருபோக்கு தொன்று தொட்டு வளர்ந்து வந்திருக்கிறது.

சிந்துவெளி நாகரிகக் காலந்தொட்டு ஏராளமான பாடல்கள் தமிழிலே பல புலவர்கள் வாயிலாகத் தரப்பட்டிருக்கிறது. அந்தப் பாடல்கள் உலகத்திலே உள்ள அயல் நாட்டாரை எல்லாம் தமிழின்பால் ஆர்வமும் அக்கறையும் கொள்ளச் செய்திருக்கிறது.

டாக்டர் கிரௌவீல், ''தமிழ் மொழியை அழகான சிங்கார வேலைப்பாடான கலன் என்றும், திருக்குறளைத் தங்கத்தட்டு என்றும் தமிழ் என்னை ஈர்த்தது; குறளே என்னை இழுத்தது'' என்றும் புகழ் பாடியிருக்கிறார்.

டாக்டர். கால்டுவெல், ''உலகின் மிச்சில மொழிகளுக்குத்தான் அறிவியல் அடிப்படையிலான இலக்கணம் அமைந்துள்ளது. அவற்றில் தமிழே முன் நிற்கிறது. தொல்காப்பியமும் நன்னூலுமே இதற்கு மாபெரும் சான்றுகள்'' என்று குறிப்பிடுகிறார்.

''எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெரும் தமிழணங்கே'' என்று மனோன்மணிய ஆசிரியர் சுந்தரம்பிள்ளை இந்தக்கூற்றுகளை அறிந்துதான் பாடுகின்றார் போலும்.

தமிழில் நல்ல கவிதைகள் ஏராளமாக உள்ளன. அவற்றில் கற்பனை மண்டிக்கிடக்கிறது. கிராமங்களிலெல்லாம் நிறையப் பாடல்கள் பாடுவதை என்னுடைய இளமைப பருவத்திலே கேட்டிருக்கிறேன். இன்னும் சொல்லப்போனால் தமிழர் வாழ்வில் குழந்தைப் பருவத்திலிருந்து மண்ணிலே மறையும் வரை வாழ்க்கைச் சம்பவங்களைத் தொகுத்துப் பாடல்களாகவே பாடித் தமிழர்கள் அகமும் முகமும் மலர வாழ்ந்தார்கள் என்பதை நாடு நன்றாக அறியும்.

கிராமங்களிலே ஆசுக் கவியைப் போல் தாய்மார்கள் தங்களுக்குத் தோன்றிய எண்ணங்களை வைத்தெல்லாம் பாடல்களைப் பாடி குழந்தைகளைத் தாலாட்டி மகிழ்ந்து இருக்கிறார்கள். அந்தத் தாலாட்டுப்பாடல்கள் அந்தக் காலத்திலே யாராலே எழுதப்பட்டது என்பது கிடைக்காத சரித்திரம் ஆகிவிட்டது.

தங்களைச் சுற்றியுள்ள பொருள்களை வைத்தே குழந்தைகளுக்குத்தாலாட்டுப் பாடு

கின்ற பாடல்களைப் பார்க்கின்றபோது, தமிழில் என்னதான் இல்லை என்கிற எண்ணம் நமக்கு ஏற்படுகிறது. அந்தப் பாடல்களைப் பாடும்பொழுது மனதுக்கு எவ்வளவு சுகம்! அதை அனுபவித்தவர்களே அறிவர்!

கொட்டி வைத்த முத்தே! கண்ணே நீ
குவித்து வைத்த இரத்தினமே
கட்டிப் பசும்பொன்னே - கண்ணே நீ
கட்டி முத்தம் கொடுப்பாயே

சிரியம்மா சிரி சிரி கண்ணே நீ
சித்திரப் பூந்தொட்டிலிலே
கரும்பு ரசமே - கண்ணே நீ
கசக்காத கற்கண்டே

வாழைப்பழமோ - கண்ணே நீ
வைகாசி மாம்பழமோ?
கொய்யாப்பழமோ - கண்ணே நீ
கொஞ்ச வைத்த ரஞ்சிதமோ!

எலுமிச்சைப் பழமோ - நீ
இந்திரனார் பேரரசோ!
பேரீச்சம் பழமோ - நீ
பெரிய இடத்து கிரீடமோ ?
தங்கக் கிரீடமோ - நீ
சாமி திருமுகமோ?

ஏழுகடல் நீந்தி
எடுத்துவந்த தாமரைப் பூ
பத்துக்கடல் நீந்தி
பறித்துவந்த தாமரைப் பூ
அணைத்து மனம் மகிழ - நாங்கள்
அள்ளிவந்த தாமரைப் பூ:

கொஞ்சுமனம் மகிழ - நாங்கள்
கொண்டுவந்த தாமரைப்பூ
கண்ணே - கமலப் பூ! கண்ணிரண்டும்
தாமரைப் பூ!
கண்மணியே ஏலப்பூ! காதிரண்டும்
பிச்சிப் பூ!
மேனி மகிழம்பூ! மேற்புருவம்
சண்பகப் பூ!

இப்படி, தங்களைச் சுற்றியுள்ள இயற்கையை வைத்தே குழந்தையைத் தாலாட்டும் பாடல்களை யார் என்றே தெரியாதவர்கள் நமக்கு அளித்துவிட்டுப் போயிருக்கிறார்கள். கிடைத்தவை சில - காணாமற்போனவை பலப்பல. காணாமல் போனவை பூராவையும் சேகரித்து வைத்திருந்தால் தமிழுக்கு எப்படிப்பட்ட பொக்கிஷம் கிடைத்திருக்கும் என்பதை இந்தப் பொங்கல் திருநாளில் நான் நினைத்துப் பார்க்கிறேன்.

தாலாட்டுப் பாடல்கள் மட்டுமல்ல, ஆண்களும் பெண்களும் விளையாடுவதற்காக எத்துணைப் பாடல்கள் நம் நாட்டிலே வழங்கி வந்திருக்கின்றன என்பதைப் பார்த்தால் நமக்கு ஆச்சரியமாகவே இருக்கிறது.

கிளி விரட்டுவதற்கும்
கிளியைப் பார்த்துப் பாடுவதற்கும்
சடுகுடு விளையாடுவதற்கும்
பூச்செண்டு விளையாடுவதற்கும்
கல்லாங்காய் விளையாட்டுப் பாடுவதற்கும்
ஏழாங்காய் ஆடுதலைப் பற்றிப்
பாடுவதற்கும்
கண்ணாமூச்சி ஆடுகின்றபோது
பாடுவதற்கும்
கும்மி விளையாட்டின் போது
பாடுவதற்கும்
சோறு சமைத்து விளையாடும்போது
பாடுவதற்கும்
அம்மானை ஆடும்போது பாடுவதற்கும்
மாவெளி சுற்றும்போது பாடுவதற்கும்
தோட்ட விளையாட்டு நடத்தும்போது
பாடுவதற்கும்
சங்கு முழக்கம் செய்யும்போது இசைப்பதற்கும்



பெற்றோர் வளர்த்த பெருமையினைப்
பாடுவதற்கும்
ஆராத்தி சுற்றும்போது பாடுவதற்கும்
கோலமிடும்போது பாடுவதற்கும்
ஆடு மேய்க்கும் சிறுவர்கள் பாடுவதற்கும்
ஒருவரை ஒருவர் பரிகசித்துப் பாடுவதற்கும்
பாடல்கள் உள்ளன என்பதை எண்ணிப் பார்க்கும்போது எவர்தாம் வியக்காமல் இருக்கமுடியும்!

இந்தப் பாடல்களிலெல்லாம் தமிழ் ஆனந்தம் நடனம் ஆடுகிறது. இவைகளைப் படிக்கப் படிக்க உள்ளத்தில் ஒரு கிளர்ச்சி ஏற்படுகிறது.

பழங்காலத்துப் படங்களைப் பார்க்கிறபோது ஒருவனுக்கு ஒருத்தி என்கிற தத்துவம் மேலோங்கி இருந்ததை நம்மாலே காண முடிகிறது.

காதல் பாட்டுக்களிலேதான் எத்துணை வகை!

அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரை காதல் பாடல்களை எழுதாத கவிஞர்கள் யார் இருக்கிறார்கள்? ஆனால் நாடோடிப் பாடல்களில் இருக்கின்ற காதல் பாடல்களைப் பார்த்தால் இயற்கை எழிலோடு நாட்டியமாடுவதை நாம் காண முடிகிறது.

உதாரணத்திற்குக் காதலனைப் பிரிந்து வாடுகின்ற காதலியின் பாடல்கள் காலத்தால் அழியாதவைகளாக இன்னும் இருப்பதை நாம் காண்கிறோம்.

ஓடுகிற தண்ணியிலே உரைச்சுவிட்டேன்
சந்தனத்தை சேந்திச்சோ, சேரலையோ
செவத்த மச்சான் நெத்தியிலே
கலங்காத தண்ணியிலே கரைச்சு விட்டேன்
சந்தனத்தை ! ஒட்டிச்சோ ஒட்டலையோ
உம்முடைய நெற்றியிலே!
மானத்துல மீனிருக்க - மதுரையிலே நீ
இருக்க
சேலத்திலே நானிருக்க-சேருவது எக்காலம்?
அத்துவானக் காட்டுக்குள்ளே ஆயர் குழல்
ஊதையிலே
சாடை சொல்லி ஊதினாலும்-சாடையிலே
நான் வருவேன்!

இப்படிப் பாட்டுக்களின் மூலமாகவே தனது உள்ளத்தை வெளிக்காட்டிக் கொண்டு கணவனை எண்ணி மனைவி வருந்துவதுமான பாடல்களை இன்றைக்கு நாட்டு வழக்கத்தில் கொண்டிருக்கிறது என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

கிராமங்களில் விவசாயம் தொன்று தொட்டு நடந்துவருகின்ற ஒன்று. விவசாயியோ ஓயாத உழைப்பாளி. அவன் களைப்புத்தெரியாமல் இருப்பதற்காக எவ்வளவோ பாடல்களைப் பாடி இருக்கிறான்.

மழையை அழைக்க ஏராளமான பாடல்கள் நாட்டு வழக்கிலே இருந்திருக்கின்றன.

ஏற்றம் இறைக்கும்பொழுதும், நடவு செய்யும் போதும், களை எடுக்கும் போதும் பாடல்களைப் பாடிக் கொண்டே மகளிர் வேலை செய்வது தொன்றுதொட்டு இருந்து வரும் நல்லதொரு வழக்கமாகும்.

அறுவடையின்போதும், போரடிக்கும் போதும், களத்திலே நெல்லைத் தூற்றும் போதும், பாடுவது நமது நாட்டுவழக்கமாக இருந்து வந்திருக்கிறது.

சரக்கு ஏற்றிக் கொண்டே அல்லது தம்முடைய நிலக்கிழாரை ஏற்றிக்கொண்டே வண்டி ஓட்டுபவர்கள் பாடுகின்ற பாடல்கள் நாட்டு வழக்கிலே அந்தக் காலந்தொட்டு பாரதிதாசனார் காலம் வரை வந்து கொண்டே இருப்பதை நாம் காணலாம்.

வீடு கட்டுகின்ற தொழிலாளி கூட ,சாந்து அடிக்கும்போது பாடுவது வழக்கம். அது சிமெண்ட் வந்த பிறகு மறைந்துவிட்டது.

மீன் பிடிக்கப் போகும்போது, மீனவர்கள் சர்வ சாதரணமாகப் பாடுவார்கள். என்னுடைய மாவட்டமான சேலம் மாவட்டத்திலே யாரேனும் இறந்துவிட்டால் இன்றைக்குக் கூட ஒலி 'பெருக்கியை வைத்துக்' கொண்டு ஒப்பாரிப் பாடல்கள் பாடுவதைக் கேட்கலாம். திருமணக் காலங்களில் பலவகையான பாடல்கள் பாடப்படுகின்றன, நலங்கு நேரத்திலும், ஊஞ்சலில் மணமக்களை வைத்து ஆட்டும் போதும், மணமக்கள் மஞ்சள் நீராடும் போதும் பாடல்களைப் பாடுவது வாடிக்கையாக இருந்திருக்கிறது. இவ்வளவையும் நாம் எண்ணிப் பார்ப்பதற்குக் காரணம் இந்த மாதிரிக்காட்சிகள் எல்லாம் கால வேகத்ினாலும், நாகரிக முதிர்ச்சியின் காரணமாகவும் மாறிக் கொண்டே வருவதை நான் பார்க்கிறேன்.

ஒரு காலத்தில் உற்சாகத்தோடு, மனமகிழ்ச்சியோடு இருந்த மக்கள் மாறிக் கொண்டே வருகிறார்களோஎன்று ஐயப்படுகிறேன். பல பாடல்கள் நாட்டின் இன்றைய நிலையை எடுத்து உணர்த்தும் பாடல்களாக இருக்கின்றன. அன்றைக்கு இருந்த மனமகிழ்ச்சியும், அந்தக் கற்பனை வளமும் ஏனோ இன்றைக்குக் குறைந்து கொண்டே வருகிறது.

வாத்தியங்கள் எதுமில்லாமல் இனிய குரலில் எல்லோரும் பாடிக்கொண்டிருந்த காலம் மங்கி மறைந்து கொண்டே வருவது எனக்குச் சங்கடத்தை உருவாக்குகிறது.

இயற்கைச் சூழலிலேயே தமிழ் மக்கள் திளைப்பார்களே யானால் தமிழ் இலக்கியத்திற்கு எவ்வளவோ பாடல்கள் கிடைத்துக் கொண்டேயிருக்கும் என்று ஒரு கணம் எண்ணிப் பார்க்கிறேன்.

தமிழர்கள் வாழ்வில் தமிழ் எங்கும் மங்காது இருக்க பழைய நாடோடிப் பாடல்களைக் கூட எடுத்து சினிமா போன்ற நவீன கண்டுபிடிப்புக்களில் புகுத்தி அளிப்போமேயானால் நாடு மீண்டும் இயற்கைத் தொட்டிலிலே வாசம் செய்யத் தொடங்கும் என்பது என்னுடைய எண்ணமாகும்.

இந்தப் பொங்கல் பெருநாளில் தமிழர்கள் இயற்கையோடு ஒட்டி வாழ்ந்த நல்வாழ்வை எண்ணிப் பார்ப்போமாக!

பொங்கலோ பொங்கல்!

ஆல்:.பிரட் நோபிள் 1867-ஆம் ஆண்டு
வெடிமருந்தைக் கண்டு பிடித்தார்...

இன்று...
தமிழ்நாடு வெடிமருந்து தொழிற்சாலை
('டெல்')வெடிமருந்து உற்பத்தித் துறையில்
முன்னோடிகளான நோபிள் கெமாடுர்
நிறுவனத்துடன் வெடிமருந்து
உற்பத்தி எனும் அருங்கலையில்
தொழில் நுட்ப மேம்பாட்டை எய்திட
பெருமையுடன் இணைகிறது.



தொழில் நுட்பத்திற்கென நாங்கள் இணைந்துள்ள நிறுவனம் உலகப் புகழ் பெற்ற போ:.பாரிஸ் நோபிள் கெமாடுர், ஸ்வீடன் ஆகும். இது, வெடிமருந்தின் தந்தை என விவேகத்துடன் போற்றப்படும் ஆல்:.பிரட் நோபிள் அவர்களாலேயே தொடங்கப்பட்ட நிறுவனம் ஆகும். இன்று நோபிள் கெமாடுர் நிறுவனம் நைட்ரஜன் கிளிசரின் உற்பத்தி மற்றும் சேமிப்புக்கெனவே தொழில் நுட்பம் மற்றும் நுணுக்கமான திறன்மிகு உபகரணங்களை அளிக்கிறது. வெடிமருந்து கலவை மற்றும் உற்பத்தி தொழில் நுட்பத்திற்கு உலகப்புகழ் வாய்ந்த மற்றுமோர் நிறுவனமான டைனோ இண்டஸ்ட்ரிஸ், நார்வேயுடனும் இணைத் தொடர்பு கொண்டுள்ளது.

பத்திரமான வழியில்
பாதுகாப்பான பயணம்...

TEL தமிழ்நாடு வெடிமருந்து தொழிற்சாலை நவீன மற்றும் உயர் தொழில் நுட்பத்துடன்— அதாவது எங்கெங்கு தேவையோ அங்கெல்லாம் தானியங்கி அபாய ஒலி எழுப்பு கருவிகள் மற்றும் க்ளோஸ் சர்க்யூட் TV இவைகளின் மூலம் உற்பத்தித் திறன் வசதிகளைப் பெருக்கி வெடிமருந்துகளை தயாரிக்கிறது.

இதன் நோக்கம் அங்கு வேலை செய்யும் எந்தத் தொழிலாளியும் சுற்றுப்புற சூழல் காரணமாக உடல்நலம் கெடாதபடி, முக்கியமாக பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே. இங்கு கடைப்பிடிக்கப்படும் அபாயத் தடுப்பு நடவடிக்கை வசதிகள், உள்ளடங்கிய தானியங்கு தொலை கட்டுப்பாட்டு கருவிகள் இயக்கம், ஆகியவை குறைவற்ற தரமேன்மை மற்றும் நிறைந்த பாதுகாப்பினை நிரந்தரமாக அளிக்கிறது.

உயர்ந்த பணிகளில் இன்று உன்னத சேவை...

'SUN RANGE OF NG BASED COMMERCIAL EXPLOSIVES', வெடிமருந்துகளில் ஆல்:.பிரட் நோபிள் அவர்களின் கண்டுபிடிப்பான வெடிமருந்து உற்பத்தி எந்த அளவு மேம்படுத்தப்பட்டு சிறப்புற உருவாக்கப்பட்டுள்ளது என்பதை இன்று அவர் இருந்தால் கண்கூடாகக் கண்டிருக்கலாம். மின் உற்பத்தி, சாலைகள் அமைத்தல், பாறை உடைத்தல் மற்றும் பொறியியல் துறை இவை போன்ற ஆக்கப்பணிகளில் 'டெல்' தயாரிக்கும் வர்த்தக வெடி மருந்துகள் ஆற்றும் முக்கிய, இணையற்ற பங்கினை எண்ணி தனது கண்டுப்பிடிப்பின் சிறப்பு உபயோகம் கருதி அவர் மிகப் பெருமிதம் அடைந்திருப்பார்.

TEL

தமிழ்நாடு வெடிமருந்து தொழிற்சாலை லிமிடெட்
(ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)
18, இரண்டாவது கிழக்கு பிரதான சாலை, காந்தி நகர், வேலூர்--632 006. (வ.ஆ. மாவட்ட)

தரத்தில் உயர்ந்தது — ஆற்றலில் சிறந்தது — எங்கள் வெடிமருந்து!


# தினமும் தமிழர் திருநாள்

## மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. ப. உ. சண்முகம்

ஒவ்வொரு ஆண்டும் தைத்திங்கள் முதலாம் நாள் தமிழர் திருநாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. ஆனால், என்னைப் பொறுத்தவரையில் தைத்திங்கள் முதலாம் நாள் மட்டுமே தமிழர் திருநாள் அல்ல. புரட்சித் தலைவர் அவர்கள் என்று தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்களோ அன்று முதல் பிறந்த ஒவ்வொரு நாளுமே தமிழர் திருநாள் தான். ஏனெனில் புரட்சித் தலைவரவர்கள் ஆட்சியிலேதான் தமிழகத்தின் கிராமப் புறங்கள் மட்டுமின்றி நகர்ப்புறங்களும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து, தற்போது அவை தத்தம் பொற்காலத்தைக் கண்டுகொண்டிருக்கின்றன.

கிராமங்களின் வளர்ச்சிதான் ஒரு நாட்டின் வளர்ச்சி. ஒரு மனிதனின் உடல் நிலையை அவனுடைய நாடித்துடிப்பைப் பிடித்துப் பார்த்துக் கணித்துவிடலாம். கூறிவிடலாம். அந்த நாடியின் துடிப்பிற்கேற்ப அவன் உடல் வளத்தைக் கணக்கிடலாம். அதுபோல ஒரு நாட்டின் வளத்தை அதன் கிராமப்புறங்களின் வளர்ச்சியைக் கொண்டே கணக்கிட வேண்டும். இதைக் கருத்தில் கொண்டுதான் ''கிராமங்களே இந்தியாவின் உயிர்நாடி'' என்று அன்று தொட்டு இன்று வரை கூறப்பட்டு வருகிறது. இருவிழிகள் கூட இல்லாமல் ஒரு மனிதன் வாழ்ந்துவிடலாம். ஆனால் ஓர் இதயம் அவன் உடலில் இல்லாமல் - சரிவர வேலை செய்யாமல்-அவனால் உயிரோடு வாழ முடியாது. இக்கருத்தின் அடிப்படையில்தான் இந்தியாவின் இதயப்பகுதி கிராமங்களே என்ற கூற்று எழுந்தது. இதன் அடிப்படையில்தான், புரட்சித் தலைவர் தலைமையில் அமைந்த அரசு கிராமப்புறங்களின் வளர்ச்சியில் தனி அக்கறை கொண்டு திகழ்கிறது. இன்றைய உலகிலுள்ள நாடுகளை வளர்ந்த நாடுகள், வளரும் நாடுகள் என இரு பெரும் பிரிவுகளாகப் பொருளாதார வல்லுநர்கள் பிரித்துள்ளார்கள் என்பது அனைவரும் அறிந்ததே.

இந்த இரு பெரும் பிரிவுகளில் நம்நாடு இரண்டாம் பிரிவைச்சார்ந்ததாகும். நம்மைப் போலவே வளர்ந்து வரும் நாடுகள் மக்களின் அடிப்படைத் தேவைகளைத் தீர்த்தால்தான் முன்னேற்றத்திற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள முடியும் என்று இன்று சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். இந்தச்சிந்தனையை எவ்வாறுசெயலாக்குவது; எத்தகைய திட்டங்கள் மூலம் நிறைவேற்றுவது என வளர்ந்து வரும் பிற நாடுகள் தற்போது சிந்தித்துக் கொண்டிருக்கின்றன; அதற்கேற்ற திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கின்றன.

ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் மக்களின் அடிப்படைத் தேவைகளைத் தீர்த்துவைத்தால்தான் முன்னேற்றத்திற்கான அடுத்த. கட்ட நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள முடியும் என்ற சிந்தனை என்றோ ஏற்பட்டு, அதற்குச் செயல் வடிவம் கொடுக்கப்பட்டுவிட்டது. ஆம். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற சிறிது காலத்திற்குள் அறிவித்த தன்னிறைவுத் திட்டம்தான் மேற்கூறிய சிந்தனையின் செயலாக்கமாகும்.

தமிழகம்-ஏன்-இந்தியாவே இத்தகையதொரு திட்டத்தைக் கண்டதில்லை என்று பலரும் வியந்து கூறிப் பாராட்டிய தன்னிறைவுத் திட்டம் உண்மையிலேயே தன்னிகரற்ற திட்டமாகும்.

சில குடங்கள் நீரைக்கொண்டு வருவதற்குப் பல மைல் தூரம் நடக்க வேண்டிய கிராம மக்களின் அவல நிலையையும், ''கட்டடம்'' என அழைக்க இயலா கட்டடங்களில் இருந்து கல்வி பயில வேண்டிய கட்டாயத்திற்குள்ளான கிராம வாழ் இளஞ்சிறார்களையும், உழைத்து விளைவித்த பொருட்களை விற்பனை செய்வதற்கு சாலையின்றிப் பல மைல் தூரம் நடந்து செல்ல வேண்டிய இக்கட்டான நிலைக்கு உட்படும் கிராம மக்களின் இன்னல்களையும் இடர்ப்பாடுகளையும் கண்டு, அவர்கள் வாழ்வில் புதிய வரலாற்றைத் தோற்றுவிக்கும் எண்ணத்தோடு மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களால் உருவாக்கப்பட்டதே ''தன்னிறைவுத்திட்டம்''.

மிகக் குறுகிய காலத்திற்குள் கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதே இத்திட்டத்தின் குறிக்கோள். 1980-81ஆம் ஆண்டு 69 ஒன்றியங்களிலும், 1981-82ஆம் ஆண்டு 150 ஒன்றியங்களிலும், 1982-83ஆம் ஆண்டு 159 ஒன்றியங்களிலும் ஏறத்தாழ 215 கோடி ரூபாய் செலவில் அடிப்படை வசதிகள் அனைத்தும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட பணிகள் பல. குடிநீர் வசதி, கிராம இணைப்புச் சாலைகள், பாலங்கள், பள்ளிக் கட்டடங்கள், தாய் சேய் நல மருத்துவமனை கட்டடம், ஆதி திராவிடர் இடுகாடு இணைப்புப் பாதை போன்ற பணிகள் குறிப்பிட்டுக் கூற வேண்டியவை.

தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ஊராட்சிகள் பெற்ற இதே வசதிகளையும், வாய்ப்புகளையும் பேரூராட்சிகளும், ஏன் நகராட்சிகளும் பெறுவதற்கும் இந்த அரசு ஏற்பாடு செய்துள்ளது.

தமிழகம் முழுவதும் பயன்பெறும் தன்னிகரில்லா இந்தத் தன்னிறைவுத் திட்டம் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை என்பது நமக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தருவதாகும்.

சமுதாயத்தின் மொத்தத் தேவைகளைத் தீர்க்கும் வகையில் தீட்டப்பட்டு நிறைவேற்றப்பட்ட தன்னிறைவுத் திட்டத்தைத் தொடர்ந்து சமுதாயத்தின் அங்கமாகிய தனி மனிதனின் தேவைகளைத் தீர்க்க நிறைவேற்றப்பட்டு வரும் சில தனிப்பெரும் திட்டங்களையும், அவைகளை நிறைவேற்றுவதில் புரட்சித்தலைவர் அவர்கள் அரசு பெற்றுள்ள வெற்றிகளையும், விளைவித்துள்ள சாதனைகளையும் சிறிது கூற விழைகின்றேன்.

முதலில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்: வறுமை ஒழிப்புத் திட்டங்களில் இது ஒரு முக்கிய திட்டமாகும். சிறு மற்றும் குறு உழவர்கள், கால்நடை வளர்ப்பில் நாட்டம்செலுத்தி அதனைத் துணைத்தொழிலாகக் கொண்டு தங்களுடைய வருவாயைப் பெருக்கிக்கொள்ளவும், போதிய முதலீடின்றிக் குன்றி இருக்கும் கைவினைஞர்களுக்கும், சிறுதொழில் செய்வோர்க்கும் வங்கிகள் மூலம் கடனும் மானியமும் வழங்கி, அவரவர்களுடைய தொழில்களைப் பெருக்கிக் கொள்ளவும் வகை செய்யும் திட்டமே ''ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்''.

வங்கியிலிருந்து கடனுக்கு வகை செய்வது மட்டுமின்றி, மானியமும் வழங்கப்படுவது இத்திட்டத்தின் தனிச் சிறப்பு. சிறு விவசாயிகளைப் பொறுத்தவகையில் மொத்த உதவித்தொகையில் 25 சதவிகிதம் மானியமாகவும், ஏனைய விவசாயிகள், வேளாண்மைத் தொழிலாளர்கள், கிராமக் கைவினைஞர்கள் ஆகியோருக்கு மூன்றில் ஒரு பங்கு மானியமும் வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்படும் மானியம் அதிகபட்சமாக குடும்பம் ஒன்றுக்கு மூவாயிரமாகவும், மலைவாழ் மக்களைப் பொறுத்தவரையில் குடும்பம் ஒன்றுக்கு 5 ஆயிரமாகவும் இருக்க வழி செய்யப்பட்டுள்ளது.

ஒரு வட்டாரத்தில் 600 குடும்பங்களுக்கு உதவி வழங்கப்படும் இத்திட்டத்தின் கீழ் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிவரை, அதாவது 1985 மார்ச் திங்கள் முடிய 11,30,100 குடும்பங்களுக்கு உதவி அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இந்த இலக்கை மிஞ்சி மொத்தம் 13,96,015 குடும்பங்களுக்குத் தமிழ்நாட்டில் உதவி அளிக்கப்பட்டுள்ளது. இதில் 4,62,828 குடும்பங்கள் ஆதி திராவிடர் மற்றும் மலை ஜாதி வகுப்பினைச் சார்ந்தவர்கள் என்பதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். சமுதாயத்தில் மிகப் பின்தங்கியவர்களின் வாழ்க்கை வளம் பெறுவதில் புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டுள்ள ஆர்வம் இதன் மூலம் தெள்ளத் தெளிவாகப் புரியும்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் ஓர் அங்கம் 'டிரைஸம்' (Trysem) என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் ''கிராமப்புற இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புப் பயிற்சித்திட்டம்'' 18 முதல் 35 வயதுவரையிலான கிராமப்புற இளைஞர்களுக்கு மட்டுமின்றி, இளம் பெண்களுக்கும், பல்வேறு கிராமப்புறத் தொழில்களில் பயிற்சி அளிக்கப்பட்டு, தங்களுக்குத் தாங்களே வேலை வாய்ப்பைத் தேடிக்கொள்ள வழி வகுக்கும் இத்திட்டத்தின் கீழ், இதுவரை 1,66,102 இளைஞர்களுக்கும், இளம் பெண்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சியின் அடிப்படையில் 94921 பேர் தக்க வேலை வாய்ப்பைத் தாங்களே ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். 44,471 பேர் ஊதிய அடிப்படையில் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

இந்தப்பயிற்சி மூலம் கிராமங்களில் வாழும் குடும்பங்களின் பொருளாதார வாழ்வு மேம்படுகிறது. அடுத்து குறிப்பிடத்தக்கது, ''தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்''. வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு சமுதாய நோய் என்று கூறலாம். இதனால் வறுமை ஏற்படுகிறது. கிராம மக்கள் வறுமையினைப் போக்குவது நமது இலக்காகும். கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புக்களை கூடுதலாக உருவாக்கி, அதன் வழியாக மக்களின் வருவாயை அதிகரித்தல், கிராமப்புறமக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல், அதிகமாக உள்ள உணவுத் தானியங்களை நாட்டில் நல்ல கிராமப்புறப் பொருளாதார வளர்ச்சி வேலைகள் செய்து முடிப்பதற்காக வழங்கி, சத்துமிக்க உணவை ஏழைத் தொழிலாளர் பெருமக்கள் பெற வழி செய்தல் என்ற முப்பெரும் நோக்கங்களைக் கொண்டதே ''தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்''

1980ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் தமிழ்நாட்டில் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வரும் இத்திட்டத்தின் கீழ் கடந்த மார்ச் மாதம் வரை 1,73,265 வேலைகள் திறம்படச் செய்து முடிக்கப்பட்டுள்ளன. ஏறத்தாழ 68 ஆயிரம் கிலோ மீட்டர் நீளத்திற்குத் தமிழகக் கிராமங்களில் பல்வேறு இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டு, பல மேம்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மனித உழைப்பு நாட்கள் 164,18 இலட்சம்.

இத்திட்டத்தின் கீழ் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஊதியமாக அரிசியும் ஒரு பகுதி பணமாகவும் வழங்குவது இத்திட்டத்தின் தனிச் சிறப்பு. நாளொன்றுக்கு 1 கிலோ அரிசியும் ரூ. 6.15 கூலியாகவும் வழங்கப்பட்டது. 1.12.85 முதல் 2 கிலோ கோதுமை, ஒரு கிலோ அரிசி வழங்கப்படுகிறது. அத்துடன் ரூ. 3.15 பணமாகவும் அளிக்கப்படுகிறது.

**உண்மையான சீர்திருத்தத்தை நிலை நிறுத்த விரும்புகிறவர்கள்-முதலில், சீர்திருத்தக் கொள்கைக்கு இடையூறாக இருக்கும் புல்லுருவிகளையும், களையான்களையும் அழிக்கத் தைரியமாக முற்படவேண்டும். பழக்கம் வழக்கம் என்கிற பிசாசுகளை முதலில் ஓட்டியாக வேண்டும்.**

—தந்தை பெரியார்



நிலமற்ற ஏழை கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கும் திட்டம்தான் ''ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித்திட்டம். நிலமற்றவர்களின் குடும்பத்தில், ஒரு நபருக்கு ஓராண்டில் குறைந்தபட்சம் 100 நாட்களாவது வேலை வாய்ப்பு அளிப்பதைத் குறிக்கோளாகக் கொண்டது இத்திட்டம். கடந்த மார்ச் திங்கள் வரை ஏறத்தாழ ரூபாய் 57 கோடியே இருபத்தைந்து இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1984-85ல் 298.16 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட வேண்டும் என மத்திய அரசு இலக்கு நிர்ணயித்து இருந்தது. இந்த இலக்கையும் மிஞ்சி 314.43 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டன என்பதை மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்தின் கீழ் பாசனக் கால்வாய் வெட்டுதல், சாலை அமைத்தல், சமூகக் காடுகள் அமைத்தல், பள்ளிக் கட்டடங்கள், சமுதாயக்கூடங்கள் கட்டுதல், ஆதிதிராவிடர்களுக்குத் தொகுதி குடியிருப்புகள் கட்டுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய பணியால் பயன் பெறுபவர் யார்? தனி நபர், குடும்பங்கள், கிராமச் சமுதாயம் ஆகியவையே!

''நான் சென்ற இடங்களில் எல்லாம் மக்கள் மாட மாளிகைகள் கேட்கவில்லை. குடிக்க தண்ணீர் - நல்ல தண்ணீர்தான் கேட்டார்கள். எனவே குடிநீர் பிரச்சனையை முற்றிலும் தீர்ப்பதுதான் இந்த அரசின் முதல் இலட்சியம்'' எனப் புரட்சித்தலைவர் அவர்கள் முதலமைச்சராகப் பதவி ஏற்ற முதல் நாள் குறிப்பிட்டார்கள். அதற்கிணங்க தன்னுடைய தன்னிறைவுத் திட்டத்தில், குடிநீர்ப் பிரச்சனையைத் தீர்ப்பதற்குத் தக்கவழிவகை செய்தார்கள். ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இத்திட்டத்தின் கீழ் ஏறத்தாழ ரூ 90 கோடி செலவில் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இத்துடன் ரூ 24.79 கோடி செலவில், வறட்சி நிவாரணப்பணியின் கீழ் 21,992 ஆழ்துளைக்கிணறுகள் தோண்டப்பட்டன. இவை தவிர, இன்றைய ஊராட்சி ஒன்றியம் மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் 78,060 கைப்பம்புகளும், 17,583 விசைப்பம்புகளும் மக்களின் குடிநீர்ப் பிரச்சனையைத் தீர்த்து வருகின்றன.

அறிவியல் அறிமுகமான சாண எரிவாயு அமைப்புகளை அமைப்பதில் தமிழகத்தின் கிராமப்புறங்கள் இந்தியாவிலேயே முன்னணியில் உள்ளன. சென்ற ஆண்டு மார்ச் திங்கள் இறுதிக்குள், மொத்தம் 10 ஆயிரம் சாண எரிவாயு அமைப்புகளை நிறுவ வேண்டும் என்பது நிர்ணயிக்கப்பட்ட இலக்கு. ஆனால் நிறுவப்பட்டதோ 17,549 அமைப்புகள். அதாவது நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட 7549 சாண எரிவாயுக் கலன்கள் அதிகமாக நிறுவப்பட்டுள்ளன. மேலும் சாண எரிவாயு அமைப்புகளைப் பொறுத்தவரையில் நமது மாநிலம் அகில இந்திய அளவில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.

சமூகக் கல்வி கிராம மக்களின் அறிவாற்றலைப் பெருக்கும். வளர்ந்துவரும் கிராம சமுதாயத்தின் பொது அறிவினைப் பெருக்கவும் மனமகிழ்ச்சி அளிக்கவும் கிராம சமுதாய வானொலிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள் பெரிதும் பயன் அளிக்கின்றன. 43,855 கிராம வானொலிப் பெட்டிகளும், 1838 சமுதாய தொலைக்காட்சிப் பெட்டிகளும் செயல்படுகின்றன.

கிராம மக்களில் மகளிர் சிறப்பிடத்தினைப் பெற்றுள்ளனர். அவர்களின் திறனை வளர்த்து, பொருளாதார முறையில் முன்னேறுவதற்கான மாதிரித் திட்டம் ஒன்று பெரியார், தருமபுரி ஆகிய இரண்டு மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. கிராம மகளிர் குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு ரூபாய் 34 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டம் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. கிராமங்களில் சுகாதார வசதிகளை அதிகரிக்கவும், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மலிவு விலை கிராமக் கழிப்பறைத் திட்டம், உலக வங்கி நிதியுதவியுடன் சில வளர்ச்சி வட்டாரங்களில் அமலாக்கப்படுகிறது.

கிராம மக்களின் வறுமையும், வேலையில்லா நிலையும் நீக்கப்பட வேண்டும், ஒழிக்கப்படவேண்டும். உற்பத்தி பெருகி, அவர்களின் வாங்கும் சக்தி உயரவேண்டும்; வாழ்வு மலரவேண்டும். நகர மக்கள் அனுபவிக்கும் எல்லா வசதிகளும் இல்லாவிட்டாலும், குறைந்த அளவு தேவைகளை நிறைவு செய்கின்றவகையில், அடிப்படை வாழ்க்கை வசதிகள் பெருகவேண்டும். கைவினைஞரும், இளைஞரும் ஏற்றம் பெறவேண்டும். அப்போது தான் கிராமங்களில் மறுமலர்ச்சி ஏற்படும். இருபத்து ஒன்றாவது நூற்றாண்டினை நோக்கி பீடு நடை போடுகின்ற நிலை உருவாக வேண்டும். இந்த இலக்கினை எய்திடத் தான் இப்போது விளக்கிய கிராம நல்வாழ்வுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

''மக்களிடம் செல்லுங்கள்; அவர்களிடையே வாழுங்கள்; அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள்; அவர்களுடன் சேர்ந்து திட்டமிடுங்கள்; அவர்களுடன் கலந்து பணியாற்றுங்கள்; அவர்களுக்கு எது தெரியுமோ அதிலிருந்து உங்கள் பணியைத் தொடருங்கள். மக்களிடம் எவை உள்ளதோ அவைகளை வளப்படுத்துங்கள்; வலுப்படுத்துங்கள்; செய்து காட்டிய பிறகு சொல்லுங்கள்; அனுபவத்தில் கற்றுக் கொள்ளுங்கள்; விளம்பரத்திற்காக அல்ல; ஓர் எடுத்துக்காட்டாக . . முன்மாதிரியாகத் திகழ....'' என அறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துத் தந்த கொள்கையை அடிப்படையாகக் கொண்டு மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் தலைமையிலமைந்த தமிழ்நாடு அரசு கிராமங்களின் வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி.

இந்தச் செயலாக்கத்தின் விளைவாக நித்தம் நித்தம் ஒவ்வொரு கிராமத்திலும் ஏதாவது ஒரு திட்டமோ அல்லது உதவி வழங்கும் விழாவோ நடைபெற்று வருகிறது. மொத்தத்தில் புரட்சித்தலைவர் ஆட்சியில் ஒவ்வொரு நாளும் கிராமப்புறத் தமிழர்களுக்குத் திருநாள் என்பது தெளிவு.

**காகிதத்தில் பேனா வைத்து நீங்கள் எழுதத் தொடங்குமுன் பெண் என்பவளை உங்கள் சொந்தத் தாயாக நினைத்துக் கொள்ளுங்கள். உடனே வறட்சியால் வாழக்கிடக்கும் வையகத்திற்கு வானிலிருந்து வண்ணமழை பொழிவதுபோல் உங்கள் எழுதுகோலிலிருந்தும் தூய்மையான இலக்கியம் பொழிந்துவிடும்!**

—காந்தியடிகள்




1979ம் ஆண்டில், தமிழக அரசின் நிறுவனமாகத் துவங்கிய, தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட், இன்று நமது நாட்டின் மேக்னசைட் உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது.

தரச்சிறப்பான மேக்னசைட் தயாரிப்பாளரின் மற்றோர் அரிய முயற்சியே இந்த 80 கோடித் திட்டமாகும். இதன் மூலம் உலகத் தரக்கட்டுப்பாடுகளுக்கிணையான மேக்னசைட்டை அளித்து, இறக்குமதியைக் குறைத்து, அந்நியச் செலவாணியை மிச்சப்படுத்த உதவுகிறது தமிழ்நாடு மேக்னசைட்.

அதோடு கிராமப்புற வேலை வாய்ப்புகள் பெருகவும் வழிகோலுகிறது.

எ∴கு தொழிற்சாலைகளுக்கான ரி∴ப்ராக்டரி செங்கல்களுக்கு முக்கியமாக உபயோகமாகும் இந்த மேக்னசைட், கால்நடைத் தீவனம், இரசாயன உரம், இரயில்வே, மற்றும் மொசைக் தரைத்தளங்களுக்கும் அத்தியவாசியமானதாகும்.

தற்போது, மாதாமாதம் 10,000 மெட்ரிக் டன்கள் மேக்னசைட்டை உற்பத்திசெய்யும் தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட், எதிர்காலத்தில் ஏற்றமிக்க பல உற்பத்தி இலட்சியங்களில் வெற்றிவாகை சூடத் தயாராகிவிட்டது.

TANMAG
தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட்.
(தமிழக அரசு நிறுவனம்)
119, கிரீன்வேஸ் சாலை, ∴பேர்லேண்ட்ஸ்,
சேலம்- 636 016.

DIPR/MAC


# வாழ்க்கைக் கல்விக்கான முதலமைச்சரின் திட்டம்

மாண்புமிகு கல்வி அமைச்சர் **திரு. செ. அரங்கநாயகம்**

மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் திரு எம்.ஜி.ஆர். அவர்களின் மிகுந்த தொலைநோக்கோடு, தமிழகத்துக் குழந்தைகளின் நலன்கருதி அமைக்கப்பட்டுள்ள சத்துணவுத் திட்டம், எதிர்காலத்தில் தமிழ்ச் சமுதாயம் சீரும் சிறப்பும் கொண்டிலங்குதற்காக உருவாக்கப்பட்டுள்ள ஒரு மாபெரும் செயல் புரட்சியாக அமைந்துள்ளது. இதனைக் கண்ணுற்ற பிற மாநிலங்கள் தமிழகத்தைப் புகழ்கின்றன. தாமும் பின்பற்ற விழைகின்றன என்பதே இத்திட்டத்தின் சிறப்புக்கு எடுத்துக் காட்டாகும்.

இத்திட்டத்தின் பயன்பெற்று, வளர்ந்து வரும் இளைய தலைமுறையினரை வளமுற வாழ வைப்பதற்கென்று, வேலை வாய்ப்புக்களுக்கான வகையில் கல்வியில் சீர்திருத்தம் செய்யவும், ஆராயவும், ஏற்றதொரு திட்டத்தைப் பள்ளிக் கல்வித் துறையின் மூலம் தயாரித்து, நடைமுறையில் அதனைப் பரிசீலித்து வருவதே - மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் வாழ்க்கைக் கல்வித் திட்டம் ஆகும்.

இந்த இரண்டு திட்டங்களாலும்,

'வயிற்றுக்குச் சோறிட வேண்டும்! -இங்கு
வாழும் மனிதருக்கெல்லாம்!
பயிற்றிப் பல கல்வி தந்து - இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்!'

--என்று பாடிய மகாகவி பாரதியின் கனவை நிறைவேற்றி வைக்கிறார் என்பதை தெளிவாகத்தெரிந்து கொள்ள இயலும்.

''உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே''
'தானத்தில் சிறந்தது அன்னதானம்!''

--என்றெல்லாம் தமிழ்ச் சான்றோர்கள் கூறிச் சென்றனர். எத்தனைப் பொருள்களைக் கொடுத்தாலும், உயிர் கொடுத்ததாக ஆகாது. எத்தனைத் தானங்கள் செய்தாலும் அன்னதானமே சிறந்தது என்பது தமிழ் மக்களின் நம்பிக்கை.

இந்த நம்பிக்கையைச் சத்துணவுத் திட்டம் மூலம் நிறைவேற்றி வைத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், பயிற்றிப் பலகல்வி தந்து - இந்தப் பாரை உயர்த்திட வேண்டும், என்பதற்கேற்ப, பல்வேறு தொழில் கல்விகளில் மாணவர்களைப் பயிற்சி பெறச் செய்து-பார் முழுவதிலும் - தமிழ்நாட்டுத் தொழில்களும், பயனும் ஓங்குவதுடன், தொழில் கல்வி கற்றுக் கொண்ட மாணவ மாணவியர்களும், தாமாகவே தமக்குரிய வேலைகளையும், தொழில்களையும் தேடிக் கொண்டு - சுய தொழில்கள் - மூலம் வறுமை இன்றி வாழவும் வகை செய்வதற்காக அமைந்துள்ளதே வாழ்க்கைக் கல்வித் திட்டம் என்பது போற்றுதற்குரியது.

கல்வி பெறுவது மனிதனின் பிறப்புரிமை. கண்ணுடையோர் என்போர் கற்றோர். கல்வியே வாழ்க்கைக்கு ஊன்றுகோல். எனவே கற்ற கல்வி என்பது, கல்வி கற்றவர்களின் எதிர்காலத்திற்கு உறுதுணையாக அமைய வேண்டும். நாளைய வாழ்வுக்கேற்ற நல்ல குடிமகனாக ஆக்க வேண்டும். வாழ்வுக்கு நல் வழி காட்டுவதாக இருக்க வேண்டும். ஆயுள்



முழுவதும் நற்பண்புகளுடன் வாழ்ந்து பெரியோர்களைப் பேணிச் சமூகத்திற்கும் உதவக் கூடியதாகப் பயன்தர வேண்டும் என்பது நம் முதலமைச்சர் அவர்களின் விருப்பம்.

இன்றைய பாரதத்தின் இளைய பிரதமர் அவர்களும், கல்வியறிவு மனித சமுதாய மேம்பாட்டிற்குத் தேவையான, மிக முக்கியமான மூலதனம் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். கல்வி - குழந்தைகளுக்கு இளம் வயதிலேயே தேசப் பற்றை ஊட்ட வேண்டும். நல்ல குடிமைப் பண்புக்குரிய வித்து இட வேண்டும்.

பரந்து விரிந்த நமது பாரத மக்களிடையே ஒருமைப்பாட்டை வளர்க்கவும், பயன்படும் வலிமையுடைய ஒரு கருவியாக அமைய வேண்டும். இத்தகைய இலட்சியங்களுக்கு ஏற்றவாறு கல்வியின் குறிக்கோள்களும் நடைமுறைகளும் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று கருதுகிறார்கள்.

ஆனால், நடைமுறையிலுள்ள இன்றைய கல்வித் திட்டம் பழமையின் ஒரு தொடர்கதையாகவே உள்ளது. கல்விக்கூடங்களும் பல்லாயிரக் கணக்கான இளைஞர்களை ஆண்டுதோறும் வெளி உலகிற்கு அனுப்பிக்கொண்டிருக்கின்றன. ஆனால், அவர்கள் படித்துள்ள படிப்பு உடனடியாகச் சமுதாயத்திற்குப் பயன்படும் நிலையில் அமையவில்லை. அவர்களும் தமக்குத்தாமே ஒரு தொழில் செய்து வாழ்க்கை நடத்த முடியாதபடிதான் உள்ளது. இப்பிரச்னை எதிர்நோக்கியுள்ள மிகப்பெரிய சமுதாயப் பிரச்னையாக உள்ளது. எனவேதான், இந்த அவல நிலையை மாற்றவும், கல்வி பயிலும் மாணவர்கட்குப் பயின்ற கல்வி உடனடியாக ஒரு பயனை நல்கவும், தகுந்த வண்ணம், கல்வியைச் சீரமைக்கும் முயற்சியைத் தமிழக முதல்வர் அவர்கள் தொடங்கியுள்ளார்கள்.

இந்தப் புதிய அணுகுமுறையினால், பொதுக் கல்வியுடன், வாழ்க்கைக்குத் தேவையான கல்வியும், தக்க அளவில் மாணவர்கள் பெறுவதற்கு ஏற்றவாறுள்ள வழிமுறைகள் அனைத்தும் கல்வியில் புகுத்தப்படும். இதன் பயனாக உழைப்பில் தேவையையும், பயனையும் உணர்த்தும் வண்ணம் பாடத் திட்டங்கள் மாற்றி அமைக்கப்படும். அதற்கேற்றபடி புதிய பாடநூல்கள் புனையப் பெறும்.

கல்வியோடு பொருந்தும் செயல் அனுபவமும், செயல்முறைகளினால் பெறும் பட்டறிவும், பாங்குறக் கலக்கும் முறையினைக் கல்வியின் நிலைக்களனாக மாற்றியமைப்பதுதான் இந்த முயற்சியில் உயிர்நாடியாகும். இதன் பயனாக, வளர்ந்து வரும் விஞ்ஞான உலகில் வாழ்வதற்கு ஏற்ற மனப்பக்குவத்தையும், உணர்வினையும் ஊட்டுகிற வகையில் புதிய பாடத் திட்டங்களும் நூல்களும் உருவாக்கப் பெறும். பள்ளியை விட்டு வெளியேறும் கீழ்வகுப்புச் சிறுவர், சிறுமியர்களும், பொதுத் திறனுடன் ஏதேனும் ஒரு சிறப்புத் திறனும் தம்முடன் வளர்த்துக் கொண்டு, தங்களின் செயல் திறங்களினால், தங்களையும் தங்கள் சமுதாயத்தையும் வளமோடு வாழ வைக்கும் வழிகாண இயலும். அதனால் நாட்டுப் பொருளாதாரத்திற்கு வளம் சேர்ப்பவர்களாக அவர்களின் ஆற்றல் மிளிரும். இவையனைத்து ஓங்கும் வண்ணம் கல்வித் திட்டம் புதுமை பெறும்.

கல்வித் துறையில் பல்வேறு குழுக்களும், பல்வேறு கோணங்களில் ஆய்ந்து இதுகாறும் கூறியுள்ள அறிக்கைகள், இத்தகைய கல்வி முறையைத்தான் பரிந்துரைத்துள்ளன.

ஆண்டுதோறும் கட்டாயக் கல்வி வாயிலாகப் பள்ளிக் கல்வி முடித்தோ, மேல்நிலைக் கல்வி முடித்தோ வெளியேறும் இலட்சக்கணக்கான குழந்தைகளின் எதிர்காலம் எப்படி அமையும்? என்ற கேள்வியே இன்று நம் முன்னே நிற்கும் மிகப் பெரிய பிரச்னை. ஆகையினால், தொடக்கக் கல்வி நிலையிலேயே, குழந்தைகளின் திறமைக்கேற்றவாறு கைத்திறனை வளர்த்துக் கொள்ளும் வழிவகைகளைத் தருகின்ற, செயல்களுடன் கூடிய பொதுக் கல்வியை அனைவருக்கும் தருவது வாழ்க்கைக் கல்வியின் நோக்கமாக அமையும்.

மேலும், 6-ஆம் வகுப்பு முதல் 8-ஆம் வகுப்பு வரையிலும் உள்ள மாணவர்களுக்கு, விவசாயம், பொறியியல், மனையியல், வணிக இயல், உடல்நலம், நுண்கலைகள் போன்ற பல்வேறு வகையான தொழில்களின் பொது அம்சமாக அடிப்படைத் திறன்களையும், சிறு கருவிகள், இயந்திரங்கள் போன்றவற்றைக் கையாளத்தக்க அறிவும், பயிற்சியும் கிடைக்கும் வண்ணம் பயிற்சிகள் தரப்படும்.

ஒன்பது, பத்தாம் வகுப்புகளில் பயிலும் மாணவர்களின் தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ப, தேர்ந்தெடுத்துக் கொள்ளும் பாடங்களில் பயிற்சிகள் தரப்படும். இப்பயிற்சிகள் மேல்நிலைக் கல்வி வகுப்புகளின் தொழிற் பாடங்களுக்குத் தொடர்புடையவைகளாக அமைக்கப் பெறும்.

ஆகவே, இந்தப் புதிய திட்டத்தின் வாயிலாகக் குழந்தைப் பருவம் முதல், நினைவாற்றலை மட்டும் வளர்க்காமல் செயல் திறன்களையும் படிப்படியாக வளர்த்துப் பள்ளியை விட்டு வெளியேறும் மாணவர்கள்-வெளியுலக வாழ்க்கையின் சவால்களை ஏற்றுச் சமாளிப்பதற்குரிய திறமையும், தன்னம்பிக்கையும் தருகின்ற கல்வி ஆங்காங்கே உள்ள சுற்றுச் சார்பில் அன்றாடம் நிகழும் அனுபவ ரீதியில் அமைய வாய்ப்பு ஏற்படும்.

இதுவரையிலும் இடைநிலை, மேல்நிலைப் பள்ளிகளில் குறிப்பிட்டதொரு பாடத் திட்ட முறையே இடம் பெற்று வந்தது. இந்தப் பாடத் திட்டத்தில் பயின்றவர்கள், குறிப்பிட்ட சில வேலைகளுக்கே பயன்படுபவர்களாக ஆக முடிந்தது. ஆனால் இனி வரும் வாழ்க்கைக் கல்வியில், புதிய பல்வேறு பாடங்களையும் பாடச் சேர்க்கைகளையும் நாம் கொண்டு வர இயலும். ஏமனனில் வளர்ந்து வருகின்ற சமுதாயத்தின் வேகத்திற்கு ஏற்றவாறு புதிய புதிய வேலைகளுக்குப் புதிய புதிய திறன் மிக்க பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள். அதற்கேற்ற பயிற்சியாளர்களைத் தரும்வகையில் கல்வித் திட்டம் மாற்றியமைக்கப்படும். குறிப்பாகக் கிராமப் பொருளாதார வளர்ச்சிக்கு வழி வகுக்கும் வகையில் கல்வி அமையும்.

> கருத்துக்கள் பல மலர்வது-
> பல பண்டங்களை இயற்கை
> தருவது போன்றதாகும். அவை
> வெவ்வேறு முறைகள் கொண்
> டனவாய் இருப்பினும் முடிவில்
> ஒரு பயனையே பெறுகின்றோம்.
> அந்தப் பயன்பெறும் முறை
> யிலேதான் செம்மை தேவை;
> படைப்பின் முறையில் அல்ல!
>
> —பேரறிஞர் அண்ணா



பொதுக் கல்விப் பாடங்கள், தொழில் கல்விப் பாடங்கள், வாழ்க்கைக் கல்விக்கான பாடங்கள் ஆகிய இவற்றிற்குப் பள்ளியில் கால ஒதுக்கீடு நிர்ணயிக்கப்படுகிறது. இதன் அடிப்படையில் தொடக்க நிலையில் 28 விழுக்காடு பாடவேளைக் காலம், கைத்திறன் பயிற்சி மற்றும் உடற்பயிற்சிக்கு ஏற்படுத்தவும், மேலே செல்லச்செல்ல இக் கால அளவினை உயர்த்தி மேல்நிலைக் கல்வி நிலையில் 80 விழுக்காடு காலம் தொழில் பயிற்சிக்கும், உடல் பயிற்சிக்கும், மாணவர்கள் திறன்களை வளர்ப்பதற்கும் ஒதுக்கப்படும்.

பள்ளி நடக்கும் கால வேளைகளிலோ அல்லது அதற்குப் பிறகோ, அல்லது வார இறுதியிலோ செய்முறைப் பயிற்சிகள் பெறலாம். இப்பயிற்சிகள் சூழ்நிலைகள், ஆங்காங்கேயுள்ள தொழில்கள், பயிற்றுநர் வசதிகள் இவற்றிற்கேற்றவாறு பள்ளித் தலைவர்களே அமைத்துக் கொள்ள உரிமை அளிக்கப் பெறும்.

வாழ்க்கைக் கல்வியின் முழுநோக்கும், படிப்பு முடியும் தறுவாயில் மாணவர்கள் தாங்களாகவே ஏதேனும் தொழில்களில் நேரடியாக வேலை பெறுவதற்கு ஏற்றதாக அல்லது சுயமாக ஏதேனும் தொழில்களைத் தொடங்கி நடத்துவதற்கு ஏற்றதாக அமைப்பதுதான். ஆகையினால் வேலைகளின் பின்னணியைப் பாடக் கருவாக அமைத்து அந்தந்தச் சூழல்களிலேயே பயிற்சிகளும் தரப்படும். இந்த நோக்கம் முழுதும் நிறைவேறுவதற்காக 20 சதவிகிதம் மாணவர்களைத் தொழில் கல்வியில் தற்போது நாம் சேர்த்து வருகிற முறையை இன்னும் ஐந்து ஆண்டுகளுக்குள் படிப்படியாக 40 சதவிகிதம் முதல் 50 சதவிகிதம் வரை உயர்த்தவும், பொதுக் கல்வி மட்டும் பெறும் மாணவர்களின் எண்ணிக்கையை நாளடைவில் குறைக்கவும் உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறான தொழில் சார்ந்த கல்வி பெருகுவதற்குத் தொழில்திறன் வாய்ந்த, வினைத்திறன் மிக்க, அறிவும் அனுபவமும் கொண்ட ஆசிரியர்களும் கைவினையாளர்களும் அவசியமாகின்றனர். எங்கெல்லாம் தொழில் நுணுக்கம் வாய்ந்தவர்கள் தேவையோ அங்கெல்லாம் நல்ல தொழில் நுணுக்கத்திறன் தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களே நியமிக்கப்பட வேண்டும்.

பாலிடெக்னிக்குகள், பல்தொழில்பயிற்சி நிறுவனங்கள், வாணிபப்பயிற்சி நிலையங்கள், மருத்துவக் கல்வி நிலையங்கள், வேளாண்மைப் பள்ளிகள், மனையியல் கல்வி நிறுவனங்கள், இசை, ஆடற்கலை, நுண்கலை, சிறுதொழில் நிலையங்கள் போன்ற பல்வேறு நிறுவனங்களும் - இந்தக் கல்வி முறைக்குத் தேவையான அனைத்து ஆசிரியர்கள் பணியையும் மேற்கொள்வதற்காகத் தத்தம் பணியாளர்களைப் பகுதிநேர ஆசிரியர்களாக மாற்றுவதற்கும் ஏற்ற வகையில் திட்டமிட்ட பயிற்சிகளைத் தருதல் வேண்டும். பலதொழில்களிலும் தேர்ச்சி பெற்ற மேல்நிலைக் கல்விச் சான்றிதழ் உடையவர்களையும் ஆறுமாதப் பயிற்சிக்குப் பிறகு இத்தகு பணியில் உயர்நிலைப் பள்ளிகளில் ஈடுபடுத்தலாம்.

> *மாற்றங்களின்றி முன்னேற்றமில்லை; முன்னேற்றமில்லையேல் வரலாறு இல்லை. மாறுதல் என்பது சிறப்பாக அமையும்போதுதான் அதுவே முன்னேற்றத்திற்கான சீரான பாதையினையும் அமைத்துக் கொடுத்து விடுகிறது. சமூக முன்னேற்றமும் பொருளாதார வளர்ச்சியும் ஒரு நாட்டின் இன்றியமையாத தேவை என்றாலும், அதன் பலன்கள் ஏழை எளிய மக்களுக்குக் கிடைப்பது அவசியம்.*
>
> —மாண்புமிகு முதல்வர்
>
> **டாக்டர் எம்.ஜி.ஆர்**

தொழில் நுட்பம் அதிகமாகத் தேவையில்லாத பல்வேறு தொழில் பயிற்சிகளுக்கும் தற்போது ஆரம்பப் பள்ளிகளில் பாடம் புகட்டும் ஆசிரியர்களையே, தகுந்த புத்தறிவு பயிற்சி தந்து ஈடுபடுத்தலாம். 6, 7, 8, வகுப்புகளின் தொழில் பாட போதனைகளுக்குத் தொழில் பள்ளிகளிலும், மேல்நிலைக் கல்வித் தொழில் பயிற்சிகளிலும் தேர்ச்சி பெற்றவர்களையும் ஆசிரியர்களாக நியமிக்கலாம். 9, 10 வகுப்புகளில் ஐ. டி. ஐ. மற்றும் பாலிடெக்னிக் டிப்ளமோ பெற்றவர்களை நியமிக்கலாம். 11, 12, வகுப்புகளில் தொழில் திறன் பெற்ற பட்டதாரிகளை நியமிக்கலாம்.

புதிய பணியினை மேற்கொள்ளும் ஆசிரியர்களுக்கு இன்றியமையாத வழி நூல்களையும், கையேடுகளையும் மிகுந்த கவனத்துடன், செயல்முறைக்கு ஏற்ற வகையில் தயாரித்து வழங்கப்படும்.

பள்ளிகளில் கல்வியும், தொழில் பட்டறைகளில் பயிற்சியும், மாறி மாறிப் பெறுகின்ற வகையில் கல்வித் திட்டத்தில் புதியதொரு புதுமையும், பயனுள்ள மாற்றமும் தோற்றுவிக்கப்படும். இதே சமயம், அனுபவ ரீதியாக, தொழிற்சாலைகளில் நேரடியாக ஈடுபடும் மாணவர்கள், சிறிதளவு பொருள் ஈட்டிக் கொள்ளவும் இயலும்.

அதே நேரத்தில், பள்ளியில் ஒரு பகுதி மாணவர்கள், பல்வேறு பாடங்களை, அறிவு வளர்ச்சிக்காகக் கற்று வருவார்கள். தொழிற்சாலைகளில் தொடர்ந்து சிலகாலம் பணி முடித்த அந்தப் பிரிவு மாணவர்கள் மீண்டும் பள்ளிக்குத் திரும்புவார்கள், அதுவரை, பள்ளியில் கல்வி கற்ற மாணவர்கள் இப்போது தொழிற்சாலைகளுக்குச் செல்வார்கள்.

இவ்வாறு இரண்டு நிலைகளிலும் மாறி மாறி வருவதால், குறிப்பிட்ட கால அளவில் மாணவர்கள் படிப்பறிவும் தொழிற்சாலை அனுபவமும் பெறுவதோடு சிறிதளவுபொருள் வருவாய் ஈட்டுகின்ற வாய்ப்பும் பெறுகின்றார்கள். இத்தகைய மாற்று முறைப்பயிற்சித் திட்டம் எட்டாம் வகுப்பிலிருந்தே துவங்கப் பெறும்.

இத்தகைய முறையில் வேலையின் அடிப்படையில் தகுதி பெறும் தொழில் கல்வி முழுமை அடைய வேண்டுமானால், செயல்முறைப் பயிற்சிகளுக்கு இடம் அதிகம் தந்தாக வேண்டும். அதற்கு மிகுதியான உபகரணங்களும், கருவிகளும், பயிற்சிக் கூடங்களும் இன்றியமையாத தேவை ஆகின்றன.

எனவே, இத்தகைய உபகரணங்களும், கருவிகளும், தளவாடங்களும் அரசின் தொழில் நிறுவனங்களும், டான்சி, சிப்காட், சிட்கோ போன்ற தொழில் நிறுவனங்களும் பெரும் அளவில் தயாரித்தளிக்க வேண்டிய அவசியம் ஏற்படும்.

ஆகையால், இத்தகைய மாபெரும் கல்வி மாற்றத்தையும், புனரமைப்பையும், தொழிலுக்கும் கல்விக்கும் இடையில் ஏற்படும் புதிய உறவையும், உருவாக்கும் முயற்சியைக் கல்வித் துறை மட்டும் தனியே நின்று சாதித்துவிட இயலாது என்பது நாம் அறிந்ததே. இதற்கு மிக நுட்பமான பலதுறைகளிடமும்-வளர்ச்சித் துறை, வாணிபத்துறை, தொழில் துறை, தனியார் தொழில் நிறுவனங்கள் பள்ளியைச் சுற்றியுள்ள மக்கள் சமுதாயம் ஆகிய யாவும்



ஓர் இணைப்புப் பாலமாக அமைந்து, அவர்களுடைய நல்லெண்ணம், அறிவு, ஆற்றல், ஒன்றுபட்ட உழைப்பு யாவற்றையும் திரட்டி. ஒரு கூட்டு முயற்சியாகத் தரும் கனிந்த பக்குவமே வெற்றியைத் தேடித்தர இயலும். தனிமரம் இந்தக் கனி மரங்களின் தோப்பை உருவாக்காது என்பதால் அனைவருடைய ஒத்துழைப்பும் அவசியமாகின்றது. இப்புதிய திட்டம்—வாழ்க்கைக் கல்வித் திட்டம்- 'மன்னும் இமய மலையினும்' பெரியது. அண்ணல் காந்தி அடிகளின் உடலுழைப்பு—சுய தேவைப் பூர்த்தி ஆகிய அம்சங்களையும் கொண்டது. இரண்டாம் உலகப் போரில் தரைமட்டமாகிய ஜப்பான் நாட்டு மக்கள்-தொழில் வளத்தால் - நிமிர்ந்து நிற்கும் நிலைமை எய்தியதை விளக்குவது.

''கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள்
கவலை உனக்கிலை ஒத்துக் கொள்!''

—என்ற நாமக்கல் கவிஞரின் பாடலை நினை வூட்டுவது.

பலன் பெற வேண்டிய குழந்தைகளோ பல இலட்சங்கள், பணியில் ஈடுபட வேண்டிய ஆசிரியர்களோ பல்லாயிரம். எனவே படிப்படியாக ஒரு காலப் பரிமாணத்தில்தான் இதனைச் செயலாக்க முடியும். பள்ளிகளில் எல்லா நிலைகளிலும் உள்ள எல்லா மாணவர்களும், ஈடுபட்டுப் பயிற்சி பெற ஐந்தாண்டுக் காலத்திற்கான செலவிலும் ஆயிரம் கோடி ரூபாய் வரை ஆகலாம் என உத்தேசமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது. மத்திய அரசு புதிய கல்விக் கொள்கையை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதால், அதன் முடிவுகள் வெளியானதும், அதனை அனுசரித்து வாழ்க்கைக் கல்வித் திட்டம் இறுதி வடிவம் பெறும்.

ஆனாலும், மேற்கூறிய புதியதிட்டத்தை முன்னோடித் திட்டமாகப் பரீட்சை செய்து பார்த்து அனுபவத்தின் பயனைப் பெற அரசு விரும்பியதால், அதற்கான அனுமதியும் வழங்கியது. இதைத் தொடர்ந்து 1984-85-ஆம் ஆண்டு முதல், சுமார் 660 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள், தாமாகவே மிகுந்த ஆர்வத்துடன் முன் வந்து, பள்ளிகளின் வசதிக் கட்டண நிதியிலிருந்து வருகின்றன.

இந்த முயற்சியின் முதலாண்டில், சுமார் 74,000 மாணவ மாணவியர் ஈடுபட்டுள்ளனர். நடப்பு ஆண்டில் இப்பணி அடுத்த வகுப்புக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதன் பயனாக இரண்டு மடங்கு மாணவ மாணவியர் பயிற்சி பெறும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இதுவரையிலும் பள்ளிகளில் தேர்வு செய்து கொண்ட 130 வகையான தொழிற்பாடங்கள் நடைபெற்று வருகின்றன. இதற்கான நிதிச் சுமையை ஓரளவு குறைக்க ஒவ்வொரு பள்ளிக்கும் ஒவ்வொரு பகுதி நேரப் பயிற்றுநரைக் கல்வித்துறை அனுமதித்துள்ளது. இதன் பயனாக மாணவ மாணவியர் நற்பயன் பெற்று வரும் செய்திகள் நாளும் வந்தவண்ணம் இருக்கின்றன. காந்தி கிராமம் கிராமியப் பல்கலைக் கழகத்தில் 1985-ல் ஒரு மையம் ஏற்படுத்தப்பட்டு வாழ்க்கைக் கல்விக்கான திட்டம் பற்றி இது ஆராய்ந்து வருகிறது.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்ற அடிப்படையில் துவங்கியுள்ள இந்த வாழ்க்கைக் கல்வித் திட்டம் எதிர்காலத் தமிழகத்தை மறு மலர்ச்சியுற்ற நாடாக ஆக்கும்! வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் என்பது தெளிவு.



# குறள் எனும் குன்றா விளக்கு

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து

**நா**ம் தமிழால் குறளை அறிகிறோம். மேனாட்டார் குறளால் தமிழை அறிகின்றனர் என்று முத்தமிழ்க் காவலர் குறிப்பிட்ட கருத்து முற்றிலும் உண்மையே!

உலகுக்கே - நம் ஒப்புயர்வற்ற தமிழ் மொழியை அறிமுகப்படுத்துகின்ற ஆற்றல் சான்ற புகழ்முடியாய் வள்ளுவரின் குறள் பல்லாண்டுகளுக்கு முன்பே வையம் முழுதும் பரவிவிட்டது.

ஜி. யு. போப் போன்ற பெருமக்களைத் தமிழில் ஈடுபடுத்தியது குறள்தான்! இதன் அறக்கருத்துக்களில் அவருக்கிருந்த ஆர்வம் தான்-தமிழார்வமாகத் தழைத்து - தன் கல்லறையிலேயே 'தமிழ் மாணவன்' என்று குறித்திட வைத்தது.

அண்ணல் காந்தியடிகளே கூட - குறள் பயில விரும்பித்தான் தமிழ் கற்கத் தொடங்கினார்.

விக்டோரியா மகாராணியின் நூலகத்தில் விவிலியத்துக்கு அடுத்தாற்போல்-இடம் பெற்றது என்றும் - சோவியத் நாட்டில்-அணு ஆயுதப் போரில் உலகம் அழிந்தாலும் அழியாத 'டங்ஸ்டன்' அறையில் திருக்குறள் இடம் பெற்றது என்றும் நாம் மகிழும் போதெல்லாம் - அங்கெல்லாம் குறள்-தன் தாய் மொழியைத் தாயகத்து மண்ணைப் பெருமை கொள்ளச் செய்திருக்கிறது என்பதை மறப்பதற்கில்லை. - The bard of the Universal Man - 'அனைத்துலக மனிதனைப் பற்றிய அற்புத நூல்' எனப் போப் புகழ்ந்துரைத்தார்.

'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறம்

ஆகுலநீர பிற'

என்ற குறட்பாவின் ஆழ்ந்த அற உரையைப் படித்து இன்புற்ற வீரமாமுனிவர் வள்ளுவர் 1330 குறட்பாக்களையும் எழுதாமல் - இந்த ஒரு குறளை மட்டுமே எழுதியிருந்தாலும் கூட உலகப் புகழ் பெற்றிருப்பார் எனப் போற்றினார். 20-ஆம் நூற்றாண்டின் இயேசுநாதர் எனப்பெறும் ஆல்பர்ட் சுவைட்சர் "ஒழுக்க விதிகளைத் திரட்டிக் கூறும் உலக நூல்களில் திருக்குறளைப் போல விழுமிய மதிநலங் கொண்ட நூலினைக் காண்டல் அரிது'' எனப் புகன்றார்.

முதன் முதலில் ஆங்கிலத்தில் மொழி மாற்றுச் செய்யப்பட்ட முதல் இந்திய இலக்கியமே குறள்தான் என்கிறார்கள்.



சும்மாக் கிடந்த நிலத்தைக் கொத்தி
சோம்பலில்லாமல் ஏர்நடத்தி
கம்மாங் கரையை ஒசத்திக் கட்டிக்
கரும்புக் கொல்லையில் வாய்க்கால் வெட்டிச்
சம்பாப் பயிரைப் பறிச்சு நட்டு
நெல்லு விளைஞ்சிருக்கு—வரப்பும்
உள்ளே மறைஞ்சிருக்கு!

—பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

'தேமதுரத் தமிழோசையை உலகமெலாம் பரப்பும் வகையினை - வள்ளுவரின் குறள் நமக்குப் பெற்றுத் தந்தமைக்கு - அதன் உலகம் தழுவிய கருத்துக் களஞ்சியம்தான் காரணம் என்பதை மறப்பதற்கில்லை.

அந்தக் கருத்துக்கள் - வள்ளுவர் என்ற மனிதப் புனிதர் -மாமுனிவர் - வழங்கிய வைரமணிக் கருத்துக்கள்தான் என்றாலும் காலம் காலமாகத் தமிழ் மண்ணில் ஆன்றோரும் சான்றோரும் ஏற்றுப் போற்றிய எண்ணங்களின் தொகுப்பு என்பதை எண்ணிப் பார்த்தல் வேண்டும். அறிதொறும் அறிவுடைமையை வெளிப்படுத்துவதால் நவில்தொறும் நயம் பயப்பதாய் அமைந்துள்ள குறள் தமிழ் மக்களது சிந்தனையின் கொடுமுடி என்பதே பொருந்தும்.

தாமஸ் மூரின் 'உடோலியா'வும்- பிளேட்டோவின் 'குடி அரசும்' அரிஸ்டாடிலின் 'ஐடியல் காமன்வெல்த்' என்பதும் வெண்டல் வெல்கியின்' 'ஒருலகம்' என்பதும் -எச். ஜி. வெல்சின் 'உலக அரசாங்கமும் - பெட்ரண்ட் ரசலின் 'உலக ஒருமைக் கருத்தும் - வள்ளுவரின் குறளில் அமைந்து மணம் தருவதை இவைகளை ஒப்பிட்டுப் பார்த்து ஊன்றிப் படிப்போர் உணர்வர்.

தமிழகம் - உச்சி மலை விளக்காக உலகப் புகழ் பெற்றிருந்த காலத்தில் - தமிழகத்தில் பல்வேறு பண்பாடுகள் படையெடுப்பு நடத்தின.

சமயங்கள் தங்களின் கோலவடிவத்தை விட்டு - ஒன்றை ஒன்று மோதும் கோர வடிவத்தை எடுத்தன.

பல்குழுவும் - பாழ் செய்யும் உட்பகையும் பெருகின.

அத்தகு சூழ்நிலையில்தான் தமிழினத்தை நெறிப்படுத்தவும் - மனிதன் மண்ணில் நல்ல வண்ணம் வாழவும் காலத்தால் கறைபடாத கருத்துக்களை இடத்தால் ஏற்றங்குறையாத எண்ணங்களை -வழிவழியாய் தமிழினத்தின் வாழ்வை உயர்த்தும் சிந்தனைகளை வள்ளுவர் தந்தார். பிறப்பு வழியில் பெருமை கிட்டாது செய்யும் செயலால்தான் அவனவன் பெருமை எய்தமுடியும் என்று வள்ளுவம் கூறுகிறது!

வாழ்வாவதுமாயம் -மண்ணாவது திண்ணம் என்றுரைத்து - முயற்சியற்ற சோற்றுப் பிண்டமாக மனிதனை ஆக்கிவிடாமல் ஊழையும் உட்பக்கம் காணும் - வலிமையைக் குறள் நூல் வழங்கி மகிழ்கிறது!

வள்ளுவம்-வாழ்வினை அணுகும் முறை- அறவியல் முறை மட்டுமன்று -அறிவியல்முறையும்கூட.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பழந்தமிழரின் கருத்துத்தான் வள்ளுவர் குறளாகப் பரிணமித்தது.

திருக்குறளை - உரைநலம் காணவும்- புலமைத் திறத்தோடு பொருள் சொல்லி மகிழவும் மட்டுமே பயன்படுத்தி வருகிறோம். அது வாழ்க்கை வழிநூல் என்பதை உணர்ந்து என்று குறளைப் படிக்கத் தொடங்குகிறோமோ அன்றுதான் நாமும் -நாடும் முன்னேறவும் - நாட்டை முன்னேற்றவும் முடியும்!





# நானொரு...

— கவிஞர் நா. காமராசன்

தோழீ !
என் ஆத்ம ஞாபகம் அழைத்தது உன்னை
சென்று போன கால வேகம்
அமைதி கொண்டது !
அந்தப் பழைய பொங்கலில்
பவளமல்லி மரநிழலில்
கரும்புக்கு நீ முத்தம் வைத்தபோது...
பாவாடைப் பருவத்தில்
நீ ஒரு தாமரை மொட்டாய் இருந்தாய்
அந்த மௌனம் கலைந்துபோனதே...
இளநீர்க் குடம் சுமந்துநீ
கடவுளைத் துதித்தாலும்
காமசூத்திரத்தை
உச்சரிப்பதுபோல் இருக்கிறது !
சின்னஞ்சிறிய
செல்லக் கனவுகள்
உனக்குப் பீடம் போட
ஓ...தேவி
என் இதயக்கோவிலில்
நீ ஒரு
சௌந்தர்யம்-
நானொரு
சௌந்தர்ய உபாசகன் !

# பொங்கல் சிந்தனைகள்

மாண்புமிகு சட்ட அமைச்சர்

## திரு. சி. பொன்னையன்

பொங்கல் திருநாள் தமிழ்கூறும் நல்லுலகத்திற்குப் பொன்னான பெருநாள்! உழைப்பாளர், உழவர்கள் தங்கள் கவலையை மறந்து செந்நெல்லால் புதுப் பொங்கல் வைத்துக் கன்னலின் ருசிகண்டு களிக்கும் ஒப்பற்ற நாள்! செந்தமிழ்க் கவிஞர்கள் பண்மிகுந்த பாட்டிசைத்துத் தமிழர்களை மகிழ்விக்கும் மாபெரும் திருவிழா நாள்! ''பொங்கலோ பொங்கல், பொங்கலோ பொங்கல்'' என்று கன்னியர்கள் குரல் எழுப்பி மகிழ்ச்சியைக் கூறும் புதுநாள்! 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே' என்று பவணந்தி முனிவர் கி.பி. 12ஆம் நூற்றாண்டில் பாடியமைக்கு ஏற்பப் பழையன போக்கி புதியன படைக்கும் பொன்னான நாள் இப்பொங்கல் திருநாள்!

பண்டைக் காலத்தில் தை மாதம் முதல் நாளே தமிழர்க்கு ஆண்டின் தொடக்க நாள் என்பது இலக்கிய வரலாற்று ஆய்வாளர்கள் கண்ட உண்மை. பின் இது எப்படியோ காலப் போக்கில் மாறி 'சித்திரை' முதல் இடம் பிடித்தது. 'தை பிறந்தால் வழிபிறக்கும்' என்பது முதுமொழி அல்லவா?

தைத் திங்கள் தண்கயம் படிந்து ஆடுவது பற்றியும் 'தைத்' திருநாள் பற்றியும் சங்க இலக்கியங்களிலும், தேவாரத் திருமுறைகளிலும் சில குறிப்புக்கள் வருகின்றன. எனவே தை மாதத் தொடக்கம் சிறப்புக்குரியது சீர்மிகுந்தது என்பது வரலாற்றுச் சான்றுகளால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழில் மிகவும் சிறப்புக்குரியது ஓரெழுத்தொருமொழியாகும். ஒரே எழுத்து சொல்லாக நின்று பொருள்தரும் அரிய விந்தை இது. உலக மொழிகள் பலவற்றில் இது இல்லாதது. 'தை' என்ற ஓரெழுத்தொருமொழி ஒருசிறப்புமிகு மாதத்தின் பெயராக வருவது சிந்தனைக்குரியது.

பொங்கலுக்கு முதல்நாள் பழம்பொருட்களைப் போக்கும் நிகழ்ச்சி நடைபெறும். 'போக்கிப்பண்டிகை!' இதுவே பின்னர் 'போகிப் பண்டிகை! என மருவி இந்திரனோடு தொடர்புடையவிழாவாக மாறிவிட்டது. இது பிற்கால மாற்றம் ஆகும்.

இப்போக்கிப் பண்டிகை அன்று இல்லத்தைத் தூய்மையாக்குவர். கொங்கு நாட்டுப் பகுதியில் அன்று 'காப்புக் கட்டுதல்' என்னும் ஒரு நிகழ்ச்சி நடைபெறும். வேப்பஇலை, ஆவிரம்பூ, பூழைப்பூ மூன்றையும் ஒன்றாக்கி வீட்டு முற்றத்திலும் பிற இடங்களிலும் செருகி வைப்பர். இதுவே காப்புக் கட்டுதல்!

புறநானூற்றில், போர்க்களத்தில் போரிட்டுப் படுகாயம் அடைந்த வீரனின் உயிரைப் பாதுகாக்கவும், பேய் முதலிய தீமைகள் அவனை வந்து தீண்டாமல் இருக்கவும் 'வேம்பு மனைச் செருகுதல்' பற்றிப் பல பாடல்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அது பாதுகாப்பின் பொருட்டுச்செய்யும் ஒரு சடங்காகும். அதுபோலப் பொங்கல் விழா நிகழ்ச்சிகள் அனைத்தும் பாதுகாப்பாக நலமாக நடைபெற வேண்டும் என்னும் பொருவில் காப்புக்கட்டுதல் சடங்கு கொங்குநாட்டில் நடைபெறுவதைக் கூறலாம். வேம்பு, தீய கிருமிகள் தாக்காமல் இருக்கவும், ஆவி





# படைப்புகள்

"நெல்! எல்லாமே நெல்தான் எனினும் ஒவ்வோர் வகைக்கும் ஒவ்வோர் காலம் தேவைப் படுகிறது. குறுவைக்குப் போது மான நாட்கள் கிச்சிலி சம்பா வுக்குக் காணாது! ஒருவகை நெற்பயிர் நீந்தியபடி இருக்க விரும்புகிறது! வேறு சிலவகைக்கு நீர் தெளித்துவிட்டால் போதும். திருப்தியடைந்து விடுகிறது. சில வகை ஏற்றுக்கொள்ளும் உரத்தை வேறு சில வகையான நெற்பயிர் ஏற்றுக் கொள்வதில்லை.

" நாம் நெடுங்காலமாக இவருக்கு எந்தப் பண்டம் பிடிக்கும், அவருக்கு என்ன பானம் தேவை என்பது பற்றியே பேசி வருகி றோம். நம்மை வாழ வைக்கும் 'படைப்பு'களாள இப்பயிர் வகைகளின் விருப்பு, வெறுப்புப் பற்றி அறிய முனைந்தோ மில்லை. ஏன்? வயலருகே சென்ற வர்கள் நம்மில் அநேகர் அல்ல! செல்லும் சிலரும் 'அறுவடை' செல்லும் ஆர்வத்தை மற்ற போது காட்டுவது இல்லை."

—பேரறிஞர் அண்ணா·

ரம்பூ என்றும் நிலைத்துநிற்கும் தன்மையைக் காட்டவும், பூளைப் பூ நிலையாமையை உணர்த்தவும் பயன்படுத்தப்பட்டன எனலாம்.

பொங்கல் உழவர்களின் திருநாள் என்று சிறப்பித்துக் கூறப்படுகிறது. உழவுத்தொழில் உன்னதமான - உலகில் அடிப்படைத் தேவை யான தொழில். 1330 அருங்குறட்பாக்கள் பாயிரத்தோடு பாடிய திருவள்ளுவப் பெருந் தகையால் பாராட்டப்பட்ட ஒரே ஒரு தொழில் உழவுத் தொழில்.

'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை'

என்று வள்ளுவப் பெருந்தகை பாடியுள்ளார்.

தமிழில் மிகவும் தொன்மையான நூல் தொல்காப்பியம். தொல்காப்பியத்தில் 'ஏரோர்' களவளி' என்று உழவுத்தொழில் சிறப்பித்துப் பெரிதும் புகழ்ந்து பாடப்பெற் றுள்ளது. 'வேளாண் பக்கம்' என்று உழவுத் தொழிலின் சிறப்பும் பெருமையும் சிறப்பித்து தொல்காப்பியத்தில் பேசப்படுகிறது. உரை யாசிரியர்களும் இதுபற்றி விளக்கி எழுதியுள் ளனர்.

பொங்கலை ஒட்டி 'சல்லிக்கட்டு' எனப் படும் வீரவிளையாட்டு நிகழ்ச்சிகள் இன்று தமிழகத்தில் பல பகுதிகளில் நடைபெறுகின் றன. இதற்கு எட்டுத்தொகை நூல்களில் ஒன் றாகிய கலித்தொகையில் சான்று உள்ளது. 'ஏறு தழுவுதல்' என்று இவ்வீர விளையாட்டு குறிக்கப் பெறுகிறது.

ஏறு தழுவிக் காளையை வென்று அடக்கிய பெரு வீரனையே தமிழ்ப் பெண் கணவனாக ஏற்றுக் கொள்ளுவாள்.

'கொல் ஏற்றுக் கோடு அஞ்சுவானை
மறுமையும்
புல்லாளே ஆயர் மகள்'

என்பது இலக்கியம் காட்டும் செஞ்சொற்கள் ஆகும்.

ஏர்த் தொழில் செய்யும் உழவர் பெரு மக்கள் தங்களுக்குள் நாடு, பெரியநாடு என்ற சமூக அமைப்பினை ஏற்படுத்திக் கொண்டு பற்பல அறச்செயல்கள் புரிந்துள்ளதாகக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

கலப்பையை அவர்கள் தங்கள் சின்ன மாகக் கொண்டு அறக்கொடைகளை விட்ட னர். அது 'சித்திரமேழி' என்று பெயர்பெறும்.

முதலில் ஏர் பூட்டுதலின் போது 'பொன் ஏர் பூட்டல்' என்ற சடங்கு நடைபெறும். இப்பொன் ஏர் பற்றிய சிற்பங்கள் கோவையை அடுத்துள்ள முட்டம் என்ற பகுதியில் கிடைத் துள்ளது.

ஏரின் சிறப்பாக மேழிவிளக்கம், ஏரெழு பது, ஏர்ப்படலம் போன்ற பல இலக்கியங்கள் உள்ளன. சேலம், கோவை, பெரியார் மாவட் டம் ஆகிய கொங்கு நாட்டுப் பகுதியில் வேளாளர் திருமணத்தின்போது ஏரெழுபது படிக்கப்பட்டதாகச் செப்பேட்டுச் சான்றுகள் உள்ளன. ஏரெழுபது கம்பர் பாடிய நூல் ஆகும்.

இன்று தமிழகத்தின் பல பகுதிகளில் நடைபெற்ற அகழ்வாய்வுகளில் இரும்பு, கல், உழுகருவிகள் பல அகப்பட்டுள்ளன. அதன் மூலம் சுமார் 4,000 ஆண்டுகட்கு முன்னரே தமிழ்நாட்டில் உழவுத்தொழில் சிறந்திருந் தது என்பதை நாம் அறிகின்றோம்.

பொங்கல் இறுதிநாளில் 'காணும் பொங் கல்' திருநாள் நடைபெறுகிறது. அன்று உற் றார் உறவினர் ஒருவருக்கொருவர் நேரில் கண்டு வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொள் கின்றனர். சிறியவர்கள் பெரியவர்களைக் கண்டு நல்லாசி பெறுகின்றனர்.

அண்மைக் காலத்தில் இப்பொங்கல் பண் டிகையின் இறுதி நாளில் வள்ளுவர் திருநாள் கொண்டாடப்பட்டு விடுமுறையாகவும் அறி விக்கப்பட்டுள்ளது. குறள் பற்றிய விழாக்கள் தமிழகத்தில் ஆங்காங்கே நடைபெறுகின்றன. இந்நாளையொட்டி தமிழக அரசு சிறந்த நூல்களுக்குப் பரிசளித்தும் நூலாசிரியர்களை- தமிழ்ப் புலவர்களைப் பாராட்டியும் பரிசளித் தும் சிறப்பிக்கிறது.

இவ்வாறு பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகள் மூலம் பொங்கல் புதுநாளில் ஒரு பண்பாட்டு எழுச்சியும் தமிழ் மறுமலர்ச்சியும் ஏற்பட்டுள் ளது என்பதுஎல்லோரும் அறிந்ததோர் நிகழ்ச்சி யாகும். இது தமிழக முதல்வர்-புரட்சித் தலைவர்-பொன்மனச் செம்மல்-மாண்புமிகு எம்.ஜி.ஆர்., அவர்களின் பொன்னான ஆட்சியில் ஏற்பட்ட புதுப்பொலிவாகும். ஆம்.

''வாழ்வு சிறக்க வயல்உழுத ஏர்வளம்
வாழிநம் நாட்டில் வளருமேல் அதனாலே
ஊழி வளம்பொங்கும் பொங்கலோ
பொங்கல்!''

என்று வாழ்த்துவோமாக! வாழ்க பொங்கல்!





# எழுத்தும் பேச்சும்

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
டாக்டர். எச்.வி.ஹண்டே

நாட்டில் அறிவு வளர்ந்துள்ளது. அறி வியல் சிறந்துள்ளது. கல்வி வளர்ந்துள்ளது. செல்வமும் பெருகியுள்ளது. நாகரிகம் வளர்ந் துள்ளது. நலன் யாவும் பெருகியுள்ளன.

என்றாலும் எங்கும் எதிலும் ஒரு பற் றாக்குறை. பள்ளிக்குச் சென்றால் இடநெருக் கடி. கல்லூரிக்குச் சென்றால் நீண்ட வரிசை. அரிசிக் கடையிலும் நெருக்கடி, மருந்துக்கடை யிலும் நெரிசல். பேருந்துகள் பெருகியுள்ளன, என்றாலும் அங்கும் பெரும் நெரிசலே உள்ளது.

இப்படிப் பிரச்சினைகள் பெருகும்போது மக்களிடையே ஒரு மனக்குறை தெரிகிறது. தேவைகளை நிறைவேற்ற அரசு தக்க நட வடிக்கைகள் எடுக்கவில்லையோ என்று மக் கள் நினைக்கிறார்கள். அரசு திட்டம் தீட்டத் தவறிவிட்டது என்று கருதுகிறார்கள். அர சுக்குப் பிரச்சினைகளைச் சமாளிக்கும் திறன் இல்லையோ என்று நினைக்கிறார்கள்.

மக்களுக்கு நாம் ஒன்றை நினைவுபடுத்த வேண்டும். பொருளாதார வளர்ச்சிக்கு அரசு எல்லாத் திட்டங்களையும் தீட்டி நிறை வேற்றுகிறது. திட்டமிட்டு அரசு செயற்பட்டு வருகிறது. ஆனால் திட்டமிடாமலே மக்கள் தொகை பெருகி வருகிறது. இதனால்தான் பற்றாக்குறையும் பெருகுகிறது.

நமது நல்வாழ்வுத்துறையின் பணிகளால் நோய் குறைந்து உடல்நலம் சிறந்து மக்களின் வாழ்நாள் நீடிக்கிறது. மக்களின் நல்வாழ்வுக் காக அறிவியலின் பயனாகக் கிடைக்கிற மிகச் சிறந்த மருந்துகளும் சிகிச்சைகளும் மக்க ளுக்கு வழங்கப்படுகின்றன.

தமிழ்நாடு முழுவதும் மருத்துவக் கல் லூரிகளுடன் இணைந்த மருத்துவ மனைகள் 8, மாவட்டத் தலைமை மருத்துவ மனைகள் 15, வட்டத் தலைமை மருத்துவமனைகளில் 122 ஆகியவை தவிர 197 சிகிச்சை நிலையங் களும் மாநிலமெங்கும் உள்ளன. மருத்துவ மனைகளில் தங்கி சிகிச்சைபெற தமிழகம் முழுவதுமுள்ள மருத்துவமனையில் 30,378 படுக்கைகள் உள்ளன. மேலும் மருத்துவ மனைகளும் படுக்கைகளும் பெருகி வருகின் றன.

மிகச் சிறந்த நவீன மருத்துவக் கருவிகள் வாங்குவதற்காக 1977-78 முதல் 1984-85 வரை தமிழக அரசு 30.42 கோடி ரூபாய் ஒதுக்கியது. மேலும் 1985-86ஆம் ஆண்டில் புதிய கருவிகள் வாங்குவதற்காக ரூ. 7.62 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரத்தில் 1985ஆம் ஆண்டில் அறிஞர் அண்ணா புற்றுநோய் மருத்துவமனை புதிதாகக் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்பட் டது. இங்கு 250 படுக்கைகள் உள்ளன. நவீன சிகிச்சைகள் கருவிகள் வாங்குவதற்காக ரூ.21 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இப்படி எல்லாவகையான நோய்களை யும் குணப்படுத்தி மக்களுக்கு நல்வாழ்வு நல்கி வருகிறது அரசு. அது மட்டுமல்லாமல் வருங்காலத் தலைவர்களான குழந்தைச் செல் வங்களின் உடல் நலனையும், மன நலனையும் அறிவு நலனையும் காக்க மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் புரட்சிகர சத்துணவுத் திட்டம் 83 லட்சம் குழந்தைகளுக்கும், வறுமையில் வாடும் முதியோர், முன்னாள் இராணுவத் தினர் ஆகிய 3 இலட்சம் பேருக்கும் வாழ்வளித் துக் காக்கிறது. இது பசிபோக்கும் திட்டம் மட்டுமல்ல; உடல் நலத்தையும், அறிவு நலத் தையும், பேணிக்காத்து நீண்ட ஆயுளையும் தருகிற திட்டமாகும்.

இப்படிப் பல்வேறு வகையான மருத்துவத் திட்டங்களாலும், உணவுத் திட்டத்தாலும் நோய்களை நீக்கியும், தடுத்தும், மக்களைக் காத்தும் வருகிறது அரசு.

இதனால் இன்று நம் மக்களின் நோய் குறைந்து நலமாக வாழ்கிறார்கள். அவர்களின் ஆயுட்காலம் நீடித்துள்ளது. மரண விகிதம் குறைந்துள்ளது. இதனால் நாம் முன்பு செய் ததைவிட அதிகமாகத் திட்டமிட்டு பொருள் வளத்தைப் பெருக்குவதுடன் நில்லாது மக்கள் தொகை வளர்ச்சி குறைக்கவும் திட்டமிட வேண்டியதிருக்கிறது.

மக்கள்தொகை வளர்ச்சியைக் குறைப்ப தற்காக நாம் குடும்ப நலத்திட்டத்தை மிகவும் தீவிரமாக நிறைவேற்றி வருகிறோம்.

நம்முடைய மக்கள்தொகை வளர்ச்சி விகிதம் 1961-71ல் 22.3 சதவிகிதமாக இருந்தது. 1971-81ல் 17.5 சதவிகிதமாகக் குறைந்திருக்கிறது.

மக்கள் தொகை ஆயிரத்துக்கு 1977ல் 29.3 ஆக இருந்தது. இப்போது 25.5 ஆகக் குறைந்திருக்கிறது. அதே நேரத்தில் இது அகில இந்திய அளவில் 33.9 ஆகவே இருக்கிறது.

தமிழகத்தின் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுச் சாதனைக்கு முதல் பரிசு தந்து மத்திய அரசு பாராட்டியுள்ளது. பரிசுத்தொகையாக ரூ. 2.5 கோடி கிடைத்துள்ளது.

குடும்ப நலப் பணியை விரைவுபடுத்தவும், மக்களிடையே பிரச்சாரம் செய்து அவர்களிடையே ஆர்வத்தையும் நம்பிக்கையையும் ஊட்டி அவர்களின் ஒத்துழைப்பைப் பெறவும் மேலும் தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

குடும்ப நலக் கொள்கையைச் சிறப்பாக எடுத்துரைக்கும் திரைப் படங்களுக்கு மூன்று பரிசுகளை அரசு வழங்குகிறது. முதல் பரிசு ரூ.1 இலட்சம். இரண்டாவது பரிசு ரூ.50,000. மூன்றாவது பரிசு ரூ. 25,000 எனப் பரிசுகள் வழங்கி திரையுலகையும் ஊக்கப்படுத்தி




குடும்ப நலம் காக்க அரசு முனைந்துள்ளது. அதேபோல, குடும்ப நலப் பிரச்சார நாடகங்களுக்கும் முதல் பரிசாக ரூ. 15,000, இரண்டாவது பரிசாக ரூ. 10,000 வழங்கி நாடகத் துறையையும் குடும்பநலப் பிரச்சாரத்தில் ஈடுபடுத்துகிறது, தமிழக அரசு.

குடும்ப நலத் திட்டத்தைக் கடைப்பிடித்து அறுவைச் சிகிச்சை செய்வோருக்குப் பணம் வழங்குவதுடன், அறுவைக்குப்பிறகு மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறுவோருக்கு நல்ல வசதி செய்துகொடுக்கப்பட்டு நல்ல உணவு வழங்குவதுடன் பொழுதுபோக்க படக் காட்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மத்திய அரசு ஒரு குடும்பத்துக்கு ஒரு வாரிசு என்ற நிலையை கி.பி. 2000ல் அடைய வேண்டுமெனத் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு அதே இலக்கினை 1990லேயே எட்டிவிட வேண்டுமெனத் திட்டமிட்டுச் செயற்படுகிறது.

அரசு எவ்வளவுதான் திட்டமிட்டுத் தீவிரமாகச் செயற்பட்டாலும் மக்களின் ஒத்துழைப்பு இருந்தால்தான் அது முறையாகவும் விரைவாகவும் நிறைவேறும். எனவே, மக்களிடையே விழிப்பும் ஆர்வமும் ஏற்பட அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

மக்கள் மத்தியில் குடும்பநலத் திட்டம் பற்றிச் சில தவறான கருத்துக்கள் நிலவுகின்றன. அவற்றை அகற்றவேண்டும். அவர்களுக்குத் தெளிவூட்ட வேண்டும்.

பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ வேண்டும் என்ற கருத்தை நம் மக்கள் தவறாகப் புரிந்து கொண்டு குழந்தைகளின் எண்ணிக்கையைப் பெருக்கி விடுகிறார்கள். மேலும் அதிகக் குழந்தைகள் இருந்தால், உழைக்கும் கரங்கள் அதிகமாகும். அதனால் வருமானம் பெருகும் என்று தவறாக நினைக்கிறார்கள். இப்போது இருக்கிற நிலையில் அத்தனைப் பேருக்கும் வேலை கிடைப்பதில்லை. அத்தனைப் பேரையும் படிக்கவைப்பதும் சிரமம். எனவே படிப்பும் இல்லாமல், வேலையும் இல்லாமல் ஐந்தாறு குழந்தைகள் இருப்பதை விட நல்ல படிப்பும், வேலையும் பெற்று வளமாக வாழும் நிலையில் ஒரு குழந்தை இருந்தால்கூடப் போதுமே. ஒரு குழந்தை என்பதால் வளர்ச்சிக்குச் செலவுமில்லை. சிரமமுமில்லை. எளிதில் வேலை கிடைக்கிறது. வருவாயும் பெருகுகிறது. இதனால் வீடு சிறக்கும், நாடு சிறக்கும்.

உணவு உற்பத்தி ஆண்டுக்கு ஆண்டு பெருகுகிறது. என்றாலும் உணவுப் பஞ்சமும் ஏற்பட இடமேற்பட்டுவிடுகிறது. எல்லோருக்கும் போதிய உணவு கிடைக்காமல் போய்விடுகிறது. இதற்குக் காரணம் உணவுப் பெருக்கத்துடன் உண்ணுவோர் பெருக்கமும் ஏறிவிடுகிறது. இதை நாம் எண்ணவேண்டும்.

பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள் எல்லாம் பெருகியுள்ளன. பேருந்துகள் பெருகுகின்றன. பெருவழிகள் விரிவடைகின்றன என்றாலும் எங்கும் நெருக்கடியும் நெரிசலுமே நிலவுகின்றன.

உணவுத் தட்டுப்பாடு, உறைவிட நெரிசல் ஆகியவற்றுக்கு ஆட்சியின் கோளாறுதான் காரணம் என்று மக்கள் நினைக்கிறார்கள். இல்லை ஆள் பெருக்கமே காரணம் என்பதை மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

மேலும் மக்கள் தொகைப் பெருக்கம் நாட்டுக்கு வந்த பிரச்சினை, நமக்கென்ன என்று மக்கள் கருதுகிறார்கள். இது நாட்டின் பிரச்சினை அல்ல. வீட்டுப் பிரச்சினை. ஒவ்வொரு வீட்டுக்கும் உரிய சிக்கல் என்பதை மக்கள் உணர வேண்டும். நாம் உணர்த்த வேண்டும். எழுத்தாளர்களும், பேச்சாளர்களும், ஏடுகளும் இதில் ஈடுபடவேண்டும். அந்த வகையில் ஒவ்வொரு இதழிலும் குடும்ப நலம் பற்றி கட்டுரையும் கருத்துரையும் வெளியிட்டு வரும் 'தமிழரசு' இதழ் பாராட்டுக்குரியது.

அதன் வண்ணப் பொங்கல் மலர் சிறக்கவும், அதன் தொண்டு வளரவும் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். ●






அகிலலோக ஏகநாயகனாம் இறைவன் படைத்த பிறப்பில் மனிதப் பிறப்பு புனிதப் பிறப்பு ஆகும். மனிதன் என்ற சொல்லுக்கு நினைப்பவன் என்பது பொருள். நான் யார்? இந்த உடம்பு நானா? உடம்பு தானே வந்ததா? ஒருவன் தந்து வந்ததா? உடம்பைத் தந்தவன் யார்? அவன் எங்கிருக்கிறான்? அவன் எத்தன்மையானவன்? அவனைக் காணும் வழி யாது? அவனைக் கண்டவர் யார்? என்று சிந்திக்கின்றவனே உண்மையான மனிதன்.

அருணகிரிநாதர் கந்தர் அலங்காரத்திலே 'சிந்திக்கிலேன்' என்று கூறுகின்றார். பொன்னையும் பொருளையும் மனைவியையும் மக்களையும் சிந்திக்கின்றார்கள். சிந்திக்க வேண்டியதைச் சிந்திக்க வேண்டும்.

சிந்தனை செய்து, சிவத்தை வந்தனை செய்து தவம் புரிய வேண்டும். சிவத்தையடைய தவத்தை மேற்கொள்ளுதல் அவசியம்.

தவம் புரிய வேண்டும் என்ற உடனே யாரும் பயப்படக்கூடாது. 'தவமா? தவம் செய்ய நம்மால் ஆகுமா? தவம் கடினமானதன்றோ' என்று அஞ்ச வேண்டா. யாரும் தவஞ் செய்யலாம். தவஞ் செய்யக் காட்டுக்குப் போக வேண்டா; பட்டினிக் கிடக்க வேண்டா. தலைகீழாக நிற்க வேண்டா!

வீட்டிலே இருந்து கொண்டே மனைவி மக்களுடன் வாழ்ந்து கொண்டே தவஞ் செய்யலாம். முற்றுந் துறந்த முனிவராகிய பட்டினத்தடிகள் பகர்கின்றார்:

காடே திரிந்தென்ன? காற்றே
புசித்தென்ன? கந்தைசுற்றி
ஓடே எடுத்தென்ன? உள்ளன்
பிலாதவர் ஓங்கு விண்ணோர்
நாடே இடைமருதீசர்க்கு
மெய்யன்பர் நாரியர் பால்
வீடே யிருப்பினும் மெய்ஞ்ஞான
வீட்டின்பம் மேவுவரே

சித்தத்தைச் சிவன்பால் வைப்பதுதான் தவம். வெறும் வறட்டு வைராக்கியமாகத் தழையைத் தின்பதோ குகைக்குள் இருப்பதோ. தவம் ஆகாது. ஆடு பிறந்த நாள் முதல் தழையே தின்கின்றது, பெருச்சாளி வளைக்குள்ளே இருக்கின்றது. மூட்டைப் பூச்சி பட்டினியாக இருக்கின்றது. இவைகள் மோட்சத்தை அடைவதில்லையே?

இறைவனுடைய திருவடிகளை வாயார வாழ்த்த வேண்டும். தலையார வணங்க வேண்டும். இதுதான் தவம். இத்தவத்தால் பேரானந்தம் உண்டாகும்.

பெருக லாந்தவம் பேதைமை
தீரலாம்
திருக லாகிய சிந்தை திருத்தலாம்
பருக லாம்பர மாயதோர் ஆனந்தம்
மருக லானடி வாழ்த்தி வணங்கவே

—அப்பர்.

ஒருவருக்கு உத்தமமான மனைவி, தங்கமான புத்திரர்கள், நோயற்ற வாழ்வு, திடமான உடம்பு முதலியன வாய்ப்பதற்குத் தவமே காரணமாகும்.

''மேலைத்
தவத்தளவேயாகுமாந்
தான்பெற்ற செல்வம்''

என்பது ஔவையாரின் திருவாக்கு. ஒருவனுக்கு ஏராளமான நிலபுலன்கள், நம்பிக்கையான ஏவலர்கள், உயர்ந்த மாளிகை, சிறந்த படுக்கைகள், விலையுயர்ந்த ஆசனங்கள், நோயற்ற யாக்கை முதலியன அமைந்திருக்கின்றன, ஏன்? அவன் முன்செய்த தவத்தால் இத்தனையும் கிடைத்திருக்கின்றன.

அநுமார் இலங்கைக்குச் சென்றார். அங்கே வீடுகள்தோறும் கற்பக மரங்கள் நிற்கின்றன. புங்க மரமும், புளிய மரமும், ஆலமரமும், அரச மரமும் இல்லையாம். அங்கே சுண்ணாம்பு வீடுகள், செங்கல் வீடுகள் இல்லையாம். இரத்தினக் கற்களைத் தங்கத்தில் பதித்தபொன் மாளிகைகள் அழகு மயமாகக் காட்சியளிக்கின்றன. ஊர்வசி, திலோத்தமை, மேனகை, ரம்பை முதலிய தேவலோகத்து அழகிய மாதர்கள் அரக்கியருக்குப் பணி புரிகின்றார்கள். இந்திரன் முதலிய இமையவர்கள் அரக்கருடைய இல்லத்தில் குற்றேவல் புரிகின்றார்கள். இதற்கு என்ன காரணம்? அரக்கர்கள் தவமே காரணம் என்று கம்பநாடர் கூறுகின்றார்.

''மரம் அடங்கலும் கற்பகம்;
மனைஎலாம் கனகம்:
அரமடந்தையர் சிலதியர்
அரக்கியர்க்கு அமரர்
உரம் மடங்கி வந்து உழையராய்
உழல்பவர்; ஒருவர்
தரம் அடங்குவது அன்று இது.
தவம் செய்த தவமால்''

''ஈட்டுவார் தவம லால்மற்
றீட்டுவ தியைவ தின்மை
காட்டினார் விதியார் அஃது
காண்கிற்பார் காண்மி னம்மா
பூட்டுவார் முலைபொ றாத
பொய்யிடை நையப் பூநீர்
ஆட்டுவார் அமரர் மாதர்
ஆடுவார் அரக்கர் மாதர்
—கம்பநாடர்

இதேபோல் ஒரு பெண்ணுக்கு அன்பும் பண்பும் நிறைந்த கணவன் வாய்ப்பதும், அடக்கமும் ஒழுக்கமும் அமைந்த புத்திரர் வாய்ப்பதும் முன்செய்த தவமே காரணம் என்று உணர்க.



நோயாளிகளுக்கு மருந்து வாங்கித் தந்தவர்கள், இலவச மருத்துவச்சாலை கட்டினவர்கள் மறுபிறப்பில் நோயின்றிச் சுக போகமாக வாழ்வார்கள். பள்ளிக் கூடம் கட்டி ஏழை மாணவர்களைப் படிக்க வைத்தவர்கள், மாணவர்க்கு உண்டியும் புத்தகமும் வாங்கித் தந்தவர்கள் மறு பிறப்பில் பேரறிஞர்களாகத் திகழ்வார்கள்.

ஏழைகட்கு நல்லுணவு தந்தவர்கள் மறுபிறப்பில் பசி என்றால் இன்னது என்று அறியாத சுகிகளாக இன்புற்று வாழ்வார்கள்.

தவம் தனிப்பெருஞ் சிறப்பை நல்கும். தவம் இன்பத்தைத் தரும், உலகம் புகழும் உயர்வைக் கொடுக்கும்.

தவம் என்ன செய்யும்: என்பதனை அடியில் வரும் வரலாற்றால் அறிக.

**சுபத்திரை**

பத்திரம் என்ற சொல்லுக்கு உயர்வு என்று பொருள், வீர பத்திரன்; ராமபத்திரன், பால பத்திரன்; பத்தராசலம் என்ற பேர்களை உன்னுக.

சு-மேலான
பத்திரை-உயர்ந்தவள்

மிகவும் மேன்மை படைத்தவள் சுபத்திரை, உயர்ந்த யது குலத்திலே வசுதேவருக்கும் தேவகிக்கும் 9-வது மகவாகப் பிறந்தவள் சுபத்திரை. கடைசிப் பெண். குடும்பத்தில் கடைக் குட்டிகளுக்குப் பெருமையதிகம்.

தாய் தந்தையரின் தவத்தின் மிகுதி கடைக்குட்டிகளுக்கு உண்டாகும். முருகவேள் கடைசி மைந்தர்.

'செனித்த புத்திரர்களில்
சிறியோனே' —திருப்புகழ்

இராமலிங்கர், காந்தியடிகள், ரவீந்திரநாத் தாகூர், சகாதேவன், சநத் குமாரர் இவர்கள் கடைக் குட்டிகள்.

சுபத்திரைக்கு எட்டு அண்ணன்மார்கள். எண்மரும் தங்கைக்குச் சீர்வரிசை தருவார்கள். இவள் பிறந்த குலமும் புகழ் பெற்றது. வாய்த்த கணவன் அர்ச்சுனன்.

அர்ச்சுனன் சமானமில்லாத வீரன்; சவ்யசாசி; இரண்டு கரங்களாலும் பாணம் விடுபவன், விஜயன் உலகந்தோன்றிய நாள் தொட்டு இன்று வரை மாநுடவுலகில் மூவருந் தேவருங்காணாத சிவபெருமானிடம் பாசுபதாஸ்திரம் பெற்றவர் ஒருவரும் இலர். அர்ச்சுனன் ஒருவன் மட்டுமே பாசுபதாஸ்திரம் பெற்றவன்.

'அடுத்தானை உரித்தானை
அர்ச்சுனர்க்குப்
பாசுபதம் கொடுத்தானை'

என்று தமிழ்மறை புகழ்கின்றது.

அர்ச்சுனன் அரிய பெரிய தவஞ் செய்தவன். இறைவனே வேடவடிவுடன் அர்ச்சுனுடன் போர் புரிந்தார். பரமேசுவரன் தலையில் வில்லாலடித்தவன். இந்திரவுலகம் சென்று தேவேந்திரப் பட்டாபிஷேகம் பெற்றவன் நிவாதகவசத்தர் என்ற முக்கோடியவுணர்களை ஒரு விநாடியில் பாசுபத அத்திரத்தால் மாய்த்தவன். அறுபத்தினாயிரம் காலகேயரைக் கொன்றவன். நான்கு திக்கும் அவனுடைய புகழ்த்தேன் குதிக்கும். எட்டுத் திசையும் அவனுடைய, கீர்த்தி இசையும்.

"அர்ச்சுனா!" என்றால் இடி விழாது. பரமவேதாந்தமாகிய கீதை அவனுக்காகவே வெளிப்பட்டது. மன்மதனும் நாணும் பேரழகு படைத்தவன். 32 சாமுத்திரிகா இலக்கணங்களையுடையவன்.

இத்தகைய தனஞ்சயனைச் சுபத்திரை கணவனாகப் பெற்றாள். அன்றி அர்ச்சுனனைவிட ஆயிரம் மடங்கு உயர்ந்த வீர அபிமன்யுவை சுபத்திரை மகனாகப் பெற்றாள்.

பூபாரந் தீர்க்க வந்த கோபால கிருஷ்ணனைத் தலைமயனாகப் பெற்றாள். எனவே, சுபத்திரை பிறந்த குலமும் உயர்ந்தது. உத்தமமான தாய் தந்தையர்; தெய்வமே அண்ணன்; கணவன் விஜயன்; மகன் அபிமன்யு. இத்தனை நலன்களும் ஒருங்கே பெற்றாள் சுபத்திரை. இதற்குக் காரணம் அவள் முற்பிறப்பில் செய்த தவமேயாகும்.

சாலவ தேயத்தில் விலைமகளிர் குலத்தில் பிறந்தவள் பதுமை. இவள் உத்தம குணம் படைத்தவள். நல்ல அழகும் தோற்றமும் ஏற்றமும் உடையவள்.

இவள் பருவம் எய்திய பின், தான் பிறந்த குலத்தை வெறுத்தால் கண்டவனைக் கணவனாகக் கொள்ளும் தன்மையை மறுத்தாள்.

தன் தாயை நோக்கி 'அம்மா! நான் விலைமகளாக வாழமாட்டேன்; குலமகளாக வாழ்வேன்; விலைமகளாக வாழ்ந்து பட்டாடை யுடுப்பதை நான் விரும்பவில்லை. குலமகளாக வாழ்ந்து சிற்றாடை யுடுப்பேன். உடம்பை விற்றுப்பஞ்சசயனத்தில் படுப்பதை - நான் வெறுக்கின்றேன். குலமகளாக வாழ்ந்து கிழிந்த பாயில் படுப்பேன். என்னை ஏழைக்குத் திருமணம் செய்து கொடு. ஏனென்றால், தாயே! என்பால் வரும் ஆடவனை நான் மருவி இன்புறுகின்றபோது, அவனுடைய மனைவி கணவனைப் பிரிந்து எத்துணை வேதனைப் படுவாள்? நன்கு சிந்திப்பாயாக. என் போன்ற இன்னொரு பெண் துன்பத்தில் துடிக்க நான் ஒருவனுடன் இன்புற்று வாழலாமா? ஒருத்தி துயரமடைய நான் சுகம் பெற விரும்பமாட்டேன். ஆதலால் நான் ஒழுக்கமுடன் வாழ விரும்புகின்றேன். என்னை ஒருவனுக்குத் திருமணம் செய்து கொடு" என்று தாயிடம் கூறினாள்.

தாய் "மகளே! என்னடீ நீ வேதாந்தம் பேசுகின்றனை. நமது குலாசாரத்தை வெறுக்கின்றனை, தனவந்தர்களைத் தமது கடைக்கண் பார்வையால் மயக்கி வசப் படுத்திப் பொருள் பறித்துப் பொன்னும் மணியும் பூண்டு, பட்டு உடுத்துப் பஞ்சணையில் படுத்து வாழ்வதுதானே நமது குலத்தொழில். அக்கம் பக்கம் உள்ள நமது மரபினர்களைப் பார். நீயும் அவர்களைப் போல மேனியை மினுக்கி நடுவீதியில் உடை சரிய நின்று, கோடீசுவரனுடைய குமாரர்களை உன் கடைக்கண் பார்வையால் ஈர்த்து சுகபோகமாக வாழ். அதுதான் சுகம்" என்றாள்.

இவ்வாறு தாயும் மகளும் வாது செய்கின்றபோது, வீதியில் நள ராஜகுமாரி நளாயினி தன்கணவரான மௌத்கல்ய முனிவரைக் கூடையில் சுமந்து சென்றுகொண்டிருந்தாள்.

அந்த அரிய காட்சியைப் பதுமை கண்டாள். "அம்மா! இங்கே பார். அப்பெண்ணரசி தொழுநோயுடைய-கிழப்பருவம் உடைய கணவனைத் தெய்வமாக எண்ணித் தன் தலையிலே சுமந்து கொண்டு போகின்றாளே இவளல்லவா பெண்! பெண் தெய்வம்" என்று கூறி, ஓடிச் சென்று நளாயினியின் காலில் ஒட்டிய தூசியை எடுத்து நெற்றியில் இட்டுக் கொண்டாள்.

அவளுடைய பண்பை மௌத்கல்ய முனிவர் கண்டார்; அதிசயம் கொண்டார்.

"நளாயினி! யாத்திரை செய்து உடல் களைத்து விட்டது. இந்த நகருக்கு அருகே ஓர் ஆச்சிரமம் அமைப்பாய். சிறிது இளைப்பாற வேண்டும்' என்றார்.



சாலவநகருக்கு அருகில் நளாயினி அமைத்த ஆச்சிரமத்தில் தங்கினார் மௌத்கல்ய முனிவர்.

'நளாயினி! இன்று மாலை நாம் வேசியர் வீதி வழியே வருகின்றபோது வேசியர் உன்னையும் என்னையும் பழித்தனர். ஓர் இளம்பெண் உன்னைப் பணிந்து

உன் பாதத் துகளை நெற்றியில் அணிந்து மகிழ்ந்தாளே அவளை என் உள்ளம் விரும்புகின்றது'' என்றார்.

நளாயினி, 'சுவாமி'! தங்கள் திருவுளம் அதுவாயின் அதனை நான் முடித்துத் தருவேன்'' என்று கூறினாள்.

பதுமையின் வீட்டிற்குமுன்னே பஞ்சவர்ணக் கோலம் இட்டு அழகு செய்தாள். பதுமை இவளைப் பணிந்து'' அன்னையே! நீ திருமகளா? திருமகளின் மருமகளா? நான் உன் திருவடித் துகளுக்கும் இணையாக மாட்டேன். நீ என் வீட்டிற்கு முன் கோலம் இட்டுப் பணிபுரிய லாகுமா?'' என்று கேட்டாள்.

நளாயினி, 'சகோதரி! நான் ஓர் அரசகுமாரி. என் கணவனார் வயோதிகர். தொழு நோயினர், அவர் உன்னை விரும்புகின்றார். நீ அவரைச் சிறிது நேரம் விரும்பி அவரை மகிழ வைக்க வேணும்' என்றாள்.

பதுமை, 'அம்மா! மாணிக்க மணி போன்ற உன்னை மனைவியாக உடைய அவர், மண்ணாங்கட்டி போன்ற என்னை விரும்புகின்றாரா? இது என்ன அதிசயம்?'

'சகோதரீ! சில ஆண்கள் தன்மை இவ்வாறு தான்; பொற்சிலை போன்ற மனைவியரை விடுத்துக் கற்சிலை போன்ற மாதரை அடுத்துப் போவார்கள், நீ என் பொருட்டு என் கணவனாரை ஏற்றுக்கொள்' என்றாள்.

பதுமை, ''தாயே ஒருத்திக்கு ஒருவன்தானே? நான் அவரைக் கணவராக ஏற்றபின் வேறு ஒருவரை கணவராகச் சிந்திக்க மாட்டேன். நான் ஒழுக்கத்தை உயிரினும் மேலாகக் கொண்டிருக்கின்றேன். இன்றிரவு அவரை அழைத்துவா'' என்றாள்.

நளாயினியின் தவத்தின் மகிமையால் பொழுது விடியாமல் செய்த வரலாறும், மும்மூர்த்திகள் எழுந்தருளி நளாயினியிடம் 'உன் கணவருக்குச் சாகாவரம் தருகிறோம். நீ பொழுது விடியுமாறு செய்' என்று கேட்டுக் கொண்டதன் பின், பொழுது விடிய தன் சாபத்தை தவத்தின் மகிமையால் செய்தது உலகு அறிந்த உண்மை.

நளாயினி மௌத்கல்யரைக் கூடையில் சுமந்து பதுமையின் வீட்டில் விடுத்தாள். மௌத்கல்யர் நளாயினியை வெளியே போகுமாறு செய்து, தவ வலிமையால் அழகிய வடிவத்தை எடுத்துக் கொண்டார்.



பதுமை அவரைக் கண்டு அதிசயம் அடைந்து தழுவ வந்தாள். மௌத்கல்யர், 'மகளே! என்னைத் தீண்டாதே. என்னைத் தீண்டினால் தீயில் வீழ்ந்த பஞ்சுபோல் எரிந்து போவாய் அம்மா! நான் 21 பிறவிகளாக மாதரைத் தீண்டாதவன். வீதியில் நிற்கும் அவள் பெண் தெய்வம். அவளுடைய கற்பின் திறத்தைச்சோதிக்கும் பொருட்டு இங்கே வந்தேன். நீ என் புதல்வி. நான் உனக்குத் தந்தை' என்றார்..

பதுமை, 'ஐயனே! நான் தேவரீரை மனதால் வரித்து விட்டேன். இப்பிறப்பில் இனி யாரையும் கணவனாகக் கொள்ள மாட்டேன். என்ன பாவம் செய்தோ நான் வேசியாகப் பிறந்தேன். எனக்கு மறுபிறப்பில் உயர் குலத்தில் தோன்றும் பாக்கியமும், உயர்ந்த கணவனும் வீரகுமாரனும் அமைய அருள் செய்யும்'' என்றாள்.

மௌத்கல்யர் அவளுக்கு ஐந்தெழுத்தை உபதேசித்து, 'அம்மா நீ மறுபிறப்பில் யது குலத்தில் வசுதேவருக்கும் தேவகிக்கும் கடைசிப் புதல்வியாகப் பிறப்பாயாக. கண்ணபிரான் உனக்கு அண்ணனாக வருவார். உலகம் புகழ் விஜயனை மணந்து வீர அபிமன்யுவைப் பெற்றுப் பெரு வாழ்வு வாழ்வாயாக'' என்று ஆசி கூறி வரம் வழங்கினார்.

பதுமை தவநெறியில் நின்று ஐந்தெழுத்தை ஓதித் தன் வாழ்நாளைப் பூர்த்தி செய்தாள். அத்தவத்தினால் பதுமை, சுபத்திரையாகப் பிறந்து நலம் பெற்றாள்.

அதனால் நம் வாழ்வு சிறக்கத் தவம் புரிய வேண்டும்.

தவம் என்றால் காட்டிற்குப் போயோ அல்லது இமயமலைச் சாரல் ரிஷிகேசம், காசி, கன்னியாகுமரி முதலிய புனித இடங்களுக்குப் போயோ, காவிஉடுத்தி உருத்திராட்சம்தரித்துமொட்டையடித்தோ, சடாமுடி தரித்தோ தவம் செய்ய வேண்டும் என அஞ்ச வேண்டியதில்லை. நீங்கள் உங்கள் வீட்டிலோ, கடையிலோ, ஆபீசிலோ, எந்தத் தொழில் செய்தாலும் குடும்பத்தில் இருந்து கொண்டே தவம் செய்யலாம்.

தவம் என்பது உங்கள் இஷ்ட தெய்வத்தின் திரு நாமமாகிய மூலமந்திரத்தை சர்வசதா காலமும் ஜெபம் செய்து கொண்டிருப்பதுதான். ஜெபம் உரு ஏற ஏற ஜெப சித்தியால் நீங்கள் உங்களை அறியாமல் உங்கள் நாக்கு மூலமந்திரத்தை நாளடைவில் சொல்லிப் பழகி விடும்.

''நற்றவா உன்னை நான்
மறக்கினும்

சொல்லுநா நமசிவாயவே'

என்கிறார் சுந்தரமூர்த்தி நாயனார். இதனையே அருணை வள்ளல்,

'இரவினிடைத் துயிலுகினும்
யாரோடு பேசுகினும்
இளமையுமு னழகுபுனை
ஈராறு தோன் நிரையும்
இருபதமும் அறுமுகமும்
யானோத ஞானமதை
அருள்வாயே''—

என்கின்றார்.

(278) கரியகுழல்- சோழீச்சுரம் திருப்புகழ்.

தவம்: ஜெபம் செய்ய வயது கட்டுப்பாடு இல்லை-எந்த வயதிலும் தவம் செய்யலாம். மனிதர்களாகப் பிறந்த நாம் தவம் செய்து இறைவனுடைய திருவடியாகிய சாயுஜ்யத்தை அடைய வேண்டும் என்ற குறிக்கோளுடன் வாழ வேண்டும். நீங்கள் உங்களால் இயன்ற உதவி பிறருக்குத் திரிகரணங்களால் வாக்கால், காயத்தால், மனத்தால் செய்து உங்களுடைய ஊதியத்தில் ஒரு பகுதியைத் தர்மம் செய்து வரவேண்டும். இதனையே தவமூதாட்டியாகிய ஔவையார்,

''தானமும் தவமும் தான்
செய்வாராயின்
வானவர் நாடு வழி திறந்திடுமே'

என்கிறார்.

இப்படி நித்திய வாழ்க்கையில் நீங்கள் இடைவிடாது ஒன்றை எண்ணும்போதும், உண்ணும் போதும், இறை பேசும்போதும் எக்கர்மம் செய்யும்போதும் சிந்தனை மறவாமல் ஜெபம் செய்து கொண்டிருப்பதுதான் தவம். தவம் செய்து உய்வு பெற வேண்டுகின்றேன்.

''இந்த பம்பாய்க்குவந்தும்கூட உங்கம்மா மாறமாட்டேன்னு பிடிவாதம் பிடிக்கிறாங்க.''—தங்கமணி கோபத்துடன் முகத்தைக் குலுக்கிவிட்டு அப்பால் நகர்ந்தாள்.

பம்பாய் நகர வாழ்வில், இந்தக் காலை நேரம் புகார்களுக்குக் காது கொடுத்துக் கேட்க நேரம் ஏது? கதிரேசன் மனைவியை ஒரு முறை பார்த்துவிட்டு, ''அம்மா மாக வளர்ந்த பெண்தான். அவளது தகப்பனார், ஒரே மகள் என்று அதிக செல்லம் கொடுத்து வளர்த்து விட்டதாக மாமியார் அன்னபூரணியம்மாள்கருதினாள்.

சென்னை வாழ்க்கையில், கல்லூரிப்படிப்பும், சிரிப்புமாக வளர்ந்துவிட்டவள் தங்கமணி. அரசு வங்கியில் உயர் அதிகாரியாகப் பணியாற்றிய கதிரேசனை னாள். ''முதல்ல நீங்க ரெண்டு பேரும், குளியலறைக்குப்போய், குளிச்சுட்டு வாங்க.''

''எதுக்கம்மா'' மகன் திகைப்புடன் வினவினான்.

''மூணாவது வீட்டு, முனிசாமி சம்சாரம் தவறிட்டா. கொஞ்ச நேரத்துக்கு முந்திதான் எல்லாம் எடுத்துக்கிட்டுப் போனாங்க.''

குணம் தெரிஞ்சுதுதானே. அவங்க கிராமத்தில் இருந்து வந்தவங்க. கொஞ்சம் முன்னே பின்னே இருப்பாங்க.'' சமாதானமாகக் கூறி வைத்தான். அதற்கு மேல் பேச்சை வளர்த்தினால், நாரிமன் பாயிண்ட்ஸ்ஸில் இருக்கும் அலுவலகத்தை அடைய, பிற்பகல் ஆகிவிடும்.

அந்தேரி புறநகர்ப் பகுதி, அவர்களது அலுவலகக் குடியிருப்புப் பகுதி. மூன்றாவது மாடியிலிருந்து அவன் இறங்கி, வேகமாக, பஸ்ஸைப் பிடித்து மின் ரயில் நிலையத்தை அடைந்தால், எட்டு இருபது வேக ரயிலைப் பிடிக்கலாம். பிறகு, திண்டாட்டம்தான்!

''நீங்க பாட்டுக்கு ஆபீஸ், ஆபீஸ்னு காலையில் போனா, ராத்திரி எட்டு மணிக்குக் களைச்சிப் போயி வரீங்க. எதுவுமே பேச முடியலே''. அலுப்புடன் தங்கமணி, கைக்குழந்தை செல்வியைத் தூக்கி, படுக்கையறைக் கட்டிலில் கிடத்தப் போனாள்.

''தம்பீ! கையில டிபன் எடுத்துக்கிட்டியா? நேத்துவச்ச பளசு சாப்பிடாதே. உடம்புக்கு ஆவாது.'' சமையலறையிலிருந்து அன்னபூரணியம்மாள் உரக்கக் குரல் கொடுத்தாள்.

''இல்லேம்மா. நீங்க செய்து வச்ச ரொட்டியை எடுத்துக்கிட்டேன். வரேன்.'' என்றபடி வே[illegible]மாகப் படி இறங்கி ஓடினான் [illegible]ரேசன்.

தங்கமணிக்கு எரிச்சலாக வந்தது. அவரும் வசதியும், சுதந்திர அவளுக்குப் பிடித்திருந்தது. கண்ணுக்கு இனியவனாக, அவள் கருத்துக்கு ஒத்துப்போகும் கணவனாக வாய்த்திருந்தான். ஆனால், அவன் கொஞ்சம் அம்மா பிள்ளை. நான்கு பெண்களுக்குப் பிறகு, அருமையாக வளர்ந்த ஒரே மகன் என்ற அளவில், அன்னபூரணியம்மாள் அவனிடம் அதிகப் பாசம் வைத்திருந்தாள்.

திருமணமான புதிதில், தங்கமணிக்கு மாமியாரைப் பற்றி அதிகம் தெரிந்திருக்கவில்லை. கணவனுக்கு அம்மாவிடம் அதிகப் பாசம் என்பதை மட்டும் உணர்ந்து வைத்திருந்தாள். ஆனால், அதே சமயம் ஒருவித பயம் கலந்த பக்தியும் உண்டு என்பதை அவள் அறியவில்லை.

ஒருமுறை, இருவரும், திரைப்படம் ஒன்றிற்குச் சென்றுவிட்டு வீடு திரும்பினார்கள். ''அம்மா கொஞ்சம் சுத்தம் பார்க்கறது உண்டு. குளியாமல் சமைக்கிறது இதையெல்லாம் அவங்களுக்குப் பிடிக்காது'' என்று தாயாரைப் பற்றிக்கூறியிருந்தான் கதிரேசன்.

அன்னபூரணியம்மாள், கோவில் குளம், என்று போகும் பெண்மணி. கிருத்திகை விரதம், கௌரி விரதம் என்று பட்டினி கிடக்கும் பிற[illegible]அப்படிப் பழைய [illegible]ர்கள் என்று [illegible] விட்டுக் [illegible]த்து விட்[illegible].

தி[illegible]ப்படத்திலிருந்து வீடு திரு[illegible]ய மகனையும் மரு[illegible]களையும் உள்ளே வரவி[illegible]தவளாய் அன்னபூரணியம்மாள் [illegible]சொன்

''அதுக்கு நாங்க எதுக்கு குளிக்கணும். சினிமாதானே பாத்திட்டு வரோம்.''

''அந்த வழியாத்தானே நடந்து வந்தீங்க நம்ம வீட்டுக்கு, எனக்கு அந்த சாவு தீட்டெல்லாம் பிடிக்காது'' அம்மாள் கறாராகக் கூறிவிட்டாள். மாமியாரிடம் ஏற்பட்ட கோபத்தை வெளிக்காட்ட முடியாதவளாய் தங்கமணி எச்சிலை விழுங்கிக் கொண்டாள்.

''இத பாரு. நேத்து பழையது. அந்தச் சோறை அடுப்பங்கரையில வைக்காதே. வச்சே, நான் சாப்பிடமாட்டேன்.''

''ஆமா, இதென்ன பழைய துணி. தோய்க்காம சுருட்டி வச்சிருக்கே. முதல்ல எடு''.

''அது யாரு கழிவறைக் கழுவற ஆளா? பின்பக்கமா, கொல்லைப்பக்கம் போய் கழுவச் சொல்லு, நீ தண்ணி ஊத்திக் குடுக்காதே, வேலை செய்கிற பொன்னம்மாவைக் கூப்பிடு'' அதட்டலும், அதிகாரமும் தூள் பறக்கும்.

ஒருநாள், கழிவறையைச் சுத்தப்படுத்தும் ரோஸி என்ற பெண்மணிக்கு உடம்புக்கு முடியாமல் போய்விட்டது. ரொம்பத் தலை நோவு தாயி,'' முனகியபடி நின்றவளை வாயிற்பக்கம் பார்த்த தங்கமணியின் இதயத்தில் பச்சாதாபம் பெருக்கெடுத்தது.

உள்ளே சென்று ஒரு தம்ளர் தண்ணீரும், தலைவலி மாத்திரையும் எடுத்து வந்து உதவினாள்,

''இந்தா சாப்பிடு. உடம்பு நல்லாயிடும். வேலைக்கு வராதே. போய்த் தூங்கு''—உபசரித்தாள்.

பேச்சுக்குரல் கேட்டு வெளியே வந்துபார்த்த மாமியாரின் முகம் ஜிவு. ஜிவு என்றாகிவிட்டது. கழிவறைத் தொழிலாளி மருமகளை வாழ்த்திவிட்டுச் சென்றதும், ''என்ன வேலை செஞ்சே நீ? நம்ம வீட்டு தம்ளரை எடுத்து அவகிட்ட குடுத்து.....சீ!சீ!''

''பாவம் அத்தே! தலைவலியால் துடிச்சிட்டிருக்கா, அவளும் மனுஷி தானே'' தங்கமணி மெல்லக் கூறினாள்.

''எங்காச்சும் டாக்டர் கிட்ட போகட்டும். அதுக்காக...இப்ப அந்த தம்ளரை என்ன செய்வேன்?'' அலறினாள் மாமியார்.

''நான் வேணா, தேய்த்துக் கழுவித் தரேன்''. வெகுளித்தனமாக மருமகள் கூறியதைக் கேட்டு வெகுண்டு எழுந்தாள் மாமியார்.

''இந்தக் குடும்பத்தில் இருக்கிற சுத்தபத்தம் எல்லாம் தொலைஞ்சிட்டுது, அவர் இருந்த காலத்துல எப்படியெல்லாம் இருந்திச்சு.'' கீச்சிட்டு அலறியதைக்கேட்டு அதிர்ந்து போனாள் தங்கமணி.

விஷயம் அறிந்த கதிரேசன் ஒரே வார்த்தையில் மனைவியை அடக்கி விட்டான். ''எங்கம்மா கிராமத்துப் பண்பாட்டில ஆசாரமான குடும்பத்துல பிறந்து வளந்தவங்க. எங்க அக்காமார்கள் நாலு பேரையும் அப்படியே வளத்துதான் கட்டிக் குடுத்திட்டாங்க. அவங்களை மாத்த முடியாது. நாமாதான் அனுசரிச்சுக்கிட்டுப் போகணும்''.

அதன்பிறகு தங்கமணி, பின்ளைப்பேறு என்று பிறந்தகம் போய்விட்டாள். கதிரேசனுக்குப் பம்பாய் மாற்றம். புதிய சூழ்நிலை இடம். சுதந்திரமான வாழ்க்கை எல்லாமே, தங்கமணிக்குப் பிடித்திருந்தது. கைக்குழந்தை செல்வியுடன் பம்பாய் வந்த புதிதில், கதிரேசன் ஒரு குளிர்சாதனப் பெட்டியை வாங்கி விட்டிருந்தான். ''இது எதுக்குத் தெரியுமா? குழந்தையை வச்சுக்கிட்டு, உன்னாலே வீட்டு வேலை செய்யமுடியாது. அதனாலே, முடிஞ்ச வரை ஏதானும் செய்து. இதில வச்சிடு. பிறகு ,அப்பப்ப சூடாக்கி சாப்பிடுக்கலாம்.''



கணவனே வழிகாட்டிய பிறகு தங்கமணி காட்டிலே சக்கை மழை! குளிர் சாதனப் பெட்டிக்குள், காய்கறி, பால், தயிர் மட்டும் இல்லை. இரண்டு நாள் ரசம், பொறியல், காரக்குழம்பு என்று பல்வேறு சமையல் பாகங்களும் குடியேறின.

''செல்வி, கைவிடாம, அழுதிட்டா. அதனால் குக்கர்ல சாதம் மட்டும் வச்சிட்டேன். நேத்து குழம்பும் பொறியலும் சூடுபண்ணி வச்சிருக்கேன். சாப்பிடுங்க.'' தங்கமணி கூறிவிடுவாள், கதிரேசனது ஓட்டமான வாழ்க்கையில் அதுவும் பழகிவிட்டது.

அவர்களது குடியிருப்புப் பகுதிகளில் புறாக்கள் அடிக்கடி அமர்ந்து, வராந்தா பகுதிகளை அசுத்தப்படுத்தும். அத்துடன் கழிவறையைச் சுத்தப்படுத்துகிற வேலையாவுமாக, குப்பை வாரி எடுத்துப்போக வரும், ''கச்சடாவாலி'யையே செய்யச் சொல்லி விடுவாள் தங்கமணி.

மகனது பம்பாய் வாழ்க்கையைப் பார்க்க வந்திருந்தாள் அன்னை பூரணியம்மாள். அதிலிருந்து தங்மணிக்கு வெறுப்பு.

''அதுயாரு கச்சடாவாலி ..சே சே! அவங்களை எதுக்காக வீட்டுக்குள்ளாற விடணும்,'' அன்ன பூரணியம்மாள் அலறினாள்.

''குளிக்கப் போகுமுன்னே, நீயே கழுவிட்டு தலைமுழுகிட்டு வந்திடு. இதென்ன, குளிர் சாதனப்பெட்டியில் கண்டதை வச்சு அடச்சுக்கிட்டு எல்லாத்தையும் எடுத்துக் கழுவி, துடை...''அடுக்கடுக்காக, மருமகளை வேலை ஏவினாள் அம்மாள்.

தங்கமணிக்கு அழுகையும் ஆத்திரமும் பொங்கியது. கைக்குழந்தைக்காரி என்று மாமியார் கரிசனம் காட்டாத எரிச்சல். சுதந்திரமாக இஷ்டம் போல் திரிந்து கொண்டிருந்த வாழ்க்கை இப்படி ஆகிவிட்டதே என்று கடுப்பு யாவுமாக அன்று 'கச்சடாவாலி' மீதுதான் அவளால் காட்டமுடிந்தது!

வழக்கம்போலக் குப்பை எடுத்துப்போகவரும் சரளா, அவளிடம் சிரித்தபடி ''என்ன மேம்ஸாப். இப்பவெல்லாம், கழிவறையைச் சுத்தம் செய்ய வருவதில்லை'' என்றாள், இந்தியில்.

''எங்க மாமியாருக்கு அதெல்லாம் பிடிக்காது. நீ வீட்டுக்குள் வரக்கூடாதுன்னு சொல்லிட்டாங்க.''

''ஏனாம்?''

அவள் வாயைத் திறப்பதற்குள், ''அவகிட்ட என்ன கொஞ்சல்? உள்ளே வா, குழந்தையைத் தொட்டுத் தூக்கிடப்போறா''. அன்னபூரணியம்மாள் அடிக்குரலில் மிரட்டினாள்.

''உன்மாமியார் என்ன சொல்றாங்க?'' சரளா கேட்டாள்.

''வேலை இருக்கு. உள்ளே கூப்பிட்டாங்க... 'வயசானவங்க. பாவம். நீ போ'' குப்பைக்காரி படி இறங்கிப் போய்விட்டாள்.

மறுநாள் காலை, பால்கனிப் பக்கம் அதிகாலைப் பொழுதில் குளித்துத் துணி உலர்த்தவந்த அன்னபூரணியம்மாள், கிரீச்சிட்டாள்.



''என்னம்மா, என்ன ஆச்சு?'' கதிரேசன் பதறியபடி பாதி முகச் சவரத்துடன் அங்கேஓடிவந்தான்.

''இத பாரு, ஒரு புறா அடிபட்டுக் கிடக்குது'' கண்டராவி''.

''பூ! இவ்வளவுதானே! எடுத்துப்போட்டுப்பிட்டா போவுது. பறக்கிற ஜோர்ல, எங்கியோ அடிபட்டு செத்திருக்கு''. மகன் சமாதானம் கூறினான்.

''சீ! சீ! நீ தொடக்கூடாது. அந்த 'கச்சடா வாலி' யைக்கூப்பிட்டு எடுத்திட்டுப் போகச் சொல்லு''.

தங்கமணி வியப்புடன், ''நம்ம வீட்டுக்குள்ளே அவளை அனுமதிக்கமாட்டீங்களே'' என்றாள்.

''ஆபத்துக்குப் பாவமில்லை. காலையில எட்டு மணிக்கு அவ வந்ததும் கூப்பிடு.'' அழுத்தம் திருத்தமாக உத்தரவிட்டு விட்டு அன்னபூரணியம்மாள் அகன்றாள்.

சரளா, குப்பைக் கூடையுடன் பிரசன்னமானதும், தங்கமணி இந்தியில் பணித்தபடி, பால்ணியில் இறந்து கிடந்த புறாவை அகற்றிச் சுத்தம் செய்தாள்.

அன்னபூரணியம்மாள் இரண்டு ரூபாய்த்தாளை வைத்து அது பறக்காமல் இருக்க அதன்மீது ஒரு கண்ணாடித் தம்ளரில் 'டீ' யையும் நிரப்பி வைத்தாள்.

''அவகிட்ட இதைச் சாப்பிடுக்கச்சொல்லு. பணத்தை எடுத்திட்டுப் போகச்சொல்லு. அவ போனபிறகு, நீ நல்லா தண்ணியை ஊத்திக் கழுவித் துடைச்சிடு'' என்றாள்.

''உன் மாமியார் என்ன சொல்றாங்க?'' சரளா கேட்டதும் பற்களைக் கடித்தாள் தங்கமணி.

''உன்னை இந்த டம்ளரோட டீயைத் எடுத்துக்கொள்ளச் சொன்னாங்க. ரெண்டு ருபாய் இனாம் நீ செஞ்ச வேலைக்கு'' —கதிரேசன் கூறியதும், பற்களைக் காட்டியபடி, பணமும், டீத் தம்ளருமாக வாயிற்பக்கம் சென்றாள்.

''பாவம் பெரியம்மா. எத்தனைக் கருணை மனசு அவங்களுக்கு, வீணா அவங்களைப் பத்தி தவறா சொன்னியே நீ.'' சரளா, தங்கமணியையுளனமாகப் பார்த்துக் கூறிவிட்டுக் குப்பைக் கூடையில் தூக்கிப் போட்ட செத்த புறாவுடன் நகர்ந்தாள்.

அத்தை செய்த தருமம் கருணையினால் அல்ல என்பதை அவளால் விளக்கமுடியாத நிலை.

இந்தச்சாதி சமாச்சாரம்-ஆசாரம்-மூடநம்பிக்கை இவைகள் எப்பொழுது நம்மிடமிருந்து ஒழியப் போகிறது. எப்பொழுது நாம் மனிதனை - மனிதர்களாகப் பார்க்கும் மனம் படைத்த பிறவிகளாக வாழப்போகிறோம் என்று பிரமைப்பிடித்தவளாக நின்றாள் தங்கமணி. ●

---

மக்கள், நான் நல்லவன் என்று நம்பித்தான் என்னைப் பெரிய பொறுப்புக்குத் தேர்ந்து எடுத்து இருக்கிறார்கள். எனக்கு வேறு எந்தத் தகுதியும் இருப்பதாக நான் கருதவில்லை. நான் நல்லவனா இல்லையா என்பதைப் பற்றிக்கூட நானாக ஒன்றும் சொல்ல முடியாது. வருங்காலச் சந்ததியினர்தான் அதைப் பற்றி அபிப்பிராயம் சொல்ல முடியும். ஆனால் என்மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்ள என்னாலான எல்லா முயற்சிகளையும் செய்வேன் என்று மட்டும் என்னால் உறுதியாகச் சொல்ல முடியும். ஆகவேதான் என்னுடைய ஒவ்வொரு நடவடிக்கையிலும் நான் மிகுந்த கண்காணிப்புடனும் விழிப்புடனும் இருக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

மாண்புமிகு முதல்வர்
டாக்டர் எம்.ஜி.ஆர்.

---


தைத்திருநாள், தமிழர் திருநாள்
எங்கும் மங்களம் பொங்குக
எங்களது நல்வாழ்த்துக்கள்!

காரைக்குடி வட்ட அரிசி ஆலை உரிமையாளர்கள்
மற்றும்
நெல், அரிசி வியாபாரிகள் சங்கம்,
செல்லப்பா பில்டிங், புதுவயல் — 623 108
பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்.


# போக்குவரத்தில் புதிய பரிமாணம்

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்
**திரு எஸ். முத்துசாமி**

தமிழ்நாட்டில் தற்பொழுது 13 அரசு போக்குவரத்துக் கழகங்கள் தனித்தனிக் கம்பெனிகளாக இயங்கி வருகின்றன. கூடிய விரைவில் அண்ணா மாவட்டத்தில் திண்டுக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய போக்குவரத்துக் கழகம் அமைக்கப்படவிருக்கிறது.

தற்சமயம் எல்லாப் போக்குவரத்துக் கழகங்களும் சேர்ந்து 9,850 பேருந்துகளை நாளொன்றுக்குச் சுமார் 31 இலட்சம் கிலோ மீட்டர்கள் இயக்கி, சுமார் 90 இலட்சம் பயணிகளை ஏற்றிச் செல்கின்றன. இப்பணியில் சுமார் 70,000 பணியாளர்கள் அல்லும் பகலும் கடுமையாக உழைக்கின்றனர். எட்டு ஆண்டுகளில் அரசு போக்குவரத்துக் கழகங்கள் எவ்வளவு வளர்ச்சி அடைந்திருக்கின்றது என்பதைக் கீழே காணலாம்.

| | 1977ல் | 1985ல் |
|---|---|---|
| போக்குவரத்துக் கழகங்கள் | 7 | 13 |
| பேருந்துகளின் எண்ணிக்கை | 4,953 | 9,850 |
| நாளொன்றுக்கு ஓடிய கிலோ மீட்டர்கள் (இலட்சத்தில்) | 12.3 | 31.0 |
| நாளொன்றுக்கு ஏற்றிச் சென்ற பயணிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 37.8 | 90.0 |
| பணியாளர்களின் எண்ணிக்கை | 36,000 | 70,000 |

ஆண்டுதோறும் சுமார் 1200 முதல் 1500 வரை புதிய பேருந்துகளை வாங்கி பழைய பேருந்துகளைக் களையவும், புதிய வழித்தடங்களில் இயக்கவும் நடவடிக்கை எடுத்து வரப்பட்டிருக்கிறது. பேருந்துகளின் சராசரி வயது எட்டு ஆண்டுகளுக்கு முன்பு 6.5 ஆக இருந்தது. இப்பொழுது 4 ஆகக் குறைந்திருக்கிறது. நடப்பு நிதியாண்டில் சுமார் 2,200 புதிய பேருந்துகள் வாங்குவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

போக்குவரத்துக் கழகங்களின் உபரி நிதி கொண்டு ஈரோடில் சாலைப் போக்குவரத்து சம்பந்தமான ஒரு பொறியியற் கல்லூரி அமைக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளாக இயங்கி வருகிறது. நெடுஞ்சாலைகளில்தகுந்த இடங்களைத் தேர்ந்தெடுத்து சுமார் 60 சாலையோரவிடுதிகள்அமைக்கப்பட்டு வருகின்றன.

சென்ற 1984ஆம் ஆண்டில் தேசிய உற்பத்திக் கழகம் இந்தியாவிலுள்ள அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களின் உற்பத்தித் திறனை ஆராய்ந்து நமது பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்குப் பெருநகர் போக்குவரத்துப் பணிகளுக்கும் புறநகர்ப் பணிகளில் ஏனைய அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் முதல் பரிசை அளித்திருக்கிறது. இந்த ஆண்டு 1985 நவம்பர் முதல் தேதி நமது பாரதப் பிரதமர் அளித்தார்கள். மத்திய திட்டக் கமிஷனும் தமிழ்நாடு போக்குவரத்துக் கழகங்களின் செயல் திறனை மெச்சியிருக்கிறார்கள்.

**பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்**

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக்கழகம் தமிழ்நாடு அனல் மின் நிலையங்களுக்கு நிலக்கரியைத் துரிதமாகவும், செம்மையாகவும் எடுத்துச் செல்வதற்காக 1974-ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. 'தமிழ் பெரியார் ஈ.வி.ஆர். மற்றும் 'தமிழ்அண்ணா' ஆகிய இரு பழைய கப்பல்களை அக்கழகம் வாங்கியது. இவைகள் முறையே 1980-ஆம் ஆண்டும் 1981-ஆம் ஆண்டும் விற்கப்பட்டன. தூத்துக்குடி அனல் மின் நிலையம் ஏற்படுத்தப்பட்ட பின், பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் பொறுப்பு அதிகமாகி, நிலக்கரியை எடுத்துச் செல்வதற்கான 20 ஆண்டு ஒப்பந்தத்தை அது தமிழ்நாடு மின் வாரியத்திடம் ஏற்படுத்திக் கொண்டுள்ளது.

தூத்துக்குடி அனல்மின் நிலையத்திற்குத் தேவையான நிலக்கரியைக் கல்கத்தாவிலுள்ள ஹால்தியா துறைமுகத்திலிருந்து தூத்துக்குடிக்குச் சொந்தக் கப்பல்கள் மூலம் மிகக் குறைந்த செலவில் துரிதமாகக் கொண்டு வரும் பொருட்டு பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் 40,000 டன் அமிழ் எடையுள்ள புதிய வடிவமைப்புள்ள மூன்று பெரிய கப்பல்களை வாங்க அனுமதிக்குமாறு இவ்வரசு மத்திய அரசை 1982-ஆம் ஆண்டு கேட்டுக் கொண்டது.

1983-ஆம் ஆண்டு டிசம்பரில் ஒரு கப்பல் வாங்க மத்திய அரசு அனுமதியளித்தது. அக்கப்பலைக் கட்டியமைக்கும் பணியை ஜப்பா

ஷிலுள்ள ஹிட்டாச்சி ஜோசன் எனும் கப்பல் கட்டும் நிறுவனம் மேற்கொண்டு அக்கப்பல் கட்டிமுடிக்கப் பெற்று மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களால் 2-8-85 அன்று ஜப்பான் நாட்டில் முறைப்படி பெற்றுக் கொள்ளப்பட்டது.

அக்கப்பலுக்குத் 'தமிழ் அண்ணா' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இக்கப்பலின் விலை 4991 மில்லியன் ஜப்பான் யென்களாகும்.

இவ்வாண்டு ஜூலை மாதத் துவக்கத்தில் மேலும் இரு கப்பல்கள் வாங்க மத்திய அரசு அனுமதியளித்துள்ளது. அவ்விரு கப்பல்களும் மேற் கூறிய கப்பல் தளத்திலேயே கட்டப் பட்டு வருகின்றன. அவ்விரு கப்பல்களும் இவ்வாண்டு இறுதிக்குள் கட்டி முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**நெடுஞ்சாலை ஊரகப்பணித்துறை**

ஒரு நாட்டின் சமூக ஒருமைப்பாட்டிற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் காரணமான- இன்றியமையாத உள்ளமைப்புகளில் சாலைப் போக்குவரத்தும் ஒன்றாக உள்ளது. இம்மாநிலத்தில் 1951-ஆம் ஆண்டில் இருந்த சாலைகளின் நீளம், தற்போது சுமார் நான்கு மடங்குகளாக அதிகரித்துள்ளது. 1951-ஆம் ஆண்டு மார்ச் திங்களில் இம்மாநிலத்தில் உள்ள சாலைகளின் மொத்த நீளம் 34,115 கி.மீ. ஆக இருந்தது. இது 1985-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரை 1,34,613 கி.மீ. ஆக அதிகரித்துள்ளது. 1-4-1951 முதல் 31-3-85 வரையிலான காலக்கட்டத்தில் இம்மாநிலத்தில் 100 ச. கி. மீ-க்கும் ஒரு இலட்சம் மக்கட தொகைக்கும் இருந்த சாலைகளின் செறிவு சதவிகிதம் (கிலோ மீட்டர்களில்) கீழே ஒப்பிடப்பட்டுள்ளது:

| | 1-4-51 | 31-3-85 |
|---|---|---|
| (1) 100 சதுர கிலோ மீட்டருக்குச் சாலைகளின் நீளம் | 26 கி.மீ. | 111.76 கி.மீ. |
| (2) ஒரு இலட்சம் மக்கட் தொகைக்குச் சாலைகளின் நீளம் | 106 கி.மீ. | 300.27 கி.மீ. |

1884 கி.மீ. நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலைகளும் 1852 கி.மீ. நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகளும் முழுவதுமாகத் தார்ச் சாலையாக்கப்பட்டு விட்டன. 14,031 கி.மீ. நீளமுள்ள மாவட்ட பெருஞ்சாலைகள் அனைத்தும் அநேகமாகத் தார்ச் சாலையாக்கப்பட்டு விட்டன. 21,238 கி.மீ. மொத்த நீளமுள்ள இதரமாவட்டச் சாலைகளில் சுமார் 85 விழுக்காடு சதவிகிதம் நீளம் தார்ச்சாலையாக்கப் பட்டுவிட்டன. இதிலிருந்து திட்டக்காலங்களில். இம்மாநிலத்தில் உள்ள சாலைகளின் மொத்த நீளம் அதிகரித்துள்ளதோடு மட்டுமின்றி ஓடு தளங்களின் தரமும் உயர்ந்துள்ளது என்பது தெரிய வருகிறது. இது உண்மையிலேயே பாராட்டத்தக்க முன்னேற்றமாகும். ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச்சாலைகள் உட்பட சாலைகளின் மொத்த நீளத்தில் 55 விழுக்காடு நீளத்திற்கு மேல்தளம் அமைக்கப் பட்டுள்ளது.



பலவிதமான மனோதத்துவ நிலைகளை, வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களில் நிகழக்கூடிய மனப்போராட்டத்தின் வெற்றி தோல்விகளைச் சீரிய நடிப்பின் மூலம் சித்திரித்துக் காட்டுவது; கலைச் சிறப்புகள் நிறைந்த கருத்தோவியமாகக் காட்சிகளை அமைப்பது; பார்ப்பவர்கள் புலன்களெல்லாம் ஒடுங்கித் தம்மை மறந்த நிலையில் ரசிக்குமாறு கதையை எழுதுவது-இம்மூன்று சிறப்புகளும் ஒரு நல்ல நாடகத்திற்கு வேண்டும்!

—தமிழ்த்தென்றல் திரு வி. க.

சென்னை மாநகரில் இந்த அரசு 102 பாலங்களையும் 8 பாதசாரிகள் - சுரங்க நடைப்பாதைகளையும் கட்டி முடித்து செயல் சாதனை புரிந்துள்ளதையும் குறிப்பிட வேண்டும். திருச்சியில் பாலக்கரையிலும், சென்னை மாநகரில் நெல்சன் மாணிக்கம் சாலையிலும் திருத்தணியிலும் ஏற்கெனவே அமைந்திருந்த இருப்புப் பாதைக் கடவுகளுக்குப் பதிலாக மூன்று வாகன சுரங்கப்பாதைகள் கட்டப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர 43,357 கி.மீ. நீளமுள்ள புதிய சாலைகள் இந்த ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

1985-86-ஆம் ஆண்டில் திட்டப்பணிகளின் கீழ் ரூ. 43.52 கோடியும், திட்டம் சாராப் பணிகளில் கீழ் ரூ. 46.38 கோடியும் இத்துறை செலவிட உத்தேசித்துள்ளது.

ஊரகச்சாலைகள் திட்டம்,கட்டம் கட்டமாக நிறைவேற்றப்படுகிறது. ரூ. 7567.19 இலட்சம் மதிப்பீட்டில் 6,363.66 கி.மீ. நீளமுள்ள சாலைப்பணிகளுக்கு ஆறு கட்டங்களாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 31-3-85 வரை 2,248 பிரதான குடியிருப்புகளும் குறைந்த அளவு மக்கட் தொகையில் உள்ள 1977 இடைப்பட்ட கிராமங்களும் பயன் பெறும் வண்ணம் ரூ. 5,831 இலட்சம் செலவில் 6,014 கி.மீ. மொத்த நீளம் கொண்ட சாலைப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ. 10.00 கோடி மதிப்பீட்டிலான ஏழாவது கட்டப்பணிகளுக்கான புதிய பிரேரணைகளுக்கு அரசு சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது.

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்தின் கீழ் 1984-85ஆம் ஆண்டில், ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 20.00 கோடி தொகையும் முழுவதுமாகச் செலவிடப் பட்டது. 1985-86ஆம் ஆண்டில் ரூ. 11.40 கோடி தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகையில் 11-85 வரை ரூ. 6.60 கோடி செலவிடப்பட்டுள்ளது. 31-3-85 இறுதியில் இத்திட்டத்தின் கீழ் சுமார் 1940 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

பேருந்து வழித்தட ஏற்புத் திட்டத்தின் கீழ் 1979-ஆம் ஆண்டிலிருந்து 1983-84-ஆம் ஆண்டின் இறுதி வரை 10,694 கி.மீ. நீளமுள்ள பேருந்து வழித்தடங்களை மேம்பாடு செய்ய திட்டமிடப்பட்டது. இதில் 31-3-85 இறுதிவரை 7,500 கி.மீ. நீளச்சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டுள்ளன. ரூ. 10.00 கோடி வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் 85-86-ஆம் ஆண்டில் சுமார் 860 கி.மீ. நீளச் சாலைப் பணிகளை முடிக்க திட்டமிடப் பட்டுள்ளது.

# உழைப்பால் தமிழகம் உயர...

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர்

## திரு. எஸ். திருநாவுக்கரசு

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது தமிழர் முது மொழியாகும். உழைக்கின்ற உழவர் பெருமக்கள் மகிழ்வுடன் கொண்டாடும் திருநாள் தைப் பொங்கல் திருநாளாகும். தமிழக மக்களின் காவல் தெய்வம் புரட்சித் தலைவர், சென்ற ஆண்டு இந்நேரம் தமிழகத்தில் இல்லை. அமெரிக்க மருத்துவ மனையில் இருந்தார். தமிழர்கள் யாரும் பொங்கல் விழா கொண்டாடவில்லை தமிழகத்தில். புத்தாடை அணியவில்லை. பொங்கலில் இனிப்பில்லை-ஏன்-பொங்கல் விழாவே பலர் இல்லத்தில் இல்லை. இந்த ஆண்டு வரும் பொங்கல், தமிழர் வாழ்வில் இனிக்கும் பொங்கல். சத்துணவுத் திட்டம், தன்னிறைவுத் திட்டம் போன்ற திட்டங்களால் ஏழை, எளியோர் நன்மைகளை அதிகம் பெறுகின்றனர். குடிதண்ணீர், மருத்துவ வசதிகள் மக்கள் பெற்றிட புரட்சித் தலைவர் எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகிறார்.

பொதுமக்கள் பொது விநியோக முறையில் அதிக நன்மை பெற்று வருகின்றனர். நியாய விலையில் பொது மக்களுக்குத் தரப்படும் அரிசியின் விலை இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் குறைவு. அரசுக்கு நூறு கோடி ரூபாய் நட்டம் என்றாலும் - மக்கள் நலன் கருதி புரட்சித் தலைவர் இதுபோன்ற பல மக்கள் நலப் பணிகளைச் செய்து வருகிறார். பொற்கால ஆட்சி புரட்சித் தலைவரின் ஆட்சி, என வருங்காலச் சரித்திரம் இந்த ஆட்சியின் மாட்சியைப் பாராட்டும். ஏழை, எளிய மக்கள் எல்லாவித நன்மைகளும் பெற்றிட, தமிழர் வாழ்வு மேம்பட இத்தமிழர் திருநாளில் சபதம் ஏற்போம். வறுமையையும், ஏழ்மையையும், விரட்டிட உழைப்போம். இளைஞர்கள் யாவரும் கல்வி கற்றிட வேலை வாய்ப்புக்கள் பெற்றிட முயல்வோம். ஆண்டுக்குப்பத்து இலட்சம் வீடுகள் வீதம் ஆதிதிராவிடர், வறுமைக் கோட்டுக்கும் கீழ் வாழும் பின் தங்கியோர் பெற்றிட முதல்வர் அறிவித்த திட்டம் வெற்றி பெற்று எல்லோரும் இல்லம் பெற்று மகிழ்ந்திட துணை நிற்போம். உழைப்பால் தமிழகம் உயர உறுதியேற்போம். பொங்கல் வாழ்த்துக்கள்.



பொங்கல் நல் வாழ்த்துக்கள்

இங்ஙனம்,

போன் : 2878
2979

எஸ். கே. ஷாகுல் அமீது
மும்தாஜ் அரிசி ஆலை,
நெ. 20, செஞ்சி ரோடு, விழுப்புரம்.

* *

போன் : 2321

கே. எம். ஹபீப் & பிரதர்ஸ்
ஸ்டார் அரிசி ஆலை,
மாம்பழப்பட்டு ரோடு, நந்தாடு.

* *

போன் : 2937
2537

எ. குபேரன்
பிரபு மாடர்ன் அரிசி ஆலை,
மாம்பழப்பட்டு ரோடு, விழுப்புரம்.

* *

போன் : 2836
2036

டி. எஸ். அப்துல் சமது
நெல், அரிசி மொத்த வியாபாரம்,
799-ஏ, நேரு வீதி, விழுப்புரம்.

விழுப்புரம் ஆயில் மில் உரிமையாளர்கள் சங்கம்


# புதிய ஜவுளிக் கொள்கை வகுப்போம்!

மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவுத்துறை அமைச்சர்

## திரு. வி. வி. சுவாமிநாதன்

இந்தியாவில் தமிழ்நாடுதான் கைத்தறி நெசவாளர்களின் கோட்டையாக விளங்குகிறது. முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான் கைத்தறி நெசவாளர்களின் காவலராக விளங்குகிறார்.

கைத்தறி மேலும் வளர்ச்சியடையவும் பாதுகாக்கப்படவும் மற்ற மாநிலங்களுக்குத் தமிழ்நாடு தான் வழிகாட்டியாக இருக்கிறது. 1977ல் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற அன்றும் 1985 ஆண்டான இன்றும் பல்வேறு துறையில் கைத்தறி வளர்ந்து இருப்பதைக் கீழ்க் கண்ட புள்ளி விவரங்கள் பேசும்:

| விவரங்கள் | 1977 | 1985 |
|---|---|---|
| மொத்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் | 872 | 1950 |
| கூட்டுறவுத் துறையின் கீழ் கொண்டு வரப்பட்ட கைத்தறிகளின் எண்ணிக்கை | 1.82 இலட்சம் | 3.75 இலட்சம் |
| கைத்தறித்துணி உற்பத்தி மதிப்பு ஆண்டு ஒன்றுக்கு | 36.88 கோடி | 168 கோடி |
| விற்பனை மதிப்பு ஆண்டு ஒன்றுக்கு | 41.60 கோடி | 155.29 கோடி |
| (பருத்தி) கைத்தறி நெசவாளர் குறைந்த மாதச் சம்பள விகிதம் | ரூ. 200 | ரூ. 450 |
| கூட்டுறவு நூற்பாலைத் தொழிலாளர்களின் சராசரி மாத ஊதியம் | ரூ. 600 | ரூ. 1300 |

மேற்குவங்காளம், மகாராட்டிரம், குஜராத் போன்ற நகரங்களில் உள்ள ஆலைத்தொழிலாளர்களைவிட தமிழ்நாட்டில் கிராமங்களில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரியும் தொழிலாளி வாங்கும் சம்பளம் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பல்லாயிரக் கணக்கான ஆதிதிராவிடர்களுக்கும், இலங்கை அகதிகளுக்கும் நூற்பாலைகளில் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது.

கைத்தறி ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழகத்தின் நாகரிகத்தையும், கைத்திறனையும் புகழ் பரப்பும் புராதனக் கலையாக இருந்து வருகிறது.

1926ஆம் ஆண்டு சென்னை அரசாங்கத்திற்குத் துணி வியாபாரத்தில் ஆலோசகராக இருந்த லண்டன் மாநகர நிபுணர் அமல்சாத் என்பவர் தமிழ்நாட்டிலிருந்து இங்கிலாந்து, மேற்கு ஆப்பிரிக்கா, மேற்கு இந்தியத்தீவுகள் ஆகியவைகளுக்கு 1923-24ல் ஏற்றுமதியான கைத்தறித் துணிகளின் மதிப்பு ரூபாய் 2,45,42,894 என்று வர்ணித்திருக்கிறார்.



*பதட்டத்தோடு எந்த முடிவுக்கும் வராமல் ஆராய்ச்சி அறிவோடு ஆழ்ந்து அமைதியாகச் சிந்தித்தால் என்றும் வெற்றி கிட்டும்!*

—மாண்புமிகு முதல்வர்

டாக்டர் எம்.ஜி.ஆர்.



தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் கைலி ரகங்கள், பல வண்ண 'மெட்ராஸ் கைக்குட்டைகள்' ரகங்கள் இன்றும் விசைத்தறியாலோ வெளி நாட்டிலுள்ள ஆலைகளாலோ செய்ய முடியாது. ''மெட்ராஸ் ஹேண்ட்கர்சீப்'' என்ற துணி நைஜீரிய நாட்டினரால் தேசிய அங்கியாக இன்றுவரை அணியப்படுகிறது. அந்தத் துணியைப்போல், ஜப்பான், கொரியா போன்ற நாடுகளும் இந்தியாவின் விசைத்தறிகளும் நெய்து பார்த்து அவைகள் கைத்தறியில் கையால் செய்யப்படுபவைகளுக்கு இணையாக விற்க முடியவில்லை. அதனால் தான் கையால் நெய்யப்படும் இந்த வகைத் துணிகளுக்கு'' ரியல் மெட்ராஸ் ஹேண்ட் கர்சீப்'' என்ற பெயரே வந்தது! இந்த ரகம் 100 சதவிகித ஏற்றுமதி வகையைச் சேர்ந்தது.

1982ஆம் ஆண்டு 40 கோடி அந்நியச் செலாவணியை இந்தியாவுக்கு ஈட்டித் தந்தது. நைஜீரியாவில் ராணுவ ஆட்சி ஏற்பட்டு இந்த துணி இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டதால் இந்த ரக உற்பத்தி குன்றியிருக்கிறது. இந்த ரக உற்பத்திக்குப் புத்துயிர் அளிக்க நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்குக் கடிதம் எழுதி, பிரதமரும் மீண்டும் மேற்படி துணி ஏற்றுமதி செய்யப்பட நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லியிருப்பது வரவேற்கத்தக்கது.

கிராமப்புறங்களில் மக்கள் தொகை அதிகமுள்ள நமது நாட்டில் ரூ. 2000- முதல் ரூ. 3000- சிறு முதலீட்டில் மாதம் ரூ. 450-க்குக் குறையாமல் சம்பாதிக்கக் கூடிய அற்புதமாகத் தொழில் நெசவுத் தொழில். இதற்கு மின் விசை தேவையில்லை. இந்தியாவிலுள்ள 75 இலட்சம் நெசவாளர்களில் 25 இலட்சம் பேர் தமிழ்நாட்டில் மாத்திரம் இருக்கிறார்கள். இந்தியாவில் உற்பத்தியாகும் மொத்த கைத்தறித் துணியில் $\frac{1}{3}$ பங்கு தமிழ்நாட்டில் உற்பத்தியாகிறது. அதைவிட ஆச்சரியம் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் கைத்தறித்துணிகளில் $\frac{2}{3}$ பங்கு தமிழ்நாட்டிற்தான் உற்பத்தியாகிறது.

சற்றேறக்குறைய ஆண்டு பூராவும் கைத்தறித்துணிகள் தயாரிக்கப்படுவதால் துணித் தேக்கம் அடிக்கடி தமிழ்நாட்டிற்கு மாத்திரம் உரிய பிரச்சினையாக இருந்து வருகிறது. துணித் தேக்கத்தைப் போக்க உள்நாட்டில் வாங்குபவர்களை நம்பினால மாத்திரம் போதாது. காரணம் இந்தியாவிலேயே வாங்கும் சக்தி குறைவாக உள்ளதால் ஆண்டுக்கு ஆண்டு துணி உபயோகம் அளவிலும் எடையிலும் குறைந்து கொண்டே வருகிறது. எனவே கைத்தறி வளர மற்ற மாநிலங்களுக்கும் வெளி நாடுகளுக்கும் தேவையான கைத்தறித் துணிகளை வகை வகையாகப் பல வண்ணங்களில் தரம் குறையாமல் குறித்த காலத்தில் தயாரித்து 'வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் நெசவாளர்கள் முனையவேண்டும்.



கைத்தறி ஏற்றுமதிக்கு மைய அரசு பல ஊக்க போனஸ் தரவேண்டும். இதற்கு மாநில அரசும் மைய அரசும் தற்போது 20 சதவிகிதம் ஆண்டு ஒன்றுக்கு 60 நாட்களுக்குச் சில்லரை விற்பனையிலும் 15 சதவிகிதம் மொத்த விற்பனையிலும் கொடுத்து உதவியது. ஆனால் மத்திய அரசு தள்ளுபடி நாட்களைக் குறைக்கவும் பிறகு அடியோடு நீக்கவும் தீர்மானித்திருக்கிறது. மாற்றுப் பரிகாரம் காணும் வரை ரிபேட் சலுகையை மைய அரசும் மாநில அரசும் தொடர்ந்து கொடுத்து வரவேண்டும். அத்துடன் கைத்தறிக்கு வினியோகிக்கப்படும் நூல், சாயம் போன்றவைகளின் விலைகளுக்கு, விவசாயிகளுக்கு உரத்திற்கும் விதைகளுக்கும் கொடுப்பதுபோல் மானியம் கொடுக்க முன்வரவேண்டும்.

மைய அரசு ''கைத்தறி நிரந்தர வளர்ச்சி நிதி'' (Handlooms Fund or Revolving Fund) என்ற பெயரால் தமிழ்நாட்டிற்கு நூறு கோடிக்குக் குறையாமல் கொடுத்துதவ முன்வரவேண்டும். ஆரம்பக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்த துணிகளுக்குக் கொடுக்க வேண்டிய பணம், ரிபேட் வகையில் கொடுக்கவேண்டிய பணம் இவைகள் ஓரிரு ஆண்டுகளுக்குமேல் கொடுபடாமல் போனால் முதலீடு செய்வதற்குப் பணம் இல்லாமல் அதனால் நெசவாளர்களுக்கு நூல் கொடுக்க முடியாமல் தொடர்ந்து வேலை கொடுக்க முடியாத நிலை ஏற்படுகிறது. ஆலையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு நிவாரணம் நிதி ரூபாய் 2500 கோடி கொடுக்க வேண்டுமென்று புதிய ஜவுளிக் கொள்கை சொல்கிறது.

பல நூறு கோடி ரூபாய்களை 1½ இலட்சம் தொழிலாளர்கள் மட்டுமே வேலை செய்யும் நலிந்த ஆலைகளை நலம்பெறச் செய்யும் நடவடிக்கைக்காக மைய அரசு செலவழித்திருக்கிறது. ஆனால் பல்வேறு நிபுணர் குழுக்கள், ரிசர்வ் வங்கி போன்றவைகள் பரிந்துரை செய்யும் கைத்தறி நெசவாளர்களுக்குக் கைத்தறி நெசவுத் தொழிலில் உள்ள, நீண்டநாள் நோயைப் போக்க மறு வாழ்வு நிதி (Rehabilitation Fund) ஒன்று ஆரம்பிக்க மைய அரசு முன்வரவில்லை.

1985 ஜனவரி முதல் அக்டோபர் முடிய 10 மாதங்களில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் நடந்த பண மோசடி ரூபாய் 25 கோடியைத் தள்ளுபடி செய்திருக்கிறது. தேசிய வங்கிகளில் உள்ள சேமிப்பு நிதி ரூபாய் 59,000 கோடியில் 1000 கோடியாகப் புராதன இந்திய கலாச்சாரம், கைவினை நுட்பம், நாகரீகம் ஆகியவைகளை விளக்கும் கைத்தறிக்கு மைய அரசு ஏன் ஒதுக்கக்கூடாது?

அதனால்தான் பாரதப் பிரதமரை இந்தியாவுக்கே புதிய ஜவுளிக் கொள்கையை வகுத்து உடன் அறிவிக்குமாறு தமிழக முதல்வர் மூலம் மைய அரசை நாம் வற்புறுத்தி வருகிறோம். இந்தப் பொங்கல் நாளில் அந்த ஒப்புதலை நாம் பெரு நம்பிக்கையோடு எதிர்பார்ப்போம். ●

# தமிழினக் காவலன்



மாண்புமிகு சத்துணவு அமைச்சர்
திரு. ஆர். சவுந்தரராசன்

''தமிழன் என்றொரு இனமுண்டு தனியே அவர்க்கொரு குணமுண்டு''—இந்த வரிகளை ஆராய்ந்தால் தமிழினத்தின் பெருமையை நாம் உணரலாம். ஒரு காலத்தில்.....

உலகாண்ட இனம்

உலகுக்கு நாகரீகத்தைக் கற்றுத் தந்த இனம்,
ஆட்சிச்சிறப்பை உலகம் உணர்த்திய இனம்,
கலை உணர்வுக்கு உலகிற்கு வழிவகுத்த இனம்,
காவியச் சிறப்பையும் கவிதை உணர்வையும் உலகிற்கு எடுத்தியம்பி உணர்ந்த இனம்,
சமதர்மக் கோட்பாட்டை உலகுக்குத் தந்த இனம்

ஆனால்—

இத்தனைச் சிறப்புகளுக்கு வித்திட்ட இனம் தாழ்ந்து போனதற்குக் காரணம் யாது- கேள்விகள் எழுந்தன - விடை காணப் புறப்பட்டனர் பலர். நாளெல்லாம் திருநாளாய் கொண்டாடி, மகிழ்ச்சிப் பண்பாடி மகிழ்ந்த திருக்கூட்டம் தமிழர் கூட்டம், இடையே மூவேந்தர் காலத்திற்குப்பின் அன்னியர் தம் வஞ்சக வலையில் வீழ்ந்தனர். அதன் பயன் பிளவுகள் - பிரிவுகள் - ஜாதி என்னும் பெயரால் மதம் என்ற உணர்வால் - நெற்றிக்கு இடும்சின்னம் என்ற நினைவால் செய்கின்ற தொழிலால் ஏற்பட்டன.

இதனுடைய விளைவுகள் / ஆண்டான் அடிமை - ஏழை பணக்காரன் - பேதங்கள்- பெருமளவு பகை உணர்வுகள் நம்மிடையே எழுந்தன: அதன் விளைவு?

தமிழன் தன் நிலை இழந்தான், வீழ்ந்தான். தமிழனை மேகமூட்டங்கள் மறைத்தன. அதற்குப்பின் எந்த விழாக்களும் உணர்வோடு எழவில்லை. அதன்பிறகு தமிழனின் பழைய நிலையை மீட்டுத்தந்திடப் பலர் புறப்பட்டனர். அதில்,

''ஜாதிகள் இல்லையடி பாப்பா'', என்று பாடி பாரதியார் ஜாதிகளைக் களைந்திட வந்தார். ''அருட்பெருஞ் ஜோதி தனிப்பெரும் கருணை'' என இறைவன் முன் அனைவரும் ஒன்றே என்பதை எடுத்தியம்பிய ''வள்ளலார்'' ''நட்ட கல்லும் பேசுமோ நாதனுள் இருக்கையில்'' என் மதத்தைச் சாடிய சித்தர்கள், நந்தன் - திருப்பணாழ்வான் போன்றவர்கள் மத வெறியர்களுக்கும் - ஜாதிப் பிரியர்களுக்கும் பெரும் தீயாய் நின்றனர்.

தமிழனின் ஒற்றுமை கருதி உழைத்திட்ட வடலூர் வள்ளலார் கடைசியில் மனம் நொந்து ''கடை விரித்தேன் கொள்வாரில்லை கட்டிக் கொண்டேன்'' என்றார். அதற்குப்பின் பல காலம் இருள் சூழ்ந்த நிலையில் மக்கள் வாழ்ந்தனர்.

அந்த இருளை அகற்றிட வந்த ''ஒளிப் பிழம்பு'' கவ்விய மேகமூட்டத்தை விலக்கிட



# கைகுலுக்குவோம்!

தமிழன்பன்



ஒருவர்
கையில் ஒருவர்கை - எனினும்
ஒருவர் கையில்
ஒருவர் இல்லை.
எனவே,
கைகுலுக்குவோம்!
பறவைகள் கோடி
சிறகை
வானில் விரிக்கட்டும்.
கைகுலுக்குவோம் !

கனவுகள்
கடலின் அலைகள் தாண்டிவந்து
கரையில்
கண்கள் விழிக்கட்டும்.
கைகுலுக்குவோம் !

இருளின் மார்புக் கூடு
இடிந்து
தூளாய் உதிரட்டும்.
கைகுலுக்குவோம் !

இதயச் சங்கமத்தில்
புதிய
உதயங்கள்
உத்தரவாதமாகட்டும்—
கைகுலுக்குவோம் !

இனி,
நம்
விரல்களே
வேய்ங்குழல்களாகட்டும்.
'வெல்க மானுடம்'
என்று
பிரபஞ்சமே வந்து
இசையாகம் செய்யட்டும்!
வருக -
நாம் கைகுலுக்குவோம் !

தமிழர்தம் உணர்வினைத்தட்டிஎழுப்பிட வந்த புயல்காற்று தந்தை பெரியார். பெரியாரின் உழைப்பிற்குப் பிறகுதான் ''தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா'' என்ற நிலை ஏற்பட்டது. அந்த நிலை நிலைத்திட - அப்பயிர் செழித்திட வந்த மாமழைதான் —

பேரறிஞர் அண்ணா.

அதற்குப்பின் இந்நாட்டில் தமிழன் பெற்ற பெரும் பேற்றை-பேரெழுச்சியை - என்றும் இழந்திடாது காத்திட - நமக்கு அண்ணா தந்த ''தமிழ் இனக் காவல்காரன்''. தமிழன் என்றும் மகிழ்ந்து ஆடிப்பாடிட வீசுகின்ற தென்பொதிகைத் தென்றல்தான் நமது இதய தெய்வம் - தமிழக முதல்வர் - ''புரட்சித் தலைவர்''. இவர் காலம் தமிழினத்தின் தலை நிமிர்ந்த காலம். தமிழ் மொழியின் சிறப்பு உலகுணரும் காலம். தமிழ் ஆட்சியின் உயர்வு இமயத்திலும் உயர்ந்த காலம். இந்த நேரம் நாம் மகிழும் நேரம். இந்தப் பொங்கல் விழா வீடுதோறும் எழுச்சியூட்டும் விழா.

நாடு பூராவும் தமிழன் வீறு கொண்டு எழும் நாள் பொங்கல் நாள். பார் நம்மை உணர்ந்திடும் நாள் - பொங்கல் நாள். பொங்குக பொங்கல்! தங்குக எங்கும்! நலம் வளர்க.



# தமிழர் திருநாளில் ஒரு வேண்டுகோள்

**திரு. டி. வீராச்சாமி**

**மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர்**

தமிழக மக்களனைவருக்கும் வணிகவரித் துறையின் சார்பாக எனது உளங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்களை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்களாட்சியில் சமுதாயப் பணிகளுக்கான செலவினங்களுக்காக வருவாய் திரட்டுவதில் வணிக வரிகளின் மூலம் அரசுக்குக் கிடைக்கும் வருவாய் பெரும் பங்கு வகிக்கிறது. கேளிக்கை வரிகளின் மூலம் கிடைக்கும் வருவாய் உள்ளாட்சி நிறுவனங்களுக்குப் பயன்படுகிறது.

வணிகவரிகளுள் முதன்மையானது விற்பனை வரியே. இவ்வரி விதிப்பு மிகச் சிறிய அளவில், அதாவது, விற்பனைத் தொகையில் ஒரு ரூபாய்க்கு ஒரு காசு (1/192 ரூபாய்) என்ற விகிதத்தில் 1939ஆம் ஆண்டுமுதல் தொடங்கப்பட்டது. மாநிலங்களின் அதிகார வரம்பிற்குட்பட்ட இந்த வரி விதிப்பின் மூலம் அரசுக்கு வருவாய் கிடைக்க வழிவகுத்து மற்ற அனைத்து மாநிலங்களுக்கும் தமிழ்நாடு முன்னோடியாக விளங்குகிறது. இவ்வரிகள் உள் மாநில, பிற மாநில விற்பனையின் மேல் விதிக்கப்படுகின்றன. வெளி நாட்டு மது, உள்நாட்டில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகள், உள்நாட்டு மதுபான சாராயம் ஆகியவற்றிற்கு அதிகபட்ச வரியாக 50,30 மற்றும் 20 சதவீதம் விதிக்கப்படுகிறது. ஆடம்பரப் பொருட்களுக்கு 15 சதவீத வரியும், மற்ற பொருட்களுக்கு அவைகளின் உற்பத்தி, தேவை ஆகியவற்றினைக் கருத்திற்கொண்டு அரசினால் வரிவிகிதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும்பொழுது நம்மாநிலத்தில் வரிவிகிதம் அதிகமில்லாத பொழுதும், இந்தத்துறை அலுவலர்களின் ஒத்துழைப்பினாலும் வரிவிதிப்புக்குட்படவேண்டியவர் வரிவிதிப்பின்றி விடுபடாமல் காத்து வரிவசூல் பணியில் தீவிரம் காட்டி, மொத்த இந்திய வரிவசூலில் தமிழ்நாடு அனைத்து அளவில் மிகச் சிறப்பான இடத்தைப் பெற்று வருகிறது. வரிவிதிப்பில் முன்னோடியாகத் திகழ்ந்த தமிழ்நாட்டில் வரி தவிர்ப்பு மற்றும் வரி ஏய்ப்புகள் கவனமாகக் கண்டுபிடிக்கப்பட்டு அந்தந்த ஆண்டே வரிவிதிப்பு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு வரிவசூல் செம்மையாகச் செய்து வரப்படுகிறது. 1976-77ஆம் ஆண்டில் வணிகவரிகள் (கேளிக்கை வரிகள், பந்தய வரிகள் உட்பட) மூலம் அரசுக்குக் கிடைத்த வருவாய் ரூ. 255.58 கோடியாக இருந்தது. 1984-85ஆம் ஆண்டில் ரூ. 905 கோடியாக அதாவது மூன்றரை மடங்காக உயர்ந்துள்ளது. இது இத்துறையின் மிகச் சிறந்த சாதனையாகும்.

இந்தத் துறையின் மற்றுமோர் சாதனை 1976ஆம் ஆண்டில் 55,683 குற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டு ரூ. 43.71 கோடி விற்பனைத் தொகை மறைப்பு வெளிக்கொணரப்பட்டு அரசுக்கு ரூ. ஒரு கோடியே 74 இலட்சம் அதிகவரி கிடைக்க வழிசெய்யப்பட்டது. 1984-85ஆம் ஆண்டில் 96,746 குற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டு, ரூ. 245 கோடி விற்பனைத் தொகை மறைப்பு வெளிக் கொணரப் பட்டு, அரசுக்கு ரூ. 21 கோடியே 57 இலட்சம் அதிக வரி கிடைக்க வழி செய்யப் பட்டது.

இம்மாநிலத்தில் வரிவிதிப்பின் மூலம் ஏழை, எளிய நடுத்தர மக்கள் பாதிக்கப்படாமல் இருக்க, அம்மக்களுக்கு அடிப்படையாகத் தேவைப்படும் பொருட்களின் விற்பனையின் மேல் முழு வரி விலக்களிக்கப்பட்டுள்ளது.

அதாவது மக்களின் உணவுப்பொருட்கள் உதாரணமாக நெல், அரிசி, உப்பு, கோதுமை, சர்க்கரை, மற்ற தானியங்கள் அதாவ்து, கம்பு, கேழ்வரகு, சோளம், நாட்டுச் செக்கெண்ணெய், பால், தயிர், வெண்ணெய் மற்றும் மீன், மாமிசம் ஆகியவைகளின் மீது முழு வரிவிலக்களிக்கப்பட்டுள்ளது. அதுபோன்ற அனைத்துத் துணிகளின் மீதும் முழுவரி விலக்குள்ளது. தைத்து விற்கப் படும் ஆடைகளுக்கும், பொருட்களுக்கும் குறைந்த வரி விகிதம்-அதாவது விற்பனைத் தொகையில் மூன்று, சதவீதம் அமலில் உள்ளது.

ஏழை எளிய மக்களின் அன்றாடத் தேவையான விறகின் மேல் முழு வரிவிலக்குள்ளது. மண்ணெண்ணெயின் மேலிருந்து 8.5 சதவீத வரி நான்கு சதவீத வரியாகக் குறைக்கப்பட்டுள்ளது. மண்ணெண்ணெயால் எரிக்கப்படும் திரி விளக்குகள் அனைத்திற்கும் முழு வரிவிலக்குள்ளது. காய்கறிகள், பழங்கள், பூ, செடிகள் ஆகியவற்றிற்கும் வரிவிலக்களிக்கப் பட்டிருக்கிறது.

உணவு விடுதிகளில் விற்கப்படும் உணவுப் பொருட்களுக்கும், பன், பொறை, ரொட்டி முதலியவற்றிற்கும் முழு வரிவிலக்களிக்கப்பட்டுள்ளது. அப்பளம், சேமியா பொருட்களின் மேலும் 1981ஆம் ஆண்டிலிருந்து வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. முதியோரின் நலன் காக்கும் பொருட்டு மூக்குக்கண்ணாடிகளுக்கு வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. கையினால் செய்யப்படும் செங்கற்கள், மண்பாண்டங்கள் ஆகியவைகளுக்கும் வரி விலக்களிக்கப்பட்டுள்ளது.

பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கான நோட்டுப் புத்தகங்கள், கரும்பலகைகள் எழுது பொருட்கள் ஆகியவற்றிற்கு முழு வரிவிலக்

களிக்கப்பட்டுள்ளது. புத்தகங்கள் அனைத்திற்கும் வரிவிலக்களிக்கப்பட்டுள்ளது. கால்நடைகள் மற்றும் விலங்கினங்கள் விற்பனையின் மேலும், கால்நடைகளுக்கு இரையாக உள்ள புல், வைக்கோல், தாழ் தவிடு முதலியவற்றிற்கும் வரிவிலக்களிக்கப்பட்டுள்ளது. மனிதர்கள் மற்றும் விலங்குகள் சக்தி மூலம் இயக்கப்படும் விவசாயத் துணைப் பொருட்களுக்குமேலும் வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. மேலும், இயற்கை உரத்திற்கு முழு வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. ஆனால், இரசாயன உரங்கள் மீதும், பூச்சி, காளான், வேர்க் கொல்லிகளுக்குக் குறைந்த வரியாக மூன்றரை சதவீதம் விதிக்கப்படுகிறது.

நடுத்தர மக்களுக்கும் வரிவிதிப்பில் சலுகைகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒன்று மற்றும் இரண்டு அலைவரிசைகளுள்ள வானொலிப் பெட்டிகளுக்கும் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கும் வரிவிகிதம் 15லிருந்து 10 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. சைக்கிள்கள், அவற்றின் டயர், டியூபுகள், கையால் செய்யப்படும் சோப்புகளுக்கு வரிவிகிதம் குறைக்கப்பட்டுள்ளது. இயற்கைச் சக்திகளான சூரிய ஒளி, காற்று, தழை மற்றும் சாணம் ஆகியவற்றை மக்களுக்குப் பயன்படும் எரிபொருள் மற்றும் மற்றச் சக்திகளாக மாற்றிவிடும் கருவிகளுக்கு வரிவிலக்களிக்கப்பட்டுள்ளது.

பலமுனை வரிக்குட்பட்ட பொருட்கள் மட்டுமே விற்பனை செய்யும் வணிகர்கள் பதிவு செய்து கொள்வதற்கான விற்பனைத் தொகை வரம்பு ஆண்டொன்றிற்கு ரூபாய் ஐம்பதாயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், இப்பொருட்களில் வாணிபம் செய்யும் சிறு வணிகர்களுக்கு, ஆண்டொன்றிற்கு விற்பனைத் தொகை ஒரு இலட்ச ரூபாய்க்குள் இருந்தால் வரிவிதிப்பு இல்லை. இவ்வணிகர்களின் ஆண்டு விற்பனைத் தொகை ஒரு இலட்சத்திலிருந்து இரண்டு இலட்சம் ரூபாய் இருந்தால் சலுகை வரி விதிப்பு முறை அமலில் உள்ளது.

கேளிக்கை வரிவிதிப்பு இம்மாநிலத்தில் 1926ஆம் ஆண்டு முதல் அமலில் உள்ளது. இதன் மூலம் கிடைக்கும் வருவாய் உள்ளாட்சியகங்களுக்கே அளிக்கப்பட்டாலும் வணிகவரித் துறையே இவ்வரியையும் வசூலித்து வருகிறது. 1939ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்ட சட்டத்தில், 1977ஆம் ஆண்டிலிருந்து, முழு அளவில் நகராட்சி மற்றும் பஞ்சாயத்து எல்லைகளுக்குட்பட்ட திரையரங்கங்கள் இணக்கத் தொகையாக வரி செலுத்தும் முறை அமல் செய்யப்பட்டு, வரி ஏய்ப்பு எண்ணம் ஏற்படாதவண்ணம் அரசு காத்துள்ளது.

பந்தய வரி, சென்னை மற்றும் ஊட்டியில் நடக்கும் குதிரைப் பந்தயங்களின் மேல் 1935ஆம் ஆண்டு முதல் விதிக்கப்பட்டு வருகிறது. இவ்வரியும் இத்துறை மூலமே வசூலிக்கப்படுகிறது. மேலும், ஓட்டல்கள் மற்றும் தங்குமிடங்களில் விதிக்கப்படும் சொகுசு வரி 13.11.1980லிருந்து இத்துறை மூலம் வசூலிக்கப்படுகிறது.

வணிகவரித் துறை அலுவலகங்கள் பல்வேறு தனியார் கட்டடங்களில் வாடகைக்கு இருந்த நிலையினை மாற்றி அரசினால் கட்டடங்கள் கட்டப்பட்டு துறை அலுவலகங்கள் அக்கட்டடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. சென்னை கிரீம்ஸ் சாலையில், பேரறிஞர் அண்ணா பவள விழா நினைவுக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு 1983ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. வணிக வரித்துறை அலுவல

* மனிதன் எந்த அளவுக்குப் பகுத்தறிவால் தெளிவு பெறுகிறானோ, அந்த அளவுக்குப் பக்குவமாகி விட்டான் என்று பொருள்.

— தந்தை பெரியார்

கங்கள் தஞ்சாவூர், கும்பகோணம், பட்டுக்கோட்டை, சேலம், ஈரோடு, தர்மபுரி, கோவை, ஊட்டி, பொள்ளாச்சி, திருப்பூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர், கோயில்பட்டி, வேலூர், கடலூர், காஞ்சி, திண்டுக்கல், மதுரை, நாகர்கோயில், ஆகிய ஊர்களில் அரசுக் கட்டடங்களிலே இயங்கி வருகின்றன. தற்போது, திருச்சி, சென்னை, கும்பகோணம் ஆகிய இடங்களில் கூடுதல் இடங்களும், நீலகிரியில் துறை அலுவலர்களுக்கான குடியிருப்பும் கட்டப்பட்டு வருகின்றன.

வணிகர்களின் நலனுக்காக வணிகர் நல ஆலோசனைக் குழு மாநில அளவில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், அரசுக்கு வரிவிதிப்பில் ஆலோசனை கூறவும், வணிகர்களின் பொதுக்குறைகளைக் களைவதற்கும் மாநில அளவில் மாநில விற்பனை வரி ஆலோசனைக் குழு செயல்பட்டு வருகிறது. மாவட்ட அளவில் குறைகளைக் களைவதற்காக மாவட்ட ஆட்சியாளர் தலைமையிலும், துறை அலுவலர்கள், வணிகர்களின் பிரதிநிதிகள் ஆகியோரை உறுப்பினராகவும் கொண்ட மாவட்ட விற்பனை வரி ஆலோசனைக்குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.

வரி ஏய்ப்புத் தொடர்பான இரகசியத் துப்புகள் அளிப்பவர்களுக்குத் துறையின்மூலம் தகுந்த பரிசு வழங்கப்படுகிறது. அது போன்றே, வரி தவிர்ப்பு அல்லது ஏய்ப்பினை ஆராய்ந்து கண்டுபிடித்து அரசுக்கு வரி வசூலித்துத்தரும் இத்துறை அலுவலர்களுக்கு முதலமைச்சரின் திறமைச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. தமிழகத்தைப் பின்பற்றி, பிற மாநிலங்களும் இம்முறைகளைக் கடைப்பிடிக்கின்றன.

வணிகர்களின் குறிப்பிட்ட புகார்களை விசாரித்து நடவடிக்கை எடுக்க வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. அக்குழுவிடம் தெரிவிக்கப்படும் புகார்களின் மேல், உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இத்துறைக்கும் வணிகர்களுக்குமிடையே நல்லுறவு நிலவிடவும், வரிவிதிப்பு அல்லது வரிவிகிதம் தொடர்பான ஐயப்பாடுகளைக் களையவும், துணை ஆணையர் அளவில் மக்கள் தொடர்பு அலுவலர், வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறார். பிற மாநிலங்களிலிருந்து இம்மாநிலத்தில் வரிவிதிப்பு முறைகளை அறிந்து செல்ல இம்மாநிலத்திற்கு வருகை தரும் விற்பனைவரித் துறை அலுவலர்களுக்குத் தேவையான விளக்கங்களித்து வருபவரும் இவரேயாவார்.

இத்துறை மூலம் கிடைக்கும் வருவாயினை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் தமிழக அரசு, மக்களின் நல்வாழ்வு மற்றும் முன்னேற்றத் திட்டங்களுக்குப் பயன்படுத்த உதவுமுகத்தான், வரிவருவாயினைப் பெருக்கிட முழு ஒத்துழைப்புத் தாருங்கள் என மக்களையும், வணிகர்களையும் இந்தத் தமிழர் திருநாளில் மீண்டும் நல்வாழ்த்துக் கூறி விரும்பிவேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.



# எல்லார்க்கும் இல்லம்

மாண்புமிகு வீட்டுவசதி அமைச்சர்



உலக அரங்கில் இந்தியத் துணைக்கண்டம் மக்கள் தொகையில் இரண்டாவது இடத்தில் உள்ளது. வளரும் நாடுகளின் முன்னணியில்உள்ளநமதுநாட்டில்-நகரங்களில் உள்ள மக்கள் தொகைக் கூடுதல் காரணமாக அரசு வளர்ச்சித் திட்டங்களை உருவாக்க மிகவும் கடமைப்பட்டிருக்கிறது.

ஏற்கெனவே உள்ள நகரங்களின் வசதிகளைப் பெருக்க வேண்டும். புதிய நகரங்களையும் உருவாக்க வேண்டும். வசதியுடன் கூடிய மக்கள் நலன் கருதியும் இருக்கவேண்டும்.

உலகவங்கி சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம் நகரங்களில் பல வளர்ச்சித் திட்டங்களுக்குத் தமிழக அரசு மூலம் நிதி உதவிட முன்வந்துள்ளது. இதன் மூலமாகப் புதிய திட்டங்கள் பல வர இருக்கின்றன.

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் மூலமாகப் புறநகர் வளர்ச்சித் திட்டங்களும் புதிய நகரங்களை உருவாக்குவதில் நகரப்போக்குவரத்துவசதிக்கும் நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்கும் நல்ல பல திட்டங்களைத் தந்து வருகிறது.

மக்கள் கிராமப்புறங்களைவிட்டு அதிகமாக நகரங்களுக்கு வருவதைக் கட்டுப்படுத்த வேண்டும். கிராம வளர்ச்சிக்கு முதலிடம் தருவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் இந்த அரசு பல திட்டங்களின் மூலமாக ஆக்கப் பணிகளை நிறைவேற்றித் தந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மாமன்றம் 1987ஆம் ஆண்டில் வீடு இல்லாதவர்களுக்கு வீடு தரும் திட்டத்தைச் செயல்படுத்தவிருப்பதை அனைத்து நாடுகளும் ஏற்றுக்கொண்டு ஒத்துழைப்புத்தந்து 2000ஆண்டிற்குள் வீடு இல்லாதவர்களுக்கு வீடு கிடைக்க வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளது.

அதிக மக்கள் தொகை கொண்ட நமது நாட்டில், அனைவருக்கும் இல்லம் தருவது என்பது எவ்வளவு கடினமான காரியமாகும் என்பதை அனைவரும் அறிவார்கள்.

இந்த அடிப்படையில் 7வது ஐந்தாண்டுத் திட்டம் மூலமாகவும், பல்வேறு துறைகளின் மூலமாகவும் ஏழைகளுக்கு வீட்டுமனை வழங்குவது-வீடுகள் வழங்குவது இரண்டிற்கும் முதலிடம் அளித்து ஐக்கிய நாடுகள் அறிவித்துள்ள காலக்கெடுவிற்குள் அனைவருக்கும் இல்லம் தருவோம். இது புரட்சித்தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் எண்ணம்.

மனிதனுக்கு அடிப்படைத் தேவையான உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம். எனும் முதுமொழிக்கு ஏற்ப மாண்புமிகு புரட்சித்தலைவரின் அரசு தமிழகத்திற்குப் புரட்சிகரமான திட்டங்களான சத்துணவுத் திட்டம், இலவசப் பாடப்புத்தகம் வழங்கு திட்டம், சீருடை வழங்கு திட்டம் ஆகிய பல இலட்சம் ஏழை எளிய மக்கள் பயனடையும் பல நல்ல திட்டங்களை நாட்டுக்குத் தந்து வருகிறது. புரட்சித்தலைவரின் அரசுக்கு முழு ஒத்துழைப்பு தந்து நாட்டை வளர்ப்போம்! நல்லதைச் செய்வோம் என, தமிழர் திருநாளாம் இந்தப் பொங்கல் நன்னாளில் சூளுரை ஏற்போம்.!






DIPR/1416/207/86/NAS

# தை முதலே தமிழர்க்கு ஆண்டு முதல்

மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர்

**திரு. ஆனூர் ஜெகதீசன்.**

தமிழினம் தொல்பழம் பெருமைவாய்ந்த இனமாகும். கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய மூத்த இனம் தமிழினம் என்பர் ஆய்வறிஞர்கள். நயத்தக்க நாகரிகம் வாய்ந்த தனிப்பெரும் இனம்தான் தமிழினம். கடலைக் கண்டு கதிகலங்கிக் கொண்டிருந்தனர் உலகில் பல இனத்தவர். ஆனால், தமிழினமோ கடலை அடக்கி ஆண்டு கடலாதிக்கம் செலுத்தி வந்துள்ளது. நம் இனமூதாதைகள்-முன்னோர்கள் இயற்கை யோடு இயைந்த வாழ்வில் இன்பம் கண்ட வர்கள். தமிழரின் வாழ்வியல் கூறுகளை உலகத்தவர் கண்டு வியப்பெய்தியுள்ளனர். தமிழர்கள் தமது மகிழ்ச்சியினை மற்றவர் களோடு பகிர்ந்து இன்புற ஏராளமான விழாக்களைக் கொண்டாடி உள்ளனர். விழாக்களை மனித நேய அடிப்படையில் அமைத்துள்ள பாங்கு தமிழர்தம் பண்பாட் டின் முதிர்ச்சியைப் புலப்படுத்தி வருகின்றது.

விழா எனும் தமிழ்ச் சொல்லுக்கு விருப்பம் என்று பொருள் கண்டுள்ளனர். விரும்பி— விழைந்து செய்வதுதானே விழாவாக இருக்க முடியும்? தமிழகத்தின் பழம்பெரும் நகரங் களில் மூதூர்களில் விழாக்கள் பலப்பல நடந்து கொண்டே வந்திருக்கின்றன. இதனை ''விழவுமலி மூதூர்'' என்று சங்க இலக்கியம் கூறும். பொதுவாகத் தமிழர்களின் விழாக்கள் முழுநிலாக் காலத்திலேயே நிகழ்ந்துள்ளன.



ஜனநாயக நாட்டில் பிரசாரம் என்பது ஒரு கலை, ஆகையினால், கலையைக் கலைக்காகப் பயன்படுத்த வேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்தில் அது பிரசாரத்திற்காகப் பயன்படுமானால் அது கலை இலக்கணத்திற்கு அப்பாற்பட்டதல்ல என்பதாக நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று—

பிரசாரம் என்பது கெடுதல் என்று இதுவரையில் யாவரும் சொல்லவில்லை. பிரசாரம் என்பதன் உட்பொருளே, தான் விரும்புகின்ற கருத்தை, தான் நம்புகின்ற கருத்தை, மற்றவர்கள் விரும்புகின்ற வகையிலேயும், நம்புகின்ற முறையிலேயும் பல்வேறு வகைகளிலே எடுத்துச்சொல்லுவதுதானே? இதுவே பிரசாரம் என்ற சொல்லுக்கு இலக்கணமாகும்.

—பேரறிஞர் அண்ணா



நாட்டுக்குழை தம்பி—இந்த
நானிலத்தை எண்ணி!
வீட்டுக்குழை தம்பி—இங்கு
மீதிப்பெயர் எண்ணி!

—பாவேந்தர் பாரதிதாசனார்

நிலவுப் பயன் கொள்வதில் அளவிலா ஆவல் தமிழர்களுக்கு இருந்திருக்கிறது. ஆனால் விந்திய மலைக்கு அப்பால் நடக்கும் விழாக்கள் இருட்செறிந்த காலத்தில்தான் நடப்பதாகத் தெரிகிறது-தமிழ் மக்கள் வெளிச்ச விழாக்களிலே வேட்கை மிக்குடையவர்களாக இருந்துள்ளனர்; இருக்கின்றனர். பூம்புகார் கடற்கரைப் பட்டினத்தில் நடந்த இந்திர விழா முழுநிலாக் காலத்தில் நிகழ்ந்ததாகச் சிலப்பதிகாரத்தால் அறிய முடிகிறது.

விழாவில் மிகுந்த விழைவு கொண்ட தமிழர்கள் வீட்டு விழாக்களைக்கூட நாட்டு நலத்தை அடிப்படையாகக் கொண்டே கொண்டாடியுள்ளனர். தமிழர்களின் விழாக்களில் தலைசிறந்த விழாவாக, இன்று வரை நின்று நிலைபெற்று நிகழ்ந்து வருவது பொங்கல் விழா ஒன்றேயாகும். இதிகாச, புராணக் கருத்துக்கள் இடம்பெறாத வகையில் இன்றுவரை கொண்டாடப்படும் தனிப் பெருவிழா-தமிழர் திருவிழா ; பொங்கல் புதுவிழாவாகும். இவ்விழாவைப் புராணக்கலப்புடன் மாற்றி அமைக்க எடுக்கப்பட்ட முயற்சிகளையெல்லாம் முறியடித்து முகிலைக் கிழித்துவந்த முழு நிலவாக இவ்விழா ஒளிவீசி வருகிறது. பொங்கல் என்னும் சொல்லே மகிழ்ச்சியைக் குறிக்கும். விழா என்றால் மகிழ்ச்சி இல்லாமல் இருக்க முடியுமா? தை பிறந்தால் விழா பிறந்தது என்று பொருள். தமிழகத்துக் கிராமங்களில் தைப்பொங்கலுக்குத்தான் மிகுந்த வரவேற்பு. பொங்கல் வந்ததும் தமிழர்களுக்குப் புதுவாழ்வு பிறந்ததாகப் பூரித்துப் போவர்.

பழங்காலத்தில் தைத்திங்கள் ஆண்டின் முதல் மாதமாக இருந்துள்ளது. தைத்திங்களைப் பொங்கற் புத்தாண்டாகக் கொண்டாடியுள்ளனர் ''தைம் முதல் தமிழர்க்கு ஆண்டு முதல்'' என்பார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். தற்போது தை முதலை இழந்து சித்திரைத் திங்களை ஆண்டு முதலாகக் கொண்டாடி வருகிறோம்.

தமிழர்களுக்குத் தொடர் ஆண்டு இல்லாதது பெருங்குறையாகும். உலகில் பல இனத்தவர்கள் தங்கள் தலைவர்களின் பிறந்த ஆண்டினையே தொடர் ஆண்டுகளாகப் பயன்படுத்தி வருகின்றனர். அறுபதாண்டு வட்ட முறை தமிழர்களுக்கு உரியதன்று. பிரப முதல் அட்சவரையுள்ள அறுபதாண்டுகளை ஒரு முறை வாய்விட்டுக் கூறிப் பார்த்தாலே இது வெட்ட வெளிச்சமாகத் தெரியும். ராட்சச, பரிதாபி, விரோதி, விரோதிகிருது, ருத்ரோத்காரி, ரக்தாட்சி, ரௌத்திரி இவைகளெல்லாம் எப்படி தமிழாண்டுகளாக இருக்க முடியும்? தமிழன் தனது ஆண்டின் பெயரைத் தமிழில் கூட வைக்காமலா இருந்திருப்பான்? இன்று வேண்டுமானாலும் தமிழன் தனக்கிடும் பெயரையே தமிழாக இல்லாமல் - ரமேஷ், மகேஷ், சுரேஷ், கணேஷ் என்று மொழிப் பற்றில்லாமல் வைத்துக் கொண்டு திரிவான். ஆனால் நம் முன்னோர்கள் சங்கம் வைத்து தமிழ் வளர்த்த பெருமையுடையவர்கள்; அவர்கள் எப்படி அறுபது ஆண்டின் பெயர்களையும் அப்படியே வேற்று மொழிச் சொற்களாக ஏற்றிருப்பார்கள்? ஏற்றிருந்தால் அவர்கள் தமிழர்கள் என்று நம்மால் எப்படி ஏற்றுக் கொண்டிருக்க முடியும்?

நாரதருக்கும் கிருஷ்ணனுக்கும் பிறந்த அறுபது குழந்தைகளின் பெயரை 60 ஆண்டுகளுக்குச் சூட்டிப் புராணப் போக்கில் திசை திருப்பப்பட்டதால் உலகில் தனக்கெனத் தொடர் ஆண்டில்லாத ஒரே இனமாகத் தமிழினம் இருந்திடும் இழிநிலைக்கு ஆளாகியிருக்கிறது.

இந்த இழிவெண்ணிப் பார்த்த அறிஞர் பெருமக்கள் கூடி ஆய்ந்து தமிழனுக்கு உலகப் புகழைத் தேடித்தந்து கொண்டிருக்கிற திருவள்ளுவரின் பெயரால் தொடராண்டு கொள்வதென முடிவு செய்தனர். இயேசு நாதருக்கு 31 ஆண்டுகள் முன் பிறந்தவர் திருவள்ளுவர் என்று தீர்மானித்தனர்.

இம்முடிவின் அடிப்படையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் தலைமையில் உள்ள தமிழ் நாட்டரசு திருவள்ளுவர் ஆண்டு முறையை வழக்குக்குக் கொண்டுவர அரசாணையிட்டும் திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடியும் தமிழினத்திற்குப் பெருமை சேர்த்து வருவதை உணர்வது தமிழர்தம் கடமையாகும்.





# புதுயுகம் பிறக்கும் புத்தாண்டு

மாண்புமிகு மறுவாழ்வு
-வேலைவாய்ப்புத்துறை அமைச்சர்
திரு.டி.இராமசாமி

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று
னைவரும் உறவினர்களே' போன்றதொரு
ந்த்தை உலகளவில் வற்புறுத்தி வரு
றார்கள். இருப்பினும் நடைமுறையில்
லகிலுள்ள ஒவ்வொரு நாடும் தொன்று
நாட்டு அந்நாட்டில் வாழ்ந்து வரு
ன்ற குறிப்பிட்டதொரு தேசிய இன
ங்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்து
ருகின்றது. இந்தக் காரணத்தினால்தான்
திய புதிய குடிபெயர்ப்புச் சட்டங்களை
மெரிக்க, ஆப்பிரிக்க, அரபுநாடுகள் மற்
ம் சிங்கப்பூர் என பெரும்பாலான நாடுகள்
யற்றி வருகின்றனவென்றால் அது மிகை
ாகாது. இதையொட்டியே குறிப்பிட்ட கால
ட்டத்திற்கு பின்பு ஒரு நாட்டில் குடியேறிய
ர்கள் அந்நாட்டைவிட்டு வெளியேறி தாய்
டு திரும்பவேண்டும் என்ற கருத்துடைய
ப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டன. இதன்
டியே பர்மா, வங்காளதேசம், வியட்நாம்,
லங்கை முதலிய நாடுகளிலிருந்து இந்தியர்
ளை நாம் நம்நாட்டில் குடியமர்த்தும் நிலை
பற்பட்டது. மத்திய அரசு இத்துறைக்கு,
னைவரும் இந்தியர்களே என்ற அடிப்படை
ல் கணிசமான அளவிற்கு உதவிபுரிந்து வரு
ன்றது.

இலங்கையில் தற்போது இனக்கல
ரங்கள் ஏற்பட்டுள்ளதன் காரணமாக அதிக
ளவில் இலங்கைவாழ் தமிழர்கள் அகதிகளாக
மிழகத்தில் தஞ்சம்புகுந்து கொண்டிருக்கின்
னர். அதனால் படகுகளில் வந்து முகாம்
ளில் தங்கியுள்ள அகதிகளின் எண்ணிக்கை
0,676 நபர்கள், பிற இடங்களில் தங்கியுள்ள
கதிகளின் எண்ணிக்கை 94,147 நபர்கள்,
மாத்தம் அகதிகளின் எண்ணிக்கை 1,24,823
30.12.'85 கணக்குப்படி) இவர்களின் இன்
ல் தீர்க்கும்பணி உடனடியாகவும், விரை
ாகவும் நடைபெறவேண்டும் என்ற கருத்தில்
ான் புரட்சித்தலைவர் அவர்களின் ஆலோ
னைப்படி மக்கள் மறுவாழ்வுத்துறை தனித்
துறையாக அமைக்கப்பட்டது.

தாயகம் திரும்புவோருக்கும், குடிபெயர்ந்தோருக்கும் அவர்கள் வெளிநாடுகளில் செய்துவந்த தொழிலையே இங்கும் செய்ய வழிவகை செய்தால்தான் நிலையான பயனை நல்கும் என்ற கருத்தில் நீலகிரி, கன்னியாகுமரி ,ஆனைமலை முதலிய பகுதிகளிலுள்ள தேயிலை, ரப்பர், சின்கோனா தோட்டங்களில் பெரும்பாலானோர் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தில் இதுவரையில் 95,598 குடும்பங்கள் பயனடைந்துள்ளனர். (மலைத் தோட்டங்கள் தேயிலை :2,326, ரப்பர்:285, சின்கோனா: 125,விவசாயத் திட்டங்கள்:791, நிலகுடியிருப்பு: 2,161, தனியார் நிலம் வாங்கும் திட்டம்:149, கூக்கல்: 176, கூட்டுறவு நூற்பாலை: 3,536, தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கிக்கடன் திட்டம்: 4,912, சுயவணிகக்கடன்: 75,580 (பால்பண்ணை), சுய வேலைவாய்ப்புத் திட்டம் (பால்பண்ணை, தீப்பெட்டி தயாரித்தல் மற்றும் விசை பொருத்திய சைக்கிள் ரிக்ஷா): 526, பிறமாநிலங்களுக்கு அனுப்பப்பட்டவர்கள்: 5,031. இன்னும் பிற குடியமர்த்தப்பட்டவர்களுக்கு விவசாய நிலம் வழங்கியும், கூட்டுறவு, தேசிய நூற்பாலைகளில் பணியிலமர்த்தியும், பால் பண்ணைகளில் வேலைக்கமர்த்தியும் உள்ளோம்.

இந்தியா ஒரு வளரும் நாடு என்பதால் இங்கு புதுப்புது நவீன தொழில் துறைகள் உருவாகுவதற்கான வாய்ப்புகளும், நவீன மேம்பாட்டுத் திட்டங்களும் ஏற்படுவதில் வியப்பில்லை.

தமிழகத்தில் பினாஸ்டர் ஆப் பாரிஸ் தயாரிக்கும் கூட்டுறவுத்தொழிற்சங்கம், பாலிஒவன் சாக்குப்பைகள் தொழிற்சங்கம், பாரத் குளோரைடு கூட்டுறவுத்தொழிற்சங்கம், நாராயண அம்மாள்புரம் பெரிய தொழில்திட்டம், கோவில்பட்டி, சாத்தூர் தீப்பெட்டி தொழிற்

சாலைகள் முதலிய திட்டங்கள் எதிர்வரும் ஆண்டுகளில் இம்மக்களைப் பணியமர்த்தி வைக்க அரசு நடவடிக்கையெடுத்து வருகின்றது. மேலும் உப்பு தயாரித்தல், விசை பொருத்திய ரிக்ஷா ஓட்டுதல், மீன் பிடிக்கும் தொழில், பட்டுப்பூச்சி வளர்ப்புத் தொழில், எழுதுபொருள் தயாரித்தல் முதலிய தொழில்களில் விருப்பமுள்ளவர்களுக்குப் பயிற்சியளித்து கடனும் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. இவ்வழிமுறை இவர்களுக்குச் சுய வேலைவாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்ள உதவும்.

ஏற்கெனவே தமிழகத்திலுள்ள மக்களுக்கும் வேலைவாய்ப்புக்கான பயிற்சி அளித்து தமிழகத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தை குறைப்பதற்கான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக வேலை கிடைக்காமலிருக்கின்றவர்களுக்கு உதவித் தொகையாக ரூ.50, ரூ.75, ரூ.100 என்று அவரவர் கல்வித் தகுதியினடிப்படையில் வழங்கப்படுகிறது.

பொதுவாக நிலவும் வேலையில்லாப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முயற்சியில் குடும்பத்தில் ஒருவருக்கு வேலைவாய்ப்பளிக்கும் திட்டத்தினை இந்த அரசு ஏற்கெனவே ஒரு கொள்கையாக ஏற்றுக்கொண்டுள்ளது. தச்சு, பற்றவைப்பு, செங்கல் தயாரிப்பு, கையுறை தயாரிப்பு போன்ற தொழில்களில் குடும்பத்தில் ஒருவருக்குப்பயிற்சியளிப்பதன் மூலம் ஆதரவற்ற திக்கற்ற மகளிருக்கு நவீனமுறையில் வீட்டைப்பராமரிக்கும் பயிற்சியளிப்பதன் மூலமும், வீட்டுவசதிச் சேவை நிலையங்களை (ஏழு) சென்னையிலும், புறநகர்ப் பகுதிகளிலும் அமைப்பதன் மூலம், முட்டை, கோழிக்கறி விற்பது போன்ற சிறுதொழில் செய்ய உதவுவதன் மூலமும் இத்திட்டத்தினைச் செயலாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கைவினைஞர்கள் பயிற்சிநிலையங்கள் நிறுவப்பட்டு தொழில்திறத்தை வளர்க்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பெண்களுக்கென்ற ஐந்து தொழிற்பயிற்சி நிலையங்கள் திறுவப்பட்டுள்ளன.

அயல்நாடுகளில் பணியிலமர்த்தும் தனியார் நிறுவனங்கள் வேலையில்லாதோரை ஏமாற்றுவதையும், சட்டத்திற்குப் புறம்பான செயல்களைச் செய்தவதையும் தடுக்கும் நோக்கத்தில் தமிழக அரசு நிறுவனம் என்ற வகையில் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் செயல்பட்டு வருகின்றது. இதுவரை இந்நிறுவனத்தின் மூலம் 2,306 பேர் வெளிநாட்டில் வேலைக்கமர்ந்துள்ளனர்.

எந்தவொரு திட்டமும் பொதுமக்களின் ஆதரவின்றிச் செயல்வடிவம்பெற இயலாது. ''மக்களிடம் செல்வோம், மக்களிடம் கற்போம், மக்களுக்காக உழைப்போம்'' என்ற அண்ணாவின் கொள்கையைத் தன் உயிர் மூச்சாகக்கொண்டு செயலாற்றி வருகின்ற புரட்சித் தலைவரின் தலைமையில் இயங்கும் இவ்வரசுக்குத் தமிழக மக்கள் அனைத்து ஒத்துழைப்பையும் நல்கிடவேண்டும் என்று இந்நாளில் கேட்டுக்கொள்கிறேன். ●

# வயதும் வசந்தமும்

—குழந்தைக் கவிஞர்

## அழ. வள்ளியப்பா

வயது முதிர்ந்த மனிதர் ஒருவர்
மரத்தின் அடியில் வந்தார்
உயரே நிமிர்ந்து பார்த்து விட்டு
உடனே அவரும் சொன்னார்;
பழமோ, காயோ, பூவோ இல்லை;
பச்சை இலையும் இல்லை;
நிழலும் இல்லை; கிளைகள் மட்டும்
நீட்டி நிற்கு தய்யோ!

மரம் கூறுகிறது :

இலைகள் உதிரும் காலம் தன்னில்
என்னைப் பார்க்கும் ஐயா,
சிலநாள் சென்ற பின்னர் என்னைத்
திரும்ப வந்து பார்ப்பீர்.

தளிரும், இலையும், பூவும், பிஞ்சும்
தழைத்து நிற்கக் காண்பீர்
பழங்கள் கூடப் பிறகு தருவேன்;
பறித்துத் தின்று மகிழ்வீர்.

ஆண்டு தோறும் அழகு பெறுவேன்;
அதுவே வசந்த காலம்!
மீண்டும் உமக்கு இளமை வருமோ?
விடை அளிப்பீர், தாத்தா!



# இனிக்கும் செய்தி

## கி. ஆ. பெ. விசுவநாதம்

தமிழ்த் திருநாளும், தமிழர் திருநாளும், திருவள்ளுவர் திருநாளுமாகிய இப்பொங்கற் பெருநாளில் 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என நடைபெறும் பொன்மனச் செம்மலின் தமிழக ஆட்சி 'தமிழரசு' இதழைப் பொங்கல் மலராக வெளியிடுவது மகிழ்ச்சிக்குரியது.

'மாடெலாம் பெருகிப் பொங்க!
மாண்புறு வீரம் பொங்க!
காடெலாம் விளைவு பொங்க!
கல்வியோ டொழுக்கம் பொங்க!
நாடெலாம் தொழில்கள் பொங்க!
நல்லிசை தமிழும் பொங்க
வீடெலாம் வாழ்வு பொங்க
விரும்பி நாம் வாழ்த்துவோமே!''

என்ற பொங்கல் வாழ்த்தை நாம் ஒவ்வொருவரும் மனம் மகிழ்ந்து கூறியாக வேண்டும்.

தமிழக மக்களின் மனம், பொங்கிப் பெருகி மகிழ்ச்சியடையும் இந்நாளில் மேலும் பொங்கி மகிழ்வதற்குரிய அடியிற் கண்ட இரு நிகழ்ச்சிகளையும் உடனே நடைபெறச் செய்யுமாறு கட்டளை பிறப்பிக்க வேண்டுமெனப் பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களின் சிந்தனைக்கு முன் வைக்கிறேன்.

| | |
|---|---|
| தமிழ் வளர்ச்சிக் கழகம் | குறளகம் |
| தமிழ்ப் பண்பாட்டுக் கழகம் | தலைமைச் செயலகம். |
| உலகத்தமிழ் மன்றம் | தரமணி |
| திருக்குறள் பரப்பும் மையம் | வள்ளுவர் கோட்டம். |
| பல்கலைக் கழகத் துறை | தலைமைச் செயலகம். |
| உலகத் தமிழ் மாமன்றம் | மதுரை |
| இயல்,இசை,நாடகமன்றம் | சென்னை. |

என ஏழு அமைப்புகள் தனித்தனியாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. இவை அனைத்தையும் ஒன்றுபடுத்தி ஒரே அமைப்பாக அமைத்து ஓர் அமைச்சரின் கீழ் செயல்படச் செய்வது நலமாகும். இவ்வாறு செயல்பட்டால் அது தமிழகத்தில் மட்டுமல்ல பிற மாநிலங்களிலும் வெளிநாடுகளிலும் உள்ள தமிழ் மக்களின் கல்வி வளர்ச்சி பற்றியும் கருத்தைச் செலுத்தும்.

டிசம்பர் 24 முதல் 31 வரை ஏழு நாட்கள் ஈஸ்டர் விடுமுறை என முன்பு உள்ள ஆங்கில ஆட்சி கொண்டாடியுள்ளது. அதைப் போலவே இத்தமிழர் திருநாளையும் கொண்டாடச் செய்யவேண்டுமென்று தமிழகப் புலவர் குழு முடிவு செய்துள்ளது. தமிழ்ப் பெருமக்கள் அனைவரும் இதனை மகிழ்ச்சியோடு வரவேற்கின்றனர்.

முதல் நாள் அழுக்குகளைப் போக்கும் போகிப் பண்டிகை

2-ஆம் நாள் தைப் பொங்கல் உழவர் திருநாள்.

3-ஆம் நாள் மாட்டுப் பொங்கல் திருவள்ளுவர் திருநாள்.

4-ஆம் நாள் சல்லிக்கட்டு வீர விளையாட்டுகள்

5-ஆம் நாள் புலவர்களைப் போற்றும் இயல்விழா.

6-ஆம் நாள் தமிழிசையை வளர்க்கும் இசைவிழா.

7-ஆம் நாள் கலைஞர்களைப் போற்றும் நாடகவிழா.

என ஏழு நாட்கள் நடைபெற வேண்டும். இது தமிழின் அருமையையும் தமிழிசையின் பெருமையையும், தமிழகத்தின் சிறப்பையும், தமிழ் மக்களின் பண்பாட்டையும் வீர, விளையாட்டுகளையும் உலகுக்கு அறிவிக்கப் பெருந்துணை செய்யும்.

இவ்விரண்டையும் பொன்மனச் செம்மல் இப்போது செய்ய அறிவித்தால், அது செந்நெல் அரிசியும், தீங்கரும்புச் சர்க்கரையும் கலந்த பொங்கலைப் போல தமிழுக்கும், தமிழர்க்கும் வழங்கும் இனிக்கும் பொங்கற் செய்தியாக அமையும்.

வாழட்டும் தமிழகம்!
வளரட்டும் பொங்கல் விழா!!

# இளைய தலைமுறையே வருக!

டி. ஆர். ரகுநாத்

**சி**னிமா!

இன்று மனித வாழ்க்கையிலே கலந்துள்ள ஒரு முக்கியமான அம்சம்!

பல தொல்லைகளுக்கிடையே அன்றாட வாழ்க்கையை நடத்தி வரும் மக்களுக்கு மன ஆறுதல் அளிக்கக்கூடியஒரு எளியபொழுது போக்குச் சாதனம்!

தொழில் என்று எடுத்துக் கொண்டால் - அது, அரசாங்கத்திற்கு ஏகப்பட்ட வருவாயைத் தரும் ஒரு காமதேனு! ஆயிரக் கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்புத் தரும் ஒரு தொழிற் சாலை!

ஒரு திரைப்படம் தனிப்பட்ட மனிதனால் உருவாக்கப்படுவதில்லை. அது - அதற்கு முதலீடு செய்யும் தயாரிப்பாளர் - சொல்லப் போகும் கருத்தை எழுத்து வடிவத்தில் தரும் கதாசிரியர் - வசனகர்த்தா - அதை உருவகப் படுத்தும் நடிக - நடிகையர்கள்- அவர்களுக்கு, பாத்திரத்திற்கேற்ற தோற்றத்தைத் தரும் ஒப்பனையாளர் - உடை அமைப்பாளர் - கதை நடக்கும் சூழ்நிலையைஅமைத்துத் தரும்அரங்கமைப்பாளர் - சண்டைக் காட்சிகளைத் தொகுத்துத் தரும் சண்டைப் பயிற்சியாளர் - அவரைப் போன்று நடனப் பயிற்சியாளர்- காட்சிகளைப் படச்சுருளில் பிம்பங்களாக்கும் ஒளிப்பதிவாளர் - கோர்வையாக்கும் படத்தொகுப்பாளர் - பாடல்கள் எழுதும் பாடலாசிரியர் - அதற்கும் பின்னணிக்கும் இசை அமைக்கும் இசையமைப்பாளர்-

இவர்களுடன் மற்றும் பலரும் சேர்ந்து கூட்டு முயற்சியில் உருவாக்குவதுதான் திரைப்படம்.

இயக்குனர் என்பவர், சொல்லப்போகும் கதையை மனதில் பதிய வைத்துக் கொண்டு-ஆரம்ப முதல் முடிவு வரை, மேலே கூறப்பட்ட அனைவரையும் அவரவர் வேலையைத் தன் எண்ணத்திற்கும் தேவைக்கும் ஏற்றவகையில் செய்யத் தூண்டும் ஒரு தலைவன்!

அவர்களிடம் இருக்கும் திறமைகளை வெளிக்கொணர்ந்து ஒன்றுபடுத்தி படத்தின் வெற்றிக்கு உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டிய ஒரு நிர்வாகி!

படத்தினை இயக்க ஒப்புக் கொண்ட நாள் முதல் படத்தின் வெளியீடு வரை ஏற்படும் பல இன்னல்களை எதிர்த்து நின்று போராடி - தொல்லைகளைத் தோளில் தாங்கும் ஒரு சுமை தாங்கி!

படத்தின் முழு வெற்றி தோல்விகளுக்கு இவரே காரணவாதி. அதனால்தான் இவருக்குத் தனி மரியாதை-கௌரவம் தரப்படுகின்றது. தமிழ் சினிமாவின் ஆரம்ப காலத்தில் டைரக்டர்கள் ராஜா சாண்டோ - ராஜா சந்திரசேகர் - கே. சுப்ரமணியம் ஆகியோர் மிகவும் பிரபலமாக இருந்தவர்கள்.

இவர்கள் இயக்கிய பல படங்கள் இன்று வரை காவியங்களாக அமைந்து, பல ரசிகர்கள் பார்த்து ரசிக்கும்படியாக உள்ளன.

இவர்கள் பல வெற்றிப் படங்களை மட்டுமேயல்லாது பல திறமை படைத்த டெக்னீஷியன்களையும் நடிகர்களையும் அறிமுகப்படுத்தினார்கள்.

அவர்களைத் தொடர்ந்து ஏ. பீம்சிங், கிருஷ்ணன்-பஞ்சு, ஏ. சி. திருலோகசந்தர் போன்றோர் அடுத்த தலைமுறையினராக வந்து கொடி கட்டிப் பறந்தார்கள்.

காலத்தின் மாறுதலுக்கு ஏற்ப கதைகளிலும் மாறுதல் ஏற்பட்டு ஒரு புதுமை மலர்ந்தது. இதற்கு முன்னோடியாக இருந்தவர் டைரக்டர் ஸ்ரீதர். கதையைச் சொல்வதில் அவர் ஏற்படுத்திய பாணி, ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்தது.

இவர் வகுத்த பாணிக்கு மெருகேற்றிய பெருமை டைரக்டர் கே. பாலசந்தரைச் சேரும்.

இவர்கள் வகுத்த இலக்கணங்களைத் தமிழ் சினிமா பல வருடங்களாகப் பின்பற்றிக் கொண்டிருந்த கால கட்டத்தில்; இன்றைக்கு அனைவராலும் பாராட்டப்படும் இளைய தலைமுறை - புதிய தலைமுறையின் தலைவன் பாரதிராஜா விடிவெள்ளியாகத் தோன்றினார்.

தன்னுடைய படைப்புகளிலே பல புதுமைகளைக் கையாண்டு மக்களின் ரசனையை மாற்றியமைத்த மறவரிலர்.

இவரைப் போலவே இன்று புதுமைகள் பலவற்றைப் புகுத்தும் பல புது டைரக்டர்கள் வந்துள்ளனர். பாலுமகேந்திரா, பாக்கியராஜ், பாண்டியராஜ், ஆர். சுந்தர்ராஜன், மணிவண்ணன் போன்ற பலரையும் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

அவரவர் தமக்குரிய தனி பாணியிலே புதுமைப் படைப்புக்களை உருவாக்கி வருகின்றனர்.

தமிழ்க் கலையுலகம் நன்கு வளர்ந்து வருகின்றது.

இன்று தமிழ் டைரக்டர்களிலே மூத்தவன் என்ற முறையிலே நான் இந்தப் புதிய தலைமுறையினரையும் இவர்களோடு இணையப் போகும் இளைய தலைமுறையினரையும் வருக வருக என வரவேற்கிறேன்.

வெல்க! வெல்க! என வாழ்த்துகிறேன்.

பின்குறிப்பு : கட்டுரையாளரின் நினைவுக்கு வராதவர்கள் மன்னிக்கவும். ●





# தமிழ்ப் பொங்கல்

[illegible]

**தா**ய்வைத்த தமிழ்ப் பொங்கல்
தனதெனப் பொங்கட்டும்;
வாய்வைத்த செங்கரும்பில்
வளர்சுவைதான் பொங்கட்டும்!

உழவர்பால் நன்றிசொலும்
உணர்வின்றும் பொங்கட்டும்;
கிழவர்பால் இளமைநலம்
கிளுகிளெனப் பொங்கட்டும்!

மனையெலாம் மகிழ்ச்சிவெள்ளம்
மணமெனப் பொங்கட்டும்;
வினையெலாம் வெற்றியாக்கும்
வேலனருள் பொங்கட்டும்!

இலக்குமியாள் கடைக்கண்ணின்
இன்னருள்தான் பொங்கட்டும்;
கலக்கமிலாச் சிந்தனைகள்
கதிரொளிபோல் பொங்கட்டும்!

மைவிழியார் மாதரிடை
மஞ்சள்நலம் பொங்கட்டும்;
பொய்மொழியா மனிதரிடம்
புகழ்முற்றும் பொங்கட்டும்!

இன்னொருவர் நலம்பாடும்
இதயமெலாம் பொங்கட்டும்;
என்னருமைத் தமிழ்மொழியின்
இனிமையெலாம் பொங்கட்டும்!

பல்லுயிரும் பகிர்ந்துண்ணும்
பொதுவுடைமை பொங்கட்டும்;
தொல்லுலகில் உழைத்துண்போர்
தூயநலம் பொங்கட்டும்!

என்மனைபோல் எவர்மனையும்
இன்புறவே பொங்கட்டும்;
பொன்மகனே! நீமட்டும்
பகையுணர்வில் பொங்காதே!

PCCB

புதுக்கோட்டை மத்திய கூட்டுறவு வங்கி

புதுக்கோட்டை - 622 001

- எங்களது நகரக்கிளை தினமும் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை வாடிக்கையாளர்களின் நன்மையைக் கருதி தொடர்ந்து செயலாற்றுகிறது!

- ஞாயிறு உட்பட வாரத்தில் 7 நாட்களும் வங்கி உண்டு! பங்கு கொண்டு பயன் பெறுவீர்!

- எங்களது வங்கியின் "கற்பகத்தரு" திட்டத்தில் பங்கு கொண்டு பணம் பெறுவீர்!

- முற்றிலும் பெண்களைக் கொண்டே செயலாற்ற விருக்கும் எங்களது கிளையினை புதுக்கோட்டை நகரில் விரைவில் எதிர்பாருங்கள்.

எஸ். நடராசன்,
பி.காம்.,(ஆனர்ஸ்)
செயலர்

தி. அறிவுக்கரசு,
பி.எஸ்சி., எச்.டி.சி.
தனி அலுவலர்


# தமிழர் திருநாள் சலுகைகள்


மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்

## திரு. அ. அருணாசலம்


ஆதிதிராவிடர் - பழங்குடியினர் சமூக பொருளாதார நிலையை உயர்த்த முனைப்புடன் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்களின் சீரிய தலைமையில் செயல்படுகிறோம். அவர்களுடைய வாழ்க்கை முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துமுகத்தான் கல்வி, பொருளாதாரம், வேலைவாய்ப்பு, வீட்டுவசதி மற்றும் அடிப்படைத் தேவைகள் ஆகியவற்றை அளிக்க சிறப்புத் திட்டங்களை வகுத்து செவ்வனே செயல்படுத்துகிறது. ஆதிதிராவிடர், சமூக பொருளாதார முன்னேற்றம் அவர்களுக்கு அளிக்கப்படும் கல்வியைப் பொறுத்து இருப்பதால், அவர்களின் கல்விக்கு மாண்புமிகு புரட்சித்தலைவர் அரசு முன்னுரிமை வழங்குகிறது.

தமிழ்நாட்டில் 1 முதல் 12-வது வகுப்பு வரை எல்லோருக்கும் இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. ஆனால் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு முதுநிலை பட்டப்படிப்புவரை இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. மெட்ரிக் படிப்புக்கு முந்தைய படிப்புக்கும், அதற்கு மேற்பட்ட படிப்புக்கும் இவர்களுக்குப் பல சலுகைகள் அளிக்கப்படுகின்றன. இவைகளினால் ஆண்டுதோறும் சுமார் 59 ஆயிரம் ஆதிதிராவிடர் மாணவ மாணவியர்களும் 300 பழங்குடி மாணவர்களும் பயனடைகின்றார்கள். இவை தவிர ஆதிதிராவிடர், பழங்குடியினர் திறமையை ஊக்குவிக்கும் திட்டம், காந்தியடிகள் நினைவு படிப்பு உதவித் தொகை, தகுதி - வருவாய் பரிசுத் திட்டம் போன்ற பல திட்டங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டங்களினால் சுமார் 8000-க்கும் மேற்பட்ட மாணவ - மாணவியர் பயனடைகிறார்கள்.

கல்விக்காக இவ்வாண்டு, திட்டத்தின் கீழ் மற்றும் திட்டத்தில் அல்லாதவை கீழ் 26 கோடியே 22 இலட்சம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஒதுக்கியுள்ளார்கள். மேற்படி நடவடிக்கையால் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரில் கற்றோர் நிலை 1971-ல் இருந்ததை விட இப்போது முறையே 7.85 மற்றும் 11.43 சதவிதமாக உயர்ந்துள்ளது. இதே கால அளவில் பொதுமக்கள் தொகையில் கற்றோர் நிலையில் உயர்வு 7.30 சதவிதமாகும். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அரசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டுக்காகப் பல நல்ல திட்டங்களைத் தீட்டிச் செயலாற்றி வருகிறது.

பாசனக் கிணறுகள் வெட்டுவதற்கும் உழவு மாடுகள் வாங்குவதற்கும் நடப்பு ஆண்டில் 10.13 இலட்சங்கள் செலவிடப்பட இருக்கிறது. மேலும் கிராமப்புற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினக் கைவினைஞர்கள் சுய முயற்சியால் தொழில் செய்ய, சிறு தொழில்கள் தொடங்க மற்றும் பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தி கறவை மாடுகள் வழங்கவும் நடப்பு ஆண்டில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு ரூ. 32.15 இலட்சங்கள் ஒதுக்கி செயல்படுத்தி வருகிறது. ஆதிதிராவிட மக்களின் பாதுகாவலர் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் ஆட்சியில் இதுவரை 8 இலட்சம் ஆதிதிராவிடக் குடும்பங்களுக்கு வீட்டு மனைகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாண்டு மட்டும் 20 ஆயிரம் ஆதிதிராவிட குடும்பங்கள் வீட்டு மனைகள் பெற ரூ.98 இலட்சத்து 88 ஆயிரம் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவர் அவர்கள் ஒதுக்கியுள்ளார்கள். 1974-ஆம் ஆண்டு முதல் 1985 ஏப்ரல் திங்கள் முடிய ஆதிதிராவிடருக்காக "தாட்கோ" மூலம் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 71 ஆயிரத்து 397 ஆகும். ஆனால் 1985-86ல் மட்டும் ஆதிதிராவிடருக்காக தாட்கோ மூலம் 10 ஆயிரம் வீடுகள் கட்டப்பட இருக்கின்றன. ஆதிதிராவிடரின் சமூகக் கூடங்கள் திருமணங்கள் நடத்தும் பொருட்டு அவர்கள் குடியிருப்புகளில் சமூகக் கூடங்கள் கட்டப்படுகின்றன.

ஆமையிலே கொடிய ஆமை தீண்டாமை. இந்திய அரசியல் அமைப்பு உறுப்பு 17-ன்கீழ் தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது. தீண்டாமைக் குற்றவியல் சட்டம் தமிழ்நாடு முழுவதும் 8.5.85 முதல் அமல்படுத்தப்படுகிறது. தீண்டாமை ஒழிப்பு பிரச்சாரத்திற்கென "தீர்த்த யாத்திரை" என்கிற திரைப்படம் ஒன்று தயாரிக்கப்பட்டு இதனை எல்லாப் பகுதிகளிலும் திரையிட தேவையான சாதனங்கள் அடங்கிய வேன் ஒன்று இயங்கி வருகிறது. "ஆதிதிராவிடர் நல வாரம்" ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 24 முதல் 30 வரை கொண்டாடப்பட்டு வருகின்றது. குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தை அமல் செய்வதுடன் தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம் செய்ய 5 தொண்டு நிறுவனங்களுக்கு அரசு அனுமதித்துள்ளது. தீண்டாமை ஒழிப்பு குறித்து உதவி மற்றும் ஆலோசனை நல்க கிராமம் மற்றும் மாவட்ட அளவில் குழுக்கள் அமைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அரசு மற்றும்



## திட்டங்களின் பலன்...

ஏழ்மையைப் போக்கி, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை நீக்கி, அனைவருக்கும் நல்வாழ்வு அளிக்கும் நவீன இந்தியாவை உருவாக்க பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் மேற்கொண்டுள்ள முயற்சியில் நம்மை இணைத்துக் கொள்வோம்.

● சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினருக்குப் பலன் அளிக்கும் பல சிறப்புத் திட்டங்களைத் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. அவைகளைத் தொடருவதோடு [illegible]

●[illegible]

தொண்டு நிறுவனங்கள் சேர்ந்து சமபந்தி போஜனம் வழங்க செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளது. மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவர் ஆட்சியில் கோயில்களில் சமபந்தி போஜனம் அறநிலையத்துறை மூலமாகச் சிறப்பாகச் செயல்படுகிறது.

''பல்லாண்டுக் காலமரக வழிவழியாகச் சாதிக் கொடுமையும், சாதி என்ற பெயரால் கடுமையான போக்கும், சமுதாயத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உயர்வு அளிக்கவேண்டும்: அவர்களின் உயர்வுக்கு வழி, அவர்களுக்கு உதவி, பதவி மற்றும் கல்வியைச் செவ்வனே வழங்க வேண்டும்; இதைத் தமிழ்நாடு அரசு செய்யும்'' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டில் நல்ல பல கல்வி உதவித் திட்டங்களை வேலை வாய்ப்புகளை ஆதிதிராவிடர்களுக்கு வகுத்துக் கொடுத்தார்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள், மேற்கொண்டு சமுதாயத்தில் மேல்மட்டம், அந்தஸ்து போன்றவைகளை அகற்றுவதற்குச் சமுதாயத் திருமணங்கள், கலப்புத் திருமணங்களாகத் திகழ வேண்டும் என்று தன் வாழ்நாளில், கலப்புமணத்தை அதிக அளவில் நடத்தி வைத்தார்கள்.

''இவர்களுக்கு என்ன வேலை தெரியும்'' என்று ஒதுக்காமல், ''இவர்களுக்குத்தான் தெரியும் வேலை'' என்று ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்குக் கல்வித் தகுதிபெற்ற தாழ்த்தப்பட்டோருக்கு உயர் பதவிகள் கொடுத்து, ஒரு புதிய சமுதாயத்தைத் உருவாக்கியவர் அறிஞர் அண்ணா அவர்கள்.

இவர் வழிவந்த பொன்மனச் செம்மல் உணவுக்கு ஏங்கும் ஏழைகளுக்குச் சத்தான உணவு கொடுத்து, அவர்களை வளர்க்கும் சத்துணவுத் திட்டத்தை உருவாக்கிய வள்ளல் ஆவார். தந்தை பெரியார் வகுத்த பகுத்தறிவுக் கொள்கைகளுக்கு வடிவம் தந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அண்ணா அவர்கள் வகுத்த கொள்கைகளையும், நல்ல பல திட்டங்கள் மூலம் செயலாக்கி வருபவர் நமது மாண்புமிகு முதல்வர் பொன்மனச் செம்மல் ஆவார்கள். இப்படிப்பட்ட நல்லவர் ஆட்சியில் தமிழர் திருநாளைக் கொண்டாடும் தமிழர்களை வாழ்த்துகிறேன். ●





# பிற்படுத்தப்பட்டோர் காவலன் மீனவ நண்பன்

மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்

## திரு. எம். ஆர். கோவேந்தன்

''இடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி ஒப்பப்பர் ஆகிவிட வேண்டும்' என்று பாவேந்தர் பாரதிதாசன் கனவு கண்டதைப் போல, சமத்துவ சமதர்மச் சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்று பேராவல் கொண்டு உலகோர் வியக்கும் உன்னதத் திட்டங்களை நிறைவேற்றி, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவரின் தலைமையில் இயங்கும் 'அண்ணாவின் அரசு' பீடுநடை போடுவதை இந்தியத் துணைக் கண்டமே ஏற்றுப் போற்றி புகழ்ந்தவண்ணம் இருக்கிறது.

இந்தியத் துணைக் கண்டத்திலேயே 'பிற்படுத்தப்பட்டோருக்கெனத் தனி அமைச்சர் ஏற்படுத்திய பெருமை டாக்டர் புரட்சித் தலைவரையே சாரும். பிற்பட்டோர் அல்லது பின்தங்கியோர் என அழைத்து வந்ததை மாற்றி பிற்படுத்தப்பட்டோர் என்றும், குற்றப்பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் என்றிருந்ததைச் 'சீர்மரபினர்' என்றும் மாற்றி அமைத்ததே இந்த அரசுதான்.

தமிழ்நாட்டில் வாழும் கிறிஸ்தவ மக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, போப் ஆண்டவர் தமிழகம் வரவிருக்கும் வேளையில் தமிழ் கிறிஸ்தவர்களுக்குப் பரிசாகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள பிரிவினர் கிறிஸ்தவரானாலும் பிற்படுத்தப்பட்டோரே என டாக்டர் புரட்சித் தலைவர் அறிவித்துள்ளார்.

ரூ. 200 கோடிக்கு மேல் செலவிடப்படும் சத்துணவுத் திட்டம், ரூ. 25 கோடி செலவில் நடைபெறும் பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடை வழங்கும் திட்டங்களின் மூலம் பயன்பெறுவோர் பெரும்பான்மை பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினரே என் பதை யாரும் மறுக்க இயலாது. பிற்படுத்தப் பட்டோருக்கு இட ஒதுக்கீட்டை 50 சதம் ஆக உயர்த்திய பெருமையும் இவ்வரசையே சாரும். இவ்வாறு பிற பல்வேறு துறைகளின் மூலம் பிற்படுத்தப்பட்டோர் நலம் பேணி வரும் தமிழக அரசு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலமும் திட்டங்களைச் செயல் படுத்தி வருகிறது. இத்துறைக்கு 1966-67-ல் ரூ. 1,61,40,000 மட்டுமே ஒதுக்கப்பட்டது. 1985-86-ல் இத்துறைக்கு ரூ. 11 கோடியே 54 இலட்சத்து 12 ஆயிரமாக ஒதுக்கீட்டை உயர்த்தியுள்ளது.

இத்துறையின் கீழ் இயங்கிவரும் 277 சீர்மரபினர் பள்ளிகளில், இலவசப் புத்தகம், சிலேட்டு, உடைகள் மற்றும் மதிய உணவோடு 52,573 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். 1977 வரை 266 மாணவர் விடுதிகளே இத் துறையின்கீழ் இருந்தன. ஆனால் கடந்த எட்டு ஆண்டுகளில் இதன் எண்ணிக்கை இரண்டு மடங்கு ஆகியுள்ளது. இலவச உணவு உறையுள், உடை, பகுதி நேரப் போதனை, நூலக வசதி, மருத்துவ வசதி ஆகியவற்றோடு 523 விடுதிகளில் 30,803 மாணவர்கள் பயின்று வருகின்றனர். இவ்வாண்டு மேலும் 20 விடுதிகள் தொடங்கப் பெற்று, மேலும் 1,000 மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர்.

தற்போது பிற்படுத்தப் ட்டோர் நலத் துறை விடுதிகளில் 49 விடுதிகள் மட்டுமே அரசு கட்டடங்களில் உள்ளன. மற்றவை தனியார் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இவற்றுக்கு ஆண்டுதோறும் ரூ. 20 இலட்சம் வாடகையாகக் கொடுக்கப்படுகிறது. இவற்றில் அடிப்படை வசதிகள் போதுமான அளவு இருப்பதில்லை. தற்போது ஒரு விடுதிக் கட்டடம் கட்ட ரூ. 8 இலட்சம் முதல் ரூ. 10 இலட்சம் வரை செலவிடப்படுகிறது.

பயிலும் மாணவர்கள் உதவித்தொகை பெற பெற்றோர் வருமானம் ரூ. 1,500தான் இருக்க வேண்டும் என்றிருந்ததை ரூ. 5,000 மாக உயர்த்திய அண்ணாவின் அரசு, 1977 முதல் 1984 வரையில் ரூ. 26 கோடியே 6 இலட்சத்து 58 ஆயிரம் மதிப்புள்ள உதவித் தொகைகளை 31,04,683 மாணவர்களுக்கு வழங்கியுள்ளது. தனியாரால் நடத்தப்படும் 47 மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் 2,500 மாணவர்களுக்கு உணவு மானியம் வழங்கப்படுகிறது.

பிற்படுத்தப்பட்டோர் கல்வி பயில்வதை ஊக்குவிக்க வழங்கப்படும் பரிசுத்தொகையை மாநில அளவில் ப்ளஸ் 2 தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் ஒரு மாணவருக்கும், ஒரு மாணவிக்கும் தலா ரூ.1,000 வீதமும் 10ஆம் வகுப்புக்கு ரூ. 500 எனவும், அதுபோல மாவட்ட அளவில் ரூ. 150, ரூ. 100, ரூ. 50 எனவும் உயர்த்தியுள்ளது. தொழிற்கல்வி பயிலும் மாணவர்களுக்கு ரூ. 500 வட்டியில்லாக் கடன் வழங்கப்படுகிறது. இதன் மூலம் இதுவரை 814 பேர் பயன் பெற்றுள்ளனர்.

25-2-82-ல் ரூ. 10 கோடி மூலதனத்தில் தோற்றுவிக்கப்பட்ட தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 23 தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 11 இலட்சத்து 9 ஆயிரம் கடன் வழங்கப்பட்டதன் மூலம் 717 குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன. நாவிதர், சலவைத் தொழிலாளர் ஆகியோருக்கு வீட்டுமனை

வழங்கும் திட்டத்தின் மூலம் 15,525பேருக்கு ரூ. 60,44,000 செலவில் வீட்டு மனைகள் வழங்கப்பட்டுள்ளன. சவரத் தொழிலாளர், சலவைத் தொழிலாளர், கல்லுடைப்போர் ஆகிய 62,382 பேருக்கு ரூ. 1,48,63,920 மதிப்புள்ள கருவிகள் 1977 முதல் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ். போன்ற அனைத்திந்தியத் தேர்வுகள் எழுத பிற்படுத்தப்பட்டோருக்குப் பயிற்சி அளிப்பதோடு வேலைவாய்ப்பிற்கான குறுகியகாலப் பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன.

ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ்., போன்ற தேர்வுகள் எழுத வயது வரம்பு 28 ஆக இருந்ததை, 26 ஆகக் குறைத்து மைய அரசு ஆணை பிறப்பித்துள்ளது. பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் காலதாமதமாகவே கல்விபயிலத் தொடங்குவதால் இவர்கள் 26 வயதிற்குள் மேற்கண்ட தேர்வுகளில் மூன்று வாய்ப்புக்களையும் பயன்படுத்திக் கொள்ள இயலாமல் போகிறது. எனவே, பிற்படுத்தப்பட்டோர் நலன் கருதி மீண்டும் வயது வரம்பினை 28 ஆக உயர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும். மருத்துவப் பொறியியல் மற்றும் சட்டக் கல்விக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதில் நுழைவுத் தேர்வுமுறை புகுத்தப்பட்டதன் மூலம் ஊழல் அடியோடு ஒழிக்கப்பட்டது.

மீன்பிடிக்கும்போது மீனவர் இறந்தால் ரூ. 5,000 வழங்க ஆணை பிறப்பித்த இவ்வரசு, தற்போது மீனவர் காப்பீட்டுத் திட்டம் மூலம் அவர்கள் ரூ. 15,000 பெறும் வாய்ப்பை' ஏற்படுத்தித் தந்துள்ளது. அதற்கான பிரிமியத் தொகையையும் மைய, மாநில அரசுகளே செலுத்தி வருகின்றன. மீன் பிடிப்போர்க்கு உதவிட ரூ. 11.40 இலட்சம் செலவில் 40 வழிகாட்டி விளக்குகள் அமைக்க அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. மேலும் 7 வழிகாட்டி விளக்குகள் அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொன்றும் சுமார் ரூ. 4.50 இலட்சம் செலவில் புயல் காலங்களில் மீனவர்களைப் பாதுகாக்கக் கடலோரப் பகுதிகளில் 81 புயல்பாதுகாப்புக் கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

ரூ.1462.86 இலட்சம் செலவில் இரண்டு பெரிய மீன்பிடித் துறைமுகங்கள் (சென்னை, தூத்துக்குடி) கட்டி முடிக்கப்பட்டுள்ளன. சின்னமுட்டத்தில் ரூ. 763 இலட்சம் செலவில் ஒரு பெரிய மீன்பிடித் துறைமுகம் கட்டப்பட்டு வருகிறது. அதுபோல இதுவரை 6 சிறிய மீன்பிடித் துறைமுகங்கள் ரூ. 55.37 இலட்சம்செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ரூ. 311.98 இலட்சம் செலவில் 4 சிறிய மீன்பிடித் துறைமுகங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

மீனவர் கிராமங்களில் அடிப்படை வசதிகள் செய்து தர 33 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. 1985-86-ல் 10 மீனவர் கிராமங்கள் தலா ரூ. 5 இலட்சம் செலவில் அடிப்படை வசதிகள் செய்து தர உத்தேசிக்கப்பட்டுள்ளது. மீனவர் நலன்களைக் காக்கும் வகையில் 271 கடல் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள், 220 உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள், 25 மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன.



கடல் மீன்பிடிப்பை அதிகரிக்க நாட்டுப் படகுகளுக்கு மாற்றாக கண்ணாடி இழைப் படகுகள் அளிக்கும் வகையில் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகக் கூட்டுறவோடு 'தமிழ் நாடு மெரைன் பிளாஸ்ட் லிமிடெட்' என்ற கண்ணாடி இழைப் படகு தயாரிக்கும் நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. நாட்டுப் படகுகளில் இயந்திரம் பொருத்தவும் மற்றும் நைலான் வலைகளை மானியத்தோடு கடனாக வழங்கப்படுகின்றன.

இறால் உற்பத்தியைப் பெருக்க உவர்நீர் இறால் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கான குஞ்சுகளை உற்பத்தி செய்ய சென்னை - சாந்தோமில் இறால் குஞ்சு பொறிப்பகம் அமைக்கப்பட்டுள்ளது.

கடல் மீனவர்களுக்கு 10,031 வீடுகள் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டு 8,608 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள வீடுகள் கட்டும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மீனவர் குடியிருப்புகளுக்கு 76 இணைப்புச் சாலைகள் ரூ. 181.5 இலட்சம் செலவில் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இலங்கைக் கடற்படையால் சுடப்பட்டு பலியாகும் மீனவர்களுக்கு உடனடியாக உதவிட முகவை மாவட்ட ஆட்சியாளருக்கு சுழல்நிதியாக ரூ.50,000 வழங்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு மீன்வளத்தைப் பெருக்கும் வகையில் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் சிறப்பான பணியை ஆற்றி வருகின்றன. இவற்றின் மூலம் 3,020 எக்டேர் பரப்புள்ள 2,925 குளங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 3,330 மீன்வளர்ப்போருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் கீழ் சென்னையில் 39 சில்லறை அங்காடிகளின் மூலமும், திருச்சி, கோவை, பெரியார் மற்றும் மதுரை மாவட்டங்களிலும் ஆழியார் மற்றும் சாத்தனூர் அணையில் 43 சில்லறை அங்காடிகளின் மூலமும் மீன் விற்பனை செய்யப்படுகிறது. இதன் கீழ் மெக்சிகோ நாட்டிலிருந்து தருவிககப்பட்ட நாவாய்கள் இரண்டு விசாகப்பட்டினத்தை மையமாகக் கொண்டு இயங்கி வருகின்றன. சென்னை, நாகை, தூத்துக்குடி மற்றும் மண்டபத்தில் உள்ள குளிர்பதன நிலையங்களும், ராயபுரம் மற்றும் மல்லிப்பட்டினத்திலுள்ள டீசல் நிலையங்களும் நல்லமுறையில் இயங்கி வருகின்றன. சென்னையில் மீன்வலை பின்னும் தொழிற்சாலை ஒன்று அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இதற்கு மூலதனமாக ரூ. 20 இலட்சம் அரசு அளித்துள்ளது. இதற்கான வலை பின்னும் இயந்திரங்கள் ஜப்பான் நாட்டு மானிய உதவித் திட்டத்தின் கீழ் ஜப்பானிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலமும், மீன்வளத்துறை மூலமும் சிறந்த திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்துவதன் மூலம் ''பிற்படுத்தப்பட்டோர் காவலன்-மீனவ நண்பன் தமிழகமுதல்வர் டாக்டர் புரட்சித் தலைவரே! என தமிழக மக்கள் கொண்டிருக்கும் ஆழ்ந்த நம்பிக்கையை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் செயல்பட்டுவரும் இவ்வரசுக்கு மீனவர் உட்பட பிற்படுத்தப்பட்டோர் அனைவரும் இப்போது போல எப்போதும் நல்லாதரவு தர அன்புடன் வேண்டுகிறேன்.

அனைவருக்கும் எனது அன்பார்ந்த பொங்கல் வாழ்த்துக்கள்.

*With Best Compliments From :*

# P.A. CONSTRUCTION

**CIVIL ENGINEERING CONTRACTORS FOR MULTI-STORIED BUILDING, BUNGALOWS AND FLATS**

**P. A. BUILDING, 42, VENKATAKRISHNA ROAD**
**RAJA ANNAMALAIPURAM, MADRAS-600 028.**

With ROYAL regards from

G.SUNDRAVEL & BROTHERS



The Royal Hindu Restaurant
Theatre ROYAL
The Rayal Arts
Rayal Arts Printing Press
The Royal Upholstery
Royal Pictures

Tel: 'ROYAL Phones: 25571 & 36164
'R R R' Buildings, State Bank Road
COIMBATORE 641018


# பெண்கள் விழா!

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்

**திருமதி கோமதி சீனிவாசன்**

"செந்நெல் கதிரெடுத்து
செங்கரும்பு உடன்வைத்து
மஞ்சள் கிழங்குடனே
மங்கலமாய் விளக்கேற்றி
போற்றுகின்ற இந்நாளில்
பாலுடன் தெள்ளுதேனும்
பாகுடன் பருப்பும் இட்டுப்
பொங்குகின்ற பொங்கலன்றோ
பாவையரின் திருநாளாகும்"

தைத்திங்கள் பெரும் நாளே தமிழரினத்தின் திருநாள் ஆகும். பொங்கும் மங்களத்தின் முழு உருவமாகத் திகழ்ந்திடும், இத்திருநாளே தமிழ்ப்பெண்கள் போற்றுகின்ற நன்னாளாகும். கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்து நிற்கும் தமிழ் மொழியின் வெளிப்பாடே பொங்கல் திருநாளாகும். நாட்டின் 80 சதம் மக்கள் வாழ்ந்து வரும் கிராமங்களில், தமிழ்நாட்டின் கிராமங்களே புராதனத்திற்குப் புகழ் மிகு வாழ்க்கைக்கும், பொங்குகின்ற செல்வ வளத்திற்கும் சான்றாகத் திகழ்கின்றன.

நெற்றி வேர்வை நிலத்தில் விழுந்து கதிரொலி, முத்தொலி, நெல்லாகி, தீஞ்சுவை அமுதாகி அனைவரையும் வளர்த்தே வாழ வைக்கும் கிராமங்கள் எல்லாம் பொங்கல் நன்னாளில் புத்துயிர் பெறுகின்றன. எங்கும் பரபரப்பு, சுறுசுறுப்பு, வீடுகளைச் செப்ப





பூமியில் உள்ள தங்கம் அத்தனையையும் நகையாகச் செய்து கொள்ள முடியாது. ஆகையால் தேவையான அளவுக்குத் தங்கத்தைக் கொடுத்து, நகைகள் செய்யச் சொல்வதுபோல், நம்மிடத்தில் ஏராளமான கருத்துக் குவியல் இருந்தாலும் தேவையானதைப் பயன்படுத்த முன்வரவேண்டும்.

விட்டு, வெண்மையேற்றி, மண்ணிட்டு, சாணமிட்டு, செங்காவி நிறமிட்டு, மாவிலைத்தோரணங்கள், மாக்கோலம் தெருப்பரப்பி பரங்கிப் பூ வைத்து, விளக்கேற்றி மகிழ்வது மரபானதாகும்.

ஆடிப்பட்டம் தேடி விதைக்க வேண்டி நிலம் உழுது உரம் ஏற்றி உரமிட்டுப்பண்படுத்தும் கணவனுக்குக் கஞ்சி தூக்கிக் கொண்டு கணவன் களைப்புப் போக்கி, அவனுடன் நிலமிறங்கி, விதை தூவி, களையெடுத்துப் பயிர்காத்து உரமிட்டு, கதிரறுத்து, களம்சேர்த்து, நெல் தூற்றி வீடு சேர்க்கும் வரை பெண்களின் பங்கு ஒவ்வொரு அணுவிலும் மிளிர அவ்வெர்ளியினைப் பெரும் பொங்கலன்று வெளிக்குக் கொண்டு வரும் சிறப்பு பெண்களையே சாரும்.

அதேபோல் பருத்தியெடுத்து விதை நீக்கி, நூல் நூற்றுப் பாவிறக்கி இழைசேர்த்து தறிக்குப் போகும் வரை உடன் உழைத்து புத்தாடையாக்கி பொங்கல் விழாவில் புத்தாடைக்கு வழிகோலும் கலையிலும் பெரும் பங்கு பெண்களுடையதே.

பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல்ல என்பதற்கு இலக்கணமாக ஆண்டு முழுவதும் அன்றாடம் உபயோகித்த பழையதான, பழுதான அனைத்துப் பொருட்களையும் போகி தினத்தில் எரியூட்டி இல்லம் முழுமையும் சுத்தம் செய்து, பாய் நனைத்துப் பறி நனைத்து அனைத்தையும் இருமுழுக் காட்டி "தை" நாளின் வருகைக்குக் கட்டியம் கூறுவதும் பெண்களேயாகும்.

மண்மிதித்துத் துவைப்பதிலிருந்து குயவர் உருவாக்கித் தரும் புதுப்பானை வகையறாக்களைத் தீயில் வைத்துச் சுட்டுக்காவியேற்றி சந்தைக்குக் கொண்டு சென்று விலை கூவுவதும் பெண்களே. அதேபோல், மஞ்சள் கொத்தையும், கரும்புக் கட்டையும், வாழைத் தாரினையும் விற்று, தாம்பூலப் பிஞ்சாகப் பரங்கி, பூசணி, கத்தரி, வெண்டை, காராமணி, பீர்க்கை போன்றவற்றைச் சமைத்துப் பொங்கலுக்குச் சுவையூட்டுவதும் பெண்களே!

முக்கல் அடுப்புக்கட்டி, மூடியிட்ட பானையேற்றிப் பாலூற்றி பொங்கல் வைத்துப் பொங்குகின்ற போதினிலே பொங்கலோ பொங்கல் என்று கும்மிக் கரம் கொட்டி குலவையிட்டு மகிழ்வதும் பெண்களன்றோ!

பொங்கல்விழாவினைப் பாடாத நாடேது. ஏடேது. இலக்கியமேது!

தென் மாவட்டங்களில் மாட்டுப் பொங்கலன்று நடைபெறும் ஜல்லிக்கட்டு இலக்கியங்களும் சங்க வரலாறுகளும் எடுத்துக்கூறும் முக்கியமான அம்சம். முரட்டுக் காளைகளை அடக்கும் வீர இளைஞனுக்குத் துணைவி ஆவதையே கன்னிப்பெண்கள் விரும்பி இருந்தனர் என்றும், அதனால் வீரர்கள் போட்டி போட்டுக் கொண்டு களத்தில் குதித்தனர் என்றும் கூறப்படுகின்றது. அதன் தொடர்பாகவே பொங்கல் விழாவில் பல்வேறு விளையாட்டுகள் இடம் பெற்றுள்ளன. இவ் விளையாட்டுகளில் பல்வேறு பெண்களுக்கான விளையாட்டுகள் இடம் பெற்றுள்ளன.

'வாலைக் குழைத்துவரும் நாய்தான்-அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா'

—பாரதியார்






# தமிழர் திருநாள்


மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர்
திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி


**பொ**ங்கல் விழா தமிழரின் திருவிழா. தமிழகத்தின் தலையாய விழா. உழவர்களின் ஒப்பற்ற விழா, காலமெல்லாம் உழைத்துக் கதிரடித்து நெற்குவித்துக் கதிரவனுக்கு நன்றியைத் தெரிவிக்கும் விழா பொங்கல் விழா. தம் நாட்டில் எத்தனையோ மதத்தினர் உள்ளனர். அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கொண்டாடும் பொது விழாவாகும். இச்சிறப்பான விழா நான்கு நாட்கள் கொண்டாடப்படுகின்றது.

முதல் நாள் மார்கழி மாதம் கடைசி நாளன்று "பழையன கழிதலும் புதியன புகுதலும்" என்கிற முறையில் பழமைபோக்கி விழாக் கொண்டாடப்படுகிறது. போக்கிப் பண்டிகை என்பதுதான் போகிப் பண்டிகை என மருவி வழங்குகிறது.

இரண்டாம் நாள் தை மாதம் முதல் நாளாகும். இதுதான் அனைத்து நாட்களிலும் சிறப்பான நாளாகும். புத்தாடை உடுத்து பொங்கல் இட்டு, உழுது பயிர் செய்து உயிர்வாழ உதவிய கதிரவனுக்குப் பொங்கலைப் படைத்து வழிபடுகிறோம்.



மூன்றாம் நாள் மாட்டுப் பொங்கலாகும். மாட்டிற்கு ஒரு விழா ஏற்படுத்திய பெருமை தமிழருக்கே சேரும். கண்ணகி மதுரையை எரித்தபொழுது "பசு பத்தினிப் பெண்டிர் என்னும் இவரைக் கைவிட்டு தீத்திறத்தார் பக்கமே சேர்க தீ" என்று கூறியபோது பசுவினைத்தான் முதலில் கூறியுள்ளார். உழவனுக்கு உழைத்த மாடுகளுக்கு விழா எடுப்பதுதான் மாட்டுப் பொங்கலாகும்.

நான்காவது நாள், கன்னிப் பொங்கல் என்று அழைக்கிறோம். இது இடத்திற்குத் தகுந்தாற்போல், காணும் பொங்கல் என்றும் அம்மன் பொங்கல் என்றும் அழைக்கப்படுகிறது. மஞ்சு விரட்டு விழா என்ற ஒரு விழாவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

இவ்வாறாக, வீரச் சத்திரியர்கள் நிறைந்த மறத் தமிழர்கள் வாழ்வில் ஏற்படும் ஒரு சிறப்பான விழா பொங்கல் விழாவாகும். "சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்" என்று வள்ளுவப் பெருந்தகையும் "உழுவார் உலகத்தார்க்கு ஆணி" என்னும் பழமொழிக்கிணங்க சிறந்த பெருநாளாகும்.

விவசாயக் காலங்கள் போக, மற்ற காலங்களில் அவர்கள் சோம்பி இருக்காமல், அவர்கள் அன்றாட வயிற்றுப் பிழைப்புக்குத் தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம் இயற்றிச் செயல்பட்டு வரும் திட்டங்களைப் பற்றி எடுத்துரைக்க வேண்டிக் கொண்டு, "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்ற வகையில் நல்ல வழி பிறக்கும் என்று கூறிக்கொண்டு, பொங்கல் பொங்குவது போலத் தமிழர் எல்லா வகைச் செல்வங்களையும் பெற்று வளர்க! வாழ்க! என்று வாழ்த்துகிறேன்.

இந்நாளில், விழா நிகழ்ச்சிகள், கவியரங்கங்கள், சொற்பொழிவுகள் நடாத்தி தமிழரின் பெருமையை உலகெங்கும் எடுத்துரைக்கநான் அனைவரையும் கேட்டுக் கொள்ளுகிறேன். அவ்வமயம், விவசாய மக்கள்-தொழிலாளர்களின் நன்மைக்காக நமது புரட்சித் தலைவர் மாண்புமிகு முதல்வர் அண்ணன், எம். ஜி. ஆர். அவர்கள் தீட்டி வரும் திட்டங்களைப் பற்றியும், அவர்களின் முன்னேற்றத்திற்காகச் செய்துவரும் செயல்பாட்டினைப் பற்றியும் எடுத்துரைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

வளரும் என்றன் மகனே—என்
வாழ்வுயர்த்தும் மகனே!
தளரும் தமிழகத்தை—நீ
தாங்கவேண்டும், அறிக!

—பாவேந்தர் பாரதிதாசனார்




# அயராது உழைப்போம்!

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் **திரு. யா. சை. மு. யூசுப்**

**பொ**ங்கல் திருநாள் என்ற உடனே நம் கண் முன்னே காட்சியளிப்பது உழவர் பெருங்குடியினர்தாம். அவர்கள் வயலையும், நீர் வளத்தையும் நம்பி வாழ்கின்றனர். இவ்வளைத்தோடும் "பாசனம்" பின்னி நிற்கின்றது. ஒரு நாட்டின் வேளாண்மை வளர்ச்சி அந்நாட்டின் நீர்வள மேம்பாட்டினைப் பொறுத்து அமையும். இத்தகு சிறப்புமிக்க வளத்தினைப் பேண, காண நமது அரசு எவ்வாறு செயல்படுகின்றது என்பதை உழவர் திருநாளன்று, பொங்கல் பொன்னாளன்று தெரிந்துகொள்வது சாலச் சிறந்ததல்லவா!

கட்டடத்தைக் கட்டுவதற்கோ, இயந்திரங்களை நிறுவுவதற்கோ, மரம் நடுவதற்கோ எந்த இடத்திலும் தேவையான மாறுதலுடன் பணியை மேற்கொள்ள முடியும். ஆனால் தண்ணீரைத் தேக்க, திசை திருப்ப, தேவையான அளவு தேவையான இடத்திற்குப் பயன்படுத்தத் தீட்டப்படுகின்ற பாசனத்திட்டங்கள் தீவிர ஆய்வுக்குப் பிறகே மேற்கொள்ள இயலும். தண்ணீர் முறையான வரத்து உள்ள பகுதியில் அதிகக் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத்தை, அணையை அமைப்பதால் ஏற்கெனவே பாசனப் பயன் அடையும் பகுதிக்கு அப் பயன் கிட்டாமல் போகும். அதேபோல் கூடுதலான வெள்ளம் வரும் பகுதியில் தேவையான முன் எச்சரிக்கை இன்றி கட்டப்படும் அணையும் வெள்ளத்தில் சிதறும்; பிறருக்கு ஆபத்தை ஏற்படுத்தும். எனவே இத்தகு திட்டங்களைத் தீவிரமாக ஆராய்ந்து தொகுத்துத் தர ஆய்வு மேற்கொள்வது இன்றியமையாதது. அதனை மேற்கொள்ளத் தனிப் பிரிவு அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது.

நிலமேற்பரப்பு - நீர் தமிழகத்தைப் பொறுத்தமட்டில் முற்றிலும் பயன்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறலாம். எஞ்சிய வெள்ளம் வரும் பகுதிகளிலும் சிறு சிறு மற்றும் நடுத்தரத் திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன. இனிமேல் நிலத்திற்குக் கீழே உள்ள தண்ணீரைப் பயன்படுத்திப் பாசன வசதியைப் பெருக்குவது தவிர வேறு வழி இல்லை. நிலநீரின் தன்மை, அதைப் பயன்படுத்தும் வாய்ப்பு மறுபடியும் நிலத்தடிநீர் பெருக மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள், தமிழகத்தின் எப்பகுதியில் எத்தகு நிலை உள்ளது போன்ற தகவல்களைச் சேகரித்து, தகுந்த அறிவுரைகள் கூறும்பொருட்டு, நிலநீர்ப் பிரிவு இயங்கி வருகின்றது.

இந்நிலையில் ஏற்கெனவே உள்ள நீர்நிலைகளை மேம்படுத்தி, தற்போது நீர்நிலைகளில் ஏற்படுகின்ற தண்ணீர் இழப்பினைக் கட்டுப்படுத்தி அவ்வாறு சேமித்த தண்ணீரைக் கூடுதலான நிலப்பரப்பில் பாசனத்திற்குப் பயன்படுத்தும் பணிகளிலும் பொதுப்பணித்துறை முனைப்போடு செயல்பட்டுக் கொண்டு வருகின்றது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவர் பொறுப்பேற்ற பிறகு 1977ஆம் ஆண்டில் ரூபாய் 44கோடியே ஐம்பது லட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு 1984 டிசம்பர் மாதம் நிறைவுற்ற இத்திட்டத்தால் 10305 எக்டேர் நிலம் புதியதாகப் பாசனவசதி பெற்றது குறிப்பிடத்தக்கதாகும். இத்திட்டத்தின் சிறப்பான பயன் கருதி தொடர்ந்து 2வது கட்டமாக ரூபாய் 56 கோடியே 86 இலட்சம் செலவில் திட்டம் தீட்டி உலக வங்கியின் உதவியோடு செயல்பட்டு வருகிறது. 1988ஆம் ஆண்டு இத்திட்டம் நிறைவுறும் எனவும், இதனால் 7521 எக்டேர் நிலம் புதிதாகப் பாசன வசதி பெறும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இதனை அடுத்து இதே போன்று சீரமைப்புப் பணிகள் தமிழகமெங்கும் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் சாத்தனூர் திட்டம், பொன்னியாறு திட்டம், தாமிரபரணி திட்டம் போன்றவை குறிப்பிடத்தக்கவை.



இது நீங்கலாகக்காவிரி நீரைச் சேமித்து, சிக்கனத்தைக் கடைப்பிடித்து, அதன் மூலம் டெல்டா பகுதியிலுள்ள பாசனப் பற்றாக் குறையைப் போக்குவதற்காகத் திட்டம் ஒன்று தீட்டி உலக வங்கியில் ஒப்புதல் எதிர் பார்க்கப்படுகிறது. 7வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலேயே இந்த டெல்டாவிலுள்ள 36 நதிகளையும் அவற்றின் பக்க வாய்க்கால் களையும் நவீனப்படுத்தி, விவசாயிகளுக்குத் தேவையான சாலை அமைத்தல், களம் அமைத்தல் போன்ற பணிகளை ஒவ்வொன் றாக மேற்கொண்டு முடிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத்தைப் பெரியார் மாவட்டத்திலுள்ள கூடுதலாக 35,000 ஏக்கர் நிலங்களுக்கு நீட்டிக்கவும், குதிரையாறு பாசனப் பகுதிகளை அதிகப் படுத்தவும், மதுராந்தகம் ஏரியின் தண்ணீரை வலது கரைக்கால்வாய் மூலம் 30 கிலோ மீட் டர் தூரத்திற்குள் அமைந்துள்ள நிலங்களை வளப்படுத்தவும் மேலும் இதே போன்ற பல திட்டங்களை மேற்கொள்ளப்படவுமுள்ளன.

21 நடுத்தர மற்றும் சிறு பாசனத் திட் டங்கள் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன, இதனால் 42914 எக்டர் நிலம் பாசனப் பயன் பெறும் என எதிர்பார்க்கப்படு கிறது. இவற்றுள் நந்தனார் கால்வாய் மற்றும் அவற்றின் கிளை வாய்க்கால்களை மறு வடி வமைப்பது, குமரி மாவட்டம் கோதையாறு, திருப்பரப்பு அணைக்கட்டின் வலதுபுறக் கால் வாய் விரிவுபடுத்துதல், நவீனப்படுத்துதல் போன்ற பணிகளும் உள்ளடங்கும்.

உணவு உற்பத்தியைப் பெருக்க, தடுப் பணைகள், அணைகள், புதிய ஏரிகள் போன்ற வற்றை உருவாக்கிடவும் தற்போது பாசனப் பயன் கிடைக்காத பகுதிகளுக்குப் பாசன வச தியைப் புனரமைப்புப் பணிகள் மூலம் மேற் கொள்ளவும் சிறுபாசனப் பிரிவுப் பணிகளை மேற்கொண்டுள்ளது. நடப்பாண்டில் ரூபாய் 223 இலட்சத்து 27 ஆயிரம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் 3,222 எக்டர் நிலம் பயன் அடையும்.

ஏரிகள் தூர் வாரிப் புனரமைத்து 800 எக்டர் நிலம் பாசனம் பெறவும் 200 எக்டர் ஆயக்கட்டுக்குக் குறைவாக உள்ள 150 ஏரி களை ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்ட மைப்பின் உதவியோடு புனரமைத்துச் செப்ப னிட ரூபாய். 27 கோடியே 60 இலட்சம் செல வில் பணிகள் நடைபெறுகின்றன.

பொங்கல் நன்னாளன்று நமது இல்லத் தைப் புதுப்பித்துப் பழையன கழிந்து புதியன புகுத்துகிறோம்.

அரசுக்குச் சொந்தமான கட்டடங்களைப் பழுது பார்த்துப் புதுப்பிக்கும் இதே பணி யைப் பொதுப்பணித்துறையில் கட்டடப்பிரிவு மேற்கொள்கிறது. நாட்டு மக்களுக்கான அர சின் திட்டங்கள் நிறைவேற்றிடும் நிறுவனங் களை உருவாக்கிடும் திருப்பணியும் இத்துறை யைச் சார்ந்ததே.

மேற்கு நோக்கிப் பாயும் உபரி ஆற்று நீரை மலைகளைக் குடைந்து தமிழகத்திற்குத் திருப்பி விடவும், காவிரி நீர் ஒப்பந்தம் ஏற் பட்டு விவசாயிகள் உள்ளம் மகிழ்ந்திடவும், பெரியாறு அணையை வலுப்படுத்தவும் மேற் கொண்ட பணிகள் முடிவுற்றுள்ள நிலையில் அவ்வணையின் கொள்ளளவு திறனுக்கேற்ற தண்ணீர் பெற்றிடவும் மிகத் தீவிரமாகச் செயல்படும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவரின் சீரிய திட் டங்களை நிறைவேற்றிட அயராது உழைப் போம் என இப் பொங்கல் நன்னாளில் சூளுரைப்போம்!

திக்குத் தெரியாத காட்டில்...

தன்னிச்சை கொண்டலையும் சிங்கம்—அதன்
சத்தத் தினிற்கலங்கும் யானை—அதன்
முன்னின்(று) ஓடும்இளம் மான்கள்—இவை
முட்டா தயல்பதுங்கும் தவளை!

—மகாகவி பாரதியார்



# உரிமையும் கடமையும்

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் —

## திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்

இந்தியத் திருநாட்டில் நூற்றுக்கு எழுபது பேர் விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள வர்கள் என்பது யாவரும் அறிந்த ஒன்று. 'உழவின் பெருமையினை, உழவுக்கும் தொழி லுக்கும் வந்தனை செய்வோம்..' என்றெல் லாம் புலவர்கள் பாடியுள்ளனர். இத்தகு பெருமைகளுக்கு நிலைக்களனாக விளங்கும் இந்த உழவுத் தொழில் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் எப்படி நலிவடைந்து போயி ருந்தது? இன்றைக்குத் தலைநிமிர்ந்து நிற் கிறதே இதற்குக் காரணம் என்ன? இடையில் நிகழ்ந்த மாற்றம்தான் யாது? என்பதை யெல்லாம் எண்ணிப் பார்த்தல் அவசியம்.

அது. பெரும்பாலும் மிட்டா மிராசு களும், பெருந்தனக்காரர்களும் கோலோச்சி வந்த காலம். ஒரு ஏக்கர், அரை ஏக்கர் என்று கொஞ்சமாக நிலம் வைத்துக்கொண்டு விவசாயம் செய்தவர்கள் இந்த மிட்டா மிராசுகளை அண்டியே வாழவேண்டிய நிலை. விவசாயத்திற்கு இவர்களிடம் கடன் வாங்கு வார்கள். வாங்கிய கடனுக்கு வட்டியும் முதலுமாகக் களத்து மேட்டிலேயே அளந்து கொடுத்துவிட்டு வெறுங்கையோடு வீட்டுக்குத் திரும்புவார்கள். இது மட்டுமா? கொஞ்ச நாளில் இவர்களின் துண்டு நிலங்களும் பெரிய மிராசுகளின் நிலங்களோடு இணைக்கப்பட்டு விடும். தொடர்ந்து ஏற்பட்ட வறட்சி அல்லது வெள்ளப் பெருக்கு இவைகளால் நாட்டில் பசியும், பஞ்சமும் தலை விரித்தாடின. நடுத் தர மற்றும் சிறு விவசாயிகளின் வாழ்வில் எந்நாளும் துயரம்தான். இவர்களுக்கு விடியல் என்பது இல்லாமலேயே இருந்தது.

இப்படி கண்ணீரில் மூழ்கிக் கொண்டி ருந்தவர்களைக் கரம் கொடுத்து காப்பாற்ற எண்பத்தோரு ஆண்டுகளுக்கு முன்னர் ஓர் இயக்கம்-இணை கர இயக்கம் தோன்றியது. ஆம், அதுதான் கூட்டுறவியக்கம்.

இந்தியாவைப் பொறுத்தவரையில் கூட்டுறவியக்கம் என்பது வெள்ளத்தில் தவித் தோர்க்குப் படகு போலவும், இருளில் மூழ்கிக் கிடந்தோர்க்கு ஒளி போலவும் உதவியது; இன்றும் உதவிக் கொண்டிருக்கிறது. இந்தியா வின் புதுமைப்புரட்சிக்கும், வெண்மைப் புரட்சிக்கும் இந்த இயக்கம் ஆற்றிவரும் பங்கு அளப்பரிய ஒன்று.

தமிழகத்தைப் பொறுத்தவரை இது கூட்டுறவு என்ற ஆலமரத்தின் விதை ஊன்றப் பட்ட மண் என்பதில் தாமெல்லாம் பெருமைப் படலாம். எத்தனையோ துறைகளில் இந்தியா வுக்கே வழிகாட்டியாய் விளங்கும் தமிழகம் தான் கூட்டுறவு இயக்கத்திலும் முன்னோடி யாகும். ஆம்; முதல் கூட்டுறவுச் சங்கம் செங் கல்பட்டு மாவட்டம், திரூரில் 1904 -ஆம் ஆண்டிலேயே துவங்கப்பட்டது என்பது சரித் திரம் கூறும் உண்மை.

இன்றைக்குத் தமிழகத்தின் கூட்டுறவுத் துறை பீடுநடை போட்டுக் கொண்டிருக்கிறது என்பதை என்னால் பெருமையாகச் சொல்லிக் கொள்ள முடியும். கூட்டுறவு இயக்கத்தின் பயனைப் பெறாத கிராமங்களே இன்று இல்லை எனலாம். வேளாண்குடிப் பெருமக் களுக்குப் பயிர்த்தொழில் செய்ய குறுகியக் காலக் கடனும், விவசாயம் தொடர்பான கிணறுகள் வெட்டுதல், பம்ப்செட் வாங்குதல் போன்றவைகளுக்கு நீண்டகாலக் கடனும் வழங்கப்பட்டு வருகிறது. உரம், பூச்சிமருந்து போன்றவை சலுகை விலையில் வழங்கப்படு கின்றன. கிராமக் கூட்டுறவுச் சங்கங்களி லேயே நகைக் கடனும் வழங்கப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் நியாய விலைக் கடைகள் மூலம் அத்தியாவசியப் பொருட் களையும், பிற நுகர்பொருட்களையும் கிராம மக்களுக்கு விநியோகித்து வருகின்றன. வட்ட அளவில் செயல்படும் கூட்டுறவு விற் பனைச் சங்கங்கள் விவசாயிகளின் விளை பொருட்களைச் சேமித்து வைத்து அவற்றை நல்ல விலைக்கு விற்றுத் தர உதவுகின்றன.

வெள்ளம், புயல் அல்லது வறட்சிபோன்ற இயற்கையின் சீற்றத்தால் பயிருக்கு ஏற் படும் நட்டத்தை ஈடுகட்ட பயிர் ஈட்டுறுதித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது போன்ற காரணங்களினால் பாதிக்கப்படும் விவசாயிகளின் குறுகிய காலக்கடன்கள் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தப்படக் கூடிய மத்தியக் காலக் கடன் களாக மாற்றியமைக்கப்படுகின்றன. பல சந்தர்ப்பங்களில் அசலும் வட்டியும் தள்ளுபடி செய்யப்படுகின்றன.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர் களின் ஆட்சியில் அசல் மற்றும் வட்டித் தள்ளு படி போன்ற கடன் சலுகைகள் 200 கோடி ரூபாய்க்குச் செய்யப்பட்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்க ஒன்று.

நகர மக்களின் வளமான வாழ்வுக்கும் கூட்டுறவியக்கம் கைகொடுத்து வருகிறது. நகரக்கூட்டுறவு வங்கிகள் முன்பு நகைக் கடன் மட்டுமே வழங்கி வந்தன. இன்று அவை பல்வேறு சிறு தொழில்கள் செய்யவும், கார், லாரி, ஆட்டோ போன்ற வாகனங்கள் வாங்கி தொழில் மேற்கொள்ளவும் கடன்

வழங்குகின்றன. நகரக் கூட்டுறவு வங்கிகள் சிறுதொழில் மேற்கொள்ள ரூ. 1 இலட்சம் வரையும், வாகனங்கள் வாங்க ரூ. 2 இலட்சம் வரையும் கடன் வழங்குகின்றன. இது தவிர மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் (நான்கு சத விகிதம்) பொருளாதாரத்தில் நலிவடைந்துப் போயிருப்போர் பலரும் பல்வேறு சிறுதொழில் களை மேற்கொண்டு வளம் பெற நகரக் கூட்டுறவு வங்கிகளில் நலிந்தோர் கடன் வழங்கப்பட்டு வருகிறது. மத்திய கூட்டுறவு வங்கிகளும் நகைக்கடன், சம்பளக்கடன், நலிந்தோர்க் கடன் போன்றவற்றை வழங்கி வருகின்றன. அது மட்டுமல்லாமல் நகரத் தில் வாழ்வோருக்கு ரேடியோ, டி. வி. போன்ற நுகர்பொருட்கள் வாங்கவும், நுகர் வோர் கடன் வழங்குகின்றன. பணியாளர் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் பணியாளர் களுக்குப் பல்வேறு காரணங்களுக்காகக் கடன் வழங்கி வருகின்றன. கூட்டுறவுப் பண்டக சாலைகள், சிறப்பங்காடிகள், சிறப்புச் சிற் றங்காடிகள், சுய சேவைப் பிரிவுகள் ஆகி யவை மூலம் நகர மக்களுக்குத்தரமான நுகர் பொருட்கள், சரியான எடையில், நியாய மான விலையில் விநியோகிக்கப்பட்டு வரு கின்றன. தமிழகத்தின் நுகர்வோர் கூட்டுறவு இயக்கம்தான் இந்தியாவிலேயே முன்னணி யில் இருக்கிறது என்பதும், இந்தியாவில் கூட்டுறவுகள் மூலம் விற்பனை செய்யப்படும் நுகர் பொருட்களில் மூன்றில் ஒரு பாகம் தமிழகத்தில்தான் விற்பனை செய்யப்படு கிறது என்பதும் நாமெல்லாம் பெருமைப்படத் தக்க ஒன்று. நுகர் பொருட்களின் விலையை நிலை நிறுத்துவதில் நுகர்வோர் கூட்டுறவு அமைப்புகள் பெரும் பங்கு வகிக்கின்றன.

இப்படி கிராமங்களிலும், நகரங்களிலும் வாழ்க்கையின் பல்வேறு நிலைகளில் உள் ளோர்க்கு உதவி வரும் இந்தக் கூட்டுறவு அமைப்புகளின்பால் கோடிக்கணக்கானோர் நன்றி உள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆனால் பயனடைந்தோரில் ஒரு பகுதியினர் தங்கள் கடமையிலிருந்து தவறி இந்த இயக்கத்திற்கே ஊறு விளைவித்துக் கொண்டிருக்கின்றனர் என்பதையும் குறிப்பிடக் கடமைப்பட்டிருக் கிறேன். கிராமங்களில்விவசாயிகளின் நலனைப் பேணிக் காக்க கூட்டுறவுச் சங்கங்களைத் தவிர வேறு என்ன அமைப்பிருக்கிறது? ஓர் ஊரின் கூட்டுறவுச் சங்கம் என்பது அவ்வூர்க் காரர்களால், அவ்வூர்க்காரர்களுக்காக உரு வாக்கப்பட்ட அவர்களின் சொத்துதானே? அதைப் பேணிக் காத்து தொடர்ந்து அதன் பயனைப் பெறுவதுதானே முறை! அதை நலிவடையச் செய்து விட்டும் மீண்டும் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்த அவல நிலைக்குப் போக வேண்டுமா? சிந்திக்கவேண் டும்.

இந்தியாவில் பொருளாதாரச் சமத்து வத்தை அடைய கூட்டுறவுத் தத்துவத்தைத் தவிர வேறு ஏதும் பயன்படாது. இன்றைய தேவை கடமை தவறாத உறுப்பினர்கள்தான். சில தவறான பிரச்சாரங்களால் அவர்கள் திசை திருப்பப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தெளிவு பெற்று தங்கள் கடமையை உணர்ந்து செயலாற்றி இந்த இயக்கத்தைக் காத்து தாங்களும் வளம் பெற வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டு அமைப்பில் இணைந்து பலன டையக் கூடிய உரிமையைப் பெற்றுள்ள நம் அனைவருக்கும் இந்த இயக்கத்தைக் காக்க வேண்டிய பொறுப்பும் இருக்கிறது. கடமையை நினைவில் நிறுத்திச் செயல்பட்டால் இந்த இயக்கமும் தழைக்கும் மக்களுக்கும் உதவும்.

அனைவருக்கும் எனது புத்தாண்டுப் பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ●







# மனிதாபிமான வளர்ச்சிக்கு நாடகக் கலை

## எஸ்.வி.சகஸ்ரநாமம்

நாடகம் என்பது ஒரு கலை! வலிமை வாய்ந்த கலை! பாமரர் களும் பண்டிதர்களும் கண்டு களிக்கக் கூடியது இந்தக் கலை. இந்தக் கலையின் மூலமாக நாட்டிற்கு நல்ல செய்திகளைச் சொல்ல நல்ல வாய்ப்புள்ளது. அதனால்தான் பிற்காலத்தில் படித்துப் பட்டம் பெற்ற பெரிய வர்களும் இந்தக் கலையை ரசித் துப் பாராட்டியது மட்டுமல்லா மல், இந்தக் கலையிலேயே முழுக் கவனமும் செலுத்தி நாடகங் களை எழுதியும், இதில் பங்கு கொண்டும் நடித்தும் இருக்கிறார் கள்.

பொதுவாக, இந்தக் கலை கண், காது, மனம் மூன்றையும் கவரக்கூடியதாகவும் உள்ளது.

இந்தப் புனிதமான கலையைப் பயன்படுத்துபவர்கள், இதை வெறும் பொழுதுபோக்கு என்று எண்ணாமல், மனித சமுதாயத் திற்குப் பயனுண்டாகும்படியா கப் பண்பாட்டுடன் இதைப் பயன்படுத்த வேண்டும்.

கலை என்பதே அழகின் வடி வம். எதைச் சொன்னாலும் அழ காகச் சொல்ல வேண்டும், எதைச் செய்தாலும் அழகு குறைவில்லா மல் செய்ய வேண்டும்.

நாடக ஆசிரியர்களுக்கு இதில் மகத்தான பொறுப்பு இருக்கிறது. கதைக் கட்டுக்கோப்புடன், உரையாடல்களில் விரசம் என்ப தில்லாமல், உருவாக்கிக் கொடுப் பதுதான் தனது கடமை என்று உணர வேண்டும். இசையிலும், காட்சி அமைப்பிலும், நடிப்பிலும் அனைத்திலுமே அழகும் எழிலும் பூத்துக் குலுங்க வேண்டும்.

அழகு உணர்ச்சியுடைய கலை ஞர்கள், ரசித்துப் பார்த்தும் மக்கள் உள்ளத்தைப் பண்படுத்த வேண்டுமே தவிர, அவர்கள் உள் ளத்தைப் புண்படுத்துவது நல்ல கலைஞர்களுக்கு அழகல்ல.

இதை மனத்தில் கொண்டு நாடகக் கலையைப் பற்றி நாம் நினைத்துப் பார்க்கையில், நமது தமிழகத்தில் நாடகக் கலையை நல்ல முறையில் பயன்படுத்து தற்கு வழிகாட்டியவர் ஸ்ரீ-ல-ஸ்ரீ சங்கரதாஸ் சுவாமிகள்தான் என்பது தமிழக நாடக வரலாறு நமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

என்னுடைய நாடகக் கலை அனுபவத்தில், எனக்குத் தெரிந்த வரை, சுவாமிகள் நாடகக் கலைக்கு ஆணிவேராக இருந்திருக் கிறார். சுவாமிகள் தனது 24வது வயதில் நாடக உலகில் பிரவேசித் தார். அதாவது 1891ஆம் ஆண்டு. இதே சமயத்தில் பயில் நாடகக் குழு என்று சொல்லக்கூடிய (அமெச்சூர் நாடகக் குழு) பம்மல் சம்பந்த முதலியார் அவர் களின் மேற்பார்வையில் நடந்து வந்திருக்கிறது.

உலக நாடக மேடைகள் அனைத்திலேயும் ஆரம்பத்தில் இதிகாச, புராண நாடகங்கள் தான் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. அதேபோல் நமது



நாடகங்களும் ஆரம்பகாலத்தில் இதே முறையில்தான் துவக்கப் பட்டுள்ளன.

சுவாமிகள், நாடகக் கலையில் தொழில்முறையில் இயங்கிவந்த நாடகக் குழுக்களையெல்லாம் ஒழுங்குபடுத்தி, காலகட்டத்தையும் கட்டுப்படுத்தி, நடிகர்கள், தேசத்திடமும் தெய்வத்திடமும் மக்களிடமும் அன்போடும் பக்தியோடும் வாழ்ந்து, கலைஞர்கள் என்ற பெருமையோடு இன்று வாழ்வதற்குக் கற்றுக் கொடுத்தவர்கள். ஆகவே சுவாமிகளை தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர் என்றும், நாடகத் தந்தை எனவும் கலையுலகம் பாராட்டி வணங்கி வருகின்றது.

இதேபோல் பம்மல் சம்பந்த முதலியார் அவர்கள் தமிழகத்தின் தலைநகரமான சென்னை நகரத்தில் 'சுகுண விலாச சபா' என்ற பெயரில் நாடகங்களைத் தாமே எழுதி நடித்தும், இயக்கியும் வந்துள்ளார். நாடகக் கலையின் மூலம் மக்களின் வாழ்வில் உயர்வுக்கு வழிகாட்ட முடியும் என்ற எண்ணத்தில் அவர் கொண்டுள்ள இந்தக் கலைபக்தியின் காரணமாகச் சுமார் 90 நாடகங்களை எழுதியதோடு, தானே நடித்தும், தயாரிப்பாளராகவும் இயக்குநராகவும் பணியாற்றியும் இருக்கின்றார். இன்று பட்டம் பதவி வகித்தவர்கள் இந்தக் கலையில் பிரவேசித்து நாடகக் கலையின் உயர்வுக்குப் பணியாற்றத் தூண்டுகோலாக இருந்தவர் திருவாளர் சம்பந்த முதலியார் ஆவார்கள். ஆகவே, இன்றும் முதலியார் அவர்களை 'நாடகப் பேராசிரியர்' என்ற சிறப்போடு மரியாதையாக வணக்கம் செலுத்தி வருகின்றனர் கலைஞர்கள். இந்த வரிசையில் இவ்விரு பெரியார்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி தமிழகத்தில் தொழில்முறையில் சில குழுக்களும், பயில் நாடகமுறைக் குழுக்களும் பல நல்ல நாடகங்களை நடத்தி வந்துள்ளன.

சமீப காலத்தில் தொழில் முறை நடிகர்கள் என்றும், தொழில்முறை அல்லாத நடிகர்கள் எனவும் பிரித்துப் பார்க்க முடியாமல் நாடகங்கள் நடந்து வருகின்றன.

சபாக்கள் என்ற பெயரில் முன்பெல்லாம் நாடகம், சங்கீதம், நாட்டியம் முதலிய கலைகளில் உண்மையிலேயே பற்றுக்கொண்ட பெருந்தகைகள் நல்ல கலைஞர்களையும், நல்ல கலைகளையும் ஆதரித்து வளர்த்தும் இருக்கி

> எண்ணமெனும் கழனியில் எத்தனையோ விளைகின்றன! அவற்றின் பயன் யாவும் கண்டறிந்து எடுத்துச் சுவைபெறல் அறிவுடைமை!
>
> —பேரறிஞர் அண்ணா

றார்கள். ஆனால் இன்று சபாக்கள் என்ற பெயரால் பல தரக் குறைவான நாடகங்களும், சங்கீதமும் ஆதரவுபெற்று தமிழகத்துக் கலாச்சாரத்துக்குச் சிறிதும் பொருந்தாதவையாக நடந்து வருவது வருத்தத்துக்குரியதாகவும், வேதனைப்பட வேண்டியதாகவும் இருந்து வருகின்றன.

எப்போதும், எல்லா வகையிலும் இரு பிரிவுகள் உண்டு. கலையை இப்படித்தான் செய்ய வேண்டும் என்ற ஒன்று. அதை எப்படியும் செய்யலாம் என்ற ஒரு பிரிவு.

இதெல்லாம் மாறி நல்ல நிலையில் நாடகம், சங்கீதம், நாட்டியம் இவை நம் நாட்டுக்குரிய பண்பாட்டை மறவாது இயங்க வேண்டும். அந்த நாள் வரவேண்டுமென எல்லாம் வல்ல கலைவாணியைப் பிரார்த்திக்கிறேன். ரசிகர்களும் இம்மாதிரியே எண்ணுவார்கள் என்றும் நம்புகிறேன். ●

# நம்பிக்கை ஒளி ஏற்றும் நல்ல நாள்

கவிஞர் பொன்னடியான்

நிலமகள் விளைவுக்கு
நன்றிசொலும் நன்றிநாள்!
நிழலாகும் சுற்றத்தை
நினைந்தேற்றும் உறவுநாள்!
இலைபோட்டு விருந்தோம்பிக்
கலைகூட்டும் கரும்புநாள்!
எல்லாரும் சமமென்ற
நல்லறம் கனியும்நாள்

— பொங்கல் நாள்!
எண்ணத்தில்
இதயத்தில்
இனிக்கின்ற
இனிப்புநாள்!

உழைப்பாளர் உழைப்புக்கே
உயர்வூட்ட உதித்தநாள்!
ஒப்பிலா ஏருழவர்
பெருமைசொலப் பிறந்தநாள்
தழைத்திட தமிழ்ப்பண்பு
தலைதூக்கி வந்தநாள்!
தன்னலம் தனைஓட்டும்
பொதுநலம் புலரும்நாள்

— பொங்கல் நாள்!
மங்கலம்
மனை எங்கும்
மணந்திட
மலர்ந்தநாள்!

மாடுகட் கும்இங்கு
மரியாதை தந்தநாள்!
மனைதோறும் பால்பொங்கி
மகிழ்ந்தாடும் மகிழ்ச்சிநாள்!
பாடு படுவோர்க்குப்
புதுப்பாதை காட்டும்நாள்!

— பொங்கல் நாள்!
எங்கெங்கும்
பூரிப்பு
ஓவியம்
தீட்டும்நாள்!

# வளமோங்கி வாழ்க

திருமதி சௌந்தரா கைலாசம்



ணகத்தே நற்கதிரோன் கதிர்வி ரித்தால்
மண்ணகத்தே பொற்கதிர்கள் மணிவி ரிக்கும்!
தேனிகர்த்தே செங்கதலி சுவைவி ரிக்கச்
செங்கரும்பும் மஞ்சளதும் பெருகி நிற்கும்!
ணகத்தே கனிமரங்கள் இனிமை மிக்க
கனியுதிர்த்து மகிழ்ச்சியினை நிறைத்தி ருக்கும்!
ஏன் அகத்தே இனிக்கவலை என்னும் வண்ணம்
இயற்கைத்தாய் வளமனைத்தும் நல்கி நிற்பாள்!

ஆனாலும் இயற்கைத்தாய் எல்லோ ருக்கும்
அனைத்தையுமே தருவாளா? சோம்பி நாளும்
வீணாகக் காலத்தைக் கழிப்போ ருக்கு
விரும்பிநலம் புரிவாளா? உண்ணத் தீனி
தானாக வருமென்று தூங்கு வோரைத்
தாங்குதற்கு வருவாளா? மாட்டாள்! ஆனால்
கூனாமல் எப்பொழுதும் உழைப்போ ருக்கே
கோணாமல் அன்னையவள் உதவி செய்வாள்!

உழைப்பவர்கள் வயிறார உண்ணும் முன்னம்
உணவதனைக் கொள்வதற்குத் துணையாய் நின்ற
எழிற்கதிரோன் அவனுக்கும் சேர்ந்து ழைத்த
ஏற்றமிகும் ஆவினங்கள் தமக்கும் நன்றி
மொழிகின்ற விதமாகத் தமிழ்மாந் தர்கள்
முறையாகக் காண்கின்ற விழாவே பொங்கல்!
தழைக்கின்ற பொங்கல்நன் னாளில் அன்புத்
தமிழ்மக்கள் சிறந்தோங்க வாழ்த்து வேனே!

மாரித்தாய் தவறாமல் அமுதம் நல்க
மண்மகளும் திருமகளும் அருள்வ ழங்க
பூரிப்பாய் உயிர்யாவும் மகிழ்ந் திருக்க
புவியெங்கும் நல்லின்பம் நிறைந்தி ருக்க
சீருக்கும் சிறப்புக்கும் குறைவே இன்றிச்
செந்தமிழர் வளமோங்கி வாழ்ந்தி ருக்க
வேருக்குள் உணவூட்டும் இறைவன் அன்பு
விழிநோக்கி அருள்பொழிவான் வாழி வாழி!

"தமிழரசு" பொங்கல் மலருக்கு
எங்கள் நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

**விநாயகா பிக்சர்ஸ்**

எண். 50, தென்னமரத் தெரு,

வேலூர்-1.

தொலைபேசி எண் : 21613



**அலங்கார் தியேட்டர்**

3, இன்பென்ரி ரோடு,

வேலூர்.

தொலைபேசி எண் : அலுவலகம் : 23866

வீடு : 22513


# புதுயுகம் காண்போம்


திருக்குறளார் வீ. முனிசாமி


உலகத்தில் வாழுகின்ற உயிரினங்கள் - மக்கள் உள்பட-வாழ்க்கையினை இரண்டு வகையாகப் பிரித்துச் சொல்லலாம். ஒன்று கல்வியறிவு பெற்று, அறிவின் துணைகொண்டு, சிந்தனையுடன் வாழுகின்ற வாழ்க்கை, மற்றொரு வாழ்க்கை கல்வி, அறிவு, சிந்தனை என்பவைகளின் துணையின்றி வாழ்வது.

கல்வி, அறிவு, சிந்தனை என்கின்ற எண்ணங்கள் இல்லாமல் 'பழக்கத்தினாலேயே' வாழுகின்ற வாழ்க்கை என்பது ஒன்று உண்டு. பிறப்பதும், வளர்வதும், உண்பதும், உறங்குவதும், இனத்தைப் பெருக்குவதும் ஆகிய இவைகளுடன் முடிவை மனிதப் பிறவியில் சேர்க்கப்படாத பிறவிகள் என்று சொல்லப்படும்.

''கடன் என்ப நல்லவையெல்லாம்'' என்றார் திருவள்ளுவர். அதாவது நல்லநல்ல செயல்களை எல்லாம் செய்து கொண்டே இருக்க வேண்டும். அப்படிச் செய்வதை மனிதக் கடமையாகக் கொள்ளுதல் வேண்டும். மனிதன் என்று கண்டு கொள்வதற்குக் காணப்பட வேண்டிய அடையாளங்களில் இவைகள் சில.

''நன்றின்பால் உய்ப்பது அறிவு'' என்று அறிவுக்கு இலக்கணம் சொல்ல வந்த ஆசிரியர் வள்ளுவனார். அறிவு பெற்ற பிறவி என்பதற்கு அடையாளம் நல்ல காரியங்களைச் செய்வதற்கு முனைந்திருக்க வேண்டும் என்பதாகும்.

விலங்கினங்கள் எல்லாம் வாழ்ந்து வருகின்றன என்பதற்குக் காரணம் 'பழக்கங்களே' யாகும். மனிதன் அப்பிறவிகளிலிருந்து மாறுபட்டவன் என்று காட்டிக் கொள்ள வேண்டுமென்றால் அவன் தானாகவே நல்ல காரியங்களைச் செய்யவேண்டும். விலங்கினங்களுக்கு அறிவு இல்லாத காரணத்தினால், நல்ல காரியங்களைத் 'தானாக'ச் செய்ய முடியாது. நாம் செய்ய வைக்க வேண்டும்.

ஒரு பசு நமக்குப் பால் தருகிறது. அது மிகவும் நல்ல காரியம்தான். அது தானாகவே தராது; நாம் பிடித்துக் கறக்க வேண்டும்.

ஒரு குதிரை வண்டியிழுத்துச் சம்பாதித்துக் கொடுக்கும். நல்ல காரியம் தான். ஆனால் தானாகவே வண்டியில் மாட்டிக் கொண்டு இழுக்காது. காலையில் போய் குதிரை வண்டிக்காரனை எழுப்பாது; ''என்னை வண்டியில் கட்டுங்கள், நான் வண்டியை இழுத்துக் கொண்டு போகிறேன்'' என்று உணர்த்தாது.

ஏ மனிதனே! நீ, நல்ல காரியங்களைத் 'தானாகச்' செய்ய வேண்டும். மற்றவர் வந்து சொல்ல வேண்டும் என்று காத்திருக்கக் கூடாது. ஒரு ஊரில் எல்லோரும் சேர்ந்து நல்லதொரு காரியத்தில் ஈடுபட்டிருப்பார்கள். ஒருவர் அவர்களோடு சேராமல் தனியாக வீட்டில் இருக்கிறார். அவனைப் பார்த்து ஒருவர் 'நீங்கள் ஏன் அவர்களோடு போய்ச் சேரவில்லை'' என்று கேட்டால், 'என்னை யார் வந்து கூப்பிட்டார்கள்' என்று பதில் சொன்னால், அப்படிப்பட்டவர் பிடித்துக் கறக்க வேண்டிய இனத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பு.

பார்ப்பதற்குத் தோற்றத்தில் மக்கள் போலவே சிலர் இருப்பார்கள். ஆனால் மனிதத் தன்மைகள், மனித குணங்கள், மனிதப் பழக்க வழக்கங்கள் கடுகளவேனும் இல்லாது இருப்பார்கள். அப்படிப்பட்டவரை மக்கள் கூட்டத்தில் சேர்த்துக் கணக்கிடக் கூடாது என்று திருவள்ளுவனார் கூறுகின்றார். அவர்களைக் 'கயவர்கள்' என்று அழைக்கின்றார்.

''மக்களே போல்வர் கயவர்' என்பது திருவள்ளுவர் வாக்கு. மனிதத் தன்மைகள் இல்லாமல், பண்புகள் இல்லாமல், வெறும் தோற்றமும், உடையலங்காரமும் மட்டும் மனிதன் என்ற பெயருக்கு உரியனவனாகச் செய்து விடாது.

ஒவ்வொரு நேரத்திலேயும் புதுமையாகச் சிந்திப்பதும்,வருங்காலத்திற்குத் திட்டங்கள் தீட்டுவதும், அறிவு வளர்ச்சிக்கு அடையாளமாகும்.

''அறிவுடையார் ஆவதுஅறிவார்'
''எதிரதாக் காக்கும் அறிவினார்'

என்றெல்லாம் அறிவின் சிறப்பினைப் பேசுவர். எதிர்காலத்தில் இப்படித்தான் செயல்கள் நடைபெறக் கூடும் என்று அறிவுள்ளவர்கள் அறிந்து கொள்ளுவார்கள். வரப்போகின்ற ஒன்றினை முன்கூட்டியே அறிந்து கொள்ளுவதுதான் அறிவுடையவர்களுக்கு இலக்கணமாகும்.

''வருமுன்னர் காவாதான் வாழ்க்கை'' என்பது வள்ளுவர் வாக்கு. அப்படியென்றால் முன்பாகவே அறிந்து, தெரிந்து, புரிந்து, தீமையினின்றும் காத்துக் கொள்ள வேண்டியது மனிதன் கடமையாகும். விரிந்து, பரந்து காணப்படுகின்ற கடலின் ஆழம்

அளந்தறிய முடியாததாகும். விரிந்திருக்கின்ற கடல் பரப்பில் காற்று வீச வீச, அலைகள் மோதுகின்றன. அலைகள் மோத மோத, வெண்மையான நுரை வெளிப்படுகின்றது.

சிந்தனைகள் தோன்றுகின்ற மனித உள்ளம் கடலைவிட ஆழமானது என்று உணர்வோமாக! இந்த உள்ளத்தில் சிந்தனைகள் என்ற அலைகள் மோத மோத 'புதுமை' என்கிற நுரை வெளிப்படும். ஏ மனிதனே! உன்னுடைய உள்ளத்தில் மேலான புதிய சிந்தனைகள் உருவாகிக் கொண்டு இருக்க வேண்டும்.

''உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல்' என்பது திருவள்ளுவர் வாக்கல்லவா? உயர்ந்த எண்ணங்களே மனிதனை உருவாக்குகின்றன. மனிதனை உயர்த்துகின்றன. புதுமையினைக் கண்டு பிடிப்பதுதான், அறிவு வளர்ச்சி என்பதனை எடுத்துக் காட்டுவதாகும்.

உதாரணமாக, பேச வேண்டும் என்றால் குறைந்தது பத்து இருபது ஆண்டுகளுக்குள்ளாக நாம் செய்து கொண்டிருக்கின்ற செயல்கள் அனைத்தும் நல்ல முறைகளில் புதிய திருப்பங்களைப் பெற்றாக வேண்டும். அப்பொழுதுதான் மக்களிடையே அறிவு வளர்ச்சி வேகமாகக் காணப்படுகிறது என்பது பொருளாகும்.

உண்ணுகின்ற உணவுவகைகள் புதுமையானதாகச் செய்து வைத்து உண்டு மகிழும் பழக்கத்தில் பலர் இருந்து கொண்டு வாழவில்லையா? ஒரு இயந்திரத்தைப் பயன்படுத்துகிறவன் இருபத்தைந்து ஆண்டுகளுக்குள் அதே இயந்திரத்தில் புதுமையாக மாற்றங்களைச் செய்து, அதிகப் பயனைத் தருமாறு செய்தால் அது அறிவு வளர்ச்சி உண்டு என்பதற்கான அடையாளமாகும்.

''உலகத்தோடு-அவ்வது உறைவது அறிவு'' என்பது உலகப் பொதுமறை தந்த வள்ளுவனாரின் வாக்கல்லவா? நாள் தோறும் அறிவு வளாச்சியில் முன்னேற்றம் அடைந்து கொண்டு வருகின்ற நாட்டு மக்களின் அறிவு வளர்ச்சியினைக் கூர்ந்து கவனிக்கின்ற பழக்கம் நமக்கு வரவேண்டும். அப்பொழுதுதான் மகாகவி பாரதி சொல்லிய புதுமையினை நாம் காண முடியும்.

''பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமையில்லை'' என்பது பாரதியின் வாக்கு. குறிப்பாக இளைஞர்களுக்கும் மாணவர்களுக்கும் புதுப்புதுப்பழக்க வழக்கங்களை உண்டாக்க வேண்டும். வளர்ந்து வருகின்ற உலகில் புதுமைகளைக் கண்டுபிடிக்கின்ற மக்கள் எவ்வாறு வாழ்கின்றார்கள்? அவர்களுடைய நல்ல பழக்க வழக்கங்கள் யாவை? அத்தகைய சிந்தனைகளிலேயே நம்மவருடைய பழக்க வழக்கங்கள் செல்லுமாறு பழக்க வேண்டும்.



நாகரிகத்தில் மிகப் பழமையான வரலாறு தமிழர்களுக்கு உண்டு என்ற பெருமையினை விடாமல் பேசிக் கொண்டிருப்பதில், நாம் தவறுவதில்லை. புதிய புதிய சிந்தனைகளுக்கும், அறிவு வளர்ச்சிக்கும் நம்முடையபழைய கதைகள் குறுக்கே நிற்காமல் பார்த்துக் கொண்டால்தான், வருங்காலத்திலாவது நல்ல சமுதாயத்தை ஓரளவு நாம் காண முடியும்.

உலகில் வாழுகின்ற சுதந்திர நாடுகளில் நாமும் ஒன்றாக இருந்து வருகின்ற பெருமையைப் பேசிக் கொள்கிறோம். மக்கள் எண்ணிக்கையில் மிகப் பெரிய தேசம் என்றும், உலகமே சொல்லிக் கொள்ளுகின்ற அளவுக்கு வாழுகின்றோம். அன்னிய நாடுகளில் - மிக மிகச் சிறிய அன்னிய நாடுகளில் - செய்யப்பட்டு வியக்கத்தக்க - அன்றாடம் நாம் பயன்படுத்துகிற பொருள்கள் அனைத்தையும் நாமே செய்யக்கூடாதா என்ற உணர்ச்சியினை ஒவ்வொருவரும் பெற வேண்டும்; பெற்று வாழ வழிவகை செய்ய வேண்டும்.

அறிவு வளர்ச்சி என்பது எந்த நாட்டினருக்கும் சொந்தமானதல்ல. பிற நாட்டவர்கள் வியப்பும், அதிர்ச்சியும் கொள்ளுமாறு, உயர்வான பொருள்களை நாம் செய்யக் கூடாதா-என்ற ஏக்கம் இந்த நாட்டில் ஒவ்வொருவருக்கும் வரவேண்டும். அப்பொழுது தான் மனித அறிவினைப் பெற்றிருக்கிற நாம் அறிவு கொண்டு வாழ்கிறோம் என்பதற்கு முழு அர்த்தமாகும். இல்லாவிட்டால் பழக்கத்தினால் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதுதான் கணிப்பு!

புதுமைகள் பல செய்து புதுயுகம் காண்போமாக! ●



# அண்ணாவின் அன்புத் தத்துவம்

மாண்புமிகு முதல்வர்
டாக்டர் எம்.ஜி.ஆர்

அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் தாம் வகுத்த இலக்கணங்களுக்குத் தாமே இலக்கியமாக வாழ்ந்து காட்டினார்கள்.

அண்ணா அவர்களால் அப்படி நடந்து காட்ட முடிந்தது எதனால்? அவருடைய அகமும் புறமும் ஒன்றுபோல் ஒரு பாதையில் ஒரே குறிக்கோளை நோக்கிச் செயற்பட்டதே அதற்குக் காரணம்.

அவ்வாறு அகமும் புறமும் ஒன்றுபட்டு இயங்கப் பகுத்தறியும் ஆற்றலைப் பயன்படுத்த வேண்டும். ஆனால் அதைப் பயன்படுத்தத் தவறுவதனாலேயே, மக்களிடையே மாறுபட்ட தன்மைகள் இடம் பெறுகின்றன.

ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு நாம் போகவேண்டும் என்று வைத்துக் கொள்வோம். அப்படிப் போவதற்கு ஏற்ற பாதை வேண்டுமல்லவா?

பாதையே இல்லாத பகுதியில் அடியெடுத்து வைத்து, அல்லற்பட்டு நடந்து மற்ற இடத்தை அடையவும் கூடும்.

ஏன், மலைமேலே ஏறி இறங்கிப் போகலாம்!

காட்டு வெளிகளில் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து செல்லலாம்!

தண்ணீரில் நீந்தியும் செல்லலாம்! ஆனால் இப்படிப் போய்ச் சேருவதற்கெனத் தேர்ந்தெடுக்கப்படும் பாதைகள் ஒழுங்கற்றவைகளாக இருப்பதால், பாதசாரிகளுக்கு அந்தப் பாதைகள் தொல்லைகளையும் இடர்ப்பாடுகளையும் உண்டாக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த நிலையைத் தவிர்க்க எண்ணி, பாதையே இல்லாதிருந்த இடத்தில், ஓர் ஒழுங்கான பாதையை உருவாக்கி, 'இந்த வழியாகப் போனால் அங்கே போய்ச் சேரலாம்' என்பதையும் குறிப்பிட்டுப் பாதசாரிகளுக்கு உதவி செய்யும் வகையில் ஒரு வசதி ஏற்படுத்தித் தரப்படுமானால் அதை அவர்கள் ஏற்றுக் கொள்ள மறுப்பார்களா?

தேவையை உணர்ந்து அவர்கள் ஏற்றுக் கொண்ட பிறகு, இடையில் குறுக்கிட்டு, 'நமது முன்னோர் இந்தப் பாதையில் தான் சென்றார்களா? நாம் ஏன் செல்லவேண்டும்?' என்று கேட்பார்களேயானால் அது சிந்தித்து விடையிறுக்கப்பட வேண்டிய ஒரு கேள்வியாகும்.

அதேபோல், ''முன்னோரின் பாதையில்லாப் பாதையில்தான் போய்க்கொண்டிருக்க வேண்டுமா? சரியான பாதையில் போகக் கூடாதா?'' என்ற கேள்விக்கும் முறையாக பதிலை அளிக்கவும் நியாயமான முடிவைக் காணவும் நாம் முயலவேண்டும்.

மக்கள் வாழ்வின் தேவைகளைப் பெருக்கவும், உயிர்களைக் காக்கவும் கருதிப் பாதையில் தரிசாகக் கிடக்கும் நிலத்தைத் திருத்திச் செப்பனிட்டுப் பயிர் விளையும் நிலமாக மாற்றினால், ''எங்கள் மூதாதையர் இப்படியெல்லாம் செய்யவில்லை; இந்த நன்செய் நிலத்தின்வழியாகத்தான் போக்குவரத்தை வைத்துக் கொண்டிருந்தார்கள். இடையே வகுக்கப்பட்ட பாதையில் செல்ல மாட்டோம். பயிர்கள் விளைந்திருந்தாலும், அந்த நிலத்தின் வழியாகப் பயிர்களை மிதித்துப் பாழ்படுத்தி, அந்த வழியாகத்தான் போவோம்'' என்றால் அது நியாயமா என்பதைச் சிந்திக்கத்தானே வேண்டும்!

அந்த இடம் பொது இடம் தான். தனி மனிதர்கள் அனைவருக்கும் சொந்தமான இடம் தான். ஆனால் அந்த இடம் இப்போது தரிசாக இல்லை; பயிர் விளையும் நிலமாக ஆக்கப்பட்டு விட்டது. அந்தப் பயிர்களோ மக்களுக்காக வளர்க்கப்பட்டவை. பக்கத்திலோ நேரான பாதை இருக்கிறது. அந்தப் பாதையில் மேடுபள்ளங்கள் இல்லை; போதிய வெளிச்சமும் இருக்கிறது என்றால் அதை விட்டுவிட்டு, விளை நிலத்தைச் சிதைத்துக் கொண்டு செல்வது எப்படி முறையாகும்?

விதவைத் திருமணத்திற்கும், விவாக விலக்கிற்கும், கலப்பு மணத்திற்கும், வாழ்க்கை ஒப்பந்தம்- பதிவுத் திருமணம் ஆகியவைகளுக்கும் மக்களிடையே ஆதரவு பிறந்ததே, அது எப்படி? இவை யாவும் முன்னோர் பின்பற்றிய நெறிகளா? இல்லையே! அறிவு வளர்ச்சியின் விளைவுகளேயல்லவா?

ஆணும் பெண்ணும் சரிநிகராக வாழும் அடிப்படை உரிமை வழங்கப்பட்டு, ஒருவருக்கு மற்றவர் அடிமையில்லை என்ற உறுதிப்பாடு தரப்பட்டிருக்கிறதே! இதுவும் அறிவு வளர்ச்சியின் பயன்தானே!

இவை யாவும் பழக்கவழக்கத்தால் ஏற்பட்டதென்றாலும், பின்னால் ஏற்பட்ட சட்டமுறைப்படி உருவானவை என்றாலும், இவை அனைத்துமே வாழ்க்கை வசதிக்கு வேண்டிய அடிப்படை உரிமையை எடுத்துக்காட்டுகின்றன.

ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமை தேவை; மகிழ்ச்சிதேவை; இந்தத் தேவைகளுக்கு அடிப்படை-வளரவும் வாழவும் தடையில்லாமலிருப்பதுதான்.

சமுதாயத்தின் கட்டுப்பாடுகள் ஒவ்வொரு மனிதனுடைய உள்ளத்தின் கட்டுப்பாடுகளாக அமையவேண்டும். புறத்தில் உள்ளது வேறு, அகத்தில் உள்ளது

வேறு.என்று இருந்தால் எந்தச் சமூகக் கட்டுப்பாடோ, அல்லது சட்டமோ இலட்சியத்தில் வெற்றி காண முடியாது.

ஒரு பாதையை வகுக்க பழக்க வழக்கங்கள்தாம் வழி காண்பிக்கும். அறிவு வளர்ச்சியை ஒட்டிப் புதிய கருத்துக்கள் உருவாகும் போது பழமையில் உள்ள நல்ல கருத்துக்கள் அழிந்து போய் விடாதவாறு பாதுகாக்கப்படவும் வேண்டும்.

தன்னலம் தேவைதான். அது பொது நலமாகப் பரிணமிக்க வேண்டும்.

ஒரு பெண்ணை ஒருவன் விரும்புகிறான் என்றும், அவளோ அவனை விரும்பவில்லை என்றும் வைத்துக் கொள்வோம். அவனுடைய அகம் அவளை நாடுகிறது. ஆனால் ,புறச் சூழ்நிலையில் அவனால் அவளை அடைய முடியாத் நிலை இருக்குமானால்? புறத்தில்



உள்ள நிலைமைக்கேற்பத்தானே அகத்தில் ஆசை அரும்பவேண்டும். இயலாத ஒன்றை மனம் விரும்பினால் விளைவது ஏமாற்றமாகத் தான் இருக்கும்.

இதனால்தான் அகமும் புறமும் மாறுபடக்கூடாது என்ற கருத்தை வலியுறுத்தும் அவசியம் பிறக்கிறது. அதற்கு உறுதுணையாக உள்ளதுதான் பகுத்தறிவு. அந்தப் பகுத்தறிவு வளர்க்கும் பணியில் தன்னிகரற்று விளங்கியதோடு, அமைதியான முறையில் மெல்ல மெல்ல மறுமலர்ச்சியை உண்டாக்கியவர் அண்ணா அவர்கள்.

அண்ணா அவர்களின் மறுமலர்ச்சிக் கருத்துக்கள் திடீரென்று மக்களிடையே பரவிவிடவில்லை. திடீரென்று ஒருநாள் மக்கள் எல்லோரும், ''இதுதான் நமக்கு ஏற்றது'' என்று முடிவெடுத்துவிடவில்லை.

முதலில் அண்ணாவின் பேச்சைக் கேட்க ஆசை கொண்டார்கள். அதன் பின், ''அவர் பேசுவதிலும் சில நியாயங்கள் இருக்கத்தானே செய்கின்றன'' என்றார்கள். பிறகு ''அவர் கூறுவதுதான் உண்மை'' என்று எண்ணத் தொடங்கினார்கள். இதன் பிறகு பல நேரங்களில், பற்பல சூழ்நிலைகளில் அவரவரும் தங்களின் அநுபவ வாயிலாக அறிந்து,சிந்தித்துப்பிறகு, இதுதான் ஏற்றது என்ற முடிவுக்கு வந்து,அப்போதும் எதிர்ப்பட்ட பல எதிர்ப்புக்களைச் சமாளித்துப் பிறகுதான் அண்ணா அவர்களின் எண்ணத்தோடு கலந்தார்கள்

**அறிவு என்கிற வழி காட்டி**
**பகுத்தறிவு என்கிற ஒளிவிளக்கு**
**தன்னம்பிக்கை என்கிற நடை**
**மனப்பக்குவம் என்கிற வலிமை**
**— இவைகளைக் கொண்டுதான் மனிதன் தனது வாழ்க்கையைக் கடக்க வேண்டியவனாகிறான்.**

ஆகவே, ஒவ்வொரு மனிதனும் எதை விரும்பவேண்டும் என்பது அவனுடைய அகத்திற்கும் புறத்திற்கும் ஒத்ததாக இருக்கவேண்டும். ஒரு பெரிய ஆற்றை நீந்திக் கடக்க வேண்டும் என்ற ஆசை உள்ளத்திலே எழுந்தால் மட்டும் போதுமா? உடலிலே வலிமையும் உறுப்புக்களுக்குப் பழக்கமும் வேண்டும் அல்லவா? அதுபோலத் தான் வாழ்க்கையும்!

பொருளாதாரத்தையும், சமூக அமைப்பையும், சமூக நாகரிக வளர்ச்சிக்காக ஏற்படும் மாற்றங்களையும் அனைத்தையுமே மக்கள் வாழ்வுக்காக என்று சிந்திக்க வேண்டுமே தவிர, ''எனக்காக,என் ஒருவனுக்காக, என் ஒருவனுக்காகவே'' என்று சிந்திக்கக் கூடாது என்ற முடிவைத்தான்,அண்ணா அவர்களின் தத்துவக் கருத்துக்களைத் துணையாய்க் கொண்டு நான் சிந்தித்துப் பார்த்த அளவில் மிகவும் ஏற்புடையதாகக் கருதலானேன்.

ஏராளமான பொருள்களுக்குரிய ஒருவர், தன் கண் எதிரில் கஞ்சிக்குப் போராடும் எளிய உருவங்களைக் காணும்போது இரத்தக் கண்ணீர் வடிக்க வேண்டுமென்று யாரும் எதிர்பார்க்கவில்லை. ஏன் அவர்கள் அந்த நிலையிலும், நாம் இந்த நிலையிலும் இருக்கிறோம் என்பதையாவது சிறிதளவு யோசிக்க வேண்டுமல்லவா?

அந்த யோசனை அவருக்கு உண்டாக வேண்டுமானால், இயற்கையான அன்பின் உயிரோட்டப் பண்பு அவரிடம் உண்டாக வேண்டும்.

மக்கள் தொகை பெருகிக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் எல்லோருக்கும் நடு நிலையான வாழ்க்கை வசதி அளிக்கப்பட்டாக வேண்டும் என்ற பிரச்சினை எழுந்து பல்லாண்டுகள் ஆகிவிட்டன.

இந்தப் பிரச்சினைக்குச் சரியான முடிவு பிறக்க அண்ணா அவர்களின் அன்புத் தத்துவம் அதற்கு ஏற்றதொரு வழி காட்டியாக அமைந்திருக்கிறது. மக்கள் அதை உள்ளும் புறமும் ஒருமைப்பாட்டுடன் ஏற்பதில் தான் வெற்றி அடங்கியிருக்கிறது.

குழந்தைக்குத் தேவையான உணவைத் தாய் அளிப்பதுபோல, மாணவனுக்குத் தேவையான கல்வியை ஆசிரியர் அளிப்பதுபோல, இல்லாதவர்களுக்குத் தேவையானதை இருப்பவர்கள் அளிக்க முன்வரவேண்டும். என்பதே அண்ணா அவர்களின் அந்த அன்புத்தத்துவம். இதைக்கடைப் பிடித்தால் பிரச்சினையைச் சமாளிப்பதற்கான உதயம் தென்படும். ●


# அனைவருக்கும் எங்கள்
# பொங்கல் வாழ்த்துக்கள்

புரட்சி தலைவராம்......
பொன்மனச் செம்மலின்.........
பொற்கரங்களால்
நல் ஆசி பெற்ற
புதுமை நாளிதழாக
தமிழக மெங்கும் வீறு
நடைபோடுகிறது.



நடு நிலை நாளிதழ்
**தினத் தூது**
ஆசிரியர். ஜி.ராஜகுமார்

படங்கள் நிறைந்த செய்திகளை
சுடச் சுட வெளியிடும்
தின நாளேடு



விபரங்களுக்கு தொடர்பு கொள்ள
ஆசிரியர்
''தினத்தூது''
196, R. K. மடம் சாலை,
மந்தைவெளி, சென்னை - 600 028
☎ 72318

தலைமுடி உதிர்கிறதா!
தடுத்து நிறுத்தும்
மூலிகைத் தைலம்

அருமையான
மூலிகைத் தைலத்தால்
அடர்த்தியான
கூந்தல் வேண்டுமா!

குளிர்ச்சியான
மூலிகைத்
தைலத்தால்
வளர்ச்சியான
கூந்தலைப்
பெறவேண்டுமா!

இள நரையா!
போடுகா!! இதோ!!!
மூலிகைத் தைலம்




கரிசலாங்கண்ணி, மருதாணி,
கீழாநெல்லி, பொடுதலை,
செம்பருத்தி, குமரி போன்ற
30வகை உயர் ரக மூலிகைகளைக்
கொண்டு தேங்காய் எண்ணெய்
மற்றும் ஆலிவ் எண்ணெயுடன்
தயாரிக்கப்பட்ட கூந்தல் தைலம்.



ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



வளர்ச்சிப் பாதையில் ஓர் சகாப்தம்.

**1905-1985**

விஞ்ஞான வளர்ச்சியும், தொழில் வளமும்
நம் நாட்டை அடுத்த நூற்றாண்டிற்கு தகுந்த
முறையில் தயார் செய்து கொண்டிருக்கின்றன.
இந்த வளர்ச்சியை மேன்மேலும் ஊக்குவிப்பதற்கும்
அடித்தள மக்களை உயர்த்தவும், விவசாயம்
கைத்தொழில் முதலியன பெருகவும்
தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி
தன் 80 வருட நற்பணியை செவ்வனே
தொடர்கின்றது, உங்கள் நீண்ட நட்புடன்.
ஆம். இந்த சகாப்தம், பெரும் சாதனையின் ஆரம்பம்.

TNSC BANK
தமிழ்நாடு மாநில
கூட்டுறவு வங்கி லிட்.
233, NSC போஸ் சாலை,
சென்னை 600 001.

உங்கள் வளம், எங்கள் கடன்.



பதிவு எண் M. 8676
Licence No. TN/MS(C)/PP-23










மதுரை - 20.

வறுமைக் கோட்டில் உள்ளோரின் வளமான வாழ்விற்கும் கிராம செழுமைக்கும் அரசு வளர்ச்சி முகமை வழங்கிடும் வளர்ச்சிப் பணிகளின் நலனை எய்திட கீழ்க்கண்ட திட்டங்களுக்கு கிராமப் பொது மக்கள் ஆர்வம் தர வேண்டப்படுகிறார்கள்.

சுர்ஜித் எஸ். சவுத்திரி, இ.ஆ.ப.,
கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) &
திட்ட அலுவலர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை-20.

இரா. வரதராஜுலு, இ.ஆ.ப.,
தலைவர் மற்றும் மாவட்ட ஆட்சித்
தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி
முகமை, மதுரை-20




2959

# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஏற்றமிகு புது நாள் | 111 |
| தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் | 113 |
| உழவே தலை | 115 |
| தைப்பாவாய் | 123 |
| திரைப்படமும் புதுக்கல்வியும் | 125 |
| வளம் பெற வழி | 127 |
| உறுதி கொள்வோம் | 131 |
| இவரைச் சந்திக்கிறோம் | 133 |
| வருங்காலம் வசந்தகாலம் | 143 |
| இருமொழிக் கொள்கை எதற்காக ? | 145 |
| கடவுள் வணக்கம் | 149 |
| தலை வைத்து வணங்குகிறேன் | 151 |
| புத்தாண்டுச் சிந்தனைகள் | 175 |
| கலையின் நோக்கம் மாறுபடுமா ! | 177 |
| தீர்ப்பின் மறுபக்கம் | 178 |
| மக்கள் தெய்வம் | 181 |
| அறுவடை | 187 |
| அண்ணா மூவர் | 190 |
| தைப்பொங்கல் | 197 |


85374

மலர் 1&2 * பக்கம் 200

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் வண்ணப்படக் காலண்டர் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளது.



மாண்புமிகு மேலவைத் தலைவர்
டாக்டர் ம.பொ. சிவஞானம்



மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர்
திரு. பி.எச். பாண்டியன்



மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்
திரு. ஜி. சுவாமிநாதன்



மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர்
திரு. வி. பாலசுப்பிரமணியன்

# தமிழ்நாடு அமைச்சரவை

1. மாண்புமிகு முதலமைச்சர்
டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன்

2. மாண்புமிகு நிதி அமைச்சர்
டாக்டர் இரா. நெடுஞ்செழியன்

3. மாண்புமிகு மின்துறை அமைச்சர்
திரு எஸ். இராமச்சந்திரன்

4. மாண்புமிகு தொழிலாளர்நல அமைச்சர்
திரு கே.ஏ. கிருஷ்ணசாமி

5. மாண்புமிகு சுற்றுலா - அறநிலையத்துறை அமைச்சர்
திரு இராம. வீரப்பன்

6. மாண்புமிகு தொழில் அமைச்சர்
திரு க. இராசாராம்

7. மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு ப.உ. சண்முகம்

8. மாண்புமிகு கல்வி அமைச்சர்
திரு செ. அரங்கநாயகம்

9. மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்
திரு கா. காளிமுத்து

10. மாண்புமிகு சட்ட அமைச்சர்
திரு சி. பொன்னையன்

11. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
டாக்டர் எச்.வி. ஹண்டே

12. மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்
திரு எஸ். முத்துசாமி

13. மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர்
திரு எஸ். திருநாவுக்கரசு

14. மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவுத்துறை அமைச்சர்
திரு வி.வி. சுவாமிநாதன்

15. மாண்புமிகு சத்துணவு அமைச்சர்
திரு ஆர். சௌந்தரராசன்

16. மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர்
திரு டி. வீராசாமி

17. மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர்
திரு எஸ். நல்லுசாமி

18. மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர்
திரு ஆலூர் ஜெகதீசன்

19. மாண்புமிகு மறுவாழ்வு - வேலைவாய்ப்புத் துறை அமைச்சர்
திரு டி. ராமசாமி

20. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்
திரு அ. அருணாசலம்

21. மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்
திரு எம்.ஆர். கோவேந்தன்

22. மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்
திருமதி கோமதி சீனிவாசன்

23. மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர்
திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி

24. மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்
திரு ஒய்.எஸ்.எம். யூசுப்

25. மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்
திரு கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன்

மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர்

டாக்டர்

# எம்.ஜி.இராமச்சந்திரன்



# மாண்புமிகு தமிழக அமைச்சர்கள்


டாக்டர் இரா. நெடுஞ்செழியன்


திரு எஸ். இராமச்சந்திரன்


திரு கே.ஏ. கிருஷ்ணசாமி


திரு இராம. வீரப்பன்


திரு க. இராசாராம்


திரு ப.உ. சண்முகம்


திரு செ. அரங்கநாயகம்


திரு கா. காளிமுத்து


திரு சி. பொன்னையன்


டாக்டர் எச்.வி. ஹண்டே


திரு எஸ். முத்துசாமி


திரு எஸ். திருநாவுக்கரசு


திரு வி.வி. சுவாமிநாதன்


திரு ஆர். சவுந்தரராசன்


திரு டி. வீராசாமி


திரு என். நல்லுசாமி


திரு ஆரூர் ஜெகதீசன்


திரு டி. ராமசாமி



திரு அ. அருணாசலம்



திரு எம்.ஆர். கோவேந்தன்



திருமதி கோமதி சீனிவாசன்



திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி



திரு ஒய்.எஸ்.எம். யூசுப்



திரு கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன்







# பொங்கல் புதுநாள்

## பேரறிஞர் அண்ணா

உலக நாடுகள் பலவற்றின் தலைநகரங்களை ஒருமுறைக்கு மும்முறை கண்டு வந்தேன். அங்கு எங்கும் விழாக்கள் பலப்பல நடத்தப்படினும் தமிழகத்தில் பொங்கல் புதுநாள் போன்றதோர் பொன் விழா இல்லை, நிச்சயமாக இல்லை!

கோலாகல விழாக்கள் உள்ளன; பரபரப்பூட்டும் விழாக்கள் நடத்தப்படுகின்றன; கேளிக்கைகள், மதுபான விருந்துகள் மிகுதியாக-ஏனினும் ஆர்ப்பரிப்பின்றி ஆனால் அகமகிழ்ச்சியுடன், போலிப் பூச்சுகளின்றி ஆனால் புதியதோர் பொலிவுடன், வீட்டில் உள்ள அனைவரும் கலந்துரையாடி மகிழ்ந்திருக்கும் நமது பொங்கற் புதுநாளுக்கு ஒப்பான விழா அங்கு எங்கும் இல்லை!

நாட்டியக் கூட்டங்களிலே அமளி! பாதைகளிலே புதுவேகம்! மோதல்! உயிர்ச்சேதம்! அங்காடிகளிலே ஆரவாரம்! இவைகள் ஏராளமான அளவு! ஆனால் இங்கு வீடுதோறும் எழுகிறதே. முதியவரும் மூதாட்டியும், இளைஞரும் இளநங்கையும். சிறாரும் சிறுமியரும் கலந்து எழுப்பும் “பொங்கலோ! பொங்கல்!” என்ற இசை; அது அங்கு எங்கும் இல்லை. இருந்திடத்தக்க விதமான சமுக அமைப்பே இல்லை!

வேறெல்லா விழாக்களும், “போகும் இடத்திற்காக!”

பொங்கற் புதுநாள் இருக்கும் இடத்திற்காக!

தமிழரின் தனிச் சிறப்பினை அறிந்திடப் பயன்படும் நமது இலக்கியச் செல்வத்தை நினைவிற்கொள்ளவும், மற்றையோர்க்கு எடுத்துக் கூறவும் பொங்கற் புதுநாள் ஏற்றது என்பதாலேயே பெரியோர்கள் இதைத் “தமிழர் திருநாள்” என்றழைக்கின்றனர்.

பழம் பெருமை பேசி, பெருமூச்செறிந்து கொண்டே செயலற்று இருப்பதல்ல நமது குறிக்கோள். செயலினால் பெற்றிடும் செழுமையை எடுத்துக் காட்டிடும் நன்னாளாம் பொங்கற் புதுநாளில், செயலார்வம் மிகுந்திடுவது இயல்பு. செயலும் செம்மையானதாக அமைந்திட வேண்டும். பயனும் சமூகம் முழுவதற்கும் கிடைத்திடத் தக்க முறை கண்டாக வேண்டும்.

வெள்ளம் அழித்திடும்; வாய்க்கால் வளமூட்டும். செல்வம் சிலரிடம் சென்று குவித்திடுவது - வெள்ளத்துக்கு ஒப்பானது. அது கொண்டவனையும் அழித்திடும்; சமூகத்தில் வலிவற்றோரையும் அழித்திடும். எனவேதான்-சிந்தனையாளர், “செல்வம் பெருக்கிட வேண்டும். அஃது முடக்கப்படாமல் சமூகம் முழுவதற்கும் பயன் அளிக்கக்கூடிய வழிமுறை கண்டாக வேண்டும்” என்று எடுத்துக் கூறினர்.

தமிழர் திருநாளாம் பொங்கற் புதுநாள் தனித்தன்மை பெற்றது.

உழைப்பே செல்வம்.
உழைப்பே உயர்வு.
உழைப்பின்றி உலகு இல்லை—

என்பன போன்ற நற்கருத்துக்களைத் தருவதாக அமைந்திருக்கின்றது.

சீமான் மகன் கொண்டாடும் விழா அல்ல பொங்கற் புதுநாள்! சமூகத்தின் கோணல்களை நிமிர்த்தியாக வேண்டும் என்ற குறிக்கோள் கொண்டவர்க்கென்றே அமைந்துள்ள விழாவாகும் இது!

— ‘தம்பிக்கு’ கடிதத்திலிருந்து... (1969)

# அக்ரோ கார்கோவின் அரிய சாதனை உரங்களைக் கொண்டு சேர்ப்பதில் 20 லட்சம் டன் வரம்பினைத் தாண்டி வேகப் பயணம் செய்கிறது ACT




கிராமங்களில் விவசாயிகளின் வாசலைத் தேடி உரங்களை விநியோகிப்பதன் மூலமாகவும், அவர்களது விளை பொருள்களை நகரங்களுக்குக் கொண்டு சேர்ப்பதன் மூலமாகவும், இந்தியாவில் விவசாய உறபத்தியைப் பெருக்குவதற்குப் பெரிதும் உதவுகிறது ACT

தமிழ்நாட்டின் மூலை முடுக்குகளில் எல்லாம் குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்காக, ஏராளமான பாடப் புத்தகங்களை எடுத்துச்சென்று விநியோகிப்பதிலும் முன்னணியில் உள்ளது ACT

தமிழ்நாட்டின் தொலைதூரப் பிரதேசங்களுக்கெல்லாம் மருந்து வகைகளை எடுத்துச்சென்று விநியோகிப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது ACT

சாதாரண லாரி சர்வீஸ் என்பதற்கு மேலாக, பொதுமக்களின் சேவைக்காகவே நிறுவப்பட்டுள்ள போக்குவரத்து சாதனம் ACT

இணையற்ற சேவை, மரியாதை, நம்பிக்கை, முதலான பண்புகளின் சின்னமாக விளங்குவது ACT



MAA (S) ACT 8557

பதிவு அலுவலகம் :
அக்ரோகார்கோ டிரான்ஸ்போர்ட் லிமிடெட்
553-அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை 600 018.
தொலைபேசி : 454529, 454579.




# தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்

— தந்தை பெரியார்

தமிழ் மிகுதியும் நம் முற்போக்குக்கு ஏற்றபடி செம்மைப்படுத்தப்பட வேண்டும். மக்கள் கற்க மேலும் இலகுவாக்கப்பட வேண்டும். பயனுள்ள பரந்த மொழியாக்கப்பட வேண்டும். 'இன்றைய தமிழ் மிகவும் பழைய மொழி, வெகு காலமாகச் சீர்திருத்தம் செய்யப்படாதது. மற்ற மொழிகளைப்போல் திருத்தப்படாதது' என்பதான இவைகள் ஒரு மொழிக்குக் குறைவாகுமே தவிர பெருமையாகாது என்பேன். ஏன்? பழமை எல்லாம் அநேகமாக மாற்றமாகி இருக்கிறது. திருத்தப்பட்டிருக்கிறது. மாற்றுவதும், திருத்துவதும் யாருக்கும் எதற்கும் இழிவாகவோ, குற்றமாகவோ ஆகிவிடாது. மேன்மையடையவும், காலத்தோடு கலந்து செல்லவும், எதையும் மாற்றவும், திருத்தவும் வேண்டும். பிடிவாதமாய் பாட்டிக் காலத்திய, பண்டைக் காலத்திய பெருமைகளைப் பேசிக் கொண்டிருந்தால் கழிப்பட்டுப் போவோம், பின்தங்கிப் போவோம்.

மொழி என்பது உலகப் போட்டிப் போராட்டத்திற்கு ஒரு போர்க்கருவியாகும். போர்க்கருவிகள் காலத்திற்கேற்ப மாற்றப்படவேண்டும். அவ்வப்போது கண்டுபிடித்துக் கொள்ள வேண்டும். நம் பண்டிதர்கள் இந்த இடத்திலும் நம் மொழிக்கு மிக்க அநீதி விளைவித்து விட்டார்கள். தமிழ் சிவனும், சுப்பிரமணியனும் பேசிய மொழி, உண்டாக்கிய மொழி என்று நம் பண்டிதர்கள் கூறுகிறார்கள். அதே சிவனும், சுப்பிரமணியனும் உபயோகித்த போர்க்கருவிகள் இன்று நம் மக்களுக்குப் பயன்படுமா? அவைகளை நாம் இன்று பயன்படுத்துவோமா? அல்லது அவர்களே இன்று போரிட நேர்ந்தால் அவைகளைப் பயன்படுத்துவார்களா? சிந்தித்துப் பாருங்கள்.

கடவுள் உண்டாக்கினார் என்பது நமக்குத் தோன்றிய இயற்கைத் தத்துவம் ஆகும். இயற்கையின் தத்துவம் நமது அறிவு வளர்ச்சிக்கேற்ப மாறுதல்களுக்கும், செப்பனிடுவதற்கும் வசதியளிக்கக் கூடியதேயாகும். சிவன் கோலும், மழுவும், கத்தியும், வேலும், ஆலமும் கொண்டுதான் சண்டை பிடித்திருக்கிறாராம். விஷ்ணு வந்த பிறகே வில் வந்திருக்கிறது. அதன் பிறகே துப்பாக்கியும், அதிலிருந்து பீரங்கியும், மிஷின் பீரங்கியும் ஏற்பட்டு இன்று அணுக்குண்டு வரை போர்க்கருவிகள் முன்னேற்றமாகியிருக்கின்றன. இன்று நாமோ, நம் கடவுள்களோ போரிட நேர்ந்தால் வில்லும் வேலுமா உபயோகிப்போம்? ஆகவே போர்க்கருவிகள் மாற்றமடைந்திருப்பதுபோல் நமது மொழியும் மாற்றமடைய வேண்டாமா? போர்க்கருவிகளில் மாற்றத்தை அனுமதித்த கடவுள்கள் மொழி மாற்றத்தை மட்டுமா அனுமதிக்க மாட்டார்கள்? ஆகவே மாற்றுங்கள்.

## எழுத்துமாற்றம்

ஆகவே பிறர் சுலபமாக தமிழ்மொழியைக் கற்றுக் கொள்வதற்காகவும், சுலபமாக அச்சுக்கோக்கவும், டைப் அடிக்கவும் தமிழ் எழுத்துக்களில் சில சீர்திருத்தங்கள் செய்யப்படுவது நலம் என்று நினைக்கிறேன்.

தமிழ் எழுத்துக்கள் அதிகம். ஞாபகத்தில் இருத்தவேண்டிய தனி உருவ எழுத்துக்கள் அதிகம். மொத்த எழுத்துக்கள் 216 வேண்டியிருக்கிறது என்றால், இதில் 135 எழுத்து உருவங்கள் தனித்தனி ஞாபகத்தில் வைக்க வேண்டி இருக்கிறது.

தமிழ் எழுத்துக்கள், ஆங்கிலம் முதலிய சில அந்நிய மொழி எழுத்துக்களைவிட, எழுத்துக்கூட்டுவதற்கு ஒரு கட்டுப்பாட்டுக்கு அடங்கிய நேர்முறையைக் கொண்டதானாலும் எழுத்துக்களைக் கற்க வேண்டியது கஷ்டமாகிறது. ஆங்கிலத்தில் 26 எழுத்துக்கள் உள்ளன. அவைகளில் உயிர் எழுத்துக்கள் 5 அல்லது 6 மெய் எழுத்துக்கள் 20 என்னலாம். எல்லாம் தனி எழுத்துக்களே. உயிர்மெய் எழுத்துக்கள் – அதாவது உயிரும் மெய்யும் கூடிய எழுத்துக்கள் கிடையாது. வெகு சுலபமாக எழுத்துக்களைக் கற்றுக் கொள்ளலாம். ஆனால் இலக்கணமுறை உச்சரிப்புமுறை ஒரு பொது வரையறைக்குக் கட்டுப்பட்டதல்ல. தமிழ் அப்படியல்ல. எழுத்துக் கூட்டுதலும், உச்சரிப்பும், அதன் இலக்கணமும் பெரிதும் இயற்கையையே அடிப்படையாகக் கொண்டதாகும். அப்படிப்பட்ட மொழியை நாம் ஏன் நவீன முயற்சிக்கு ஏற்றவண்ணம் செப்பனிடக் கூடாது? ●

With Best Compliments From :

**ANRAJ LOTTERIES**

Sole Agents : ROYAL BHUTAN LUCKY WEEKLY

**98/1, LLOYDS ROAD,**

**MADRAS - 600 014.**

# உழவே தலை!

— பாவேந்தர் பாரதிதாசன்





உழவே தலை என்றுணர்ந்த தமிழர்
விழாவே இப் பொங்கல் விழாவாகும்! காணீர்
முழவு முழங்கிற்றுப் புதுநெல் அறுத்து
வழங்கும் உழவர்தோள் வாழ்த்துகின்றாரே!

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்என்ற சொல்லிற்
பழுதுண்டோ? காணீர் பழந்தமிழர் "நாங்கள்
உழவரே" என்றுவிழா ஒப்பி மகிழ்ந்தாரோ!

உய்யோமோ செங்கதிரே நீடுபனி ஓட்டிவந்த
தையே முதற்றிங்கள் தைம்முதலே ஆண்டுமுதல்
தையே துணையாகும் கைத்தொழிலே ஆக்கமென்று
செய்யே தரும்செந்நெல் சேயிழையார் குற்றினரே!

தேரிழுப்பும், செம்பெடுப்பும் அல்லவிழா! அன்னவெல்லாம்
ஓரிழுப்புநோய்!-பொதுவின் உள்ளவிழைவே விழா!
ஏரெழுப்பும் புத்தம் புதுச்செல்வம் இட்டபால்
பாரழைக்கப் பொங்கற் பயன்மணக்க வைத்தனரே!

அழகின் பரிதி உயிர்; அவ் உயிரை
முழுதும் நிறுத்தும் அமிழ்துதான் முத்து
மழை! உலகுதாய்! வளர்ப்புப் பாலே பயன்! நெய்
ஒழுக உண்டார் பொங்கல் எல்லாரும் ஒன்றியே!

ஆடைஎல்லாம் அந்நாள் மடிப்பு விரித்தவைகள்!
ஓடைஎனப் பாலும், உயர்குன் றரிசியும்
வாடைநெய்யும் பொங்கி வழியவே பொங்கலிட்ட
நாடுதான் கொண்ட நனிமகிழ்ச்சி செப்பரிதே!

இகழ்ச்சி அணுகா நிலையில் அமிழ்தைப்
புகழ்ச்சிசொல்லிப் புத்துருக்கு நெய்யொடு - உண்ட
மகிழ்ச்சியே இந்நாள்போல் எந்நாளும் மல்க
மிகச்சீரியதமிழும் மேன்மையுற்று வாழியவே!



With Best Compliments From :

# JITENDRA LOTTERY AGENCY

**Sole Agents :** ROYAL BHUTAN LOTTERIES

98/1, LLOYDS ROAD

**MADRAS - 600 014.**

# சீதையம்மாள் பாலிடெக்னிக்

**கீழக்கண்டனி, சிவகங்கை-623560**

**பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்.**

''தொழிலால் புதிய உலகு செய்க'' என புதுநெறியை பரப்பி, தமிழக முதல்வராம் பொன்மனச் செம்மலின் புன்முறுவல் நெறியோடு கல்வி அமைச்சர் அரங்கநாயகம் அவர்கள் துணையோடு ஒப்புதல் அளிக்கப்பட்ட மருதுபாண்டியர்கள் மறத்தமிழ் ஆட்சி செய்த பண்பான பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தின் தலைநகரமாய் செந்தமிழ் சீமை சிவகங்கை அருகே கீழக்கண்டனி மண்ணிலே கல்விப் பணியியை விதைத்து நிற்கும் **சீதையம்மாள் தொழில் நுட்ப பயிலகம்**

தாயின் பெயரிலே தனிநிகர் கல்லூரி
தங்கமென கல்லூரி தலைவர் நாகராசன்
அவர்களால் தொடங்கப்பட்டு

''தாலாட்டுப் பருவத்தில் மயிலகம்''
பாராட்டுப் பெற்று நிற்கிறது.

மனித சிந்தனையில் பிரசவித்த தொழிற்கல்வி மாணவ மாணவியரின் விருப்பநெறிக்கேற்ப மூன்று பிரிவாக பயிற்றுவிக்கப்படுகிறது.

(1) CIVIL ENGINEERING
(2) ELECTRONICS AND COMMUNICATION ENGINEERING
(3) TEXTILE TECHNOLOGY

இயற்கையினை விலைபேசி இளைய தலைமுறைகள் படிப்பதற்கு மானாமதுரை நெடுஞ்சாலையில் 37 ஏக்கர் நிலப்பரப்பில் அழகிய மரங்களும் அன்றலர்ந்த பூவினங்களும், தென்றலும் தவழும் அமைதியின் நடுவே அழகான பயிலகமாய் அழகுடன் மிளிர்கிறது.

இரண்டாண்டு மாணவர்கள் இனிமையுடன் படிப்பதற்கு செயல்முறை ஆய்வுகூட வசதிகள், பொறியியல் ஆய்வுக்கூட வசதிகள்

செவிக்கு உணவருந்தி, கல்வி பணிமுடித்து, கண்ணய அழகான தமிழ் நிலமாம், ''குறிஞ்சி'' நிலப்பெயரில் மாணவர்களுக்கென விடுதி, அதிலும் மாணவிகளுக்கென தனி விடுதி வசதி

பொறியியல் அறிவினை மேலும் வளர்த்துக் கொள்ள 2,000 புத்தகங்களைக் கொண்ட பொறியியல் நூலக மொன்று

தேக்குமர உடல்களுக்கான நீச்சல் குளம் ஒன்று நிர்மாணிக்கப்பட இருக்கிறது.

துயிலியல் ( Textile ) மாணவருக்கென தனியான நூற்பாலை அமைக்க ஏற்பாடுகள்

உடற்கல்வியின் அவசியத்தை வலியுறுத்த பரந்த அளவிலே விளையாட்டு மைதானம்.

பிறமாநிலங்களிலும் மாணவர்கள் வேலை வாய்ப்பு பெறுவதற்கென இந்தியாவிலேயே இங்குதான் இந்தி கற்று தரப்படுகிறது.

அமைதியான சூழலே ஆண்டவன் பாதம் என க்ல்விப்பணியினை அமைதியுடன் தந்து நிற்கும்

அழகான இப்பயிலகம்
வானையும் நிலவையும்
போட்டிக்கு அழைக்கும்

ஒருநாள் இது ஒரு ''சாந்தி நிகேதன்'' என பேறு பெறும்.

ஸ்தாபிதம்: 1939

## A 1382. காமராசர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை லிட்.,

1 & 2, T. C. கிட்டங்கி தெரு, விருதுநகர்-626 001.
(காமராசர் மாவட்டம்)

தந்தி: "COOPTSTORE"

தொலைபேசி:
தனி அலுவலர்: 3657
அலுவலகம்: 3867
எண்ணெய் & அரிசி ஆலை: 3757

| | | |
|---|---|---|
| கிளைகளின் எண்ணிக்கை | .... | 23 |
| பெரிய அளவிலான கடை | .... | 1 |
| சிறிய அளவிலான கடை | .... | 3 |
| சிறப்பு சிற்றங்காடி | | 1 |
| எண்ணை ஆலை | .... | 1 |
| நவீன அரிசி ஆலை | .... | 1 |
| மாவு ஆலை | .... | 1 |
| இணைக்கப்பட்டுள்ள கிராம வைகை அங்காடிகள் | | 155 |

### சங்கத்தின் சாதனை
### 1984 - 85

| | | ரூபாய் லட்சத்தில் |
|---|---|---|
| 1. | விற்பனை | 389.52 |
| 2. | மொத்த இலாபம் | 9.77 |
| 3. | நிகரலாபம் | 0.68 |
| 4. | பங்குத் தொகை | 6.04 |
| 5. | உறுப்பினர் எண்ணிக்கை | 6,624 |

*எங்களது பண்டகசாலையில் நியாயமான விலையில் தரமான உணவுப் பொருட்கள், பலசரக்கு, எழுதுபொருட்கள், மற்றும் துணி வகைகள் அனைத்தும் கிடைக்கும். மற்றும் அயல்நாட்டுப் பொருள்களும் அரசின் நிர்ணய விலையில் கிடைக்கும்.*

*கிராமிய நுகர்வோர் திட்டத்தின் கீழ் காமராசர் மாவட்டத்தில் உள்ள விருதுநகர் மற்றும் சாத்தூர் தாலூகாக்களில் உள்ள கிராம வைகை அங்காடிகளின் விநியோகத்திற்கு முதன்மைச் சங்கமாக செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் மேலும் அருப்புக்கோட்டை மற்றும் திருச்சுழி ஆகிய 2 தாலூகாக்களுக்கும் 1-1-86 முதல் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.*

ஜி. சந்திரமோகன், பி.காம்.,எச்.டி.சி.,
செயலாளர்.

ஆ. தேவதாஸ் காந்தி, எம்.காம்.,எச்.டி.சி.,
துணைப் பதிவாளர்/தனி அதிகாரி.

---

**மக்களின் பொறுப்புணர்வு மிக்க செயற்பாடே**
**அரசின் திட்டங்களுக்கு**
**வெற்றியைத் தரும்.**

—குன்றக்குடி கிராம ஒருங்கிணைப்புத்
திட்டக்குழு

---

## ஸ்ரீ விசாலம் சிட் பண்ட் லிமிடெட்

பதிவு அலுவலகம் : திருநெல்வேலி-627 006
தொலைபேசி : 3474

நிர்வாக அலுவலகம் : பள்ளத்தூர்-623 107
தொலைபேசி : 72, 108

மத்திய அலுவலகம் : சென்னை-600 002 தொலைபேசி : 89244, 87886

**தென்னகத்தில் மக்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒப்பற்ற சீட்டு நிறுவனம்**

o 4 மாநிலங்கள் o 70 கிளைகள் o 38 ஆண்டு சேவை o

ஆர். எம். அருணாசலம், நிர்வாக இயக்குநர்.

---

"தமிழரசு" பொங்கல் மலர்

**தமிழகத் தலைவர்**

**டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின்**

**நல்லாசியோடு மலர்ந்திட வாழ்த்துகிறோம்.**

பா. சிவந்தி ஆதித்தன், பி. ஏ.
சேர்மன்

மணலி இராமகிருஷ்ண முதலியார், பி.ஏ.
புரவலர்

டி. வெள்ளைச்சாமி நாடார்
செயலாளர் மற்றும் தாளாளர்

## வணிகர் சங்க
## மணலி இராமகிருஷ்ணா தொழில் நுட்பக் கல்லூரி
## தஞ்சாவூர்.

தமிழ்நாடு மட்டுமின்றி தமிழர்கள் வாழும்
அனைத்து நாடுகளிலும் விரும்பிப் படிக்கப்படும்
ஒரே நாளிதழ்

# மக்கள் குரல்

**நடுநிலை நாளேடு**

இது உங்கள் குரல்

1. முதலாவது மெயின் ரோடு.
யுனைடெட் இந்தியா காலனி.
கோடம்பாக்கம். சென்னை 600 024.

# தமிழ்நாடு ஹோட்டல் உரிமையாளர் சங்கம்



உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் என்பது உயர்மொழி. அந்த வழியில் அமுத சுரபி ஏந்தி ஆருயிர் ஓம்பினாள் மணிமேகலை. பசி என வந்தோர்க்குப் புசி என வழங்க சத்திய தருமச்சாலை கண்டவர் வள்ளலார். அத்தகைய வாழயடி வாழையென வளர்ந்து வரும் கொள்கை வழி நின்று ஏழைக் குழந்தைகளின் இன்னுயிர் காக்க 'சத்துணவுத் திட்டம்' கண்டுள்ளது தமிழக அரசு.

பசியால் மெலிந்து பட்டுடல் வாடி ஒரு வேளை உணவுக்காகவும் ஏங்கித் தவித்த குழந்தைகள் குதூகலத்துடன் கல்விகற்கவும், வாட்டும் பசியை ஓட்டிடும் செப்பற்ற திட்டம் இச்சத்துணவு திட்டமாகும்.

எதனினும் கொடிய இளமையில் வறுமையால் துன்புற்றுத் துவண்டு நோய்நொடிகளில் வீழ்ந்து வாடிய மழலைகளின் முகத்தில் மலர்ச்சியைக் காணும் மாபெரும் திட்டம் இச்சத்துணவுத் திட்டமாகும்

இத்திட்டத்தினை செயல்படுத்தும் தமிழக அரசுக்கு நன்றியும் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் பல்லாண்டு வாழ வேண்டியும் இதயம் கனிந்த வாழ்த்துக்களை இயம்பிக்கொள்கிறேன்.

அன்பன்

**M. P. புருஷோத்தமன்**

தமிழ்நாடு ஹோட்டல் உரிமையாளர் சங்கத் தலைவர்,
மெட்ராஸ் இன்டர்நேஷனல் ஹோட்டல்,
693, மவுண்ட் ரோடு, சென்னை-600 006.

# பெரியார் மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட்,

## தலைமையலுவலகம், ஈரோடு

டெலக்ஸ் : ED 201
தந்தி : PCC BANK

தொலைபேசி : செயலாளர் 77677, நிர்வாகம் 79430, வங்கியியல் 74506

வங்கியின் பொற்குவியல் டிபாசிட் திட்டத்தில் ரூ. 5,000/- முதலீடு செய்து 10 ஆண்டுகளில் ரூ. 15534.50 பெறலாம்.

"தாய்" சேமிப்புத் திட்டத்தில் மாதம் ரூ. 30/- வீதம்



7 வருடங்களுக்கு ரூ. 2520/- செலுத்தி பின்னர்

10 வருட முடிவில் ... ரூ. 11,495.53 அல்லது

20 ,, ,, ... ரூ. 35,716.84 அல்லது

30 ,, ,, ரூ. 1,10,973.36 பெறலாம்.

இத்துடன் விபத்துக் காலங்களில் ரூ. 6000/- வரை இழப்பு ஈடு அளிக்கப்படும்.

அனைத்து டிபாசிட்டுகளுக்கும் 1/2% கூடுதல் வட்டி அளிக்கப்படுகிறது.

மேலும் விபரங்கட்கு தலைமையலுவலகம் அல்லது மாவட்டத்திலுள்ள 24 கிளைகளில் ஏதேனும் ஒன்றை அணுக வேண்டுகிறோம்.

கே. கே. பழனிசாமி, B.Sc., HDC.,
செயலாளர்

ஆர். ரங்கசாமி, Ex. M.L.A.
சேர்மன்




அமரர் கவியரசு கண்ணதாசன்

# தைப்பாவாய்!

காளை மணியோசை
  களத்துமணி நெல்லோசை
வாழை இலையோசை
  வஞ்சியர்கை வளையோசை
தாழை மடலோசை
  தாயர்தயிர் மத்தோசை
கோழிக் குரலோசை
  குழவியர்வாய்த் தேனோசை
ஆழி யலையோசை
  அத்தனையும் மங்கலமாய்
வாழிய பண்பாடும்
  மாயமொழி கேட்டிலையோ!
தோழியர் கைதாங்கத்
  தூக்கியபொன் அடிநோக
மேழியர்தம் இல்லத்து
  மேலெழுவாய் தைப்பாவாய்!

எங்கள் சமுதாயம்
  ஏழை சிரமாண்டு
திங்கள்போல் வாழ்ந்து
  செங்கதிர்போல் ஒளிவீசும்
மங்காத போர்க்களத்தும்
  மாளாத வீரர்படை
கங்குல் அகமென்றும்
  காலைப் புறமென்றும்
பொங்கி விளையாடிப்
  புகழேட்டிற் குடியேறி
தங்கி நிலைத்துத்
  தழைத்திருக்கும் காட்சியினைக்
கண்காண வந்த
  கலைவடிவே நித்திலமே
பொங்கற்பால் பொங்கிப்,
  பூவுதிர்ப்பாய் தைப்பாவாய்!

பொங்கும்பால் பொங்கும்
  புகழ்பொங்கும்! மங்களமே
தங்குங்காண் தங்கும்
  தகைதங்கும் தலைவரெலாம்
சிங்கங்காண் சிங்கம்!
  தேவியரெல் லாந்தங்கம்!
எங்குங்காண் இன்றோம்
  எந்தமிழர் மாட்சியினை!
இங்கெங் கோனாட்சி
  இறையாட்சி வாழ்கவென
பொங்கற்பூத் தூவி
  புத்தாடைத் தொட்டிலுக்குள்
தூங்கத் தேரோட்டும்
  தூயமலர் மேனியர்பால்
தங்கித் தாலாட்டு
  தனிக்கொடியே தைப்பாவாய்!



**The eye of the needle.**

A sharp eye. A steady hand. A vivid imagination. And you capture your target audience... with the accuracy of threadling a needle.

That's why we've been in business 40 years

**EFFICIENT PUBLICITIES PVT. LTD.,**
104, General Patters Road,
Madras 600 002.
Grams: Layouts
Branches at Bombay, Cochin, Madurai, Coimbatore & Bangalore.


# திரைப்படமும் புதிய கல்வியும்

## கே.பாலச்சந்தர்

சினிமாவும் புதிய கல்வியும்—

ஒரு உரத்த சிந்தனை!

அன்று நல்ல மழை. வானம் முழுவதும் கறுத்து மதர்த்த மேகங்கள். மேலேயிருந்து இடைவிடாத நீர்ச்சரங்கள். மாடி ஜன்னல் வழியே நானும் என் மகன் ப்ரஸன்னாவும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தோம்.

சடேரென்றொரு மின்னல். வடக்கிலிருந்து தெற்காக மிகப்பெரிய மின்னல் வெட்டி மினுக்கி தகதகத்து விட்டு மறைந்து பெரும் சப்தம் பின் தொடர்ந்தது.

"அடேயப்பா.... எவ்வளவு பெரிய மின்னல் 70 எம்.எம். மாதிரி" அருகேயிருந்த என்மகன் கூவினான். நானும் அனிச்சையாய் ஆமோதித்தேன்.

ஆனால் மழையெல்லாம் ஓய்ந்து சுள்ளென்று வெய்யில் காயும் ஒரு பிற்பகலில் "70 எம். எம். மாதிரி மின்னல்" என்கிற அந்த வார்த்தை ரொம்ப வேடிக்கையாய்ப்பட்டது எனக்கு.

என் பையனுக்கு ஒரு பெரிய மின்னலை ஏன் வேறு வகையாய் சொல்லத் தெரியவில்லை? வடக்கிலிருந்து தெற்குத் திசை வரை பரவிய ஒரு ஒளிக்கற்றை ராமனுடைய வில்லென்றோ கிருஷ்ணனுடைய சாட்டையென்றோ பெரிய நாகம் என்றோ ஏன் வருணிக்கத் தெரியவில்லை?

"அடேயப்பா.. எவ்வளவு பெரிய மின்னல் 70 எம்.எம். மாதிரி..."

Phone : 3210, 2643, 2877 & 2287
PBX. with 20 Extns.

Cable : "GEYESPEYES"
Telex : 0853-243-GSPS-IN

*WITH BEST COMPLIMENTS FROM :*

**SHREE ADVERTISING**

**No. 9, Ainar Buildings,**
**Fort Station Road,**
**TIRUCHIRAPPALLI - 620 002.**

LEADING HOARDING CONTRACTOR
&
RADIO ADVERTISING AGENCY
(Approved By D.A.V.P.)
**Phone : 26415**

*With Best Compliments From :*

**JJL. GNANRAJ**
*PRESIDENT*

**TAMILNADU VARTHAGA KAZHAGAM**

TIRUCHIRAPPALLI - 620 008.

**Phone : Office 26161** **Phone : Res. 29801**

**சென்டெக்ஸ்**
கைத்தறி துணிகள்

எங்கள் பிரத்யேக ஷோரூம்களுக்கு
விஜயம் செய்யுங்கள்

★ சென்டெக்ஸ் ஷோரூம்,
உம்மிடியார் அங்காடி மையம்
811, அண்ணா சாலை, சென்னை-600 002
தொலைபேசி : 810241

★ சென்டெக்ஸ் ஷோரூம்,
489, பெரிய கடைவீதி,
திருச்சி.

★ சென்டெக்ஸ் ஷோரூம்,
நீலகிரி டெக்ஸ்டைல்ஸ்,
நீலகிரி பில்டிங்ஸ்,
11, பிரிகேட் ரோடு,
பங்களூர்-560 001
தொலைபேசி : 577501

★ சென்டெக்ஸ் ஷோரூம்,
எம்.ஜி.ஸி. மார்க்கெட் (எதிர்புறம்)
மெயின் ரோடு,
சிராளா-523 155, ஆந்திரா.

★ சென்டெக்ஸ் ஷோரூம்,
13, மேல சித்திரை வீதி, மதுரை

★ சென்டெக்ஸ் ஷோரூம்,
ஏஜண்ட், ஜெயம் ராஜகோபால்,
7-3-225, பிரகாசம் பந்துலு ரோடு,
இந்துப்பூர்-515 201



தயாரிப்பாளர்கள் & ஏற்றுமதியாளர்கள்

★ படுக்கை விரிப்புகள் ★ அலங்கார துணிகள்
★ மேஜை விரிப்புகள் ★ பாலியஸ்டர் சூட்டிங்
★ தலையணை உறைகள் ★ ஷர்டிங், டவல்கள்

மற்றும் திரைச் சீலைகள்,
சிசகசர் முதலியன

எம்.பி. நாச்சிமுத்து B.A.B.L.
தலைவர்

சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட். சென்னிமலை, தமிழ்நாடு.

**THE HIND MATCHES LIMITED**

*Manufacturers and Exporters of:*

Safety Matches, Colour Matches, Cardboard Matches, Wax Matches, Impregnated Matches, Military Fuzee Matches, Marine Matches and Presentation Match Boxes.

Phone: 73
1373

Gram: HIMILI

P.O. Box No. 38

**SIVAKASI**

With best compliments from:

Tel: "OLYMPIC"
Phone: 825 PP.

# Sri Kaliswari Fire Works Private Limited

*Registered & Administrative Offices*

**5-A, Chairman A. Shanmuga Nadar Road,**
**SIVAKASI-626 123.**

# நீலகிரி மாவட்ட

# கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்

(வரையறுக்கப்பட்டது)



உதகை – குன்னூர் சாலை,
உதகமண்டலம் - 643 001.

எங்கள் ஒன்றியத்தின் மூலம் இம்மாவட்டத்தில் 26,000 பால் உற்பத்தியாளர்கள் பயனடைவதோடு 38,000 பால் நுகர்வோர்கள் தரமான பால், பசு வெண்ணெய், பசுநெய், சுவை மிகுந்த பால்கோவா பெற்று பயனடைந்து வருகிறார்கள்.

தற்போது புதியதாக 3.5 கோடி ரூபாய் செலவில் கட்டப் பட்டுள்ள நவீன பாலாடைக்கட்டி தொழிற்சாலை மூலம் தரமிக்க சுவை மிகுந்த பாலாடைக்கட்டி தயாரித்து வெளியிட இருக்கின்றோம்.

டாக்டர் கு. அம்பலவாணன்
மேலாண்மை இயக்குநர்

கே. மணி
பெருந்தலைவர்





இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்.
அவர்களின் நல்லாசியுடன் வெளிவர 'தமிழரசு' பொங்கல் மலர்
மலர்ந்திட வாழ்த்துகிறோம்.

பா. தியாகராசன்
மெருன் ஆர்ட்ஸ்
சினி அண்டு கமர்சியல் டெக்கரேட்டர்
384, ஆற்காடு சாலை
சென்னை-600 024
தொலைபேசி: 421784



## திருச்சிராப்பள்ளி
## இருதயபுரம் கூட்டுறவு வங்கி லிமிடெட் எண். 919
26, எடத் தெரு ரோடு, பாலக்கரை, திருச்சிராப்பள்ளி-1.
(தொலைபேசி எண். 23677).

எங்கள் வங்கி கடந்த 74 ஆண்டுகளாக அங்கத்தினர்களுக்கும், வாடிக்கையாளருக்குமான சேவைகளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டுள்ளது.

"தங்கள் முதலீடுகளுக்கு எங்கள் வங்கியில் கிடைக்கும் சலுகைகள்"

1. மற்ற வர்த்தக வங்கிகளை விட 1 சதம் அதிக வட்டி.
2. அதிக பட்சம் 12 சதம்.
3. வழங்கப்படும் வட்டியில் ரூ. 6,000 வரை வருமானவரி விலக்கு உண்டு.
4. ரூ. 1.5 இலட்சம் வரை சொத்துவரி விலக்கு உண்டு.
5. ரூ. 30,000 வரை இன்சூரன்ஸ் பாதுகாப்பு உண்டு.

நலிவடைந்த பிரிவினருக்கு ( Weaker Section ) 4 சதம் சலுகை வட்டியிலும், சிறு தொழில் நிறுவனங்களுக்கு மூலதன கடனாக ரூ. 25,000-மும் வீடு அடமானத்தின் பேரில் ரூ. 10,000-மும், நபர் ஜாமீன் பேரில் ரூ. 1,000-மும், நகை ஈட்டின் பேரில் ரூ. 5,000-மும் கடன்கள் வழங்கப்படுகிறது.

வங்கியில் நகை கடனுக்கு 16 சத வட்டிக்கும், வீடு அடமான கடனுக்கு 15 சத வட்டிக்கும், நபர் ஜாமீன் கடனுக்கு 16 சத வட்டிக்கும் கடன்கள் வழங்கப்படுகிறது.

ஏ. ஜூலி,
தலைவர்.

ஏ. ரங்கசாமி, பி.ஏ.,
செயலாளர் (பொறுப்பு)

இதர நிர்வாகக்குழு உறுப்பினர்கள்:
திருவாளர்கள் : எஸ். டி. சூசைராஜ், சி. செல்வராஜ், எம். அருள், வெ. ஆ. கலியமூர்த்தி, டி. ஸ்டீபன் ஜெயராஜ், பி.காம்.

## க்யூ. 1066 இராசபாளையம் நுகர்வோர் கூட்டுறவு
## மொத்த விற்பனை பண்டகசாலை லிமிடெட், இராசபாளையம் — 626 117

அங்கத்தினர்கள் : 7232 | தொலைபேசி எண். 2205

முதலீடுகள் : ரூ. 28,64,016-86 | பங்குத் தொகை: ரூ.7,79,445-10 | விற்பனைக் கிளைகள்: 56

பண்டகசாலை மொத்தம் 56 விற்பனைக் கிளைகள் நடத்தி வருகிறது; இதில் 32 விற்பனைக் கிளைகள் நகர் புறத்திலும், 17 விற்பனைக் கிளைகள் கிராமப்புறத்திலும் இயங்கி வருகிறது; இதன் மூலம் பொதுமக்களுக்குக் குடிமைப்பொருட்கள் மற்றும் இதரக் கட்டுப்பாடற்ற பொருட்களை நியாய விலையில் விநியோகம் செய்து வருகிறது. மேலும் 2 மதுபானக் கடைகளும், ஒரு காபி அரவைப் பிரிவும், ஒரு சிறப்புச் சிற்றங்காடியும் நடத்தி வருகிறது. தரமான பொருட்களைச் சரியான எடையில் நியாயமான விலையில் பொதுமக்களுக்கு வழங்கி வருகிறது.

எமது தனிச் சிறப்பு :— தரமான பொருட்கள் — குன்றாத எடை — நியாய விலை

விவரங்களுக்குத் தொடர்பு கொள்க : அ. ஆறுமுகம், தனி அலுவலர்,
க்யூ. 1066 இராசபாளையம் நுகர்வோர் கூட்டுறவு மொத்த
விற்பனை பண்டகசாலை லிமிடெட், இராசபாளையம்.

---

## க்யூ. 861, வத்திராயிருப்பு கூட்டுறவு பால் விநியோகச் சங்கம் லிமிடெட்,
வத்திராயிருப்பு - 626 132 காமராஜர் மாவட்டம்.

தொடக்கம்: 16-6-1957 | தொலைபேசி எண். வத்ராப். 44
அங்கத்தினர்கள் : 3,330 | உறுப்பினர்களின் பங்குத்தொகை : ரூ. 1,02,570
தினசரி பால் உற்பத்தி: 2500 லிட்டர் | தமிழக அரசின் பங்குத்தொகை ரூபாய் 20,000
பால் உற்பத்தி நிலையங்கள்:—19 | காபி விற்பனை நிலையம் : 1.

காமராஜர் மாவட்டத்திலே கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்களில் 'முதன்மை'

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்குக் கூடுதலாக பால் அனுப்பும் சங்கங்களிலேயே 'முதன்மை'

மாவட்டத்திலேயே உறுப்பினர்களுக்குப் பூரிப்பூதியம், ஊக்குவிப்பு மற்றும் அதிகபட்ச டிவிடெண்ட் வழங்குவதில் 'முதன்மை'

**ஆரம்ப நாளிலிருந்து தொடர்ச்சியாக எங்கள் சங்கம் லாபத்தில் இயங்குகிறது.**

எஸ். குழந்தைவேலு, பி.ஏ. ஹெச்.டி.சி,
கூட்டுறவு சார்பதிவாளர்/தனி அலுவலர்.

---

## ஆர். 56, இராஜபாளையம் கூட்டுறவு பால் விநியோகச் சங்கம் லிமிடெட், இராஜபாளையம்.

தொடக்கம்: 2-1-1946 | திரு. ஏ. கோடியப்பன், தலைவர் (பொறுப்பு) | தொலைபேசி எண். 2206

(1) திரு எம். மாணிக்கம், (2) திரு ஏ. பூச்சப்பன், (3) திரு ஜி. கணபதிகரையாளர்
நிர்வாகக்குழு உறுப்பினர்கள்.

அங்கத்தினர்கள் 6451 | பங்குத்தொகை : ரூ. 1,73,920. நடப்பு முதலீடுகள் ரூ. 2,29,000
இதர முதலீடுகள் : ரூ. 16,55,000 | பால் உற்பத்திக் கிளைகள்: 47 | சடுபால் விற்பனை நிலையம்: 1

எங்கள் சங்கம் இராஜபாளையம் நகரில் 3 லட்ச ரூபாய் மதிப்புள்ள சொந்தக் கட்டடத்தில் செயல் பட்டு வருகிறது. இராஜபாளையம் நகரிலும் சுற்றியுள்ள கிராமங்களிலும் 47 கறவைக் கூடங்கள் செயல்பட்டு தினமும் 9,000 லிட்டர் பால் உற்பத்தி செய்தும், ''ஆவின் பால்'' 1,000 பைகள் (500-லிட்டர்) கொள் முதல் செய்தும், பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் தினசரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு 2,500 லிட்டர் பால் வழங்கி வருகிறோம். உறுப்பினர்களின் கறவை மாடுகளுக்குக் கலப்புத் தீவனம் வட்டியில்லாக் கடனாகவும், தீவனக் கடனாக 6 சதவிகித வட்டியில் அதிக பட்சம் ரூ. 500 வரை வழங்கி வருகிறோம். சிறுவிவசாயிகள் மற்றும் விவசாயக் கூலிகளை உறுப்பினர் களாகச் சேர்த்து அரசு மானியத்துடனும், மானியமில்லாமலும் கறவை மாட்டுக் கடன் வழங்க ஏற்பாடு செய்தும், பால் உற்பத்தியில் மாவட்டத்தில் முதன்மைச் சங்கமாகச் செயல்பட்டு வருகிறது.

வே. அழகிரிசாமி, கூட்டுறவு சார்பதிவாளர்/காரியதரிசி.

---

## க்யூ. 133. விருதுநகர் கூட்டுறவு பால் வழங்கும் சங்கம் லிட்., விருதுநகர்.

ஆரம்பம்: 1946 | போன்: 3177

உறுப்பினர்களின் எண்ணிக்கை 4,319 | பங்குத் தொகை ரூ. 1,39,580
க்ஷேம நிதி ரூ. 2,60,100 | தின சராசரி பாலுற்பத்தி 8,000 லிட்டர்

சங்கம் மாநில அளவிலான சிறந்த கூட்டுறவு பால் வழங்கும் சங்கத்திற்குரிய விருதினை கடந்த மூன்றாண்டுகளாகத் தொடர்ச்சியாகப் பெற்று வந்துள்ள சிறப்புடையது..

**சங்கத்தின் பால்கோவா தரத்திற்கும் ருசிக்கும் பிரசித்தி பெற்றது.**

வி. வி. எஸ். கேசவன், பி.எஸ்சி.,
தலைவர் (பொறுப்பு)

எஸ். சௌந்தரபாண்டியன், பி.ஏ.,
செயலாளர்.

---

தொலைபேசி: 2478

காஞ்சிபுரம் பட்டு இரகங்களுக்குச் சிறந்த கூட்டுறவு நிறுவனம்,
தமிழகத்தில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட பட்டு கூட்டுறவு சங்கம்—

## காஞ்சிபுரம் பட்டு நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனை சங்கம் லிமிடெட் என்.ஜி. 1099

(குளிர் பதனம் செய்யப்பட்டது)

443, காந்தி ரோடு : : காஞ்சிபுரம்-631501.

கிளைகள் :
1. 231, 232 சிக்பெட், கிருஷ்ணா மார்க்கெட், பெங்களூர்.
2. 15.3.413 மெயின் பசார் இந்துபூர்.
3. 6, சி.எஸ். ஐ. கட்டிடம், அசோகா ரோட், தும்கூர்
4. 257, 258 2வது அக்ரஹாரம், சேலம்.
5. 26/118, ராஜா தெரு, கோயமுத்தூர்.
6. 12, கிருஷ்ண ராஜேந்திர சர்க்கிள், மைசூர்.
7. 139, கீழ வெளி வீதி, மதுரை.
8. 18/132, சுபாஷ் ரோட், நியூடவுன், அனந்தபூர்.
9. காஞ்சி கோவாபரேடிவ் சில்க்ஸ், அண்ணாசாலை, சென்னை.
10. ஈரோடெக்ஸ்-218, நேதாஜி ரோட், ஈரோடு.

ரா.கிருஷ்ணசாமி முதலியார் — துணைத் தலைவர்
கோ. பாலகிருஷ்ணன் — தலைவர்
தி.பொ. இலட்சுமணன், பி.காம். — உதவி இயக்குநர்.

இயக்குநர்கள் :
மு. லோகநாதன், சு. அண்ணாமலை, நீ குமரன், மூ. திருநாவுக்கரசு, கே. சிங்காரவேல்

---

## சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடி

**திருச்சி நகர மக்களின் இல்லத் தேவைகள்
அனைத்தும் ஒரே இடத்தில் பெற**

## சிந்தாமணி கூட்டுறவு சூப்பர் மார்க்கெட்

**நியாய விலை! சரியான எடை!! தரமான பொருட்கள் !!!**

அங்கத்தினர்களுக்கு 2சதம் ரொக்கத் தள்ளுபடி!

எல்லாவித -மருந்து வகைகளுக்கும் விற்பனைவரி இல்லை!!

பண்டிகை, மற்றும் இதர விசேட, காலங்களில் அங்கத்தினர்களுக்கு
சிறப்புச் சலுகை உண்டு.

''சிந்தாமணியின்'' சேவைகளைப் பெற்றிட இன்றே அங்கத்தினராகச் சேருங்கள்

உங்களுக்கு உதவிட எங்களுக்கு வாய்ப்பை வழங்குங்கள்.

தொலைபேசி: 23311
23355

தலைமையகம் : புத்தூர்

| கிளைகள் : | தொலைபேசி: |
|---|---|
| தெப்பக்குளம் | 25519 |
| ''பெல்'' | 84-280 |
| திருவரங்கம் | 85-436 |
| திருவரம்பூர் | .... |
| சுப்பிரமணியபுரம் | 28621 |
| இருதயபுரம் | 29578 |
| இராப்பட்டி | 28848 |

" தமிழரசு " இதழ் பொங்கல் மலராக
வெளிவருவது கண்டு மிக மகிழ்ச்சியுடன்
என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



எம். கணேசன்
ரீனா போட்டோகிராபர்
மா. பா. சாரதி மாளிகை
வேலூர், வட ஆர்க்காடு மாவட்டம்.

"மனிதனே ஏற்றத் தாழ்வை
உண்டு பண்ணிக் கொண்டான்.
இயற்கை அன்னைமுன்
யாவரும் சமமே"
—அண்ணல் காந்தியடிகள்.

காந்தியவாதி,
வேலூர்.

---

தந்தி : 'அண்ணாசில்க்' போன் : 2246

வாடிக்கையாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் எமது மனமார்ந்த பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

கண் கவர் வண்ணங்கள்! நெஞ்சை அள்ளும் ரகங்கள்!
தரமான காஞ்சீபுரம் பட்டாடைகள் வாங்க சிறந்த கூட்டுறவு நிறுவனம்

## அறிஞர் அண்ணா பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் லிமிடெட். கே. எச். 1.

498, 499 காந்தி சாலை, : : காஞ்சிபுரம்-631 501.

[விற்பனைக்கூடம் குளிர்பதனம் செய்யப்பட்டது]

கிளைகள் :

1. 26/118, ராச வீதி, கோயம்புத்தூர்
2. 8, கிருட்டினா அங்காடி மையம், சிக்பெட், பெங்களூர்.
3. 223, 2-வது அக்ரஹாரம், சேலம்.
4. 15-3-421, மெயின் பஜார், இந்துப்பூர்.
5. பந்தடி, 5வது தெரு, மதுரை.
6. 12, சர்வீஸ் லேன், கே. ஆர். சர்க்கிள், மைசூர்.
7. 15-84 சுபாஷ் ரோடு, அனந்தபூர்
8. காஞ்சி கோவாப்ரேடிவ் சில்க்ஸ், உம்மிடியார் ஷாப்பிங் சென்டர், அண்ணா சாலை, சென்னை-600 002.

தி. பொ. இலட்சுமணன், பி.காம்.,
உதவி இயக்குநர்/செயலர்

ஏ. இராசமாணிக்கம் — தலைவர்
க. நீலமேகம் — உபதலைவர்
சி. நடராஜ முதலியார் — இயக்குநர்
ஏ. செல்வராஜ் — இயக்குநர்

பா. வேணு — இயக்குநர்
கோ. ஜெயராமன் — இயக்குநர்
கு. பொன்னுசாமி — இயக்குநர்

---

விவசாய பெருமக்களுக்கும் இட்டுவைப்பு நல்கிய
பெருந்தகையாளர்களுக்கும்,
வாடிக்கைதாரர்களுக்கும் எங்களது இதயங்கனிந்த
பொங்கல் நல்வாழ்த்துக்கள்.



**உள்ளம் துள்ளிடும் உவகை பொங்கிடும்
இப் பொங்கல் நன்னாளில்
பல்வளம் யாவும் பெற்று
பல்லாண்டு வாழ்க! வாழ்க!!**

எளியோர் மற்றும் வறுமைக் கோட்டின்கீழ்
உள்ள மக்களை வாழ்விக்கும் வங்கி
வளரும் குழந்தைகளின் வளமான வாழ்விற்கு
புதையல் டெபாசிட் திட்டத்தில் சேருங்கள்!

## சேலம் மத்திய SCCB கூட்டுறவு வங்கி

---

# Greetings

(INCORPORATED IN 1947)

*Best wishes for a Happy and Prosperous Pongal to all our Esteemed Shareholders, valued Subscribers, Patrons and well wishers*

"Prized Money is Disbursed on Secured Properties to Protect the Interests of the Non Prized Subscribers"

## The Mayavaram Financial Chit Corporation Limited

Regd. Office 13-H, Cutchery Road,
MAYILADUTURAI-609 001.




## பொங்கல் வாழ்த்து

வாழ்க கூட்டுறவு வளர்க வெண்மைப்புரட்சி

## தென்னாற்காடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்., விழுப்புரம். டி.என்.டி. 495

தென்னாற்காடு மாவட்டத்தில் செயல்படும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களின் அனைத்து பால் உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோருக்கும் தென்னாற்காடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய பெருந்தலைவர் திரு. முத்து. கோவிந்தராசன், நிர்வாக இயக்குநர் டாக்டர் ஆர். சாலமோன் மற்றும் ஒன்றிய நிர்வாகக்குழு உறுப்பினர்கள் ஆகியோரின் உளங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்.

### சிறப்புத் திட்டங்கள்

**பால் உற்பத்தியாளர்களுக்கு:**

1. பால் உற்பத்தியாளர்களுக்கு வாரந்தோறும் பணப்பட்டுவாடா.
2. இலவச கால்நடை சிகிச்சை, அவசர சிகிச்சை மற்றும் செயற்கைக் கருவூட்டல்.
3. கால்நடைகளுக்கு அடக்கவிலையில் தீவன விற்பனை.
4. திண்டிவனம் நகரில் விரைவில் குளிரூட்டும் நிலையம்.
5. கிராமநிலை ஊழியர்களுக்கு இலவச சினை ஊசி பயிற்சி.
6. உயர் ரக பசுந்தீவனம் விநியோகம் மற்றும் கன்றுவளர்ப்புத் திட்டம்.
7. கிராமந்தோறும் சிறந்த கால்நடைகளுக்கு ஊக்கப்பரிசு.

**பால் நுகர்வோருக்கு:**

8. கடலூர், விருத்தாசலம், நெய்வேலி, சிதம்பரம் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களின் மூலம் பாலிதீன் பைகளில் குளிரூட்டிய தரமான பால் விநியோகம்.
9. ஆவின் பால் பவுடர் மணம் ஊட்டப்பட்ட பால், வெண்ணை, நெய், பால்கோவா குறைந்த விலையில் நுகர்வோருக்கு விநியோகம்.

**பணியாளர்களுக்கு:**

10. ஒன்றியப் பணியாளர்களுக்கு 1984-85 ஆண்டிற்கு 20 சதம் போனஸ் மற்றும் பொங்கலுக்கு ஊக்கப்பரிசு.

பலன்களோ ஏராளம்.
பயன் அடைவோர் பல்லாயிரம்.

இங்ஙனம்.

**டாக்டர் ஆர். சாலமோன், பி.வி.எஸ்சி.,**
நிர்வாக இயக்குநர்

**திரு. முத்து. கோவிந்தராசன்,**
ஒன்றியப் பெருந்தலைவர்

மற்றும் இயக்குநர்கள்.



*பொங்கல் நல் வாழ்த்துக்கள்*

## கன்னியாகுமரி மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட்

**நாகர்கோவில்.**

விவசாயிகளின் நல்வாழ்வுக்கும் பொதுமக்களின் பணப் பாதுகாப்பிற்கும் வழிகாட்டியாக விளங்குவது எங்களது வங்கியே.

### இன்றைய சேமிப்பு - நாளைய பாதுகாப்பு!

அனைத்து டெப்பாசிட்களுக்கும் $\frac{1}{2}$ சதவிகித கூடுதல் வட்டி தரப்படுகிறது.

வாழ்வு வளம்பெற எங்கள் வங்கியை அணுகுவீர்.

தனி அதிகாரி,
கன்னியாகுமரி மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட்.
நாகர்கோவில்.



## தென்னார்க்காடு மாவட்டத்தில் சிறந்த கல்வி ஸ்தாபனங்கள்

- தாகூர் நர்சரி ஆசிரியர் பள்ளி
  X, S. S. L. C. தேறிய மாணவிகள் சேரலாம்.
- தாகூர் ஆசிரியர் பயிற்சி நிறுவனம்
  (S.S.L.C. 50 சதவிகித மார்க்-வயது 16-25), திண்டிவனம்-(செஞ்சி)
- தாகூர் ஆங்கில மேல்நிலைப் பள்ளி
- தாகூர் பெண்கள் தொழில் பள்ளி
- தாகூர் தொழிற் பயிற்சிப் பள்ளி

  மற்றும்
- தாகூர் எஜிகேஷனல் டாய்ஸ் காட்டேஜ் இண்டஸ்ட்ரீஸ்
- தாகூர் மெட்ரிகுலேஷன் ஹையர் செகண்டரி பள்ளி-நெய்வேலி.

போன் : 358. வீடு 434

தொடர்பு கொள்ள :

**Lion K. C. ராஜா பாதர்**, பி.காம்.பி.இ.டி.
58, ரொட்டிக்காரத் தெரு, திண்டிவனம்-604001.

*Best Compliments From:*

**Adwave Advertising Private Ltd.,**

**Adwave House**
**9, South Boag Road,**
**T.Nagar, Madras-600 017.**

Phone : 446002, 446055

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள்
இன்று அனைவருக்கும்
ஷோபாவின் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

தொலைபேசி
24364
37205

**ஷோபா**

கோயம்புத்தூர்

பத்தாயிரம் சதுர அடி பரப்பளவில் தென்னகத்தில்
மிகப் பிரமாண்டமான கைராசி ஜவுளிக்கடை 'ஷோபா'

ஒரு குடும்பத்தின் அனைத்து ஜவுளி தேவைகளையும்
பூர்த்தி செய்யும் வசதி கொண்ட 'ஷோபா'
56 ஆண்டு பாரம்பரிய சின்னம்

# புத்தாண்டுச் சிந்தனைகள்



சோலையெலாம் பூத்திருக்கும்
சுந்தரப் பூக்கள்—அதைச்
சுற்றிவந்து ரீங்கரிக்கும்
மந்திர ஈக்கள்
மாலையென்ப தென்னஅது
மன்மதக் காலம்—அந்த
மயக்கத்திலே வாலிபங்கள்
சொர்க்கத்தை ஆளும்!

வாழும்வரை பூக்கள்கூட
வாசமளிக்கும்—அவை
வாடும் வரை மக்களுக்கு
நேசமளிக்கும்
ஏழைபணக் காரனெனும்
எண்ணமின்றியே—அவை
எல்லார்க்கும் இன்ப மீந்து
வாழ்வை முடிக்கும்!

கோடி கோடி மானுடங்கள்
பூத்திருக்குது—அந்தக்
கோடிகளை மண்ணுலகம்
பார்த்திருக்குது
வாடுகின்ற மானிடரைத்
தூக்கி நிறுத்தும்—தூய
வள்ளல்களை வையகமே
வாழ்த்தி நிற்குது!

சொந்த லாப வேட்கையிலே
நெஞ்சை இழப்பார்—சூது
சூழ்ச்சிகளில் வஞ்சகத்தில்
தம்மை மறப்பார்
மந்தகாச வாழ்க்கையிலே
நாளுமிருப்பார்—பெற்ற
மக்களுக்குச் சேர்த்து வைத்துக்
காலமழிப்பார்!

ஆடும்வரை ஆடிவிட்டு
ஓய்வதென்னடா—மேனி
ஆட்டம் காண பாய்மடியில்
சாய்வ தென்னடா
ஓடும் காலம் ஓடிவிடும்
திரும்பி வராது—உன்
ஒருவனுக்காய் வாய்ப்புகளும்
அரும்பி இராது!

தன்னைத் தந்து தாரணியைக்
காக்குது பூமி—நல்ல
பொன்மணிகள் தந்துவளம்
சேர்க்குது சாமீ
மண்ணில் வந்த மானிடனே
உன்னை உணர்வாய்—தேச
மக்களுக்குத் தொண்டு செய்து
நீயும் உயர்வாய்!

**கவிஞர் மணிமொழி**

60 இலட்சம் டன் தயாரித்தும் இளமை மாறாதது, விரைவில் புது வாழ்வு துவங்கவிருக்கிறது.



### அதுதான் இன்றைய மதுராஸ் சிமெண்ட்ஸ்

மதுராஸ் சிமெண்ட்ஸின் பெருமிதம் நிறைந்த நேரம் இது. ஒரு முக்கியமான கட்டத்தை அடைந்திருக்கிறது. ஆலை தொடங்கிய நாள் முதல் இன்று வரை 60 இலட்சம் டன் உயர்ந்த ரக சிமெண்ட் உற்பத்தி செய்திருக்கிறது.

புதிய சகாப்தம்

மதுராஸ் சிமெண்ட்ஸ் தனது புதிய சகாப்தத்தின் நுழை வாயிலில் அடியெடுத்து வைத்திருக்கிறது. மிகவும் நவீனமான, சர்வ தேச தொழில்நுட்ப அடிப்படையில் தற்போதிருக்கின்ற ஆலையின் உற்பத்தியைப் போல் இருமடங்கு உற்பத்தி செய்யக்கூடிய தமது இரண்டாவது சிமெண்ட் தொழிற்சாலையை ரூ. 76.6 கோடி மூலதனத்தில், ஜெயந்திபுரத்தில் (ஆந்திரப் பிரதேசம்) துவங்கவிருக்கிறது.

சிமெண்ட் தயாரிப்பின் ஒவ்வொரு பிரிவிலும் கம்ப்யூட்டர், எலெக்ட்ரானிக் வசதிகளுடன் கூடிய மிகச் சிறந்த இயந்திரங்களை நிறுவப் போகின்ற முதல் நிறுவனம் மதுராஸ் சிமெண்ட்ஸ். இதன் விளைவாக தொழில் நுணுக்கத்தில் மிகவும் முன்னேற்றமான ஆலைகளில் ஒன்றாகவும், உயர்ந்த ரக சிமெண்ட் உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலையாகவும் விளங்கும்.

நவீனத் தொழில்நுட்பத்தில் முதலிடம்

[illegible]

1977-ல், [illegible] ரூ. 14 கோடி செலவில் நிறுவியது. அது தான், நிறுவனத்தின் இன்றைய வெற்றிக்குக் காரணமாய் அமைந்தது.

மதுராஸ் சிமெண்ட்ஸ் நிறுவனம்தான் முதன் முதலாக வெற்றிகரமான முறையில், ''எலெக்ட்ரோ-ஸ்டேட்டிக் பிரெசிபிடேட்டர்'' எனும் சுற்றுப்புறச் சூழ்நிலைப் பாதுகாப்பு இயந்திரத்தையும், மத்தியக் கண்ட்ரோல் ரூம் ஒன்றினையும் அமைத்ததோடு, தங்கள் ஆலையிலேயே வடிவமைத்துத் தயாரித்த ''பார்ஷியல் ப்ரீகால்சினேட்டர்'' இயந்திரத்தையும் நிறுவி, இயக்கி வருகின்றது.

அண்மையில் மதுராஸ் சிமெண்ட்ஸ் முதன் முதலாக ''எக்ஸ்ரே அனலைஸர்'' எனும் சாதனத்தை நிறுவி மூலப் பொருள்களையும், கடைசியில் உற்பத்தியாகும் சிமெண்டையும், அல்லும் பகலும் இடைவிடாது மணிக்கு ஒரு முறை தரப் பரிசோதனை செய்து அவ்வப்போது வேண்டிய திருத்தங்களைச் செய்து தரக் கட்டுப்பாட்டை நிலை நிறுத்தும் பணியைத் தொடர்ந்து செய்து வருகிறது. இதர தொழிற்சாலைகளில் 24 மணி நேரமாகும் இப்பரிசோதனையை, இங்கு ஒரே மணியில் செவ்வனே செய்து முடிக்கிறது.

சிமெண்டை அரைப்பதில் மிக நவீனமான ''[illegible] மில்'' எனும் புதிய இயந்திரத்தை நிறுவி மிகவும் உறுதியான சிமெண்ட் தயாரிக்கிறது. இதன் விளைவாக கணிசமான அளவு மின்சார உபயோகத்தையும் குறைத்திருக்கிறது.

சாதனையில் ஓர் முன்னோடி

[illegible]

| | |
|---|---|
| [illegible] மற்றும் உபரித்தொகை | 1704% |
| [illegible] | 416% |
| [illegible] | 219% |
| [illegible] | 234% |
| இலாபம் | 200% |

[illegible] 1984-ம் ஆண்டுக்கான ''கார்ப்பொரேட் [illegible] அவார்ட்'' [illegible] மதுராஸ் சிமெண்ட்ஸ் பெற்றதில் வியப்பு ஏதும் இல்லை.

இளமையின் ரகசியம்

நவீன தொழில்நுட்பத்தில் முதலிடம், வாடிக்கையாளரின் திருப்தி, ஊழியர்களின் ஒன்றுபட்ட உழைப்பு, எப்போதும் முன்னணியில் இருக்கவேண்டும் என்ற உத்வேகம் இவை அனைத்துமே மதுராஸ் சிமெண்ட்ஸ் என்றும் இளமையோடு இருப்பதன் ரகசியம்.

MADRAS CEMENTS LTD
RAMCO BRAND PORTLAND CEMENT

மதுராஸ் சிமெண்ட்ஸ் லிமிடெட்

[illegible] 626 117.

மதுராஸ் சிமெண்ட்ஸ் - 21 [illegible]


# கலையின் நோக்கம் மானுடமே!

## முக்தா.வீ.சீனிவாசன்

கலையின் நோக்கம் என்ன? என்பது பலவிதமான விளக்கங்களுக்குள் சிக்கித் தவிக்கிறது.

ஒரு சாரார் கலையின் நோக்கம் கலையேதான் என்று வாதிக்கிறார்கள்.

வேறு ஒரு கூட்டத்தினர் சமுதாயப் புண்ணை வெட்டி எடுக்கும் கத்தியாகப் பயன்படவேண்டியது கலை என்றும், வர்க்கப் போராட்டத்திற்கு வழக்குரைஞராகவும், ஜாதீய - சமுதாயத்தை ஒழிக்கப் புறப்படும் காட்டுத்தீயாகவும் மட்டுமே கலை-பணி புரியவேண்டும் என்றும் கூறுகிறார்கள்.

சமீப காலத்தில் மேற்கத்திய கலைப்படைப்புக்கள், குறிப்பாக திரைப்படக் கலைப் படைப்புக்கள் கலையின் பொருளை வேறு விதமாகக் கொள்கின்றன.

உலகப் பெரும் இயக்குநர்களான எயின்ஸ்டின், பாக்லட், ரேனாயிட், ப்பூனான், பெர்க்மென், குரோஸவா, போர்டு, ஸ்டெம்பெர்க், கோடார்ப், ரோமர், மானி, வாஜ்டா, ஹார்ச்காக், பசோலினி, டேவிட்லீன், நீட், கோரம்ஸ்கி, சத்தியஜித்ரே, மிருணாள்சென், ஷியாம் பெனகல், படேல், டென்டுல்கர், சர்க்கார், ஆடூர் கோபாலகிருஷ்ணன், அரவிந்தன் போன்ற - திரைப்பட மேதைகள் -கலைப்படைப்பின் நோக்கங்களைத் தங்கள் படைப்புகளின் வாயிலாகவே மௌனமாகக் கூறுகிறார்கள்.

கலைப் படைப்பின் உண்மை நோக்கத்தைக் கோடிட்டுக் காட்டுவதற்கு முன், எந்த நோக்கத்திற்குக் கலை பயன்படுத்தப்படக் கூடாது என்பதை நாம் தீர்மானித்துக் கொள்வோம்.

மனிதனின் கீழ் உணர்ச்சிகளில் ஒன்றான காமத்தைத் தூண்டும் வகையில் அமைந்தால் அது கலைப் படைப்பு ஆகவே ஆகாது.

பழி வாங்கும் மனோபாவமும், வன்மமும் அதைத் தொடர்ந்து கொலையையும், நியாயப்படுத்திக்காட்டும் கலைப்படைப்புக்கள் வெறும் போலிகள்.

விபசாரத்தையும், மனிதனுடைய பலவீனங்களையும் தங்கமுலாம் பூசிக்காட்டும் கலைகள் நமக்கு வேண்டாம்.

நமக்கு வேண்டும் கலை ஒரு ஜீவனுள்ள கலை.

சம்பிரதாய அமைப்புக்களைக் கொண்ட இன்றைய திரைப்படக் கலை வெகு சீக்கிரமாக வளர்ந்து விடும் என்று பிரார்த்தனை செய்கிறோம்.

வாழ்க்கையில் பிரச்னைகளை மிகைப்படுத்திக் காட்டி சொல் வடிவம் கொண்ட இன்றைய படங்களை நாம் ஒப்புக்கொள்ள மறுக்கிறோம் என்பது பொருளல்ல. இன்றைய படங்கள் அதன் இன்றைய நிலையிலிருந்து அடுத்த நிலைக்கு நகர்த்தப்பட வேண்டும் என்று விரும்புகிறோம்.

வங்கத்தைச் சேர்ந்த பெரிய இயக்குநர் ஒருவர் எடுத்த திரைப் படம் ஒன்றினைச் சமீபத்தில் பார்த்தேன்.

பல மைல்களுக்கு அப்பால் உள்ள நகரத்திற்கு - பிரசவத்திற்காகப் புறப்படுகிறாள் ஒருபெண். அமானுஷ்யமான அழகு, மலை, நதி வழிகளைக் கடந்து கொண்டு வரும் அந்தப் பெண் ணுக்கு ஒரு இளைஞன் செய்யும் சேவைகளையும், பணிகளையும் விளக்கப்படுத்திய படம் அது. நகரத்தை அடைந்து அவளுக்குக் குழந்தை பிறக்கும் போது அந்த இளைஞன் அந்தக் குழந்தையை வந்து பார்க்கிறான். தன் உதவியால் இந்தக் குழந்தை அதன் தாயின் வயிற்றிலிருந்து உயிரோடு வந்தது என்ற களிப்பிலே அந்தக் குழந்தையை உச்சி முகர்ந்து முத்தமிட்டுக் களிக்கிறான். இந்த மாபெரும் படம் மானுட ஜாதிக்கு ஒரு பாடம்.

கல்லிலே கலை வண்ணம்...



என்னைப் பொறுத்தவரை, கலைக்கு ஒரே ஒரு நோக்கத்தினைத் தான் காண்கிறேன். அது மானிட மனத்தை வளர்க்க வேண்டும். மனிதாபிமானத்திற்கு எரு இட்டு, நீர் வார்த்து வளர்க்க வேண்டும்-அவ்வப்போது அறிவு வெளிச்சம் அதன் மேல் பட்டு, படரவேண்டும். எப்போதாவது பூச்சித் தொந்தரவு ஏற்பட்டால் மருந்து அடித்துப் பூச்சிகளைக் களைய வேண்டும்.

கலையின் நோக்கம் மானுடமே. அந்த மானுட வாதம் எதார்த்த வாதத்தோடு இணைந்து இருக்குமேயானால் அது மேலும் பெருமைப்படத் தக்கதாக அமைகிறது.

நான், 'வாழ்க கலை' என்று சொன்னால்-அதன் பொருள் 'வாழ்க மானுடம்' என்பதே. ●



# தீர்ப்பின் மறுபக்கம்

எஸ். லட்சுமிசுப்பிரமணியம்

காவேரிக்கரை ஓரம். கார், சாலையில் மெதுவாக ஓடிக் கொண்டிருந்தது. "கொஞ்சம் மெதுவாகவே போகலாம். நிறைய நேரம் இருக்கிறது. வழியில் இரண்டு புறமும் பார்த்துக் கொண்டு வருகிறேன்!" என்று சொல்லி இருந்தார் பூவராகன்.

தஞ்சை மாவட்டத்தில் சொந்த ஊர் இருந்தாலும், அரசாங்க உத்தியோகம் அவரை எங்கே யெல்லாமோ இழுத்துக் கொண்டு போய்விட்டது. கடைசியாக இப்போது சென்னையில் உயர்நீதி மன்றத்தில் நீதிபதியாகப் பணியாற்றும் பொறுப்பு தோளில் கனத்துக் கொண்டு நின்றது.

இப்போது காவேரிக்கரை ஓரமாகக் கிராமத்தில் புதுப்பித்த கோயில் ஒன்றின் குடநீராட்டு விழாவிற்காகப் போய்க் கொண்டிருக்கிறார். தைப்பொங்கலை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்ட இந்த விழாவில், அந்த மண்ணில் பிறந்து வளர்ந்தவர் என்ற தனிப் பெருமைக்காக அவரை அழைத்திருந்தார்கள். அவருக்கும் அங்கே அப்படி வரவேண்டும் என்று ஓர் ஆசைதான்.

காவேரி முழுவதும் வெள்ளம் மோதிமோதி, பெரிய பாம்பு மூச்சு விட்டு அசைவதைப் போல நகரும் காட்சி. குயிலும், அக்காக் குருவியும் மாறிமாறிக் கூவும் ஒலிக்கலவை. மீன்குத்தி ஒன்று தண்ணீருக்குள் செங்குத்தாகப் பாய்ந்து மூழ்கி எழுந்து, தவளைகள் தத்திச் செல்லுவதைப்போல தொட்டும் தொடாததுமாக நீர்ப் பரப்பில் ஓடும் சித்திரம். மதகின் வழியே இரகசியம் பேசிக் கொண்டு பாயும் ஆற்றுநீர். காயக் கட்டிய பச்சைப் புடவையைப் போல, வான்முகடுவரை விரிந்து கிடந்த பச்சை வயல்.

சென்னையில் காணக்கிடைக்குமா இதெல்லாம்?

எதையும் தராசில் நிறுப்பது போலக் கேட்டு ஆராய்ந்து நியாயம் துளி நழுவாமல் தீர்ப்பு சொல்லுவதில் பெயர் வாங்கியவர் பூவராகன். இந்த நிலைக்கு அப்புறம் தலைமை நீதிபதியாகி, டில்லிக்குப் போவதற்குக்கூட வாய்ப்பும் இருந்தது. சென்னையில் முக்கியமான கலை நிகழ்ச்சி எதுவானாலும், சமயச்சொற்பொழிவானாலும், தலைமை வகிக்க அவரைத்தான் அழைப்பார்கள். கதவு போன்ற மார்பிலும், நெற்றியிலும் தோளிலும் சிறியதும் பெரியதுமாகத் திருமண்ணும் சிந்தூரமுமாக நாமம் தரித்து, இடுப்பில் மூலகச்சமும் அதன்மேல் ஒரு வெண்பட்டும் சுற்றிக் கொண்டு அவர் கோயிலுக்கு நடந்து வரும் கோலமே தனி.

பூவராகனின் நினைவு அலைந்து கொண்டே இருந்தது.

இந்த உயர்ந்த தொழிலில் அவருக்கு ஒரே ஒரு குறை. எவ்வளவுதான் கருத்துடன் பணிபுரிந்தாலும், அதில் மயிரிழையேனும் பிசகுநேராமல் இருந்திருக்குமா? ஆயிரக்கணக்கான வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கி இருந்தாலும், தெரிந்தோ தெரியாமலோ யாரோ ஒரு சில நிரபராதிகளுக்கு அவர் தண்டனை கொடுத்திராமல் தப்பி இருக்க முடியுமா? நூறு தடவைகள் நியாயம் வழங்கிய நாற்காலியில் அமர்ந்து ஒரு முறையேனும் அநியாயத்தோடு தீர்ப்புக்கூறவேண்டிய அவசியமும் நேர்ந்திருக்கலாம் அல்லவா?

அவசியமா? அவசரமா? நள்ளிரவில் சிலசமயம் விழிப்பு கொடுத்துவிடும். இதை நினைத்தால் அப்புறம் தூக்கம் வராது. பொறியியல் படித்துக் கட்டடம் கட்டப் போயிருக்கலாம்; பழுது நேர்ந்தால் திரும்ப எடுத்துக்கட்டி விடலாம்.

கல்லூரியில் விரிவுரையாளராகப் போயிருந்தால் எத்தனையோ மாணவர்களை உருவாக்கி இருக்கலாம்; சரியாகப் படிப்பவர்களை மதிப்பிடுவதில் பிசகு நேரவாய்ப்பில்லை!

நீதிபதியாக அமர்ந்து தீர்ப்பு வழங்கும் போது?

இந்தப் பணியில்? ஊரெல்லாம் மக்கள் கண்ணியமான தொழிலாக நினைத்து, சிறிது அச்சம் கலந்த மரியாதையுடன் நிமிர்ந்து பார்க்கும் இந்த உத்தியோகத்தில் கடலோரமாகக் காற்று வாங்க நடந்து போனாலும் பார்ப்பவர் எல்லாம் பணிவுடன் கைகுவித்து வணங்கும் இந்தப் பதவியில்-விழாக்களுக்கு வரும் போது மையமாக நாற்காலியைப் போட்டு மலர்மாலை சூட்டிப் போற்றும் இந்தப் பொறுப்பு நிறைந்த வேலையில் அவருக்குள்ளே ஊவாமுள்ளைப்போல உறுத்தும் இந்த நினைவு எத்தனை பேருக்குத் தெரியும்?

கார் ஊருக்குள் வந்துவிட்டது. சாலையில் குறுக்கே கட்டிய மாவிலை, இளந்தென்னோலைத் தோரணங்கள். வாசலில் தெருவின் மண் அடங்கச் சாணம் மெழுகிய தரையில், செம்மண் இட்ட கோலவடிவங்கள். தூணோரம் நின்று காரையும், காருக்குள் இருப்பவரையும் எட்டிப்பார்த்த குழந்தைகள். காலைக் காற்றில்

கொத்துவந்த மங்களம் முழங்கும் நாயன இசை. பொங்கல் பொங்கி மாடுகளின் கொம்புக்கு வர்ணம் பூசி, வண்டிகளுக்குச் சிவப்பும் வெள்ளையுமாகச் சக்கர அலங்காரம் செய்து, தெருவில் கூடிக் கும்மி அடித்து, விழாக் கொண்டாடிய மணம் இன்னும் அடங்கவில்லை. முகத்தில் பொங்கி, வழிநெடுக உதிர்ந்த புன்னகையில் தெரிந்தது அது.

கோயிலுக்கு முன்னால் தெரு. தெருவை அடைத்துப் போட்ட பந்தல், அதற்குச் சற்று முன்பாகவே அலங்கார வளைவு. அங்கேயே அவருடைய காரை நிறுத்தி விட்டார்கள். மங்கள வாத்தியம் முழங்கிற்று. இறங்கியவுடன் மாலை போட்டு அழைத்துக் கொண்டுபோனார்கள். ஊருக்குப் பெரியவர்கள் அப்படி வேட்டி மேல் இடுப்பில் துண்டைக் கட்டிக்கொண்டு, பணிவுடன் அவருக்கு முன்னால் நின்ற காட்சியைப் பார்த்த போது கொஞ்சம் வெட்கமாகக்கூட இருந்தது.

இன்று அவர் நீதிபதியாக இருக்கலாம். அந்தக் கிராமத்துக்குத் தந்தையுடன் வந்து கோயிலில் கைநீட்டிப் பொங்கல் பிரசாதம் வாங்கிச் சாப்பிட்டவர் தானே? அந்தக் காவேரியில் குளித்துவிட்டுக் கரையேறி, உதடுகள் நடுங்கக் கையிரண்டும் கூப்ப வானத்தில் நட்சத்திரம் முளைப்பதுபோலத் திருமண் துலங்கி மிளங்கும் நெற்றியுடன் தெருவில் நடந்து வந்தவர்தானே!

நாற்பது ஆண்டுகளா? ஏ.... அப்பா? நேற்று வந்த மாதிரி அல்லவா இருக்கிறது?

கோயில் கோபுரத்துக்கு அருகே சவுக்குக் கால்கள் ஊன்றி உயரமான மேடை போட்டிருந்தார்கள். மேலே கம்பளம் விரித்து வெய்யில் படாமல் இருக்கச் சாய்ப்பும் போட்டிருந்தார்கள். அவர் முன்வரிசையில் உட்கார்ந்த பிறகு எல்லோரும் வரிசையாகப் பின்னால் உட்கார்ந்தார்கள்.

மங்கள வாத்தியம் ஒலிக்க, குடநீராட்டு விழா தொடங்கிற்று. நாதசுரமும், டமாரமும், வேதமும், பிரபந்தமும் கலந்தும் கலவாமலும் முழங்கின. இந்த இசைக்கும் இரைச்சலுக்கும் நடுவில், தன்னையறியாமல் நெஞ்சில் படர்ந்த உற்சாகத்தில் மெய்மறந்து உட்கார்ந்திருந்தார், பூவராகன்.

சுவாமிகள் குடத்தை வாங்கிக் கொண்டு மேல்படியில் ஏறினார். கலசங்களின் மீது புனிதநீர் பொழிந்தது. மக்களின் ஆரவாரமும், கெட்டிமேளமும், டமாரமும் கலந்து உயர்ந்தன. அங்கு குத்தே. மாவிலையால் மங்கள நீரை எல்லோர்மீதும் தூவித் தெளித்தார், சுவாமிகள். பூவராகனின் கண்கள் உருகிக் கசிந்தன. "என்னை எங்கிருந்தோ கூப்பிட்டு, இந்தப் பாக்கியத்தைக் கொடுத்தாயே அப்பா!" என்று கண்களை மூடி வைகுந்தநாதனை ஒருகணம் நெஞ்சுருக வேண்டிக் கொண்டார்.

"இவர்தான் சுந்தரேச ஸ்தபதி. இவருடைய கைவண்ணம்தான் இந்தக் கோயில் முழுவதும் தெரிகிறது!" என்று அவரை அழைத்து வந்து பூவராகனுக்கு அறிமுகப்படுத்தினார், ஆலய நிருவாகி. பூவராகன் தன்னுடைய கழுத்து மாலையினைக் கழற்றி அவருடைய கழுத்தில் போட்டார்.

"என்ன இது?" என்று வெட்கத்தில் முகம் சிணுங்கத் தலையைக் குனிந்து கொண்டார் சுந்தரேசன்.

"போடுங்க!" அந்தப் பவுன் மோதிரத்தை எடுத்துக் கொடுத்தார் நிர்வாகி. பூவராகன் சுந்தரேசனின் விரலைக் கையில் எடுத்துப் பிரித்துப் பாம்பு விரலில் அதைப் போட்டு, முதுகிலும் தட்டிக் கொடுத்தார்.

எழுந்து நடந்தார்கள்.

"நீங்க முசாபரி பங்களாவுக்குப் போய் ஓய்வெடுங்க. இது கலைகிற கூட்டமில்லை. மூன்று மணிவரையில் சாப்பாட்டுக்கடை அமளிப்படும். இன்றைக்கு ஊரில் யாரும் அடுப்பு மூட்டமாட்டாங்க!" என்று சொல்லிக் கூட்டத்தை விலக்கி, வழிகாட்டி வெளியே அழைத்துக் கொண்டு போனார் மணியகாரர்.





ஒரு மனிதன், தன்னிடத்தில் மற்றவர்கள் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்று நினைக்கிறானோ—எதிர்பார்க்கிறானோ அப்படியே இவன் மற்றவர்களிடம் நடந்து கொள்ளுவதுதான் ஒழுக்கமாகும்.

—தந்தை பெரியார்

பிற்பகல் மூன்று மணி. முசாபரி பங்களாவுக்குத் திரும்பி, ஓய்வெடுத்து, சாப்பிட்டுவிட்டுக் கட்டிலில் படுத்துப் புத்தகத்தைப் படித்தபடியே கண்ணைக்கொட்டி கொட்டி, ஒருமணி நேரம் தூங்கி எழுந்ததும் ஆகிவிட்டது. முகத்தைக் கழுவிக் கொண்டு வெளியே சாய்வு நாற்காலியைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தார், பூவராகன். முசாபரி பங்களாவில் வாசல் 'கேட்'டைத் திறந்து கொண்டு, உள்ளே யாரோ நடந்து வருவது தெரிந்தது. கொஞ்சம் நெருங்கி வந்ததும் அந்த உருவம் சுந்தரேச ஸ்தபதிதான் என்பதும் புரிந்தது.

கையைக் குவித்துக் கும்பிடு போட்டபடி படியேறி வந்தார் அவர். ''வாங்க! வாங்க!''என்று - புன்சிரிப்பை முகமனில் ஓர் அங்கமாக்கிக் கொண்டு வரவேற்றார் பூவராகன். பக்கத்திலிருந்த நாற்காலியை எதிரே இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தார். சுந்தரேசன்.

கொஞ்சநேரம் பேச்சில்லாமலே ஒடுங்கி இருந்தவர், சட்டென்று அவரை நிமிர்ந்து பார்த்தார் ''என்னை ஞாபகம் இருக்குதோ ஐயாவுக்கு?'' என்று கேட்டார்.

''நல்லாத் தெரியுது. காலையிலேதானே மோதிரம் போட்டேன்!''என்றார் பூவராகன்.

''அதைச் சொல்லலை ஐயா! முப்பது வருஷத்துக்கு முன்னாலே பார்த்தது. ஒங்களுக்கு நினைவிருக்குதான்னு கேட்டேன்!''

''முப்பது வருஷத்துக்கு முன்னாலேயா?'' என்று கண்ணை இடுக்கிக் கொண்டு, நெற்றிப் பொட்டைத் தேய்த்துக் கொண்டார் பூவராகன்.

''ஆமா! உங்களுக்கு ஞாபகமிராது. அப்போ நான் பத்து வயதுப் பையன். கோயிலிலே விக்கிரகம் திருட்டுப் போன வழக்கை ஐயாதான் விசாரிச்சிங்க! அதுக்கு உடந்தையா இருந்ததா எனக்கு ரெண்டு வருஷம் தண்டனையும் கொடுத்தீங்க. என்னைச் சிறுவர் ஜெயில்லே வச்சு சீர்திருத்த வேணும்னு உத்தரவும் போட்டீங்க!''

பூவராகனுக்கு ஏதோ ஒரு நிழல் நெருங்குவதைப் போல இருந்தது. முதுகுத்தண்டு லேசாகக் குளிர்ந்து உதறிற்று.

''எனக்கு நினைவில்லே!''

''நினைவிருக்க முடியாது. எத்தனையோ கேசுகளுக்குத் தீர்ப்பு சொல்லுறீங்க. அதுலே இதுவும் ஒண்ணு. எத்தனையோ பேரு நியாயமாத் தண்டனைக்கு ஆளாகிறாங்க. ஆனா ஒரு சிலர் நிரபராதியா இருந்தும்ஜெயிலுக்குப் போவலாம். நான் அப்படி ஒருத்தன். நான் அந்தக் குத்தம் நடந்த இடத்துக்குக்கூடப் போவலை. கேசை ஜோடிச்சு ஒரு ஏழைப் பையனை உள்ளே தள்ளிட்டாங்க!''

பூவராகன் ஏதோ சொல்லத் தொடங்கினார். குரல் வெளிப்படாமல் விழித்தார். வேட்டியைச் சரிசெய்து செருகப்போன கை ஓய்ந்தது. ''நானும்... நானும் ...''என்று சொல் இடறிவிழத் தயங்கினார்.

''ஐயா! உங்களை நான் குத்தம் சொல்லலே. உலகத்துலே எத்தனையோ விதமாக எத்தனையோ இடங்களிலே அநியாய பலி விழுந்திடுது. இது அப்படி ஒண்ணு. நீங்க என்ன செய்ய முடியும்.? நான் சொல்ல வந்ததைச் சொல்லிடறேன். ஜெயில்லேர்ந்து திருந்தி வந்தேன். பள்ளிக்கூடத்துக்குப் போய் படிக்கக் கூச்சமா இருந்திச்சு. உளியும் கல்லுமா உட்கார்ந்தேன். விக்கிரகம் திருடியவன் என்கிற பெயர் மறைய விக்கிரகங்களை நானே உருவாக்க நெனைச்சேன். என்னோட பெரிய மாமா ஒரு ஸ்தபதி. அவர் என் விரலுக்கு உயிர் கொடுத்தார். என்னோட கனவும் நினைவாச்சு..'' குரல் தழுதழுக்க நிறுத்தினார் சுந்தரேசன்.

''தப்பு நடந்து போயிடுச்சு. தெரிஞ்சு செய்ததில்லே—''

''தெரியும் ஐயா! ஆனாத் தெரிஞ்சு சுட்டாலும், தெரியாம பட்டாலும், புண்ணு புண்ணுதானே? வேதனை குறையுமா? இப்போ காயம் ஆறிடுச்சி. மறுபடியும் அந்த வேதனையை ஞாபகப்படுத்திக்க வேண்டாம்னு பார்க்கிறேன்....''

''நீங்க சொல்லுறது—''

''மோதிரம் போட்டீங்களே? அதைத்தான் சொல்லுறேன். நாலு மணிநேரமா அது விரல்லே நெருப்பாச் சுட்டுக்கிட்டிருக்கு. என்னாலே அதைப்போட்டுக்கிட முடியாது. அந்த மோதிரவிரலிலே உளியைப்புடிச்சா என்னாலே விக்கிரகத்தைச் செதுக்க முடியாது. விக்கிரகம் திருடினதுக்காக ஜெயிலுக்குப் போன ஞாபகம்தான் வரும். என்னாலே முடியாதய்யா!''

சுந்தரேச ஸ்தபதியால் மேலே பேச முடியவில்லை. இரண்டு நிமிட மௌனத்திற்குப் பிறகு, மறுபடியும் கரகரவென்று அவருடைய குரல் கேட்டது.

''அந்த மோதிரத்தைத் திரும்ப ஐயாகிட்டேயே கொடுத்துட்டுப் போகத்தான் வந்தேன். ஒரு வேளை அதை நீங்க பார்வையிலே வச்சுக்கலாம். தீர்ப்பு சொல்லுறப்போ ரெண்டு நிமிடம் கூடவே யோசிக்கலாம். நான் வரேன்யா'' விரலிலிருந்து எடுத்த பவுன் மோதிரத்தை அவருக்கு முன்னால் வைத்துவிட்டு, சுந்தரேசஸ்தபதி எழுந்து கைகூப்பி வணங்கினார். படி இறங்கி மளமளவென்று நடந்துபோய்விட்டார்.

அந்தப் பவுன் மோதிரம் ஜன்னல் வழியே சாயும் வெய்யிலின் கதிர் பட்டுப் பளபளவென்று மின்னிற்று. அதைப் பார்த்தபோது ஒளிமயமாய்ச் சுடர் வீசும் நீதிதேவனின் பொற்கரங்களைப் பார்ப்பது போன்ற எண்ணம் தோன்றிற்று பூவராகனுக்கு!

# மக்கள் தெய்வம்

**வியட்நாம் வீடு சுந்தரம்**

எங்கள் தெய்வம் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் அன்று கலையுலகுக்குச் செய்த உதவிகள் இன்று தமிழகத்துக்கே அவர் மூலம் கிடைத்து வருகிறது.

அவரது வள்ளல் தன்மைக்கு எத்தனையோ சம்பவங்களை உதாரணமாகக் கூறலாம். அவை எழுதித் தீராத ஏராளமான தர்ம சாசனங்கள்.

என் மனதில் இன்றும் நிலைத்த பலவற்றில் ஒன்றைக் குறிப்பிடுகிறேன்.

ஒரு பழம் பெரும் நாடக நடிகர் அவர். மகளுக்குத் திருமணம் ஏற்பாடான நிலையில் பணத்துக்கு என்ன செய்வதென்று தெரியாமல் ''பொன்மனச் செம்மல்'' படப்பிடிப்பில் இருக்கும் ஸ்டுடியோவுக்குச் சென்றார். தன் நிலையை வாயால் சொல்லக் கூச்சப்பட்டு கையில் ஒரு பொட்டலம் அவலையும் கொண்டு சென்றார். புரட்சித் தலைவர் அவரைக் கண்டதும் அன்போடு அழைத்து அமரச் செய்தார். வந்தவர், தான் கொண்டு வந்த அவல் பொட்டலத்தைத் தலைவரிடம் தந்தார். பொன்மனச் செம்மல் புன்னகையோடு அதை வாங்கி உண்டார். வந்தவரோ நாடிவந்த உதவியை வாய்திறந்து கூறவில்லை. எங்கள் வள்ளலும் எதுவும் கேட்கவில்லை. படப்பிடிப்பிற்குச் சென்றுவிட்டார்.

நாடக நடிகர் கேட்கச் சந்தர்ப்பம் கிடைக்காத சோர்வுடன் துக்கமாக வீடு திரும்பினார்.

மனைவியிடம் நடந்ததைக் கூறிக்குறைப்பட்டபோது அவரது துணைவியார் அவரிடம் 'நீங்கள் அவலைத் தந்து அவனத்தைப் புலப்படுத்த நினைத்தீர்கள். ஆனால் நீங்கள் வீடு திரும்புவதற்குள் அந்தத் தெய்வம்-பொன்மனச் செம்மல் - நம் மகள் திருமணத்திற்குத் தேவையான பணம், தங்க நகைகள், புடவைகளைக் கொடுத்தனுப்பிவிட்டார்'' என்றாள். துக்கத்தாக்குவண்டு போயிருந்த நடிகர் எங்கள் வள்ளல் தலைவரின் வாரிக் கொடுத்த பாரி போன்ற ஈகைக் குணத்தை நினைத்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார். நடந்த சம்பவம். ஆனால் இப்போது தான் இதைப் படிக்கும் உங்களுக்குத் தெரியும். இதைப்போல் ஏராளமான நிகழ்ச்சிகள்.

அடுத்தவர் வயிறாரச் சாப்பிட வேண்டும். அதைப்பார்த்துத் தான் மனம் குளிர வேண்டுமென்ற அன்புள்ளம் அவருக்கு மட்டுமே உண்டு.

புராணத்தில், கர்ணனுக்கு ''அன்னக்கொடி'' இருந்ததாகவும், இல்லையென்று சொல்லாமல் அள்ளிக் கொடுத்ததாகவும் படித்திருக்கிறோம். ஆனால் நிதர்சனமாக எங்கள் மக்கள் தெய்வத்திடம் மட்டுந்தான் வாரிக்கொடுக்கும் வற்றாத



கங்கை மனதைப் பார்த்திருக்கிறோம். கலையுலகில் அவர் சம்பாதித்த செல்வம் ஏராளமான குடும்பங்களின் உணவுக்காக, படிப்புக்காக, திருமணங்களுக்காக, தர்ம காரியங்களுக்காகத் தான் பயன்பட்டது. அந்த தர்மம், உலகம் பூராவும் உள்ள பிறந்த குழந்தை முதல் அனைவரையும் அந்தப் புகழ் பெற்ற மூன்றெழுத்தை அறிய வைத்தது.

உலகமே அந்தத் தலைவனுக்காக-அவர் நலம் பெற வேண்டுமென்பதற்காக நம்பிக்கையோடு தெய்வத்தை வேண்டி வணங்கிப் பிரார்த்தித்ததே, அது அவர் ஒருவருக்குத்தான் நடக்கும். காரணம், அவர் செய்த தருமம், அவர் காக்கும் சத்தியம், அவர் கடைப் பிடிக்கும் நேர்மை.

அவரிடம் பணிபுரிந்து, அவர் நடித்த படத்தில் 'வசனகர்த்தா' என்று டைட்டிலில் வந்ததால் கிடைத்த செல்வாக்கால்தான் இன்று வரை நாங்கள் கலையுலகில் நடமாட முடிகின்றது.

தெய்வத்தின் அவதாரம் எங்கள் தலைவர். அவரிடமுள்ள மாபெரும் காந்த சக்தியால் நேருக்கு நேர் அவரைச் சந்தித்தால் பகைவனும் சரணடைந்தே தீரவேண்டும். அவரை நம்பியவர்கள் வாழ்ந்த பட்டியலும், நிந்தித்தவர்கள் தானாகவே சீரழிந்த கதைகளும் நாடறிந்தவை.

இன்று அவர் மதிய உணவு, சத்துணவுத் திட்டங்களை அமல்படுத்தி அனைவரும் உணவுபெறப் பாடுபடுகிறாரென்றால்.......இன்றல்ல....அன்று முதல் அடுத்தவர் பசிதீர்க்கும் அட்சய பாத்திரமாகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் என்பதை மறந்துவிடக் கூடாது.

முன்பெல்லாம் எங்கள் செல்வத்தை - அந்த வள்ளல் சக்கரவர்த்தியை - நினைத்தவுடன் சென்று பார்த்து அந்தக் கனிவான இதயத்தைக் கண்டு வந்தோம். இப்போது அவர் மக்களின் பொதுச் சொத்தாக, மாண்புமிகு முதல்வராக ஆன பிறகு எனக்கெல்லாம் அந்தத் தெய்வத்தை நினைத்து வணங்கத்தான் முடிகிறதே தவிர, நேரில் சந்தித்து வணங்கவோ, அன்போடு குடும்பநலங்களைக் குசலம் விசாரிப்பாரே, அதைக் கேட்டு கவலையெல்லாம் மறந்து கைகட்டி நிற்கவோ வாய்ப்பில்லை.

என் போன்றவர்களால், ''அவரே தெய்வம்'' என்று வெறி பிடித்த பக்தி செலுத்தும் உண்மை ஊழியர்களால் கலையுலகில் அவர் எங்களுடன் இல்லையே என்று ஏக்கத்துடன் புலம்பாமல் இருக்க முடியவில்லை. ஆனால் எங்கள் தலைவர் இந்தத் தமிழகத்தின் மதிப்பை - மானத்தைக் காக்கும் கலங்கரைவிளக்கு. நாட்டு மக்களின் எதிர்காலத்தை உயர்த்தப் பாடுபடும் மனுநீதிச் சோழன் என்ற மகிழ்ச்சியில் வாழ்கிறோம்.

தர்மம் தலைகாக்கும், சத்தியம் வெல்லும் என்ற வாசகங்களை அன்னை மூகாம்பிகை அவர் உருவில்தான் அனைவருக்கும் புரிய வைக்கிறாள். அந்த வள்ளலை நினைத்தவர்கள், அந்தத் தலைவர் பெயரை உச்சரித்தவர்கள், அவர் வழி நடப்பவர்கள் என்றுமே சீரும் சிறப்பும் பெறுவதைக் கலையுலகிலும் சரி, வெளியுலகிலும் சரி, நேரடியாகக் காணலாம்.

புரட்சித் தலைவரின் புனித ஆட்சியில் மக்களின் உள்ளத்திலும் இல்லத்திலும் பால் பொங்கும் மகிழ்ச்சி பொங்கும் என்பது உண்மை - வெறும் புகழ்ச்சியில்லை! ●

# பொங்கல் பொங்குக!

## திருச்சி பாரதன்

இதயம் மகிழ விழிகள் மலர
இனிதாய்ப் பொங்கல் பொங்குகவே
உதய நிலவாய் குளிர்சூழ் ஒளியே
உணர்வில் என்றும் பொங்குகவே!

அமுதத் தமிழின் நிகரில் வளமை
அகிலம் எங்கும் பொங்குகவே
அருளும் பொருளும் அழகும் கலையும்
அமைதி யாவும் தங்குகவே!

கடலின் குமுறல் தினமும் பரவும்
நிலையில் வாழும் சோதரரே
உரிமை உறவு பழமை அடைந்தே
உவகை யாலே பொங்குகவே!

அடடா, எனது தமிழர் இனமே
எவர்க்கும் ஈடு இல்லையெனும்
வரலா றதனைப் புதுப்பித் திடவே
வலிமை என்றும் தங்குகவே!




**WITH COMPLIMENTS FROM:**

**1. Elegant Publicities,**
83, General Patters Road,
Mount Road, Madras-600 002.
Phone: 89784 & 87070.

**2. Elegant Process,**
Block Makers,
57, Peters Road,
Royapettah, Madras-600014.
Phone : 847288.

**3. Elegant Process Offset Printers,**
75, General Patters Road,
Mount Road, Madras-600 002.
Phone : 89784.

**4. Eminent Enterprises,**
83, General Patters Road,
Mount Road, Madras-600 002.
Phone : 87070.

FOUNDER : **M. SUBRAMANIAM**

# THINK OF TOMORROW AND BUY YOUR PLOT TODAY AT VGP



**Land price**
**Rs. 9,600/-**
onwards (2400 Sq.Ft.)

Pay 25% initially
Balance in 24 monthly instalments
Loan facilities for House Construction arranged

**VGP HOUSING**
PRIVATE LIMITED

Visit VGP's
*Live in Comfort*
Housing Exhibition today
At VGP Square, Saidapet,
Madras-600 015.





## மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

இளைஞர்களுக்குச் சுயவேலை வாய்ப்புத் திட்டம்

அதி தீவிர வேளாண்மை உற்பத்திப் பெருக்குத் திட்டம்

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம்

வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம்

ஞா. சாந்தசீலன்,
திட்ட அலுவலர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்.

நரேஷ்குப்தா, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்.

வாடிக்கையாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் எங்களின் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்

இனிப்புலகில் ஓர் இமயம்

தொலைபேசி 242

பதிவு எண் 4/78

**மாஸ்டர் பேக்கரி**

( பேருந்து நிலையம் எதிரில் )

இராமநாதபுரம்-623 535.

Heralding the White Revolution,

**Erode Dairy**

plays a prominent part in cooperative dairying

Our prestigious range of products include

§ FRESH BUTTER § PURE GHEE §

§ DELICIOUS KHOA § MILK POWDER §

**If it is MILK, it must be ERODE DAIRY**

P. SONAI, M.A., General Manager.

T. VALLAL, M.A., Chairman



# அறுவடை!

—பேரறிஞர் அண்ணா

தம்பி!

அறுவடை முடித்து, கட்டுகளைத் தலைமீது வைத்துக்கொண்டு, ஒற்றையடிப் பாதையிலே, ஒயிலாக நடந்து செல்லும் காட்சி காண காணக்காணக் களிப்பூட்டுகிறதல்லவா? காண்போர்க்கு மட்டுமல்ல, கனமான கட்டுகளைச் சுமந்து செல்பவர்களுக்குங்கூடக் களிப்புதான். பாரம் தெரியாது. பாதையின் இடர்ப்பாடு பற்றிக் கவலை எழாது. வேலை முடிந்தது. பலனை எடுத்துச் செல்கிறோம் என்ற எண்ணம் செந்தேனாகும்.

வேறு வேலைகளிலே, இத்தனைக் கனமானதை எப்படித் தூக்கிச் செல்வது என்ற எண்ணம் எழக் கூடும்; அறுவடை செய்து எடுத்துச் செல்லும் கட்டுகளின் கனம் தூக்கக் கூடியதுதானா என்ற எண்ணமே எழாது. பாடுபட்டோம், பலன் கண்டோம். உழுது பயிரிட்டோம், அறுவடையை எடுத்துச் செல்கிறோம் என்ற நினைப்பு, பாரத்தைக் கவனிக்க விடாது. அதிலும் வயலையும், அதிலே உழைத்திடுவோரையும், விதையையும் அதனின்றும் கிளம்பிய முளையையும் பக்கத்து வயலுடையார் பழித்துப் பேசக்கேட்டு, மனம் பதறிய நிலையும் இருந்திருப்பின், அறுவடை கணிசமான அளவும், தரமான வகையும் இருந்திடின், கட்டுகளைச் சுமந்து செல்வோர் கண்கள், முன்பு பழித்துப் பேசினோர் எங்கே என்றல்லவா தேடும்!

ஆகாது என்றனையே! ஐயப்பே என்றனையே! வீண்பாடு என்றனையே! விளையாது என்றனையே! விழலுக்கு நீர் இறைக்கும் வீணன் என்று ஏசினையே! பதரப்பா, விதையல்ல என்று பரிகாசம் பேசினையே! பாரப்பா, கட்டுகளை! பாடுதந்த பலன்களை! அவ்வளவும் மணியப்பா! ஆளுதூக்க ஒண்ணாத கனமப்பா! என்றெல்லாம், பழித்தவர்களைக் கண்டு கூறலாமா என்று தோன்றுமல்லவா!! கூறும் உரிமையும் ஏற்படுகிறதல்லவா?

புல் பூண்டு முளைக்காது, புறம்போக்கு, நத்தம்பாழ் என்று கூறினர். முப்போகம் விளைந்திடும் கழனி உடையோர்கள் எனத் தம்மைக் கருதினவர். பாழ்வெளியேயானாலும், பாடுபட்டால் பலன் உண்டு; பாழ்வெளியும் ஈதல்ல, பாங்கான வயலேதான்; பலகாலும் வளம்காண முயலாது விட்டதனால், பாழ்வெளிபோல் தோற்றம் கொண்டிது என்று கூறி, கிளறிச் சமனாக்கி. கீழ்மண்ணை மேலாக்கி, வளமூட்ட எருவிட்டு, வகையாக நீர் பாய்ச்சி, வயல் உயிர்பெறச் செய்ததனால், வளமாகப் பயிர் ஏறி, அறுவடைக்கு வழி கண்டார், அவரெல்லாம் கட்டுகளைத் தலைமீது கனம்கூடக் கவனியாமல், கொண்டு செல்லும் போதினிலே, குறை கூறியோர் போக்கை எண்ணிச் சிரித்திடாரோ!

ஆனால், அறுவடையைச் சுமந்து செல்பவர்கள், சிரித்திடக் காணோம்! கலகலப்பான பேச்சுமில்லை!! கவலைக் கோடுகள் முகத்தில் காணப்படுகின்றன. உழைத்த அலுப்போ? அதுமட்டும்தான் என்று கூறுவதற்கு இல்லை. வேறு ஏதோ ஓர் எண்ணம் மனதிலே குடைகிறது. கடமையைச் செய்கிறார்கள், கட்டுகளைச் சுமந்து செல்கிறார்கள்; குறுநகை இல்லை. குதூகலம் இல்லை; ஏன்?

காரணம் தெரிந்துகொள்ள வேண்டுமா, தம்பி! அதோ, பார்த்தனையா, புங்கமரம்! அதன் நிழலிலே? யாரோ, படுத்துக் கிடக்கிறார்கள். வா! அருகே சென்று பார்ப்போம்!

கரத்திலே அரிவாள்! காலிலே வெட்டு! இரத்தம் கசிந்து இருக்கிறது! கட்டுப் போட்டுக் கொண்டிருக்கிறான்!

விவரம் தெரிகிறதல்லவா? அவனும் அறுவடையில் ஈடுபட்டான், ஆனால் அரிவாள் வெட்டு காலிலே வீழ்ந்தது. மேலாக வேலையில் மும்முரமாக ஈடுபட முடியவில்லை! கீழே கிடத்தப்பட்டிருக்கிறான்.

ஏன், காலிலே வெட்டு விழுந்தது? அறுவடை வேலை அறியானோ? என்றுதானே கேட்கத் தோன்றுகிறது? தம்பி! அதற்கான பதில் தெரிய, அவனுடைய மற்றொரு காலை உற்றுப்பார்! பச்சிலைக்கட்டுத் தெரிகிறதா? கேள், விவரத்தை! பலரும் அறுவடையில் ஈடுபட்டது போலத்தான் இவனும் ஈடுபட்டான். வேலை செய்துகொண்டிருக்கும் வேளையில் விஷப்பூச்சி ஒன்று அவன் காலைக் கடித்தது; துடித்தான்; நிலைகுலைந்தது; அரிவாள் வெட்டு காலில் விழுந்தது: மேலாக, வேலையில் வெற்றியுடன் ஈடுபட இயலவில்லை. எனவேதான், மற்றவர்போல், அவன் கட்டு எடுத்துக் கொண்டு செல்லவில்லை; புங்க மரத்தடியிலே இருக்கிறான்.

ஆனால், தம்பி! கட்டு எடுத்துச் செல்பவர்கள் முகத்தில் களிப்பு இல்லை; காலில் வெட்டுப்பட்டுக்கிடப்பவன் களிப்புடன் இருக்கிறான்!

இந்த விசித்திரத்துக்குக் காரணம் புரிகிறதா?

> புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்கள் என்னிடம் வந்து தேர்தல் நிதிக்குக் கணிசமான தொகை தருவதாகக் கூறினார்.
>
> ஆனால் நான் எம்.ஜி.ஆரிடம் கூறினேன்...
>
> நீங்கள் தரும் கணிசமான தொகையைவிட உங்கள் முகத்தை மக்கள் பார்த்தால் 30 ஆயிரம் ஓட்டுக்கள் எனக்குக் கிடைக்கும். உங்கள் பேச்சை மக்கள் கேட்டால் 10 இலட்சம் மக்கள் மனம் திரும்புவர். ஆகவே நீங்கள் ஜனவரியிலிருந்து பிப்ரவரி வரை எத்தனை நாட்கள் ஒதுக்க முடியும் என்று கேட்டேன்.
>
> ஜனவரி 20லிருந்து பிப்ரவரி 13 வரை முழுக்க முழுக்க இந்தப் பணியில் ஈடுபடுகிறேன் என்றார் அவர்.
>
> இப்போது நான் சொல்ல வேண்டியவர்களிடம் கூறிவிட்டேன், அவரைப் பயன்படுத்திக் கொள்வது உங்கள் பொறுப்பு.
>
> —பேரறிஞர் அண்ணா
>
> [விருகம்பாக்கம் பொது மாநாடு 2.1.67]

தம்பி! கட்டுக் கலம் காணும்; பட்டபாட்டுக்கேற்ற பலன் கிட்டும் என்ற நிலை இருந்திடினும், ஈட்டிய வெற்றியினை எடுத்துச் செல்பவர்கள், வேலையிலே ஈடுபட்டு, வெட்டுப் பெற்றுக் கிடப்பவனைக் காண்கிறார்கள், கலக்கமும் கவலையும் குடைகிறது.

வெட்டுப்பெற்றுக் கிடப்பவனோ, வேலையை முடித்துக் கொண்டு வீடு திரும்புவோர், வெற்றியை எடுத்துச் சென்றிடும் காட்சியைக் காண்கிறான்; எனவே அவன் மகிழ்ச்சி கொள்கிறான். உடல், பணியாற்றியோர் வெற்றியை எடுத்துச் செல்கிறார்கள்; பழித்தோர் வெட்கிடும் விதமாகப் பலனை எடுத்துச் செல்கிறார்கள்; அறுவடை வேலை அரிய வெற்றியாக அமைந்துவிட்டது; விளையாது என்றார்கள், அறுவடை கிடைத்தது! அதோ கொண்டு செல்கிறார்கள்! என்று எண்ணுகிறான்; எண்ணிடும்போதே, காலில் வீழ்ந்த அரிவாள் வெட்டு, அதற்குக் காரணமாக அமைந்த நச்சுப்பூச்சி, எனும் எதனையும் மறந்து விடுகிறான். வலி தெரியவில்லை; வருத்தம் எழவில்லை. வேலை முடிந்தது, வீடு திரும்புகிறார்கள் வெற்றியுடன் என்று எண்ணிப் பெருமகிழ்வு பெறுகிறான். எமது வயலையும் உழவு முறையில் வேலைத் திறனையும் கேவலப்படுத்திப் பேசினரே சிலர், அவர் காணட்டும் அறுவடையை எடுத்துச் செல்லும் அணிவகுப்பை, என்று அறைகூவி அழைப்பது போலிருக்கிறது அவன் பார்வை, புன்னகை!

யாவர்க்கும் முன்னதாக அறுத்தெடுத்துக் கட்டு ஆக்கித் தலைமீது வைத்து வழிநடந்து காட்டவல்ல தோழன், காலில் வெட்டுப்பட்டுக், காரியத்தை முடிக்காமல் இருந்திடும் இந்நிலையைக் காணக் கூடவில்லை, கண் கசிவு நிற்கவில்லை. வேலை ஓடவில்லை, வெற்றிக் களிப்பு இல்லை, வேதனை வேலாகி வாட்டி வதைக்குது. ஐயோ! வீடு நாம் செல்கிறோம் வெற்றிக் கட்டுடனே, உடனிருந்தவன் எங்கே, என ஊரார் கேட்டிடின், உரைத்திடுவது எதனை நாம்? உள்ளம் பதைத்திடுதே, வெட்டு அவன் காலில், வேலை முடியவில்லை, கட்டு கொண்டுவர இயலவில்லை அவனாலே; களத்துமேட்டருகே இருக்கின்றான் களைப்புடனே, என்றன்றோ கூறவேண்டும், எப்படிக் கூறுவது? எண்ணும்போதே எமக்கு வெற்றிக்கட்டுகள் யாவும் வீண் என்று தோன்றிடுதே; அவனும் கட்டெடுத்து அணிவகுப்பிலே நடந்தால், அறுவடை விழாவாகும், அகமகிழ்வுக்கு எல்லையில்லை; இன்று அந்த நிலை இல்லை, என் செய்வோம், ஏங்குகிறோம், என்றெண்ணி நடக்கின்றார், அறுவடையில் வெற்றி பெற்றார். அதனாலேதான் அவர்க்கு மகிழ்ச்சி துளியும் இல்லை. மரத்தடிக் கிடப்போனோ மகிழ்ச்சியினால் துள்ளுகிறான்; அணிவகுத்துச் செல்வது யார், அறுவடையினை எடுத்து, அவர் எந்தன் உடன்பிறந்தார், அவருடன் நானுந்தான், இந்த வயலுக்கு உரியவன்! ஆம்! அவர் கொண்டு செல்லும் அந்த அறுவடை, எமது உடைமை! கட்டு எந்தன் தலைமீது இல்லை, கவலை இல்லை. கொண்டு செல்லுங் கட்டெல்லாம், என் கட்டு! என்று கூறும் உரிமை எனக்கும் உண்டு! என்று கூறிக் களிப்புடன் இருக்கின்றான், புங்க மரத்தடியில்!...

—திராவிடநாடு, 11-3-1962




பொங்கல் வாழ்த்துக்கள்

வேலூர் நகரில் சுவையான
உணவிற்கு சிறந்த இடம்
செட்டிநாடு உணவகம்!



**செட்டிநாடு உணவகம்**
29-1, பாபுராவ் தெரு,
(சி.எம்.சி. மருத்துவமனை அருகில்)
**வேலூர்-4.**
வட ஆர்க்காடு மாவட்டம்
தொலைபேசி: 21778

**தி தமிழ்நாடு சிமிண்ட் ஓர்க்ஸ்**

என்பி 2,. என். 3, என்பி 4, பி 1, பி 2, பி 3 ரகங்களைச் சேர்ந்த ஆர்.சி.சி. குழாய்கள் மற்றும் காலர்கள் சென்டிரிபியுகல் முறையிலும் இந்திய தர நிர்ணயக் கட்டுப்பாட்டுக் கழகத்தின் வழிப்படியும்

(ஐஎஸ்: 458197)

அலுவலகம்
4/40- தெற்கு 3வது வீதி
கல்லல்-622305
பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்
தொலைபேசி: கல்லல் 40

தொழிற்சாலை
4/52.ஏ இரயில்வே ஸ்டேஷன் ரோடு
அரண்மனை சிறுவயல்
(வழி) கல்லல்
தொலைபேசி: கல்லல் 41

உரிமையாளர் திரு டி. எம். ராஜூ



**எமது வெற்றியின் ரகசியம்!**

நாட்டிலேயே செலவு, வெல்லம், மருந்து போன்ற பல தொழில்களுக்குத் தேவையான சோடியம் ஹைட்ரோசல்பைட் மிக அதிக அளவில் டிசிபி உற்பத்தி செய்கின்றது. உலகப் பிரசித்தி பெற்ற ஜப்பான் நாட்டு மிட்சுபிஷியின் தொழில் நுட்பத்துடன் டிசிபி பல சாதனைகளைப் புரிந்து இருக்கிறது.

**சாதனைகளின் சிறப்பு அம்சங்கள்:**

- 3744 டன்கள் உற்பத்தி செய்து 113 சதவிகித உற்பத்தித்திறனை அடைந்துள்ளது. இது நாடெங்கிலும் உள்ள இத்தொழில் அனைத்தும் அடைந்த 42 சதவிகிதத்தை விட $2\frac{1}{2}$ மடங்காகும்.
- சென்ற ஆண்டு ரூபாய் ஒரு கோடி நிகர லாபம் பெற்றுள்ளது.
- ரூபாய் ஆறு கோடி செலவில் நாட்டிலேயே முதன் முறையாக ஆண்டு ஒன்றுக்கு 600 டன்கள் மக்னீசிய உலோகம் தயாரிக்கும் திட்டத்தை நிறைவேற்றி வருகிறது.
- மேலும் பல புதிய முதலீட்டுத் திட்டங்களை தொடங்க இருக்கிறது.

மேலும் பல சாதனைகள் புரிந்து டிசிபி வெற்றி நடை போடுகிறது.

**தமிழ் நாடு கெமிக்கல் ப்ராடக்ட்ஸ் லிமிடெட்**
145/146, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை
சென்னை-600 034.

# அண்ணா ஒருவர்!

— கவிஞர் இளந்தேவன்

**பேச்சாளர் அண்ணா**

சொல்லெலாம் மின்னல் துண்டு !
    சுவையிலோ அவைகற் கண்டு !
கல்லெலாம் உருகும் வண்ணம்
    கனிந்திடும் தூய எண்ணம்!
புல்லெலாம் வீர ராகப்
    புறப்படச் செயும்பேச் சுக்குச்
சொல்லலாம் உவமை என்றால்
    சொல்லைத்தான் இன்னும் காணோம்!

**எழுத்தாளர் அண்ணா**

ஏட்டினால், அச்சில் வந்த
    எழுத்தினால், புதிய பாதை
காட்டினார் என்று சுட்டக்
    காஞ்சியில் ஒருவர் வந்தார்!
மீட்டினார் எழுத்து யாழை!
    மிளிர்ந்தது கோடி ராகம்!
நாட்டினார் புகழை! அந்த
    நாயகர் தமிழே ஆனார்!

**முதல்வர் அண்ணா**

கண்ணிலே கருணை! உள்ளக்
    கருத்திலே நாட்டின் மேன்மை!
எண்ணிலா ஏழை மக்கள்
    எழுச்சிக்குப் புரட்சித் திட்டம்
முன்னிலாப் புதுமை! எங்கள்
    முத்தமிழ் அறிஞர் அண்ணா,
விண்ணிலே அல்ல, ஏழை
    விழியிலே தெய்வம் ஆனார்!









# செய்தி, மக்கள் தொடர்புத் துறையின் பொறுப்பிலுள்ள நினைவகங்கள்



அண்ணா சதுக்கம் சென்னை

(காஞ்சிபுரம்)





காமராஜர் நினைவகம் (கிண்டி)









பெரியார்-அண்ணா நினைவகம்
(ஈரோடு)

பொம்மன் கோட்டை (பாஞ்சாலங் குறிச்சி)





பாரதி மண்டபம் (எட்டையபுரம்)



# தைப் பொங்கல்

தைப்பொங்கல் தமிழக மக்களின்
தேசியத் திருநாள்.
உழவர்களின் பெருநாள்.
பாட்டாளி மக்கள் தங்கள் பயனை
அறுவடை செய்யும் நாள்.
உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்
மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்,
என்கிற உண்மையை உலகுக்கு
உணர்த்துகின்ற நன்னாள்!
மகிழ்ச்சி பொங்கும் இந்நாள்
பொங்கல் நன்னாளில் அனைவருக்கும்
என்னுடைய நல்வாழ்த்துக்களை
உரித்தாக்குகிறேன்.

அன்பன்,

**எம். ஜி. ராமச்சந்திரன்**
முதல்வர்

தமிழ்ப்பெருமக்களுக்கு, பொங்கல் மலரைக் காணிக்கை ஆக்குகிறது 'தமிழரசு'

இந்த மலர் வண்ணத்தையும் வடிவையும் பெற உதவிய மாண்புமிகு மேலவைத் தலைவர், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், எழுத்தோவியம் அளித்த அறிஞர்களுக்கும், வாசகர்களுக்கும், விளம்பரதாரர்க்கும், முகவர்க்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்
'தமிழரசு'

85374

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப., இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை. அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

